உ

# தேசாபுத்தி சிந்தாமணி

இஃது

சேந்தமங்கலம் ஜோதிடர், கோமடம் இராகவாச்சாரியார்
ஸ்வீகார புத்திரர் ஜோதிடர்

**கோமடம். ஸ்ரீநிவாஸ அய்யங்கார்**

அவர்களால் எழுதப்பட்டு,

ராமஜெயம்
ஸ்ரீ ஷண்முக விலாஸ் ஜோதிஷ சாலை,
M. S. வெங்கடசுப்ரமண்ய ஜோஸ்யர்.

சுத்த திருக்கணித பஞ்சாங்க கணிதரும் [illegible] ஜாதகத்தின்
பதிப்பாசிரியரும், ஜாதக கணிதத்தின் ஆசிரியரும், இராஜ
ஜோதிட கணிதம் என்னும் நவக்கிரக ஸ்புட கணிதத்தின்
ஆசிரியருமாகிய

**C. G. ராஜன், B. A., (*MATHEMATICS*),**

அவர்களால் பார்வையிடப்பட்டு,

சென்னை செளகார்பேட்டை, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத்திற்கு
அடுத்த வெங்கடேச மேஸ்திரி தெருவு, 7-வது நெம்பர் வீடு
C. விஸ்வநாத முதலியார் அவர்களால்
தமது "சிரோன்மணி அச்சியந்திரசாலையில்"
அச்சிடப்பட்டது.

[All Rights Reserved 1935 விலை ரூ. 1—8—0.]

# முன்னுரை.

ஜோதிட சாஸ்திரம் ஒரு புராதீனமான சாஸ்திரம் என்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயம். இது வேதத்தில் ஒரு அங்கமாகப் பாவிக்கப் பட்டிருக்கின்றது. இந்த சாஸ்திரம் இப் பூமண்டலத்திலுள்ள ஜீவ பிராணிகளுக்குக் கிரகங்கள், நட்சத்திரங்கள் முதலியவைகளால் சம்பவிக்கும் நன்மை துன்மைகளைப்பற்றித் தெரிவிக்கின்றது. இந்த நன்மை துன்மைகள் எக்காலத்தில் நேரிடும் என்பதைக் கிரகங்களின் தெசா புக்தி என்பவையால் அறியவேண்டும். மைத்ரேயர் பாராசமுனிவரைத் தெசா புக்தி விஷயமாகக் கேட்டபோது பாராசர முனிவர் நாற்பத்திரண்டு விதமான தெசைகள் இருக்கின்றன என்று சொல்லி இருக்கின்றார். இந்த நாற்பத்திரண்டு தெசைகளும் பாராசருடைய ஜோதிட சாஸ்திரமாகிய பிருஹத் பாராசர ஹோரையில் விபரமாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளில் விம்சோத்தரி தெசை, காலச்சக்கிர தெசை, அஷ்டவர்க்கத் தெசை இவைகள் தற்காலத்தில் புழங்கி வருகின்றன. இம்மூன்று தெசைகளிலும், விம்சோத்தரி தெசை அதிகமாக எல்லோராலும் உபயோகப் படுத்தப் பட்டி வருகின்றது. இந்த விம்சோத்தரி தெசை என்பது நூற்றிருபது வருஷம் கொண்ட தெசை. சூரியனுக்கு 6-வருஷமும், சந்திரனுக்கு 10-வருஷமும், செவ்வாய்க்கு 7-வருஷமும், இராகுக்கு 18-வருஷமும், குருவுக்கு 16-வருஷமும், சனிக்கு 19-வருஷமும், புதனுக்கு 17-வருஷமும், கேதுக்கு 7-வருஷமும், சுக்கிரனுக்கு 20-வருஷமும் ஆக நவக்கிரகங்களுக்கு மொத்த வருஷம் 120 ஆகும். இந்த விம்சோத்தரி தெசைக்கு உடு தெசை அதாவது நட்சத்திர தெசை என்று பெயருமுண்டு. இந்த தெசை சந்திரனிருக்கின்ற நட்சத்திரத்தை அனுசரித்து வருகின்ற தெசையானதால் இதற்கு உடு அல்லது நட்சத்திர தெசை என்று பெயர். கிருத்திகை முதல் பரணி வரையிலுமுள்ள இருபத்தேழு நட்சத்திரங்களையும் வரிசையாக நவக்கிரகங்களுக்கு மேலே சொல்லிய கிரக வரிசை பிரகாரம் கொடுக்க ஒவ்வொரு கிரகத்திற்கும் மும்மூன்று நட்சத்திரம் வரும். ஒரு கிரகத்திற்குரிய மூன்று நட்சத்திரங்களிலொன்றில் சந்திரனிருக்கப் பிறந்தவர்களுக்கு அக்கிரகத்தின் தெசை ஜெனன காலத்தில் நடக்கும். ஒவ்வொரு தெசையையும், புக்தி, அந்தரம், சூக்ஷமம், பிராணன் என்று நான்கு உள்பாகமாகப் பிரித்திருக்கின்றார்கள். ஜெனன காலத்தில் நடக்கும் தெசையின் இருப்பைக் கணிக்கும் மார்க்கத்தையும் தெசையின் புக்தி, அந்தரம், சூக்ஷமம், பிராணன் இவைகளைக்கணிக்கும் மார்கத்தையும் எல்லா ஜோதிட கிரந்தங்களிலும் கொடுத்திருப்பதால் அதை இங்கு விபரமாகச் சொல்லவேண்டிய அவசியமில்லை. மேலும் தெசை, புக்தி, அந்திரம் இவைகளைச் சுலபமாய் அறியும் பொருட்டு இந்தப் புத்தகத்தில் 195-வது பக்கத்தில் ஒரு டேபில்

கொடுக்கப் பட்டிருக்கிறது. அதை உபயோகித்துக் கொள்ளலாம். சூக்ஷமம், பிராணன் இவைகளை அநேக ஜோதிடர்கள் உபயோகப் படுத்துவது கிடையாது. இவைகளை உபயோகப்படுத்த விருப்ப முள்ளவர்கள் இவைகளைக் கணிக்கும் வழி பிரகாரம் கணித்துக் கொள்ளவும்.

2. இப் புத்தகத்தில் தெசா புக்தி பலன்களைக் கிரகங்கள் இராசியிலும் பாவச் சக்கரத்திலும் இருக்கும் நிலையையும், அவை களுடன் சம்மந்தப்பட்ட கிரகங்களையும், அவைகளைப் பார்க்குங் கிரகங்களையும் அநுசரித்து விபரமாகச்சொல்லி யிருக்கின்றது. தெசா புக்தி பலன்களில் அநேக பலன்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அநேக பலன்களில் அந்த தெசா புக்தி கிரகங்களுக்கும் அவைகளைப் பார்க்குங் கிரகங்களுக்கும் அவைகளுடன் சம்மந்தப்பட்டிருக்குங் கிர கங்களுக்கும் என்ன ஆதிபத்தியம் வந்திருக்கின்றதோ அந்த ஆதிபத் தியத்திற்கு 5-வது அநுபந்தத்தில் துவாதசபாவ காரகத்துவத்தில் கொடுத்துள்ள பலன்களில் எந்த பலன்கள் ஆதிபத்திய பலனிலும் தெசா புக்தி பலனிலும் பொதுவாக வருகின்றனவோ அப் பலன்கள் தான் பெரும்பான்மையும், விசேஷமாயும் நடக்குமே ஒழிய மற்ற பலன்கள் பெரும்பான்மையும் நடக்காது. இவ்விதமாய்த் தெசா புக்தி பலன்களுக்கும், ஆதிபத்திய பலன்களுக்கும் பொதுவாய் வரு கின்ற பலன்களை ஜோதிடர் சாமர்த்தியமாக யூகித்துத்தேர்ந்தெடுக்க வேண்டும்.

3. இப் புத்தகத்தை எழுதிய ஆசிரியருக்குத் தமிழ் அதிக மாகத் தெரியாததால் இப்புத்தகத்தில் எழுத்துப் பிழையும், சொற் பிழையும் இருக்கும். ஜோதிடர்களுக்கு விஷயங்கள் தான் முக்கிய மானவை; இலக்கண வழுவுகள் முக்கியமானவைகள் அல்ல. ஆகை யால் எழுத்துப் பிழையையுஞ் சொற் பிழையையும் கவனியாமல் ஜோதிட விஷயங்களை மாத்திரம் ஏற்றுக்கொண்டு இப் புத்தகத்தை ஆமோதிக்கும்படியாய் இதை வாசிக்கும் பெரியோர்களையும், சிறி யோர்களையும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். மேலும் இந்தப் புத்தகத்தை இன்னும் விருத்தி செய்வதற்காக யாராகிலும் தெரியப்படுத்தும் அபிப்பிராயங்களை வந்தனத்துடன் அங்கீகாரஞ் செய்வதுடன் அந்த அபிப்பிராயங்களுக் கிணங்க விருத்திகளை அடுத்த பதிப்பில் செய்யத் தடையிராது என்று நம்புகின்றேன்.

22—81--935
நெ. 7. வெங்கடேச மேஸ்திரி தெரு,
கிருஷ்ணுங்குளம் அருகாமை,
சௌக்கார்பேட்டை போஸ்ட்,
மதராஸ்.

C. G. ராஜன் B.A.,

# அட்டவணை


| | | பக்கம். |
|---|---|---|
| (1) | சூரிய தெசை பலன் | 1 |
| (2) | லக்கினுதி துவாதச பாவங்களில் சூரியன் நிற்கும் தெசா பலன் | 4 |
| (3) | மேஷாதி துவாதச ராசிகளில் சூரியன் நிற்கும் தெசா பலன் | 6 |
| (4) | சூரிய தெசையில் சூரிய புக்தி மாதம் 3 நாள் 18-க்குப் பலன் | 8 |
| (5) | ,, சந்திர புக்தி மாதம் 6-க்குப் பலன் | 10 |
| (6) | ,, செவ்வாய் புக்தி மாதம் 4 நாள் 6-க்குப் பலன் | 13 |
| (7) | ,, ராகு புக்தி மாதம் 10 நாள் 24-க்குப் பலன் | 16 |
| (8) | ,, குரு புக்தி மாதம் 9 நாள் 18-க்குப் பலன் | 18 |
| (9) | ,, சனி புக்தி மாதம் 11 நாள் 12-க்குப் பலன் | 20 |
| (10) | ,, புத புக்தி மாதம் 10 நாள் 6-க்குப் பலன் | 22 |
| (11) | ,, கேது புக்தி மாதம் 4-நாள் 6-க்குப் பலன் | 25 |
| (12) | ,, சுக்கிர புக்தி மாதம் 12-க்குப் பலன் | 26 |
| (13) | சந்திர தெசை பலன் | 28 |
| (14) | மேஷாதி துவாதச பாவங்களில் சந்திரனிருந்த தெசா பலன் | 33 |
| (15) | லக்கினுதி 12 பாவங்களில் சந்திரனிருந்த தெசா பலன் | 34 |
| (16) | சந்திர தெசையில் சந்திர புக்தி மாதம் 10-க்குப் பலன் | 36 |
| (17) | ,, செவ்வாய் புக்தி மாதம் 7-க்குப் பலன் | 37 |
| (18) | ,, ராகு புக்தி மாதம் 18-க்குப் பலன் | 39 |
| (19) | ,, குரு புக்தி மாதம் 16-க்குப் பலன் | 40 |
| (20) | ,, சனி புக்தி மாதம் 19 ,, | 42 |
| (21) | ,, புத புக்தி மாதம் 17 ,, | 33 |
| (22) | ,, கேது புக்தி மாதம் 7 ,, | 45 |
| (23) | ,, சுக்கிர புக்தி மாதம் 20-க்குப் பலன் | 47 |
| (24) | ,, சூரிய புக்தி மாதம் 6-க்குப் பலன் | 49 |
| (25) | செவ்வாய் தெசை பலன் | 51 |
| (26) | மேஷாதி துவாதச ராசிகளில் செவ்வாய் இருக்கும் தெசை பலன் | 55 |
| (27) | லக்கினுதி துவாதச பாவங்களில் செவ்வாய் நிற்கும் ,, | 57 |
| (28) | செவ்வாய் தெசையில் செவ்வாய் புக்தி மீ 4 நாள் 27-க்குப்பலன் | 60 |
| (29) | ,, ராகு புக்தி மாதம் 12 நாள் 18-க்குப் பலன் | 61 |
| (30) | ,, குரு புக்தி மாதம் 11 நாள் 6-க்குப் பலன் | 63 |
| (31) | ,, சனி புக்தி மாதம் 13 நாள் 9-க்குப் பலன் | 65 |
| (32) | ,, புத புக்தி மாதம் 11 நாள் 27-க்குப் பலன் | 67 |
| (33) | ,, கேது புக்தி மாதம் 4 நாள் 27-க்குப் பலன் | 69 |
| (34) | ,, சுக்கிர புக்தி மாதம் 14-க்குப் பலன் | 71 |
| (35) | ,, சூரிய புக்தி மாதம் 4 நாள் 6-க்குப் பலன் | 73 |
| (36) | ,, சந்திர புக்தி மாதம் 7-க்குப் பலன் | 74 |

| | | பக்கம். |
|---|---|---|
| (37) | ராகு தெசை வருஷம் 18-க்குப் பலன் | 76 |
| (38) | மேஷாதி 12 ராசிகளில் ராகு நிற்கும் பலன் | 77 |
| (39) | லக்கினாதி 12 பாவங்களில் ராகு நிற்கும் பலன் | 79 |
| (40) | ராகு தெசையில் ராகு புக்தி மாதம் 32 நாள் 12-க்குப் பலன் | 81 |
| (41) | ,, குரு புக்தி மாதம் 28 நாள் 24-க்குப் பலன் | 82 |
| (42) | ,, சனி புக்தி மாதம் 34 நாள் 6-க்குப் பலன் | 84 |
| (43) | ,, புத புக்தி மாதம் 30 நாள் 18-க்குப் பலன் | 86 |
| (44) | ,, கேது புக்தி மாதம் 12 நாள் 18-க்குப் பலன் | 87 |
| (45) | ,, சுக்கிர புக்தி மாதம் 36-க்குப் பலன் | 89 |
| (46) | ,, சூரிய புக்தி மாதம் 10 நாள் 24-க்குப் பலன் | 90 |
| (47) | ,, சந்திர புக்தி மாதம் 18-க்குப் பலன் | 92 |
| (48) | ,, செவ்வாய் புக்தி மாதம் 12 நாள் 18-க்குப் பலன் | 93 |
| (49) | குரு தெசை வருஷம் 16-க்குப் பலன் | 94 |
| (50) | மேஷாதி 12 ராசிகளில் குரு நிற்கும் பலன் | 98 |
| (51) | குரு லக்கினாதி 12 பாவங்களில் நிற்கும் பலன் | 99 |
| (52) | குரு தெசையில் குரு புக்தி மாதம் 25 நாள் 18-க்குப் பலன் | 101 |
| (53) | ,, சனி புக்தி மாதம் 30 நாள் 12 ,, | 102 |
| (54) | ,, புத புக்தி மாதம் 27 நாள் 6 ,, | 103 |
| (55) | ,, கேது புக்தி மாதம் 11 நாள் 6 ,, | 104 |
| (56) | ,, சுக்கிர புக்தி மாதம் 32-க்குப் பலன் | 106 |
| (57) | ,, சூரிய புக்தி மாதம் 9 நாள் 18-க்குப் பலன் | 107 |
| (58) | ,, சந்திர புக்தி மாதம் 16-க்குப் பலன் | 109 |
| (59) | ,, செவ்வாய் புக்தி மாதம் 11 நாள் 6-க்குப் பலன் | 110 |
| (60) | ,, ராகு புக்தி மாதம் 28 நாள் 24-க்குப் பலன் | 111 |
| (61) | சனி தெசை வருஷம் 19-க்குப் பலன் | 113 |
| (62) | மேஷாதி 12 ராசிகளில் சனி நிற்கும் பலன் | 116 |
| (63) | சனி லக்கினாதி 12 பாவங்களில் நிற்கும் பலன் | 118 |
| (64) | சனி தெசையில் சனி புக்தி மாதம் 36 நாள் 3-க்குப் பலன் | 119 |
| (65) | ,, புத புக்தி மாதம் 32 நாள் 9-க்குப் பலன் | 121 |
| (66) | ,, கேது புக்தி மாதம் 13 நாள் 9-க்குப் பலன் | 122 |
| (67) | ,, சுக்கிர புக்தி மாதம் 38-க்குப் பலன் | 124 |
| (68) | ,, சூரிய புக்தி மாதம் 11 நாள் 12-க்குப் பலன் | 125 |
| (69) | ,, சந்திர புக்தி மாதம் 19-க்குப் பலன் | 126 |
| (70) | ,, செவ்வாய் புக்தி மாதம் 13 நாள் 9-க்குப் பலன் | 128 |
| (71) | ,, ராகு புக்தி மாதம் 34 நாள் 6-க்குப் பலன் | 129 |
| (72) | ,, குரு புக்தி மாதம் 30 நான் 12-க்குப் பலன் | 131 |
| (73) | புதன் தெசை வருஷம் 17-க்குப் பலன் | 132 |
| (74) | மேஷாதி 12 ராசிகளில் புதன் நிற்கும் பலன் | 136 |
| (75) | புதன் லக்கினாதி 12 பாவங்களில் நிற்கும் பலன் | 137 |
| (76) | புதன் தெசையில் புத புக்தி மாதம் 28 நாள் 27-க்குப் பலன் | 139 |
| (77) | ,, கேது புக்தி மாதம் 11 நாள் 27-க்குப் பலன் | 140 |
| (78) | ,, சுக்கிர புக்தி மாதம் 34-க்குப் பலன் | 141 |

| | | பக்கம். |
|---|---|---|
| (79) | புதன் தெசையில் சூரிய புக்தி மாதம் 10 நாள் 6-க்குப் பலன் | 142 |
| (80) | ,, சந்திர புக்தி மாதம் 17-க்குப் பலன் | 144 |
| (81) | ,, செவ்வாய் புக்தி ௴ 11 நாள் 27-க்குப் பலன் | 145 |
| (82) | ,, ராகு புக்தி மாதம் 30 நாள் 18-க்குப் பலன் | 146 |
| (83) | ,, குரு புக்தி மாதம் 27 நாள் 6-க்குப் பலன் | 148 |
| (84) | ,, சனி புக்தி மாதம் 32 நாள் 9-க்குப் பலன் | 149 |
| (85) | கேது தெசை வருஷம் 7-க்குப் பலன் | 150 |
| (86) | மேஷாதி 12 ராசிகளில் கேது நிற்கும் பலன் | 152 |
| (87) | கேது லக்கினாதி 12 பாவங்களில் நிற்கும் பலன் | 154 |
| (88) | கேது தெசையில் கேது புக்தி மாதம் 4 நாள் 27-க்குப் பலன் | 156 |
| (89) | ,, சுக்கிர புக்தி மாதம் 14-க்குப் பலன் | 157 |
| (90) | ,, சூரிய புக்தி மாதம் 4 நாள் 6-க்குப் பலன் | 158 |
| (91) | ,, சந்திர புக்தி மாதம் 7-க்குப் பலன் | 159 |
| (92) | ,, செவ்வாய் புக்தி ௴ 4 நாள் 27-க்குப் பலன் | 161 |
| (93) | ,, ராகு புக்தி மாதம் 12 நாள் 18-க்குப் பலன் | 162 |
| (94) | ,, குரு புக்தி மாதம் 11 நாள் 6-க்குப் பலன் | 163 |
| (95) | ,, சனி புக்தி மாதம் 13 நாள் 9-க்குப் பலன் | 165 |
| (96) | ,, புத புக்தி மாதம் 11 நாள் 27-க்குப் பலன் | 166 |
| (97) | சுக்கிர தெசை வருஷம் 20-க்குப் பலன் | 167 |
| (98) | மேஷாதி 12 ராசிகளில் சுக்கிரன் நிற்கும் தெசா பலன் | 170 |
| (99) | சுக்கிரன் லக்கினாதி 12 பாவங்களில் நிற்கும் தெசா பலன் | 172 |
| (100) | சுக்கிர தெசையில் சுக்கிர புக்தி மாதம் 40-க்குப் பலன் | 174 |
| (101) | ,, சூரிய புக்தி மாதம் 12 ,, | 175 |
| (102) | ,, சந்திர புக்தி மாதம் 20 ,, | 176 |
| (103) | ,, செவ்வாய் புக்தி மாதம் 14 ,, | 178 |
| (104) | ,, ராகு புக்தி மாதம் 36 ,, | 179 |
| (105) | ,, குரு புக்தி மாதம் 32 ,, | 181 |
| (106) | ,, சனி புக்தி மாதம் 38 ,, | 182 |
| (107) | ,, புத புக்தி மாதம் 34 ,, | 183 |
| (108) | ,, கேது புக்தி மாதம் 14 ,, | 184 |
| (109) | அநுபந்தம் நெ. 1. சஷ்டியாம்சம். ஒற்றை ராசி, இரட்டை ராசி | 186 |
| (110) | ,, 2. லக்கினாதி துவாதச பாவ நிகண்டு | 187 |
| (111) | ,, 3. கிரககாரகத்துவம் | 189 |
| (112) | ,, 4. கிரகங்களின் அவஸ்தா நிர்ணயம் | 190 |
| (113) | ,, 5. (1) நவக்கிரக காரகத்துவம் (2) துவாதச பாவ காரகத்துவம் | 191 |
| (114) | தெசா புக்தி அந்திரங்கள் வாக்கியம் (Table) | 195—203 |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 9 | சுயயாஸஞதிகள் | சய்யாஸஞதிகள் |
| 3 | 4 | தாராபுத்திர தோஷமும் | தாராபுத்திரசந்தோஷமும் |
| | 9 | ன்த | தன் |
| | 29 | சபாசந்தோஷம் | சதாசந்தோஷம் |
| 4 | 8 | சுதார | சுகதார |
| | 15 | கிருத்தி முல | கிருஷிமூல |
| 6 | 21 | தோலிகாதி | தோளிகாதி |
| | 37 | வாக்குபடுத்துவதும் | வாக்குபடுத்துவமும் |
| | 14 | குலதர்மமானவை | குலதர்மமானதை |
| | 26 | துஷ்கிர்த்த | துஷ்கிருத்திய |
| 11 | 9 | அவிதிதமான | அவிகிதமான |
| | 14 | கந்தங்களிலும் | தந்தங்களிலும் |
| 26 | 7 | கடஞகவும் | விகடஞகவும் |
| 27 | 27 | ஜாதிகளால் | ஞாதிகளால் |
| 30 | 9 | க்யாத்வமும் | க்யாநத்வமும் |
| 32 | 33 | கேசாதிகஞகி | தேசாதிகஞகி |
| 33 | 13 | பார்வதாம்சத்திலிருந்து | பாராவதாம்சத்திலிருந்து |
| 35 | 21 | தூரப்போபது | தூரப்போவது |
| 36 | 3 | கவுரவம் | கௌரவம் |
| 38 | 4 | பார்த்தவர்களால் | பாந்தவர்களால் |
| | 7 | பிர்ப்தியும் | பிராப்தியும் |
| | 15 | பாண்டித்யாதிகலால் | பாண்டித்யாதிகளால் |
| | 26 | பிரப்தியும் | பிராப்தியும் |
| 39 | 13 | 8-மிடத்ததிடதியுடன் | 8-மிடத்ததிபதியுடன் |
| | 20 | நீர்த்தஸ்நாநங்கள் | தீர்த்தஸ்நானங்கள் |
| | 29 | பனுபவித்து | மனுபவித்து |
| 45 | 25 | பலாவித்தியாவதும் | பலவிர்த்தியாவதும் |
| | 29 | சத்கர்ம்மாவானிடத்தி | சத்கர்ம்மாவினிடத்தி |
| 47 | 17 | தால் லேயே] | செய்தால் லேயே] |
| 49 | 26 | மத்தியஸ்த்ரீ | மத்தியத்தில் ஸ்த்ரீ |
| 52 | 5 | லபம் | லாபம் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| | 19 | கல்யமாம் | வைகல்யமாம் |
| | 20 | செவ்வாய் சத்துரு | செவ்வாய் மித்துரு |
| 56 | 32 | கோஷமூர்தியு | கோ ஸமுர்த்தியு |
| 57 | 8 | காரியானுகூடியாம் | காரியானுகூலமாம் |
| | 20 | பண்டித்யனுகி | பாண்டித்யனுகி |
| 61 | 35 | நிஷத்தமாம் | நிஷித்தமாம் |
| 62 | 17 | போவேமா | போவோமா |
| | 34 | ஸ்த்ரீகளா | ஸ்த்ரீகளால் |
| 80 | 28 | வாக்சாத்தியத்துடன் | வாக்சாதுர்யத்துடன் |
| 95 | 5 | கியானுதிகர்வம் | கியானுதிகத்வம் |
| 96 | 9 | மும் | சுகமும் |
| 97 | 14 | லோப | லோக |
| 101 | 32 | வழங்கும் | வழக்கும் |
| 112 | 22 | சித்தியமாம் | சித்தியுமாம் |
| 113 | 3 | எருமைக்கிடா செய்து | எருமைக்கிடாதானம் செய்து] |
| 120 | 35 | தகப்பஸாபமும் | கற்பஸ்ராவமும் |
| 125 | 23 | அங்கீதமும் | அங்கிதமும் |
| 127 | 12 | தேகாலாஸ்யம் | தேகாலஸ்யம் |
| 133 | 25 | ஸ்வாபகுணமும் | சுபாவ குணமும் |
| 135 | 20 | சுபபந்து | சுய பந்து |
| 140 | 12 | தாராவம்சத்தாருக்கு | தாரவம்சத்தாருக்கு |
| 142 | 11 | அடிகைளால் | அடிமைகளால் |
| 143 | 32 | வியூகம் | வியோகம் |
| 147 | 1 | ராசியலும் | ராசியிலும் |
| 148 | 14 | நிர்மணமும் | நிர்மாணமும் |
| 149 | 2 | வாகவிர்த்தி | வாகன விருத்தி |
| 150 | 15 | கேணங்களிலும் | கோணங்களிலும் |
| ,, | ,, | 12 மிடங் | 11 மிடங் |
| ,, | 24 | அகரால | அகால |
| 151 | 7 | அஸ்தங்கதர்களானுலும் | அஸ்தங்கதர்களுடன் கூடி னுலும்] |
| 152 | ,, | அவுபாஸன | ஔபாஸன |
| 158 | 2 | கயாக்ஷத்தால் | கடாக்ஷத்தால் |
| ,, | 4 | ஸொளக்யமும் | ஸௌக்யமும் |
| 166 | 11 | மீ 11 நாள் 7 | மீ 11 நாள் 27 |
| 193 | 15 | பெறுதல், ஆயுள், கடன் | பெறுதல், கடன், |
| 194 | ,, | புட்டம், ஆயுசு, மூத்த | புட்டம், மூத்த |

உ

கடவுள் துணை.

# தெசாபுத்தி சிந்தாமணி

## 1-வது அத்தியாயம்

## சூரிய தெசை பலன்

பொது

1. சூரியன் ஸ்தானபலாதிகனாக யிருந்தால் கோ விருத்தி, பூமி கிராமாதிகாரம் தேசாதிபத்யம் வாகனாதிகம் வஸ்திராபரண ப்ராப்தியுமாய் ராஜசமானத்துவமாகிய கீர்த்தியோடும் சரீரகாந்தி யுடையவனுமாகி புஷ்பசயன சௌக்ய சுய யாஸனாதிகள் லபிக்கப்பெற்று சர்வ ஜென உபகாரியாய் இஷ்ட பந்து சகிதமாக தீர்த்தயாத்திராதி புண்ய பலன்கள் சித்திக்கு மென்பதாம்.

2. சூரியன் ஸ்தான பலயீனனாகவிருந்தால் தனநாசம், ஸ்தான பேதம், பந்து விரோதம் தேசாந்திரங்களில் திரிகிறதுமாம்.

3. சூரியன் பரமோச்சத்திலிருந்து தெசை நடந்தால் விசேஷித்த பூமியும், அதிக தனமும், தாராபுத்திராதி சௌக்யமும், சௌர்யாதிகமான கீர்த்தி புருஷனாகவும், ராஜசமானமாகிய பிரதாபியாய் வித்யாதிகமுடையவனாக வாழ்வதாம்.

4. சூரியன் உச்சராசியிலிருந்து தெசை நடந்தால் கோ விருத்தியும், தனதானியாதிகமுமான குடும்ப விசேஷமாக யிருக்க சம்சாரத்தினாலேயும், பந்துக்களாலும் விரோதம் விளைந்து தேசாதேசமாகத்திரிகிறது. ராஜ கோபமும் அடைய நேருமென்பதாம்.

பிரசண்டிதனாகி வேசி கமனனாகி ராஜானுக்கிரகசாலியாய் ராஜத் துவாரவினால் ஜீவித்து ரதிகேளீ விலாசமுமாயிருப்பதாம்.

5. சூரியன் உச்சமாகயிருக்க நீசாம்சையை அடைந்தால் களத்திர நாசம் வருமாம். குலஸ்த்தர்கள், பந்துக்கள் விரோதம் வருவது, பிதாக்களுடன்கூட விரோதியாயிருப்பதாம்.

6. சூரியன் ராசியில் நீசமானாலும் உச்சாம்சத்திலிருந்தால் விசேஷ சுகமுடையவனாகி ராஜ்யபாரம் செய்கிறதான யோகமனுபவித்து தெசை அந்தியத்தில் விபத்துகள் நேருமென்பதாம்.

7. சூரியன் அதிஉச்ச ராசியிலிருந்து தெசை நடந்தால் பசு மாடு, குதிரைவாகனம், யானை, பல்லக்கு, முதலியவைகளுடையதான யோகாதிகனுக சதாவாகன சஞ்சாரியாய் ஸுகந்தமாலிகாபரண பூஷிதனுகி பூமியை ஆளும் அரசன் அபிமானம் பெற்று சர்வஜன சகாயத்துவ மாகவுமிருப்பதுடன் தாராபுத்திராதி சௌக்யமுடைய யோகமனுபவித்தலாம்.

8. சூரியன் உச்சமாகயிருந்து தெசை நடந்தால் அரசர்கள் மித்திரமாவார்கள் சுய ஜெனங்களுக்கும் விசுவாசியா யிருப்பது தேவப் பிராம்மணருக்கு பூஜாபக்தி யுடையவனுக அபூர்வமான ஸ்தலயாத்திரையும் சுபாதிகளையும் செய்ய நேருமென்பதாம்.

9. சூரியன் உச்சமானவர்களிட சம்மந்தம் பெற்று தெசை நடந்தால் மனேனுகூல சத்காரியங்களால் உச்சாகமாவதுடன் நல்ல கிருத்தியத்தின் பேரிலே எண்ணமும் நல்ல விருத்தியும் செய்வதாம். தீர்த்தாபிஷேக மாடுவதும் அரிகீர்த்தன ஸ்மரணை பண்ணிக்கொண்டு கோபுர பிரகாரமுள்ள தேவாலய கைங்கரியாதிகள் லபிக்கப் பெற்று புராண சாஸ்திராதிகாரியாவது என்பதாம்.

10. சூரியன் அதிநீச ராசியிலிருந்து தெசை நடந்தால் அதிக விபத்தும் ஸ்த்ரீ, புத்திர, பந்துநாசமும், தனவிரையம், ரோகபீடித மாம்.

11. சூரியன் நீசனுகயிருந்து தெசை நடந்தால் மானுர்த்த நாசமும், ராஜகோபமும், பந்து நாசம், தாரா புத்திரர்களுடனும், பிதா, பிதுர்வர்க்கத்தாருடனேயும், பகையாகி அபகீர்த்தியை வகிப்பது.

12. சூரியன் நீசமானவர்களிட சம்மந்தம் பெற்று தெசை நடந்தால் ராஜாக்களால் பீதியை அடைவது, சரீரகஷ்டம், ஸ்தான நாசம், ஸ்த்ரீ புத்திராதிகளுக்கு அரிஷ்டம், விளைபொருள் நாசமாம்.

13. சூரியன் அதிமித்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் பூமியை ஆளும் அரசனுகவும், கீர்த்திப் பிரக்யாதிக்கமும், ஸ்வஜனங்களால் மரியாதை, இவன் பேரை எங்கும் புகழும்படியாவதாம்.

14. சூரியன் மித்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் சகலவித தொழிலினுல் தனலாபம் வருவது, அதிக ஆடையாபரண லாபம், கிருஷியினுல் தானிய லாபமும், கோவிருத்தி தன்ராஜ்யம் விருத்தி யாவது அதிக குணவானுவதாம்.

15. சூரியன் சமராசியிலிருந்து தெசை நடந்தால் ஆதாயம் விரையங்கள் சமமாம். பந்து பூஜிதம், ஸ்த்ரீ புத்திரர்கள் சௌக்கியம், சுபசந்தோஷ விருத்தி சுகாதிக்கமாதும் என்பதாம்.

16. சூரியன் சமராசியிலிருந்து தெசைநடந்தால் ஜெனசமானத்துவம். பூமி கிருஷியினல் தானியாதிகம், பசுமாடுகளும், அசுவ வாகனமுடையதாய் தேக சௌக்யமாய் ஸ்த்ரீ, புத்திர, புத்திரிகை, விசேஷத்தோடு யிருக்க, தார புத்திர தோஷமும், தான் ரணபாதையை அனுபவிப்பதாம்.

17. சூரியன் அதி சத்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் தனங்கள் நஷ்டமும் தாரா புத்திரர்களுக்கு கெடுதியும் மாடுகள் வாகனங்க ளெல்லாம் சிதறிப் போவதுமாம். மித்ருவர்க்கத்தார் சத்துருவாய் விடுவார்கள். பிதாவுக்கு பீடை, ன்த சரீரத்துக்குப் பாதை, சம்பாத்தியத்தில் வருத்தம் வருவதாம்.

18. சூரியன் அதி சத்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் அதிக கஷ்ட நஷ்டமுமாய் திருடராலும், அக்கினியாலும், பாதை வரும். ராஜபீதியுண்டாம், சொல்லமுடியாத கஷ்டம் நேரிடும். சர்வமும் நாசமாய் விடுமாம்.

19. சூரியன் சத்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் கலகமும், தனச்செலவும், வெளிதேசம் போய் வாசம் செய்வதும், சுய ஜனங்களால் விரோதமாவதும், துஷ்டவேலையே செய்து துஷ்க்கீர்த்தியை வகித்து மனேவிசாரத் தோடிருப்பதாம்.

20. சூரியன் சத்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் சதா துக்கமும் ஜாதிப்ரஷ்டமும் நேருவது அல்லது அவ்வழி சகவாசம் செய்வது, தாரபுத்திரருக்குப் பீடை, பொன், பொருள், நாசமாவது ராஜாங்கத்தால் பயங்கரம் அக்கினிவாதை சோரபயம் ஆபத்தான காரியங்கள் செய்கிறது சதா ஒருவரோடு விவாதம்பண்ணுவது பிதா விரோதப்படுவது தெசாந்தியத்தில் கெண்டாதியுமாம்.

21. சூரியன் சுபகிரகங்களிட சம்மந்தம் பெற்று தெசை நடந்தால் அதிகசுகமும், பூலாபமும், நூதன வஸ்திராபரண லாபம் வருவது. செய்தொழில்களில் தனலாபாதிகம் இஷ்ட பந்துக்களுடனே விலாசமாயிருப்பது, குடும்பத்தில் கல்யாண சுபங்களுடனே சுப மேன்மையான செலவு செய்து சபா சந்தோஷப் பிரியனுவதாம்.

22. சூரியன் சுப கிரகங்களால் பார்க்கப்பட்டு தெசைநடந்தால் பூமி ஆளும் அரசன் சினேகமாவதும், ராஜசன்மானம் பெருவது சுப காரியம் நேரிட்டு கல்யாண சுபசோபனுதிகளும், ஆலய புண்ணிய தீர்த்தஸ்நானங்களும், கிடைக்கப் பெற்று தாரா புத்திராதி மித்துரு வர்க்கங்களுடனே பல பேர்கள் கொண்டாடத்தக்க புகழ்ச்சிப் பேரோடுங்கூடி சுகவானக வாழ்வதாம் என்பதாம்.

23. சூரியன் பாபக்கிரகங்களுடன் கூடி தெசை நடந்தால் சதா மனத்துக்கம், அல்ப புத்தி, பாபார்ஜ்ஜிதம், வஸ்திரயீனம், போஜன

மல்பமாகுவது, சதா துஷ்ட சுபாவத்தோடிருப்பதாம்.

24. சூரியன் பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டு தெசை நடந்தால் அதிக வருத்தமும், சதாசத்துரு போராட்டமும், மனக்கிலேசத்தோடுங் கொர்வியாகத்திரிவது, பிதாவுக்கு கர்மம் செய்வது, தாரா புத்திரர்களுக்கு கஷ்டமே நேரிட்டு விட்டு பிரிந்து விடுகிறது, சோர பீடை, அக்கினி பாதை, ராஜ தண்டனையாம்.

25. சூரியன் மூலத்திரிகோண ராசியிலிருந்து தெசை நடந்தால் பூமி க்ஷேத்திராதிகள் சகோதரர்கள் சுதார பந்துக்கள் சௌக்யத்தோடு மிருப்பது, ராஜாங்கத்தில் அதிகாரம் பெருவதும், தேடும்தனங்களால் விருத்தியாகும் வழியில் வியாபாராதிகளாலும், பூமி, பயிர் வழியினாலும், நூதன கட்டடங்களாலும் லாபத்தை அடைவதும் ஸ்வஸ்தான வாஸமும், வாகனாதிகமாகி சுக சௌக்யாதிகமுமாகுமென்பதாம்.

26. சூரியன் ஸ்வ க்ஷேத்திரத்திலிருந்து தெசை நடந்தால் தானும் தன்பந்துவும் சௌக்யமாயிருப்பது. கிருத்தி மூலதனல்பம் வித்யாதிக்கமும், யஸஸுடனே ராஜபேட்டியில் பிரசங்கிதமாகி பரிசு பெருவதுமாய் முன்தன் பெரியோர்கள் விட்டுவிட்ட கிராமம், பூமி கிடைப்பது, வித்யாதி விஷயமாக தேடுந்தனாதிகமாவதாம்.

27. சூரியன் கேந்திரத்திலிருந்து தெசை நடந்தால் கலகங்களினால் துக்கமும், ஸ்தானம் பேருவது, பந்துக்களுக்கு மாணம், பந்துத்துவேஷம், காரியபங்கம் கிருஷி நாசம், மனோவிசாரமாம்.

28. சூரியன் திரிகோண ராசியிலிருந்து தெசை நடந்தால் புத்திக்குச் சஞ்சல்யமும் ராஜாங்க விரோதமும் சௌக்கிய ஈனமும் தனமில்லாமல் கஷ்டப்படல், பிதாகர்மமும் இந்த கஷ்டத்திலேயே சம்பவிக்கிறதாம்.

## லக்கினாதி துவாதச பாவங்களில் சூரியன் நிற்கும் தெசா பலன்

1. சூரியன் 1-ல் நிற்கப் பலன் :—சூரியன் லக்கினத்திலிருந்து தெசை நடந்தால் உஷ்ணசரீரியாய் தேககாந்தி குறைவு, இருந்தவிடத்துக்கு நாசம் வருகிறது, இதராள் வீட்டில் குடி இருக்கிறது, ஊரார் இடும் சாதத்திற்கு எதிர்ப்பார்த்துக் கொண்டு திரிகிறதாம் அசல் வீட்டில் உண்பவனும்.

2. சூரியன் 2-ல் நிற்கப் பலன் :—சூரியன் 2-மிடத்திலிருந்து தெசை நடந்தால் தேக பாதை கோநாசம், தனஹீனம், தாராபுத்திரர்களும் விரோதப் படுதலாவது. தாரநாசமாவதும் புத்திர விருத்தியாகானபயாம் எரி பூஞ்சியாயிருப்பது கோபாவேசமாய் பேசுவது,

கடினவார்த்தை எல்லாரோடும் விவாதமே செய்வது கையில் பொருள் இல்லாமையால் கடன் வாங்கி செலவிட்டு பிதுரார்ஜ்ஜிதத்தை இழந்து விடுகிறது, சதா ஒருவரை தூஷிக்கிறது பெருங்கலகியாம்.

3. சூரியன் 3-ல் நிற்கப்பலன் :—சூரியன் 3-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் அதிக தைரியமும் அதிக சுகமுமாம், ராஜாக்களால் சன்மானப் பொருள் கிடைத்தல், சகோதரமில்லாமை, அல்லது சகோதரரிடத்தில் போராடுதல் இஷ்டமில்லாமல் பிரிந்திருக்கிறதாம்.

4. சூரியன் 4-ல் நிற்கப்பலன் :—சூரியன் 4-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் ராஜரீகம்செய்வது வித்தியாதிகம், தீர்த்தயாத்திராதி புண்ய கைங்கரியங்கள் செய்வது, நூதனப்பட்டு வஸ்திராதிகளணிவது, க்ஷேத்திரங்களில் வசிக்கச்செய்யு மென்பதாம்.

5. சூரியன் 5-ல் நிற்கப்பலன் :—சூரியன் 5-மிடத்திலிருந்து தெசை நடந்தால் புத்திரநாசம் புத்திக்கு சஞ்சல்யம் தெசாமத்தியில் பிதுருவர்க்கத்தார் நாசமாம், தெசாந்தியந்தில் சௌக்யமும் கிருஹத்தில் கல்யாணாதி சுபங்கள் நடத்தல் என்பதாம்.

6. சூரியன் 6-ல் நிற்கப்பலன் :—சூரியன் 6-மிடத்திலிருந்து தெசை நடந்தால் தன ஹாணியும் அதிக துக்கத்தை அனுபவிக்கிறது குல்மரோகம் பவித்திர வியாதி, க்ஷயரோகத்தால் வருநதுவது, பூதப் பிசாசு பீடை, மூத்திர வியாதியாவது, அல்லது பிரமேகரோக மனுபவித்தல், ருணபாதையாம் பிதா விரோதப்படல், பிதுரு கர்மம் செய்வது என்பதாம்.

7. சூரியன் 7-ல் நிற்கப்பலன் :—சூரியன் 7-மிடத்திலிருந்து தெசை நடந்தால் சதாதேசாந்திரியாய் திரிகிறது, தாரத்துக்கு நலி, பகையால் விட்டுப்பிரிகிறது, ராஜாங்கத்தில் பகையாவதும், தனச் செலவு செய்து நஷ்டமடைவதாம்.

8. சூரியன் 8-ல் நிற்கப்பலன் :—சூரியன் 8-மிடத்திலிருந்து தெசை நடந்தால் தேக கஷ்டம், பவித்திர ரோகம், நேத்திர விகாரம், காசம், ஜுர பீடை. அதிக விசாரம், விபத்துக்களே வரும் வந்தனுபவித்தலாம்.

9. சூரியன் 9-ல் நிற்கப்பலன் :—சூரியன் 9-மிடத்திலிருந்து தெசை நடந்தால் சதா சுப சந்தோஷத்துட னிருப்பது, அதிக பாக்யங்கள் விர்த்தியாவது, சன்மானம் பெருவதும், மற்றொருவருக்கு ஈவதும், பிதாவர்க்கம் விர்த்தியுடனும், பிதுர் பாக்கியங்கள் விசேஷிப்பது, தர்ம உபகாரியாம், குளம், நடபாவி, நந்தவனம் ஏற்படுத்துவதும், தீர்த்தயாத்ராதி புண்ய பலப்பிராப்தி, ராஜாக்கள் பிரியமாவார்கள், சர்வ வேலைகளாலும் தனலாபம் சித்திக்கு மென்பதாம்.

10. சூரியன் 10–ல் நிற்கப்பலன் :—சூரியன் 10-மிடத்திலிருந்து தெசை நடந்தால் ராஜ்ய மூலத்தில் தனலாபம் கிடைப்பதும், சமஸ்த வேலைகளில் முயற்சித்து சித்திபெருவது, உத்யோகாதிகமும், விவசாயங்களினுல் பலிதமும், வாதிப்பதில் ஜெயத்தை அடைவதாம்.

11. சூரியன் 11-ல் நிற்கப்பலன் :—சூரியன் 11-மிடத்திலிருந்து தெசை நடந்தால் ராஜாங்கத்தில் பெரிய உத்தியோகத்தில் அமருதல், ராஜதுல்லிய மாயிருப்பதும், பூமி, கிராமங்கள் அதினுல் அதிக தனலாபங்கள் கிடைக்கப்பெருவது, தாராபுத்திர வர்க்கம் சௌக்யம், தன் வீட்டில் கல்யாண சுபங்கள் நடத்துவதாம்.

12. சூரியன் 12–ல் நிற்கப்பலன் :—சூரியன் 12-மிடத்திலிருந்து தெசை நடந்தால் சதா மனசுக்குக் கிலேசம், தன தானியாதிகள் விரையம் செய்வது, தாரம் விரோதப்படுகிறது, சகோதராள் பகை, பூமி நாசம், பந்துக்களுக்கும் வெறுப்பு, அத்துடனே பிதுருவுக்கு கர்மம் செய்வது, இருப்பிடம் பெயர்ந்து போவது, போன இடத்தில் ஸ்திரமாக இராததும், விஷந் தீண்டுவதும், ராஜபயமும், உண்டாவது வித்யா விவாதம் பேசும் சபையில் கலகமும், பசுமாடுகள் நஷ்டமடைவது என்பதாம்.

## மேஷாதி துவாதச ராசிகளில் சூரியன் நிற்குந்தெசை பலன்

1. சூரியன் மேஷ ராசியில் நிற்கப்பலன் :—சூரியன் மேஷத்திலிருந்து தெசை நடந்தால் கெஜாசுவாந் தோலிகாதி பாக்யவானுகி, ராஜ்யபாரம் செய்வது, அவ்வழியில் பெரிய ராஜ உத்தியோக புருஷனுகி அமுல் நடத்துவது, சுவர்ன நவரத்தினங்களால் அலங்கரித்த ஆபரணுதியும், பட்டு பட்டாவளிகளும், அணிவதும் மதனகேளி விலாஸத்தோடுங் கனக ரஜித பாத்திராதிகள் பெற்ற பாக்யவானுய், உத்தம ஸ்திரீ தர்மபத்தினி உடையவனுக, வேதாந்த சாஸ்திராதி புராணுதி பரிசயனுகி தீர்காயுஷ்மானனுக, பிதுர்பாக்ய விசேஷஸ்தனுக பிதாவைப் பூஜிக்கும் குணமுடையனுக யிருப்பதென்பதாம்.

2. சூரியன் ரிஷபத்தில் நிற்தும் பலன் :—சூரியன் ரிஷப ராசியில் இருந்து தெசை நடந்தால் பூமிகள் விசேஷமாயும், கோவிருத்தியாதிகமுடையவனுக, தேவ பிராம்மண பக்திபூஜிதனுகிற மனசுடையதும், ஸஜ்ஜன கோஷ்டிகளில் கூடிவித்யாப்பியாசம் செய்வது ஓதுவிப்பது ராஜாவுக்கு சமானமான கௌரவம் வாய்க்கு மென்பதாம்.

3. சூரியன் மிதுனத்தில் நிற்தும் பலன் :—சூரியன் மிதுன ராசியிலிருந்து தெசை நடந்தால் தனுதிகம், வித்தியாதிகம், வித்யா போதிக்கும் உபாத்தியாயராகிறது, பிரஸங்க ஜீவனம் செய்கிறது, சத்யவசனமாக பேசுவது, நடப்பதும், வாக்குபடுத்துவதும், ராஜாக்கள் மித்திர

மாகுவது, வித்வான்களால் பூஜிக்கப்படுதல், ஸங்கீதகான வித்யாப் யாசியாகிறது அல்லது சதா கேழ்க்கிறதும் தாரபுத்திராதி வர்க்கத் தவர்களுடன் சந்தோஷிப்பதுமாம்.

4. சூரியன் கடகத்தில் நிற்கப் பலன் :—சூரியன் கடகராசியிலிருந்து தெசை நடந்தால் ராஜ்பாதி காரி, அவ்வழியில் உத்தியோகாதி காரியாய், ராஜப்பிரீதியாய் இருப்பது மனோசந்தோஷம், இதர தேசமே போய் உத்தியோகம் பண்ணுவது, இதர கிராமங்களிலும், பூமிகளும், தானியாதிகளும், விசேஷமாக விருத்தியாவதும், சுபகா சந்தோஷமுமா மென்பதாம்.

5. சூரியன் சிம்மத்தில் நிற்கும் பலன் :—சூரியன் சிம்ம ராசியிலிருந்து தெசை நடந்தால் ராஜப்ரீதிகரம், ராஜாக்களால் பூஜிக்கத் தகுந்த அந்தஸ்துடைய வனுகிறது, பூமிக்கும் அதிபதியான ராஜப் பட்டம் பெருகிறது. தேவாலய பிரதிஷ்டா கிருஹலாபகாமும், சுசீல மனசுடன் குலதர்ம மானவை அனுஷ்டித்து இல்லா தர்மிஷ்டமாக நடத்துவதான சத்களத்திர மித்திராதி பந்துக்களுடனும் பாாக்கிரம மாய் வாழ்வதாகும்.

6. சூரியன் கன்னியில் நிற்கப் பலன் :—சூரியன் கன்னியிலிருந்து தெசை நடந்தால் தேக கஷ்டம், சம்பாதித்த பொருள் நாசம், பூமியும், தனமும், மாடு கன்றுகாலிகளும் நஷ்டமாகுவது, மித்திரஜெனங்களிடத்தில் வாதித்துக்கொண்டுவிட்டு பிரிகிறது, தோசாந்திரி யாவது மாகும்.

7. சூரியன் துலாத்தில் நிற்கப் பலன் :—சூரியன் துலா ராசியிலிருந்து தெசை நடந்தால் தனஹாணியும், எதிரியினுல் தான் அபஜெய மடைகிறது, பிராதா மரணம் அல்லது விரோதமாவது, நல்லவர்களும், பகையாவது, ஸுகுர்த மாகும்படியான செய்கையில்லாமல் துஷ்கிர்த்த மாயிருப்பது, நல்லோரை பார்க்க விஷம்போல் பாவிப்பது, எந்த காரியங்கள் செய்தாலும் நஷ்டம் சம்பவிக்கிறது என்பதாம்.

8. சூரியன் விருக்சிகத்தில் நிற்கப் பலன் :—சூரியன் விருச்சிகத்திலிருந்து தெசை நடந்தால் பூமிகள் விசேஷித்து தானிய விர்த்தியை பெருவது, வீடுகள் கட்டுவதும், வரம் பெருவதும் இஷ்டமான வஸ்துக்களெல்லாம் கூடி வருவது, மலைகளிலும், காடுகளிலும் சஞ்சரிக்கும் படியான உத்தியோகத்திலிருக்கிறது, அரண்யாதிகாரி என்பதாம்.

9. சூரியன் தனுசில் நிற்கப் பலன் :—சூரியன் தனுசுராசியிலிருந்து தெசை நடந்தால் விசேஷ சௌக்யம், சுபாதிகத்தால் தன வருத்துண்டாகுவது, ரோகமில்லாமை, சத்துரு நாசமாம், பூமி ஆளும்

அரசன் மித்திரனுகுவது, சகலாபரணுதிகள் சமிர்த்தியாம், தனவந்தனுவன் என்பதாம்.

10. சூரியன் மகரத்தில் நிற்கப் பலன் :—சூரியன் மகா ராசியிலிருந்து தெசை நடந்தால் அரண்யங்களிலும், மலைகளிலும் திரிவான், வீடு, மாடுகள், பூமி, க்ஷேத்திரங்கள், பொன், பொருள், தனங்கள் எல்லாம் நாசமாம். மித்திரர்களும், பந்து ஜெனங்களுக்கும், விரோதப் படுதல் என்பதாம்.

11. சூரியன் கும்பத்தில் நிற்கப் பலன் :—சூரியன் கும்ப ராசியிலிருந்து தெசை நடந்தால் சதா ஒருவருடனே விவாதம் பேசுகிறது, மனித வர்க்கத்தவர்களெல்லாரும் பகையாகிறது, நித்தியம் துக்கமாகவே யிருக்கிறது, தாரநாச மடைகிறது, தாரம் எதிர்த்துப் போராடுவது, அதனுல் மனசுக்கு விரோதம் விளைந்து விகாரப்படுகிறது, கைப்பொருள், மாடு, கால்நடை, பூமி, க்ஷேத்திரங்களுடனே முக்கியமானவை எல்லாம் நாசமாவதாம்.

12. சூரியன் மீனத்தில் நிற்கும் பலன் :—சூரியன் மீன ராசியிலிருந்து தெசை நடந்தால் அதிக தனலாப முண்டாவதும், குடும்பத்தில் சதா சுப சந்தோஷாதிகளான சுபங்கள் நடத்துவது, பந்து ஜெனப் பிரியனுகி ஸ்திரீ புத்திர மித்திரர்கள் பந்துக்களுடனே சகல ஐஸ்வரிய வந்தனுகவும், விசேஷ யோக்யானுதிகாரி என்பதுமாம்.

சூரியன் ஆரோகண ராசியில் நிற்கப் பலன் :—சூரியன் ஆரோகண ராசிகளிலிருந்து தெசை நடந்தால் சரீர தேஜோகாந்தி, ஸ்வரூபியாய், பல புஷ்டியுமாய் அதிக சௌக்கிய கரமுமாய், ராஜ்பாதி காரியாய், அல்லது ராஜசமானனுய், ராஜப்பிரியனுகி, கிராம, க்ஷேத்திர, கோ, ஸ்த்ரீ, புத்திர விருத்தியை விசேஷிக்கப்பெற்று, அசுவ, ஆந்தோளிகாதி வாகனுருடனுக, விசேஷ லாபகரத்தைப் பெற்று வாழ்வது என்பதாம்.

சூரியன் அவரோகண ராசியில் நிற்கப் பலன் :—சூரியன் அவரோகண ராசிகளி லிருந்து தெசை நடந்தால் தன்தானியாதி நாசம், பிதுரார்ஜ்ஜிதமான பூமிகளும், வீடுவாசல் முதலான பூர்வ சொத்துக்களும், சுயார்ஜித பொருளும், விரையமாகி, வெளிதேசம் போய் வருவோமென்று திரிந்து அலைவதாம், தாரா புத்திராதி பந்து வர்க்கமும் பகையாவார்கள் அதிக ஆபத்கரமான வேலையினுல் ஜீவிப்பது.

## சூரிய தெசையில் சூரிய புக்தி மீ௳-3 நாள் 18-க்குப் பலன்

சூரியன் லக்கினத்துக்குக் கேந்திரத் திரிகோணங்களிலும் உச்சத்திலும், சுவ க்ஷேத்திரத்திலு மிருந்தால் தீர்த்த யாத்திரை

தேவ தரிசனம் செய்வது, ராஜாபிமான சன்மானம் பெருவது, விசேஷ பூமிகள் சம்பாதிப்பது, ஆரோக்யத்துடன், ஸ்த்ரீ புத்திராதி சம்பத்துடன் பிரக்யாதியான பேர் எடுப்பது, பசுபால் கரவல்களான பாக்கியமும், வஸ்த்து வாகனுதிகளுடனே நூதன ஆடையாபரணுதி களுடன் வாழ்வதும், இஷ்ட சித்தியாவது, கிருஹத்தில் கலியாணுதி சுபங்கள் செய்வது, கீதகான விநோதாதிக ஆசையடைவது, கணித வித்தையை அறிவது என்பதாம்.

சூரியனுடைய வாரமான ஞாயிற்றுக் கிழமையில் ராஜசன் மானம் கிடைப்பது, பந்துக்களுடனேயும் பிதுரு வர்க்கத்தாருட னேயும், அதிகப் பிரீதியுடனும் விசுவாசத்துடன் இருப்பதாம். மலை காடுகளுக்கு அதிகாரியாம்.

எத்தனித்த காரியங்கள் எல்லாம் சித்தியுமாய், எதிரி யில்லா மலே தானே சகல ஜெயமும் அடைந்து வருவது முத்துக்களினுல் செய்த ஆபரணுதிகள் வரும். இதுவரையில் பார்க்கக் கிடைக்காத நூதன் வஸ்துக்கள் கிடைக்கும், வெள்ளை நிறமான குதிரை வாகனம் கிடைக்கும், ராஜப்பிரசாதம் கிடைப்பதாம்.

சூரியன் லக்கினத்துக்கு 6, 8, 12-ல் இருந்தாவது, நீச ராசியி லிருந்தாவது, சத்துரு ராசியிலிருந்தாவது, புக்தி நடந்தால் ஸ்தான நாசம், தாயாதிகளால் கலகம், சுவ பந்து ஜெனங்கள் எல்லாரும் துவேஷமாவார்கள், ராஜாக்களால் அவமானப்படுகிறது, க்ஷேத்திர நாசமும் வரும், தன நஷ்டம், பசு நாசம், தாரா புத்திரர்கள் நாச மடைவார்கள், சிரோ பாதை. வயிற்றுவலி யுண்டாகும். சரீரம் சதா காலமும் ஜாட்டியமாகவே இருக்கும், மனோ துக்கம், சோர பாதை, அக்கினியால் பீடை, ருணபாதை, சத்துருக்களால் யுத்தம் மகாபய மாம்.

சூரியன் பாப கிரகங்களுடன் கூடினுலும் பாப கிரகங்களிட பார்வையை பெற்றுலும்' பாப சிந்தையே அதிகமாகும். மனசு மகா பயத்தோடிருப்பது, சரீர பீடையும், சதா மனஸ்த்தாபமும், காரிய நாசம் வரும். அதிக தன விரையமாகும், ராஜாங்க காரியங் களினுல் கலகம் விளையும், பந்துக்களுடன் துவேஷிப்பதும், எடுத்த வேலைகள் தடைப்படும் வெளிதேசம் போக நேரும்.

சூரியன் லக்கினுதிபதியோடு கூடினுல் புக்தி ஆதியில் அதிக தன லாபம் வரும், அதிக ஸௌக்ய முண்டாவதும், எத்தன மில்லா மல் விவாஹ, மங்களகரங்களினுல் தன விரையம் நேரும், ராஜாக் களிடம் பேட்டியை காண்பது.

சூரியன் பாக்கியாதிபதியுடன் கூடினுல் பாக்கியங்கள் விருத்தி யாகும். சுப சோபனகரம் நடத்தல், நல்ல காரியுங்களையே செய்

வது, ஞானசித்தி பெற்று புராணுதி கதா வித்தியாதிகளை அனுஷ்டிப்பதும், கேட்பதுமாம்.

சூரியன் வாகனதிபதியுடன் கூடினுல் வாகனங்கள் கிடைத்து சதா சஞ்சாரியாவன். நூதனமான கிராமங்களும், கிருககட்டடங்களும் லாபமாக வருவது. நாற்கால் ஜீவாதிகளால் லாபமாவதாம்.

சூரியனைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும், வஸ்திராபரண லாபம், மாதுரு வர்க்கத்தார் விரோதப்படுவார்கள், சிரோ பாதை என்பது.

சூரியனைச் செவ்வாய் கூடினுலும் பார்த்தாலும், தாயாதிகள் சத்துருவாய் விடுவார்கள், தன் கூடப் பிறந்த சகோதாருக்குக் கெண்டம், நினைத்தபடி கூடிவாராததும், விளைபொருள் நாசமாம்.

சூரியனைப் புதன் கூடினுல், விஷ்ணு பூஜைகளில் ஆசையாயிருப்பது, உத்தியோகச் சித்தியைப் பெருவது கிரைய விக்கிரையங்களினுல் லாபம் வருவது.

சூரியனைக் குரு கூடினுலும், பார்த்தாலும், புத்திரோற்பத்தியுண்டாகும். சுவக் கிரஹத்தில் கல்யாணுதிகள் நடக்குமாம். வீட்டில் தனமும், தானியமும் விசேஷமாக விருத்தியாகும்.

சூரியனுடன் சுக்கிரன் சம்மந்தப்பட்டால், விவாஹம் நடக்கிறதும், ஸ்த்ரீ கெர்ப்பமாவதும், வாகனங்களும், சகல வஸ்துக்களும் பிராப்தமாகும். இஷ்டமாக நினைத்த வேலைகளெல்லாம் சித்தியாகும்.

சூரியனைச் சனி கூடினுலும், பார்த்தாலும், பூமி, மாடு, கன்று கால்நடைகள் நாசமாகும். கிருஷியால் பலன்கள் நஷ்டமாகி விடுமாம், தன் அடிமை வர்க்கத்துக்கும் கலக மேற்படும். ஸ்தான நாசமும், ராஜாக்களால் பயமும் நேருமென்பதாம்.

சூரியன் 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் சம்பவிக்கும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சூரியப் பிரார்த்தனை செய்து, ஈசுவரனுக்கு அபிஷேகம் செய்து அப்புறம் சாந்தியை விதிப்படி செய்தான பிறகு சிகப்பு நிறமான பசு தானம் செய்ய தோஷ நிவர்த்தியாகி ஆயுர்விர்த்தி யுண்டாகும்.

## சூரிய தெசையில் சந்திர புத்தி மீ 6-க்குப் பலன்

சந்திரன் லக்கினத்துக்கு கேந்திர கோணத்தில் இருந்தால் விவாஹ, மங்களகாமும், தனதானியாதிகள் விசேஷமாய்ப்பலிப்பதும், கிருகம், கிராமங்கள் நூதனமாய்க் கிடைத்து விருத்தியாவதும், பசு மாடு, கன்று கால்நடைகள், வாகனுதி சகடங்கள் அதிகமாகும். மனே சந்துஷ்ட்டியாக யிருப்பான்.

சந்திரன் ஜென்ம லக்கினத்திலும், ஆட்சி வீட்டிலும் இருந்தால் தார சௌக்கியமும், தன லாபமும், புத்திர லாபமும், சுப விரையாதிகளினுல் மனே சந்துஷ்டியாக விருப்பதும், பிரபுக்களினுல் சன்மானம் பெருவதும், தான் ஒருவருக்கு சன்மான மீவதும், ராஜாங்கத்தில் உத்தியோகத்தினுல் அபிமானமும், அதிகமான சம்பளம், மேல் பட்ட உத்தியோகம் கிடைப்பதும், இஷ்ட சித்தியும் சுகாதிகமுமாம்.

சந்திரன் க்ஷீணனுகவும், பாப சம்பந்தனுகவும், இருந்தால் தாரத்துக்கும், புத்திரர்களுக்கும் நாசகாமும், மனதில் அவிதிதமான எண்ணம் தோன்றி இஷ்ட ஜெனங்களே விரோதித்தும், சகோதார்களுடன் போராடும் தன்மையுடையவனுய், விட்டுப் பிரிந்து போவதும், சகோதர மரணமும், ராஜாங்கத்தில் கலகமும் தனதானியாதி பசு நாசமாவது மாகும்.

சந்திரனேச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும், முன்இடத்துக்கு விரோத மேற்படுவதும், ராஜாங்கத்தால் விரோதமும், மன்தில் பீதியை அடைடவதும், கலகமேற்பட்டு தன் பொருள்கள் நாசமாவதும், சதா மனதில் விசாரப்படுவது மாகும்.

சந்திரனேச் செவ்வாய்க் கூடினுலும், பார்த்தாலும், சரீரத்தில் சொரி, சிரங்குகளும், ரணமேற்பட்டு குல்ம ரோக முண்டாவதும், ஆயுதங்களிலே சிகிச்சை செய்து கொள்வதும், எந்த வேலையையும் செய்ய முயலாமல் பந்தனமாக விருப்பதும், தனக்கு மித்துருக்களாகவும், சமான ஜெனங்களாகவு மிருக்கிறவர்களுக்கு அரிஷ்டமும், பூமிகள் பலிதக் குறைவும், கால் நடைக்குப் பீடையுமாம்.

சந்திரனேப் புதன் கூடினுலும், பார்த்தாலும், வித்யா தத்வக்கியான மார்க்கங்களேப் பயிர்ச்சிப்பதும், மற்றெருவருக்கு போதிப்பதும், வியாபாரமூல கிரைய விக்கிரையங்களினுல் தனலாபமும், தன் சிநேகித பந்து வர்க்கத்தாரோடு விசுவாசிப்பதும், எத்தணித்த காரியங்களேச் செய்து முடிப்பதும், நூதனமான ஆடையாபரணங்களே அணிவதுமாகும்.

சந்திரனேக் குரு கூடினுலும், பார்த்தாலும், புத்திர விர்த்தியும், கிராமாதிகாரமும், நூதன க்ஷேத்திரம் பூமிகள் கிடைப்பதும், கர்ப்பிணியாயிருக்கிற ஸ்திரீயுடன் கூடுவதும் ,மனசுக்குச் சந்தோஷமான புண்ணியங்கள் நேருவதுமாம்.

சந்திரனேச் சுக்கிரன் கூடினுலும், பார்த்தாலும், தான் வித்யாதிகனுகி வித்துவான்கள் நிறைந்த சபையில் பிரசங்கிக்கும்படி நேரவும், சன்மானம் பெறப்படுவதும், குடும்பத்தில் கல்யாணுதி சுப கருமங்கள் நடத்தலும், பூமிகளில், கிணர் அகழி முதலான ஜலாதாரமேற்படுத்தி

தோப்புகள், தோட்டங்கள் வைப்பதும், தேவாலயங்களுக்கும், பந்துக்களிட சுபாதிகளுக்கும், பொருளுதவி பண்ணுவதுமாம். தன தானிய லாபாதிகளும், புத்திர புத்திரிகள் உண்டாவதுமாகு மென்பதாம்.

சந்திரனைச் சனி கூடினாலும், பார்த்தாலும், தன் அடிமை ஆள்கள் கலகமும், பசு நாசமும், க்ஷேத்திர நாசமடைவதும், வெளி தேசம் போவதும், அல்லது எண்ணமும், எல்லோருடனும் கலகமாய் விளைந்துவருவதும், சதா மனதுக்குத் துக்கமுமாம்.

## வேறு

சந்திரன் 6-மிடத்திலும், 8-மிடத்திலும், 12-மிடத்திலு மிருந்தால், ஜலத்தினால் கெண்ட முண்டாகுமாம், ஒருவருக்கு அடிமை அல்லது கட்டுப் பாட்டுக்கு அடங்கி கிடப்பதும், வியாதி பீடிதமும் ஸ்தானபேத மாவதும், மூத்திர வியாதி பெருவதும், அனைவரையும் நிந்திப்பதும், மனஸ்தாபப் படுவதும், தாயாதி ஜெனங்களைவிட்டு கலகாதிகத்தினால் பிரிவதுமாகும்.

சந்திரன் தெசானாதனுக்கு 6, 8, 12-மிடங்களில் இருந்தாலும், அல்லது பாபக்கிரகங்களுடன் கூடி இருந்தாலும், தைரிய மற்றவனாக வும், சோம்பேரி யென்ற பேரோடும், வயிரு பிழைப்புக்குக் குறைவா யும், அன்னபானாதிகள் காலத்தில் கிடைக்காமல் கஷ்டப் படுகிறவனு மாய், திருடர் பயத்தாலும், அக்கினியாலும், ராஜ விரோதத்தினா லும், பீதியை அடைவன் என்பது.

சந்திரன் தெசானாதனுக்கு 9-மிடத்திலும், 11-மிடத்திலுமிருந்து நல்லோருடன் கூடியும், பார்வையையும் பெற்று இருந்தால் சுகாதிக மும், பாக்கியங்கள் விசேஷிப்பதும், ராஜப்பிரீதியும், தாரா புத்திரர் கள் விசுவாசமா யிருப்பதும், ராஜாங்கதிகார மேற்படுவதும் குடும்பத் தில் கலியாண சுபாதிகள் நடத்துவதும், யக்யாதிகளில் தீக்ஷைவகிப் பதும், எண்ணின காரியம் முடிப்பதும், வாகனங்கள் கிடைப்பதும், பந்துக்களுக்கு உதவி புரிவதும், தேவாலய தரிசனம் கிடைப்பது மாம்.

சந்திரன் தெசானாதனுக்குக் கேந்திரங்களிலும், கோணங்களிலு மிருந்து சுபக்கிரகங்களிட சேர்க்கையும், பார்வையும் பெற்று யிருந் தால் தனலாபமும், தடாகங்களும், ஆலய கோபுர மண்டப பிரகார புண்ய கைங்கரியங்களை நடத்துவதும், ராஜப் பிரபுக்களினால் சகாய மும் உத்தியோக மேன்மையும், குடும்பத்தில் சுபாதிக சந்தோஷமும், நல்ல கீர்த்தியும் பெருவான் என்பதாம்.

சந்திரன் நீசமானாலும், நீசக்கிரக சம்மந்தம் அல்லது பார்வை யை பெற்று இருந்தாலும், ஸ்தான நாசமாவதும், மனசுக்கு துக்காதி

கத்துடன் சரீர வியாதியால் பீடிக்கப்பட்டு பயந்திருக்கிறதுமாம்.

சந்திரன் லக்கினத்திற்கு 2-மிடத்திலும் 7-மிடத்திலுமிருந்தால், அபமிருத்துயுநேருமாம். இந்த அபமிருத்யு தோஷம் நிவர்த்தி யாவதற்கு துர்க்கை ஜெபம் செய்தும் வெள்ளை நிரமான ரிஷபதானம் செய்ய ஆரோக்ய முண்டாகும்,

## சூரிய தெசையில் செவ்வாய் புக்தி

## ஷ்ரீ 4-நாள் 6-க்குப் பலன்

செவ்வாய் லக்கினத்திற்குக் கேந்திரங்களிலும், திரிகோணங் களிலும், உச்சஸ்தானத்திலும் ஆட்சி வீட்டிலுமிருந்தால் சதா சுப கர்மங்களையே செய்கிறதும் பூமிகள் லாபமாகக் கிடைக்கிறதும் கிருஷிதானியாதிகமும், நூதன வீடுகட்டுவதும் கிராமம் நூதனமாக வாங்குவதும் சிவப்பு ஆடை ஆபரணமணிவதும் பெண்டிரும் புத்திரர் களும் ஸௌக்யமாகவும், சத்துரு ஜெயமடைவதும் ரத்தினலாபமும், புத்திரர்களுக்கு கல்யாணமாவதும்.

செவ்வாய் லக்கினத்திற்கு ஆறுமிடம் எட்டாமிடம் பனிரெண்டா மிடங்களி லிருந்தாலும், நீசமானாலும், தாயாதிகளால் கலகம் நேரு வதும், சமமான ஜென நாசனமும் தாராபுத்திரர்கள் மரணம் அல்லது அவர்களை விட்டுப் பிரிவதும் பசு வாகனாதிகள் நாசமாவதும் சரீரத் திற்கு ரணபாதை, ஜுரபாதையும், திருடர்பயம், அக்னிபயம், ராஜ தண்டனையும் எடுத்த வேலைகள் விக்னப்பட்டு நடைபெறாமல் போவ தும், ஸ்திரீகலகமும் மனக்கிலேசம், சத்துரு விருத்தியும் உண்டாகும்.

செவ்வாயை ஐந்தாமிடத்ததிபன் ஒன்பதாமிடத்ததிபன், பதி னோராமிடத்ததிபன் இவர்களில் யாராவதொருவன் கூடினாலும் பார் த்தாலும், பாக்யங்கள் விருத்தியும், காரியார்த்த லாபங்களும் உண் டாமென்பது.

லக்கினத்தில் சூரியன் இருக்கச் செவ்வாய் புக்தி நடந்தால் அதிக துக்கங்களும், ராஜாங்கத்தில் விரோதமும், கிருஹம் நாசமடை வதும் தனவிரையமாவதுமாம்.

2-மிடத்தில் சூரியன் இருக்க செவ்வாய் புக்தி நடந்தால் தன விரையமும், பௌருஷ வார்த்தைப் பேசுவதும், மனக்கிலேசமும், நேத்திரத்திற்கு ரோகமும், மஹாபயமும் உண்டாகும்.

3-மிடத்தில் சூரியன் இருந்து செவ்வாய் புக்தி நடந்தால் மகா பயமும், பாபமும், அடைவதான காரியங்களைச் செய்கிறதும், பிர யாணத்தில் அபாயமுமாம்.

4-மிடத்தில் சூரியனிருக்கச் செவ்வாய் புத்தி நடந்தால் பாபசிந் தையும் மாதுரு நாசமும் மனோதுக்கமும், சோரரால் பொருள் போவ

தும் அக்னியால் தனக்காவது, குடும்பவர்க்க ஜெனங்களுக்காவது அயபாமும், ராஜாங்கத்தில் விரோதமாவதுமாம்.

5-மிடத்தில் சூரியனிருக்கச் செவ்வாய் புக்தி நடந்தால் புத்திருக்கு கெண்டாதி தோஷமும், தன நஷ்டமும், புத்தி பிரமையும் புண்யக் குறைவும், பிதாமரணமும், ஜெபதப ஈனமுமாம்.

6-மிடத்தில் சூரியனிருக்கச் செவ்வாய் புக்தி நடந்தால் கடன் படுவதும் முன்னால் கொடுத்து வாங்கியிருக்கிற கடன்கள் விஷயமாய் கச்சேரியில் வியாஜ்ஜியம் துவக்குவதும் இதாளுக்குத் தன் பூமிகளைக் குறைந்த விலையாக நஷ்டமாகக் கொடுப்பதும், சோரராலும், அக்னியாலும், வியாதியாலும், பீடிக்கப் படுவதுமாம்.

7-மிடத்தில் சூரியனிருக்கச் செவ்வாய் புக்தி நடந்தால் துக்கத்தினலும், சரீர வியாதியாலும், கோபியாய் எவரையும் சீறிப் பேசுவதும், தாரப்பகையும், வெளி ஊர்களுக்குப் பிரயாணம் வாகனங்களினல் காயம்படுவதும், ஜுரம், அதிஸாரம், பித்தமேக வியாதியினல் பீடிக்கப்படுவதுமாகும்.

8-மிடத்தில் சூரியனிருக்கச் செவ்வாய் புத்தி நடந்தால் மகா பயமும், வியாதியால் வருந்தி மரணமடைவதும் அல்லது மரணத்திற்குப்பதிலாகச் சொத்துகள் நாசமடைந்து இதாளுடைய சகாயத்தால் ஜீவிப்பதுமாகு மென்பதாம்.

9-மிடத்தில் சூரியனிருக்கச் செவ்வாய் புக்தி நடந்தால் மனசுக்கு கிலேசமும், துக்கமும், குருவும், பிதுர்களும் மரணமாவதும், தர்ம காரியங்களைச் செய்யாதபடி பாபச் செய்கையை செய்யுங் குணமும், அம்மான் வர்க்கத்தில் மரணமாவதும் அல்லது அவ்வர்க்கத்தாருக்குப் பகையாவதுமாகும்.

10-மிடத்தில் சூரியனிருக்கச் செவ்வாய் புத்தி நடந்தால் பாபகர்மங்களையே செய்வதும், சோர ரோகாதிகளால் பீடிப்பதுமாம்.

11-மிடத்தில் சூரியனிருக்கச் செவ்வாய் புத்தி நடந்தால் ஆதியில் கஷ்டத்தை அடைந்தும் பின்பாகத்தில் சௌக்யமுமாகும்.

12-மிடத்தில் சூரியனிருந்து செவ்வாய் புத்தி நடந்தால் மகாபயமும், சகோதரர்களும், பிதுரு, பூமி, கன்று, காலிகளுக்கும் விரையமேற்படுவதும், ஸ்தான பேதமாவதும், கண்ணூனமும், இதாளுடைய கிருஹத்தில் வசிப்பதுமாகு மென்பதாம்.

பொது.

பித்த சுரமும், மனோ விகாரம், சதா விசாரமும், சத்துருவை ஜெயமடைய முயல்வதும், தீர்க்க ரோகத்தினல் பீடிப்பதாகும்.

செவ்வாயைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும், மனோ துக்கம் பிதுர் நாசம், செய்தொழில் பங்கம், சத்துரு பாதை, தன விரைய மென்பதாம்-

செவ்வாயைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும், நூதனமான நல்ல ஆடையாபரணம் கிடைப்பது கிரகத்தில் கல்யாணங்கள் நடத்துவது, எடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமாம்.

செவ்வாயைப் புதன் கூடினாலும், பார்த்தாலும், ஸ்திரீ சௌக்கியமும் பந்துக்களில் பூஜிக்கத்தக்க பெருமை வாய்ப்பதும், வித்யாதிகத்தினால் சபா பிரசங்கம் செய்வதும், சத்துருக்கள் விருத்தியாய் எதிர்வாதிப்பதுமாம்.

செவ்வாயைக் குரு கூடினாலும், பார்த்தாலும், புத்திரர்களுக்குப் பீடையும், தன விரையமாவதும், சரீரம் அதிக தாபத்தை அடைந்து ஆலஸ்யமாயிருப்பதும், தன் மித்துருக்களோடு சேர்ந்து இருப்பதுமாம்.

செவ்வாயைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும், ஸ்திரீ ஸௌக்யமும் சன்மித்திரருரவும், அனேக ஜெனங்கள் துதிப்பதும், விசித்திரமான வீடு கட்டடங்கள் கட்டுவதும், விவாக மங்களங்கள் நடத்துவது புத்திருண்டாவதுமாம்.

செவ்வாயைச் சனி கூடினாலும், பார்த்தாலும், கெர்ப்பத்திலேயே, சிசு மரணம், எதிரிகளால் சதாகாலம் கலகம்விளைவதும், தனக்கு மித்திரராயும், சமானமாயும், இருக்கிறவர்கள் மரணமாவதுமாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு 12-மிடத்திலும் 8-மிடத்திலும் இருந்தால் வாச ஸ்தான நாசம், வாகனாதிகள் பீடை, தேகாரிஷ்டம், தன மில்லாமை, குரைவான போஜனம், சோர பாதை ராஜாங்கத்தில் வருத்தத்தை அடைவதுமாம்.

செவ்வாய் 10-வது வீட்டுக்கதிபதியுடன் கூடினால், செய்கிற காரியங்களினால் பலன்கள் நாசத்தை அடைவதுமாகும்.

செவ்வாய் தெசாநாதனுக்குக் கேந்திர கோணங்களி லிருந்தால் பாபத்தாலும், அபகரிப்பாலும், தனம் வருவதும், அசுபங்கள் நேருவதும், ஸ்தான பேதப்படுதலும், மனோ துக்காதிகமும், குருவான வருக்கும், புத்திரர்களுக்கும் தாரத்துக்கும் தானதபங்களுக்கும் நாசம் வருவதுமாம்.

செவ்வாய் தெசாநாதனுக்குக் கேந்திரங்களி லிருந்தால் பாபத்தினால் பொருள் தேடுவது, காரியனுசமடைவது துஷ்கீர்த்தியான பேரெடுப்பதுமாம். சதா பாபச் செய்கையைச் செய்வதும், பந்துக்களுக்கு, விரோதப் படுதல் மனத்துக்கம் அடைவதுமாம்.

செவ்வாய் தெசாநாதனுக்குப் பாக்கிய ராசியான 9-மிடத்தில் இருந்தால் சத்துரு ஜெயத்தினுல் தனம் வருதலும், புத்திரருண்டாவதும், மித்திரர், பிரபுக்கள், அதிக நேசமாவதும், சாஸ்விதமாகிய பூமி கிடைப்பதும், கிருஹம் கட்டல், வாங்குதல் என்பதாம்.

செவ்வாய் நீச்சக் கிரகத்திஞேடும், பாபிகளோடும், சேர்ந்திருந்தால் ராஜாங்க மூலத்தினுல் தனச் சேதமாகும், தெசாஞதனுக்கு 6-மிடம், 8-மிடம், 12-மிடங்களில் செவ்வா யிருந்தாலும், பாபிகள் கூடினுலும், புக்தி ஆரம்பத்தில் கஷ்டமும், கடைசியில் சௌக்யமும் உண்டாகும். அபூர்வ வஸ்துக்கள் கிடைப்பதும், நகைநாணய மணிவதும், யுத்த ஜெயமும், பலவிதமாக தனம் வருவதுமாகும். 2-மிடத்திலும், 7-மிடத்திலும, செவ்வாயிருந்தால், அகால மரணமாம் அல்லது ஜாட்டியம் பண்ணும், பரிகாரம் சுப்பிரமணிய ஜெபமும், விதிப்படி சாந்தியும் செய்ய தோஷ நிவர்த்தி.

## சூரிய தெசையில் ராகு புக்தி மீ 10-நாள் 24 க்குப் பலன்

பொது.

சத்துரு பாதை, மிருக பயம், தார நாசம், தன விரையம், சர்வ காரியங்களும் தடைப்படல், சதா துக்கமும் விஷப்பீதியுமாம்.

ராகு லக்கினத்திற்குக் கேந்திர கோணத்திலிருந்தால், ஆதியில் 2-மாச பரியந்தம் கஷ்டமும், தனநாசமும், மனத்துக்கமும், திருடர் பயமும், விஷந்தீண்டுவதும், அக்னி பாதை, ராஜபயம், தாரா புத்திரர்களுக்குப் பீடையுமாம்.

ராகு சுபருடன் கூடியும், சுபர்களால் பார்க்கப்பட்டும், இருந்தாலும், சுபாம்சையிலிருந்தாலும் தேகத்திற்கு ஆரோக்யமும், அதிக சௌக்யமும், ராஜப்ரீதியும், குடும்பத்தில் சுபகாரமுமாகும்.

ராகு லக்கினத்திற்கு 2-மிடத்திலாவது, 12-மிடத்திலாவது, இருந்து சுபர்கள் கூடியோ அல்லது பார்த்தோ இருந்தால், பாக்கிய விருத்தியும், கீர்த்திலாபமும், தாராபுத்திராதிகள் சௌக்யமும், புத்திரோற்சவாதி சந்தோஷமடைவதும், கிருகத்தில் கல்யாணங்கள் நடத்தலுமாம்.

ராகு லக்கினத்திற்கு ஆறுமிடம், எட்டாமிடம், பனிரெண்டாமிடத்திலிருந்து பாபிகள் கூடியாவது, பாபிகளால் பார்வையை அடைந்தாவது இருந்தால் பந்தனமாவதும், ஸ்தான நாசமும், காரா கிருகமடைதலும், சோர பீடை, அக்னி பாதை சரீரரெண ரோக வியாதியும், மனசில் பீதியும், தாரா புத்திரர்களுக்குப் பீடையும், நாற்கால் ஜீவன்கள் நாசமும், வீடு பூமி க்ஷேத்திரங்கள் நாசமும் உயர

மான இடத்திலிருந்து கீழே விழுவதும் சூத்திரப் பிரபுக்களால் பய முண்டாவதுமாகும்.

ராகுவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும், கலகத்தினால் இருந்த இடம் நாசமாவதும், மதி கெடுவதும், மான பங்கம் வருவதும், தன் அதிகாரம் மாறிப் போவதுமாம்.

ராகுவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும், தன்வீட்டிலிருக்கிற பெண்டுகளால் கலகமும், தலைவலியும், கண்ணோயும், வயிற்று நோவும், பந்துக்கள் நாசமாவதுமாம்.

ராகுவைச் செவ்வாய்க் கூடினாலும், பார்த்தாலும், அம்மையாலும், சுரத்தாலும், ரெணபாதையாலும் துன்பம், பங்காளிகள் வழக்கிடுவதும், சமான மித்துருக்கள் பிராண ஹானியாவது மாகும்.

ராகுவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும், புத்தி ஆதியில் கஷ்டாதிகமும், ராஜ ஸன்மானமும், கீர்த்தியும் கிருகத்தில் கலியாண வைபவங்கள் நடத்தலுமாம்.

ராகுவைக் குரு கூடினாலும் பார்த்தாலும், நல்லவர்களுக்குத் தான் கலகத்தை விளைவிப்பதும், பிராம்மணப் பகையும், தாழ்ந்த ஜாதிகளால் மனத்துன்ப மடைவதும், பத்தினிக்குக் கெற்பமுண்டாய் புத்ரோற்பத்திக்குத் தோஷமாவது மாகும். கெற்ப தோஷமாம்.

ராகுவைச் சுக்கிரன் கூடினாலும் பார்த்தாலும், வாகன லாபமும், நூதனமான வஸ்திராபரணங் கிடைத்தலும், ஸௌக்கிய சந்தோஷமும், ஸ்திரீ புத்திரர்களுடனும் மித்துரு பந்து ஜெனங்களுடனும் சுகமாயிருப்பதுமாம்.

ராகுவைச் சனி கூடினாலும் பார்த்தாலும், நீசஸ்திரீ ஸங்கமம், நீசனுக்கு அடிமையாவது, மகா கஷ்டத்தை அடைவது மாடுகன்றுகளும், பூமி கிராமாதிகளும் நாசமாவதுமாம்.

தெசாநாதனுக்கு ராகு 6-மிடம், 8-மிடம், 12-மிடத்திலிருந்து பாப சம்மந்தமானாலும், பாபிகளிட பார்வையை அடைந்தாலும், ராஜாங்கத்தில் பீதியை அடைவதும், சோரரால் சொத்து போவதும், விஷந்தீண்டுவதும், சுரம், குன்ம ரோகம், அதிஸாரம் இவைகளால் மரணமடைவதும், ஸ்தான நாசம் மனோ துக்க மனுபவித்தலுமாம்.

தெசாநாதனுக்கு ராகு கேந்திர கோணங்களிலும், அல்லது 3-மிடத்திலாவது, 11-மிடத்திலாவது, இருந்தால் ராஜ ஸன்மானம், பந்து கல்யாணம், தனதானியாதிகள் அதிக உற்பத்தியாவதும், பசு, வாகன க்ஷேத்திராதி லாபங்களும், ஜெயமும், கீர்த்தியாய் ஆரோக்யமாயும், புத்திரி உண்டாய் ஜெனிப்பதுமாம்.

தெசானுதனுக்கு ராகு 6-மிடத்திலும், 8-மிடத்திலும், 12-மிடத்திலும், பாபிகளுடன் கூடியும், பாபிகளால் பார்வையை அடைந்தும் இருந்தால் சோரராலும், விஷத்தாலும், பீதியை அடைவதும், ஸ்தான நாசமாவது, மனோவிகாரமா யிருப்பதுமாம்,

பந்துக்களுக்கு விரோதமாதல், பிள்ளைகள் மரணமாவது, ஆத்ம பந்துவாயிருக்கிறவர்கள் நாசவடைவதும், எடுத்த வேலைகள் தடையாவதும், ஸ்தானபேத மாவதான சந்தேக மேற்படுவதுமாம்.

ராகு 2-மிடத்திலும், 7-மிடத்திலும், இருந்து அந்த ஸ்தானுதிபர்களும் கூடினுல் சர்ப்பப் பீதியாலும், விஷ பக்ஷணங்களினுலும், அபமிருத்யு பயமேற்படும். இதற்குச் சாந்தி துர்கை ஜெபம் செய்து மேஷ தானம் செய்ய கண்டம் நிவர்த்தியாகும்.

## சூரிய தெசையில் குரு புக்தி மீ 9-நாள் 18 க்குப் பலன்

### பொது.

தன ரத்னுதி லாபமும், பிராம்மணரை தேவாலய உற்சவாதிகளில் பூஜிக்க நேருவதும், தாரா புத்திரர்களுடன் சந்தோஷமடைவதுமாம்.

குரு லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலாவது உச்சராசியிலாவது ஆட்சி வீட்டிலாவது, லாப ஸ்தானத்திலாவது, மித்துரு வீட்டிலாவது இருந்து தெசானுதனும் பலம் பெற்று இருந்தால், விவாஹ மங்களாதிகள் நடத்தலும், ராஜ தரிசனம் கிடைப்பதும், தனதானியாதி லாபமடைவதும், புத்திரபுத்திரி லாபமும், மனசுக்குச்சந்தோஷகரமாக ராஜப்பிரசாத பகுமானுதிகமும், இஷ்டகாரிய சித்தியாவதும், லோக ஜனங்களால் கொண்டாடப் படுவதும், தர்ம சித்தியும், வித்யாப்யாச மதிகமாவதும், தேவ குரு பக்தியும், புண்ய தீர்த்தயாத்திரைப்போவதுமாம், பாக்யாதியுடன் குரு கூடினுல் ராஜ்யாதிகாரம் வருமென்பதாம்.

குரு பாப கிரகங்களுடன் கூடினுல் பாப காரியங்களைச் செய்து பாப மூலத்தினுல் பொருள் நாசமும் தேசப் பிரஷ்டமும், மனோ துக்கமுமாம்.

குரு நீசத்தை அடைந்தாலும், அஸ்தமன மானுலும், தன நாசமும், மனோ விசனமும், ராஜகோபத்தை அடைவதும், இஷ்டர்களும் பந்துக்களும் நாசமடைவதும்.

தெசாநாதனை சுபர்கள் கூடியிருக்க, குருபுக்தி நடந்தால், தேவா

லயாதி பிரதிஷ்டாதிகளும், ஆராதன விரதாசரணமும் செய்ய பிரிய மாவதும், குருபக்தியும், மந்திரசித்தியும், வாகனலாபமும் பெறுவதும்.

தெசாநாதனுக்கு லாப ஸ்தானத்தில் குரு இருக்க மகா பயங்கர மான சத்துரு நாசமும், உற்சாகமும், நூதன வீடு கட்டுவதும், கிரா மங்களில் பூமிகள் அதிகமாகத் தேடுவதும், அதன் மூலமாய்த் தானி யாதிகமாவதுமாகும்.

தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களில் குரு பாபிகளுடன் கூடி யிருந்தால், அக்னிபயமும், புக்தி ஆதியில் தார ஸௌக்யம், பாக்ய விருத்தி போஜன சௌக்யமும், நூதன வஸ்திராபரண லாபங்களும், சுப சோபனகரங்களும், மகா சந்தோஷமாம், புக்தி கடைசியில் மனக்லேசம் தேக பீடை முதலானதுமாம்.

குரு லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து நீசருடனும் பாபிகளுடன் சம்பந்தமானல் ராஜாங்க கலகம், பெண்டு பிள்ளைகள் நாசமாவதும், சரீரபாதை, மனஸ்தாபம், பசு, வாகன நஷ்டமும், அதிக் தன விரையமும், ஸ்தான நாசமாவதும், ஆப்த பந்து ஜன வர்க்கங்களுக்கு அரிஷ்டமும், தாயார் வர்க்கத்தாருக்கு அதாவது அம்மான்மார்களுக்கு நஷ்டமும், அதிக மித்திரனுக இருக்கிறவர்க ளோடுகஷ்டமாவதும்.

குருவைச் சூரியன் கூடினலும் பார்த்தாலும், ராஜாங்கத்தாரிட கோபமடைவது, உத்தியோகத்திற்குப் பங்கம் வருவது, ஆலஸ்யமாக இருப்பது, சிரசில் ரோகபாதையை அடைவது.

குருவைச் சந்திரன் கூடினலும் பார்த்தாலும், நூதன ஆடை ஆபரணங்கள் அணிவதும், இஷ்டான்ன போஜன சௌக்யமும், சயன சௌக்யமும், உடையதுமாம்.

குருவைச் செவ்வாய் கூடினலும் பார்த்தாலும், ஸ்திரீ புத்திரர் க்ஷேத்திரங்களுக்கு நாச காமும், எத்தனக் காரியங்கள் தடையா வதும், எல்லோருடன் கலகித்துக் கொள்ளுதலும்.

குருவைப் புதன் கூடினலும் பார்த்தாலும், வேத சாஸ்திராதி களைப் பாண்டித்தியம் செய்கிறதும், தேவதாராதன சத் கைங்கரியங் கள் செய்யும் காரியங்களில் ஈடுபட்டும் ஸ்திரீ கர்ப்போற்பத்தி யேற் படுவதும்.

குருவைச் சுக்கிரன் கூடினலும் பார்த்தாலும் நடன வித்யாப் யாசம் செய்வது, சங்கீத கியான வித்யாதிகமும், நல்ல வஸ்திரா பரணுதி லாப மேற்படுவதும்.

குருவைச் சனி கூடினலும் பார்த்தாலும், கிருஷியும் பூமிகளும், நாச மடைவதும் அடிமைகளால் கலகப் படுவதும், நீச சேவகம்

பண்ணி ஜீவிப்பதுமாகும்.

குரு தெசானாதனுக்கு கேந்திர கோணங்களிலாவது 3-மிடம், 11-மிடங்களிலிருந்து புத்திநடந்தால் திரவியலாபங்களும், ராஜப்பிரீதிகாமும், குடும்பத்தில் சுபாதிகமும், தனதானிய புத்திரலாபமும், எத்தனகாரியங்கள் செய்து முடித்தலும், தீர்த்தயாத்திரை செய்து புண்யாதிகத்தை அடைவதாகும்.

குரு தெசானாதனுக்கு 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், பாபர்களிட சம்மந்தத்தை அடைந்தாலும், பாபிகளால் பார்க்கப் பெற்றாலும், சரீர பிணியும், புத்திரனாசமும், தன விரையமும், புத்திசஞ்சல்லியமும், அதிக கஷ்டத்தினால் தரித்திரமாகவும், எல்லோராலும் கலகப்பட்டும், கிருஷியும், பூமிகளும், நாசமாவதும்.

குரு 2-மிடத்திலும், 7-மிடத்திலு மிருந்தால், அபமிருத்து வருமாம். இந்த தோஷம் நிவர்த்திக்க ருத்திர ஜெபமும், விரதமும், சுவர்ண தானம் செய்யவும், பிற்பாடு ஸௌக்கியமும், இஷ்ட சித்தியை அடைவதுமாம்.

## சூரிய தெசையில் சனி புக்தி மீ 11-நாள் 12-க்குப் பலன்.

### பொது

ராஜாங்க விரோதமும், மனதில் அச்சமும், பந்துக்களுக்கு விரோதமாவதும், சகோதரநாசம், அடிமை விரோதம், அவமானம் அடைவது, நஷ்ட விரையம், தாய் வர்க்கத்திற்கு பீடை, மாதா மரணம், தாரப்பகை அல்லது நாசம், மனோதுக்கமாம் என்பது.

சனி ஜென்ம லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3-மிடம், 11-மிடங்களிலேயு மிருந்தால் எடுத்த காரியம் நடத்தி முடிப்பது, விவகார மூலங்களில் தனம் கிடைப்பது கிருஷி மூலமாக விளை பொருளதிக லாபம் தருவது. வீட்டில் கல்யாண மங்களங்கள் நடப்பது பந்து பூஜிதமும், சன்மானமும் கிடைப்பது தனக்கு சமான ஜெனங்கள் சினேகமாவது, மித்திர வர்க்கங்களே அதிகப்படுவது. நீலநிறமான வஸ்துக்கள் சம்பாதிப்பது எருமை மாடுகளும், யானைகளும், கிடைத்து விருத்தியாவது, செய்தொழில் சீக்கிரத்தில் சுலபமாய் முடிப்பது, நூதனமாக வீடு கட்ட ஆரம்பிப்பது, நானாவிதங்களிலும் தன லாபம் கிடைப்பது, ராஜமூலத்தினால் மகா சுகவானாதல் என்பது.

சனி லக்கினத்திற்கு சஷ்டாஷ்டம விரைய ராசிகளிலும், நீசமாகவுமிருந்தால், தேகபாதகமும், வியாதியினால் மனக்கிலேசமாவ

தும், நீசரிட சகவாஸத்தினுல் கலகமேற்படுவது, இடம்விட்டுபேர்ந்து போதல், ராஜ கோபத்தினுல் பயமாக யிருப்பது. அதிக சினேக பந்துக்கள் நாசமடைவதும், சமானத்துவமா யிருக்கிற ஜனமரணமாவதும், பங்காளி வழக்கு நேருவதும், பசுவாகன நாசமும், எத்தனித்த காரியங்கள் விக்னப்பட்டு நின்று விடுவதும் எல்லோருட னேயும் கலகம் விளைவித்துக் கொள்கிறதும், புத்தி ஆதியில் 3-மீ பரியந்தம் அதிகமான கஷ்டத்தை அடைய நேர்ந்து விடும்.

சனி பாபிகளுடன் கூடினுலும், பாபிகளால் பார்வையை அடைந்தாலும், ராஜத்துவாரத்தினுல் விரோதம் நேரிடுவது, பந்தனமாவது, பிராணத்துக்கே ஹானி வருவது, ஆச்சரியமாக அகஸ்மாத்தான கலகமேற்பட்டு மான ஹானியை பெறுவதும், வாதம், பித்தாதிக்குலே வியாதியையும், சுரம், அதிசார பீடையுமாம்.

சனியைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும், ராஜக்குரோதமுண்டாவது, உத்தியோக பங்கமும், ஆலஸ்யமான வேலைகளும், பிதுருவர்க்க விசைனம் வருவதுமாம்.

சனியைச்சந்திரன் கூடினுலும், பார்த்தாலும், மனேவியாதியுண்டாம், சிரசு வலியும், வயிற்று நோயும், ஸர்வஜன கலகமும், உண்டாகும்.

சனியை செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும், சகோதரரால் கலகம் விளைவதும், யுத்தத்தில் அபஜெய மடைகிறது, மகா வியாதியை அனுபவிக்கிறதுமாகும்.

சனியைப் புதன் கூடினுலும், பார்த்தாலும், வேதசாஸ்திராதி பரிசயனுகியும், சிஷ்யர்களுக்கு தியானம் போதிக்கும் சாமர்த்தியனுகுவதும், பந்துவிசுவாசியுமாகி, கிருஹத்தில் மங்களாதிகளை நடத்துவதாம்.

சனியைக் குரு கூடினுலும், பார்த்தாலும், புத்திர நாசம், தனவிரயம், சரீர வியாதி பாதை பந்து நாசமும், புத்தி சஞ்சல்லியமேற்படுவதாம்.

சனியைச் சுக்கிரன் கூடினுலும், பார்த்தாலும், ஸ்த்ரீ சௌக்யமும், நூதன வஸ்த்திராபரண ப்ராப்தியும், வாகனம் கிடைத்தல், பிரபுவான ஸ்த்ரீயினிடத்தில் சேவகம் பண்ணுகிறதுமாகும், தாரவர்க்கத்தினுலாவது இதர ஸ்த்ரீ சேர்க்கையினுலாவது தனலாபம் கிடைக்குமாம் என்பது.

சனி தெசானுதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், இருந்தால் தனதானியாதிகமும், பூமி, கிருஷி மூலங்களில் லாபமும், வஸ்து வாகனுதிகள் கிடைப்பதும், பந்துக்களிலும், சுய

இல்லத்திலும், விவாஹ மங்களோற்சவ மாகுமென்பது.

சனி தெசானுதனுக்கு கேந்திர கோணங்களில் இருந்தாலுங் கூட பாப கிரகங்களுடன் கூடினாலும், பார்வையை பெற்றாலும், மகா பயமும், யானை, குதிரை நாசமும், பசுவாகன சேதமும், தனதானிய க்ஷீணம், பந்து நாசம், சகோதரருக்கு பீடையும், அணிபணி பாத்திர வஸ்திரயீனம், சுரம், அதிசாரம், இருமல், மூத்திர வியாதி, தாரநாச மடைவது இந்தவித பலன்களை மனுஷன் அடைவானென்பது.

சனி தெசானுதனுக்கு 6, 8, 12-ல் இருந்து பாபிகளுடன் கூடினால், தனமில்லாமை, பந்தனமாக விருத்தல், பீதியை அடைவது தாரா புத்திரநாசம்.

சனி தெசானுதனுக்கு 6, 8, 12-மிடங்களி லிருந்து சுபருடன் கூடினால், புத்தி ஆதியில் சுபசோபன கரமும், புக்திகடைசியில மனக் கிலேசமாமென்பது.

சனி தெசானுதனுக்கு லாப ஸ்தானத்திலிருந்தால் மஹாபய மாம், தாரா புத்திர ருண்டாவதும், தனதானியலாப மேற்படும். ராஜாங்க மூலத்தினால் தனம் விரைய மேற்படும். தன் சுய தேசத்தி லேயே தனம் தேட வருமாம்.

சனி 2-மிடம், 7-மிடங்களில் இருந்தால் அபமிருத்துயு உண்டாகும். இதற்கு பரிகாரம் கருப்பு நிறமான எருமைக்கிடா தானம் செய்ய ஆரோக்யமாகும். மிருத்துயுஞ் ஜயஜெபமும், விதிப்படி சாந்தி செய்யவும். மேஷதானம் பண்ணினாலும் அபமிருத்யு தோஷம் நிவர்த்தியாய், பிற்பாடு சௌக்யமும் உண்டாய் இஷ்ட சித்தியு முண்டாமும்.

## சூரிய தெசையில் புதன் புக்தி மீ 10-நாள் 6-க்குப் பலன்.

புதன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3-மிடத்திலும், 11-மிடத்திலு மிருந்தாலும், உச்சமானாலும், சுபருடன் கூடினாலும், ராஜ ஸன்மானம் கிடைக்கிறதும், தாராபுத்திராதி கிரகலாபம், சமான ஜனங்கள் விசுவாசமாகிறதும், பந்துக்களுக்கு உபகாரமுமாகும்.

வாக்குபடுத்துவமும், மனோ தைரியமும், வஸ்திராபரணாதிகள் கிடைத்தலும், தேவதா பக்தி, குரு பக்தியும், பிதுரு மாதுருக்களை பூஜிப்பதும், மஹா ராஜாக்களால் விசுவாசம், சன்மானம் கிடைக்கிறதும், மனதில் நினைத்தவை எல்லாம் கூடி வருதலும், இதற்கு முன் தன்னிடத்தில் இல்லாததான நூதன வஸ்துக்கள் கிடைத்தலும், நவரத்தின வஜ்ஜிரமாணிக்கங் களானதுகள் சம்பாதித்தலாம் என்பது.

புதன் சுயக்ஷேத்திரத்திலும், சுய நவாம்சையிலும், உச்சத்திலும், கேந்திர ஸ்தானங்களிலும் இருந்தால் ராஜ்ய லாபமும், மகா சந்தோஷமும், தாராபுத்திரர்கள், சௌக்யமும், புண்யதீர்த்த யாத்திரை பிராப்தியும், கிருகத்தில் கோக்களும், தன தானியாதிகளும், விசேஷிப்பதும்.

புதனுடன் பாக்யாதிபதியும், லாபாதிபதியும் கூடினால் எப்போதும் அதிக லாபமே விருத்தியாய் வருத்தமின்றி வந்து கொண்டிருக்கும் நூதன வஸ்திராபரண பசு வாகனாதிகள் கிடைத்தும், சத்திரசாமரங்களுடன் வாகன சஞ்சாரியா யிருப்பதும் என்பது.

புதன் பாக்ய ஸ்தானத்திலும், பஞ்சம ஸ்தானத்திலும் இருந்தால் சன்மானம் கிடைக்கிறதும், சுயகுல தர்மம் அனுசரித்தலும், குருவையும், தேவஸ்தானாதி சேவார்ச்சனை செய்வதும், அதிக சுகத்தோடிருப்பதுமாம்.

புதன் லக்னத்திற்கு 6-மிடம், 8-மிடம், 12-மிடம் இவைகளிலும், நீச்ச ராசியிலும் இருந்தால் சதா கலகமும், சரீர வியாதி பாதையும், புத்திரரும், பந்துக்களிலும், மரணமடைவதுமாகும். காராகிருக பிரவேசமும், சர்ப்பத்தினாலாவது, அல்லது ஒருவரிட உபத்திரவத்தினாலாவது, கட்டுப்படவாவது நேரும், இதல்லாமல் இதர கிராமவாஸமும், நானாவித ரோக பாதையும் வரும், ஆதியில் துக்க பலனும் மத்தியில் சுக பலனும், கடைசியில் கிலேசபலனும், பலயீனமும் உண்டாகுமென்பது.

புதனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும், சரீரபாத காமும், உஷ்ண வியாதியும், சிரசு வலியும், ஸ்தான நாசமும், அரசினால் பயங்களும் உண்டாகும்.

புதனைச்சந்திரன் கூடினாலும், பார்த்தாலும், வித்யாப்பியாசமும், ஸாங்கிய யோகத்தை அப்பியசித்து தத்வக்யானங்களால் பிராப்த்தி பெற்ற பேர்வாய்ப்பதும், நடன ஸங்கீத வித்துவத்துவ முள்ளதுமாகுமென்பது.

புதனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் பூமிகிராமாதிகாரங்களும், பத்தினியும் நாசத்தை அடையும், அன்ன துவேஷமும், சிரோரோகமும், நேத்திரங்கள் விரோதமுமாகும்.

புதனைக் குரு கூடினாலும், பார்த்தாலும், புத்திர விருத்தியும், நூதனமான பட்டு பீதாம்பரங்களும் கிடைப்பது, ராஜமூலமாக தன லாப முடையனவாகும்.

புதனைச்சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும், வாகனங்கள்சுலபத்தில் கிடைக்க பெறுவன், தாரத்திற்கு ஸௌக்ய காமும், நினைத்தபடி

தனலாபம் வருவதும்.

புதனைச் சனி கூடினாலும் பார்த்தாலும், க்ஷேத்திராதி பூமிகள் லாபமும், ஆள் அடிமைகள் வாய்ப்பதும், பசுமகிஷ கோவிருத்தியும் எத்தனித்த காரியங்களில் தடையின்றி விருத்தியாவதா மென்பது.

புதன் தெசானாதனுக்குக் கேந்திர கோணங்களிலாவது, 3-மிடம், 11-மிடங்களிலாவது இருந்தாலும், சுப கிரகங்களிட சம்பந்தம் அல்லது பார்வையைப் பெற்றாலும், தனலாபங்களை அடைவதாகும்.

பந்துக்களுக்கு உபகாரமும், கிருகத்தில் கல்யாணமும், அதிக விசித்திரமான நூதன கிருகம் கிடைப்பது, கட்டுவது யுத்தத்தில் தான் தோல்வியை அடையாமல் தான் ஜெயங் கொள்வதும், மகா உற்சாகத் தோடிருப்பதாகும். நூதன ஆடை ஆபரணங்கள் லாபமாவதும், வித்தியாகியானாதிகமும், தீர்த்தஸ்நான யாத்திரை புண்யாதி லாபமும், வேதாந்திகளாகவும், கியான சுகுருத பெரியோர் தெரிசனமும் நேரு மென்பதாம்.

புதன் தெசானாதனுக்கு 5-மிடத்திலாவது, 9-மிடத்திலாவதிருந்தால் புத்திர புத்திரிகா விருத்தியுண்டு.

புதன் சுபர்களுடன் சம்மந்தப்பட்டால் அதிக ஸௌக்ய காமும், புத்தியும் புத்திரர்கள் விருத்தியும், தன விசேஷமாவதுமு முண்டு.

புதன் தெசானாதனுக்கு லாபஸ்தானத்தி லிருந்தால் பயத்தை விளைவிப்பதான சத்துரு பயம் நேரும். உடனே சத்துரு நாசமும், மனோ சந்தோஷமும், கிருகமும், பூமிகள் விருத்தியாவதும் உண்டு.

புதன் தெசானாதனுக்கு 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், பாபிகளால் பார்க்கப் பட்டாலும், சேர்ந்தாலும், அக்னி பயமும், உண்டாகு மென்பது.

ஆதியில் தார ஸௌக்யமும், மஹாபாக்யமும், அணிபணி போஜன ஸௌக்யமும், சுப சோபனகரங்களும், நடந்து அந்தியத்தில் கிலேசமும், தேகபீடையுமா மென்பது.

புதன் தெசானாதனுக்கு 2-மிடம், 12-மிடங்களிலும், 6-மிடம், 8-மிடங்களிலும், இருந்து பாபிகள் சேர்ந்தால் கலகமும், ஸ்தான நாசமும், திருடர்களாலும், சத்துருக்களாலும் பீதியை அடைவதும், தன் சமான ஜனங்கள் ஆபத்தை அடைவதும் அல்லது மரணமாவதுமாகும்.

புதன் 2-மிடத்திலும், 7-மிடத்திலு மிருந்தால் அகால மரணம் சம்பவிக்கும், இந்த தோஷம் நிவர்த்திக்க விஷ்னு ஸஹஸ்ரநாமம் ஜெபித்து வெள்ளியால் பிரதிமை செய்து தானம் செய்தாலும் ஆரோக்யமுண்டாம்.

## சூரிய தெசையில் கேது புக்தி மீ 4 நாள் 6-க்குப் பலன்.

கேது லக்னத்திற்குக் கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், சுப கிரகங்களிட சம்மந்த மடைந்தாலும், பார்க்கப் பெற்றாலும், இந்த புக்தியில் புண்ய தீர்த்த ஸ்நாநமும், தேவ தரிசனமுமாகும். கீர்த்தி லாபமும், மகா சந்தோஷமும், சமானர்களிடத்தில் ஜெயத்தை அடைகிறதும், நீலநிறமான வஸ்துக்கள் கிடைப்பதும், குருபக்தி பூஜாகிரமமும், முன்னால் நஷ்டமாயிருந்த பொருள் கிடைத்தலும், புராணாதிகள் வாசித்தலும்.

கேது லக்னாதிபதியுடன் கூடினால் புக்தி முதலில் சௌக்யம் தன லாபமும், மத்தியாந்திய காலத்தில் கிலேச மடைகிறது, மரண வார்த்தை கேள்விப்பட நேருமென்பது.

கேது 6, 8-மிடங்களிலிருந்து பாபிகளுடன் கூடினால் கபாலத்திலும், கந்தங்களிலும் நோய் வரும், அல்லது மூத்திர வியாதி நேருவது, இருந்த தலத்தைவிட்டு மாறுவதும், தனஹானி, பிதா மரணம், பந்துக்களுக்கு பீடையுமாம்.

கேது தெசாநாதனுடன் கூடினால் பிதாவுக்கு ரோக பீடிதமும், மகா பயங்கரமுமாகும், அன்னிய தேசவாசம், அல்லது நினைப்பு கொள்வதும், தாரா புத்திரர்களுக்கு அரிஷ்டமும்.

கேது லக்கினத்திற்கு 2, 12-மிடங்களி லிருந்தால், தனலாபமும், மகா சுகமும், விவாஹ மங்களகாரங்களும், குடும்பத்தில் நடப்பித்தல், சுபச் செலவுகளினாலே விரயம் சேரிடுவதுமாம்.

கேது சுபருடன் கூடினால், ராஜாநுக்கிரகமும், சாந்தியாகாதி கர்மாசரணையும், டத்திர புத்திரிகா ப்ராப்தியும், மனோ சந்துஷ்டியும், கெஜாந்தோளிகாதி அசுவவாகன லாபகரமும் உண்டு.

கேதுவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும், ராஜாங்க பாதையும், சரீர உஷ்ணாதிக சுரம், அதிஸாரம், சதா ரோகமும், தன் இருப்பிடம் விட்டு பேதப்படுதலும்.

கேதுவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும், சுகமும், சயன சௌக்ய சுபோஜனமும், எத்தனித்த காரியங்களெல்லாம் சுலபத்தில் சித்தியாவதும், ஸ்த்ரீ புத்திரர்கள் விருத்தியும் உண்டா மென்பது.

கேதுவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும், சத்துரு பாதகமும், மகா கலகத்தினாலும், ராஜாங்க விரோதத்தினாலும்; பாதைப் படல், ஸ்தான நாசம் வருவதும் என்பது.

கேதுவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும், பந்துக்களுக்கு

உபகாரத்வமும், க்ஷேத்திர விருத்தியும், ஸ்திரீ லாபமும், வித்யாப்யாசமும் அனுஷ்டிப்பதுமாகும்.

கேதுவைக் குரு சம்மந்தப் பட்டாலும், பார்த்தாலும், தேக ஆரோக்யமும், புத்திர புத்திரிகாதி சந்தோஷகாமும், சர்வ காரியங்களிலும், சித்தி பெறுவதும் உண்டு.

கேதுவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும், ஸ்திரீ ஸௌக்யமும், பந்து பூஜிதமும், வித்யா விஷயாப்யாசமும், கடனாகவும், ஸங்கீத கியான வித்வத்தில் மிகுதியும் உண்டு.

கேதுவைச் சனி கூடினாலும், பார்த்தாலும், சரீரத்தில் வாத நோய் காணுவதும், குடும்பத்திலும் இதரர்களிடத்திலும், கலகமாவதும், ராஜ விரோதமாவதும், மனஸ்ஸந்தாபமும், சுரபீடையும், குடும்ப ஜெனங்கள் எல்லோருக்கும் ரோக உபத்திரவமும் உண்டு.

தெசானாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், இருந்து சுபகிரகங்களிட சம்பந்தம் பெற்றால், அதிக தனார்ஜ்ஜிதமும், பிரபுக்களால் சன்மானமும், ஆரோக்யமும், நூதன வஸ்திராபரணாதிகளுடன் கிருஹஸ்திதியும், புத்திர புத்திரிகா லாபமும், சதா சந்தோஷமும், விசித்திரமான நூதன கிருஹ கட்டடம் செய்வதும், அல்லது கிடைப்பதும், அனேக விதமான தனம் கிடைக்கப் பெறுவதும், தான் எத்தனம் செய்யாமலே காரியங்கள் சித்தியாவதும்.

கேது தெசானாதனுக்கு 6-மிடம், 8-மிடம், 12-மிடங்களிலிருந்து பாபிகள் கூடினால் ஸ்தான நாசமும், ராஜ மூலத்தில் தன விரயமும், பசுக்ஷேத்திர வாகனாதிகள் நாசமும், விதவஸ்திரீகளால் கலகம் நேரிடுவதும், சோராக்னியாலும், விஷத்தினாலும், பீதியை அடைவதும், சதா அனேகருடன் கலஹித்து கொள்வதும் என்பது.

கேது 2-மிடத்திலும், 7-மிடத்திலுமிருந்தால் மகா வியாதியினால் பீடிக்கப்படுதல். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சூரியப் பிரார்த்தனை செய்யவும்.

கேது 2, 7-மிடத்ததிபர் களோடு கூடினால் அபமிருத்யு பயமுண்டாகும். க்ஷேத்திர தேவதைகளாலும், ஏவல் சூன்ய மந்திரங்களினாலும், பாதிக்கப்படுவதாகும். இந்த தோஷம் நிவாரணமாவதற்கு துர்க்கை ஜெபம் செய்து மேஷதானம் பண்ணி மஹாமிருத்யு ஜெபமும், சாந்தியும் செய்ய தோஷ நிவாரண மென்பது.

## சூரிய தெசையில் சுக்கிர புக்தி மீ 12-க்குப் பலன்.

சுக்கிரன் லக்கினத்திற்குக் கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், உச்சத்திலும், சுய க்ஷேத்திரத்திலும், இருந்தால்

வாகனங்கள் கிடைப்பதும், ராஜாங்கத்தில் பெரிய ஸ்தான உத்தியோகம் கிடைப்ப, துஅவர்களிட இஷ்டாதிகமாவது கிடைப்பதும், குடும்பத்தில் கல்யாணம் செய்கிறதும், மனோ சந்தோஷமும், சரீரத்திற்கு ஆரோக்யமும், புத்திரோற்சவமாவதும் உண்டு.

தனதானியாதிகள் விசேஷ விருத்தியும், நூதன கிராமங்களில் பூமி லாபம் கிடைப்பதும், தீர்த்தஸ்தானாதி யாத்திரை கிடைப்பதும், தேவ குரு பிராம்மணாசீர்வாதம் நேருவதும்.

சுக்கிரன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து பாப கிரகங்கள் கூடினால் சரீர ரோக பாதையும், மனஸ்த்தாபமும், காரியநாசமும், மகாபயமும், சொந்த பந்துவுக்கு தான் கலகம் விளைவிக்கிறதும், அவர்களிட கலகத்தினால் துக்கப்படுதலும், எடுத்த காரியங்களெல்லாம் நடக்காமல் நஷ்டமாவதும், சமானஸ்த்தர்களால் பயமடைவது, தாரமும், பூமியும் நாசமாவதும்.

பசுநாசம், அசுவநாசம், கெஜநாச மடைவதும், பந்துக்களில் மரணம் நேருவதும், வஸ்திரயீனமாவது, நகை, நாணயங்கள், நஷ்டமடைவதும், சகோதரரால் பாதை பெருவது.

சுக்கிரனைச் சூரியன் சம்மந்தப்பட்டாலும், பார்த்தாலும், வியாதியாலும், அஸ்திர, சஸ்திரங்களினாலும், பீடிக்கப்படுவதும், ஆசாரயீனமும், மனசுக்கு பிரியமாயிருக்கிற வஸ்துக்களிடத்திலும், மனுஷ்யவர்க்கத் தாரிடத்திலும், வெறுப்பா யிருப்பதும், ஸ்தானநாசமாமென்பது.

சுக்கிரனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும், தாரா புத்திரர்கள் ஸௌக்யமும், தேக ஆரோக்யமும், மனஸ்ஸ சௌக்கியமாயிருப்பதும், இஷ்ட சித்தியை அடைவதும் என்பது.

சுக்கிரனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும், சரீரத்திற்குத் தாபமும், சஸ்த்திரங்களிட அபாயமும், பைசாச பீதியை அடைவதும், ஒருவரிடத்தில் விவாதம் பண்ணுவது, ஜாதிகளால் கலகமே அதிகமாவதும் என்பது.

சுக்கிரனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும், சாஸ்திரங்களில் கியானாதிகமும், அப்பியாசித்தலும், அப்பியசிக்கு மவர்களுக்கு தெரிவித்தலான விசேஷ புத்தியுடையதும். கிருஹத்தில் பூஷணாதிகள் நிறைந்திருத்தல் என்பது.

சுக்கிரனைக் குரு கூடினாலும், பார்த்தாலும், புத்திரலாபமும், தனக்கு விரோத மேற்படுத்தும்படிக்கு சத்துரு விருத்தியும், வியாதி பீடையும், காரிய விசனமும், ராஜ மூலத்தினால் பொருள் விரையமும் என்பது.

சுக்கிரனைச் சனி கூடினாலும் பார்த்தாலும், நீசரிடத்தில் சேவகா விருத்தி செய்வதும், நீசர்களிடத்தில் சகவாஸமும், அடிமைகள், தம்பிமார்கள், விரோதமாவதும், மனஸ்தாபமே அதிகமாவதுமாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலாவது, இருந்தால் ராஜாங்க ஸன்மானமும், குடும்பத்தில் கல்யாணாதிகள் நடப்பிப்பது, தாராபுத்திராதிகள் சந்தோஷ சௌக்கியத்தோடிருப்பது, வஸ்திராபரணங்களணிவதும்.

அபூர்வ வஸ்த்துக்கள் சம்பாதித்தலும், முத்தாபரண விசேஷமும், பசுமாடு வாகன விருத்தியும், பால் சமூர்த்தியும், இஷ்டப்படிக் கெல்லாம் சித்தியாவதும்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து பாப கிரகங்களுடன் கூடினாலும் அல்லது நீசகிரக சம்மந்தமானாலும், தன நாசம் வருமாம்.

தன் தேகத்திற்கு வியாதி பீடிதம் வருவது, தாரா புத்திரர்கள் நாசமடைவது, எல்லோராலும் கலகமனுபவிப்பதும், ஸ்தான நாசமடைவது.

புக்தி ஆதியில் வாகனங்கள் லாபமாக கிடைப்பதும், மத்திய காலத்தில், குடும்பத்தில் சுப சோபனாதிகள் விசேஷிப்பதும், புக்தி கடைசியில் தன தானியநாசமும், மனோவிகார மடைதல் என்பது.

சுக்கிரன் 2, 7-மிடங்களி லிருந்தால் சரீர பீடையாம்.

சுக்கிரன் 8-மிடத்தானுடன் கூடினால் அபமிருத்யு உண்டாகும். இந்த தோஷ நிவர்த்திக்கு மிருத்யுஞ்சய ஜபம் செய்து வெள்ளைப் பசு தானமும், ருத்திர மந்திர ஜபமும் செய்ய தோஷநாசமாகி, சுகாதிக சந்தோஷமாம் என்பது.

சூரிய தெசையில் சுக்கிர புக்தியுடன் சூரிய தெசாபலம் சம்பூர்ணம்.

---

# சந்திர தெசை பலன்

## பொது.

ஆரோக்யமும், தனலாபமும், புத்திர லாபமும், மனசுக்கு பிரியகரமான வஸ்த்துக்கள் கிடைப்பதும், ஸ்திரீபிரஜைகளே பிறக்கிறதும், புத்திரிகள் நஷ்டப்படாமல் விருத்தியாவதும், நூதனமாக வெள்ளை நிறவாகனங்கள் கிடைப்பதுமாம்.

1. சந்திரன் பரமோச்சத்திலிருந்து தெசை நடந்தால் ஸுகந்த பரிமளாலங்கிருத வஸ்த்திராபரண லாபமும், மகத்வ புத்தியாயுள்ள

தாரம் வாய்ப்பதும், தனலாபமும், புத்திர புத்திரிகா லாபமும், மனோ விலாஸத்வமாக இருப்பதுமாம்.

2. சந்திரன் உச்சத்திலிருந்து தெசை நடந்தால் தாரா புத்திர தன லாபம் வருவதும், இஷ்டான்ன போஜன வஸ்திர பூஷணாதிகள் பிராப்தமாவதும், இதர தேசம் போவதும், சுய ஜனங்கள் விரோதமாவதும்.

3. சந்திரன் ஆரோஹிணி சந்திரனாகயிருந்து தெசை நடந்தால் நல்ல வித்தியா பிரபண்ணனாகவும், ஸ்திரீ புத்திரர்களுடன் அதிக தனவந்தனாகவும், ஸெளக்ய சந்தோஷாதிகத்துடனே நூதனமான பட்டுபட்டாவளிகளை அலங்கரித்துக் கொண்டு உல்லாசத் தோடிருப்பனென்பது, ராஜ்யபரிபாலகனாகி, சுகபோஜன வந்தனாகவும், தேவப்பிராம்மணர்களுக்கு தானாதிகளை செய்வதுமாகும்.

4. சந்திரன் அவரோஹிணி சந்திரனாயிருந்து தெசை நடந்தால் ஸ்திரீ புத்திரர்களுக்கும், பொருளுக்கும் நாசம், ஆடை ஆபரணாதிகள் ஹீனமும், மித்திருக்கும், தனக்கும், ஸெளக்ய ஹானியாவதும், மனோவிகாரத்வமும், சுற்றத்தார் விரோதப்படுதலும், சோரராலும், அக்னியாலும், பாதைப்படுவதும், அரசரால் தண்டிக்கப்படல், அல்லது நீராழ்ந்த தடாகத்தில் விழுவதாம் என்பது.

5. சந்திரன் நீச்ச அம்சத்திலிருந்து தெசை நடந்தால் பிராப்தமான தனமெல்லாம் விரையமாவது, போஜன ஹீனம், குறைந்த உத்தியோகமும், மனசுக்கு ஆயாசமாக யிருப்பது, நித்ராலஷ்யமும், சதா சோம்பலாகவே இருப்பதுவாம்.

6. சந்திரன் மூலத் திரிகோணத்திலிருந்து தெசை நடந்தால் ராஜமூலமாக தனம் வருவதும், பூலாபமும், தாராபுத்திராதிகள் பிராப்தியும், வஸ்திர பூஷணாதிகள் வாகனங்கள் லாபமும், சகல ஜனங்களுடன் சுகமாகவும், ரதிகேளீவிலாசத்தோடுங் கூடியிருப்பதுமாகும்.

7. சந்திரன் சுய க்ஷேத்திரத்திலிருந்து தெசை நடந்தால் ராஜாங்கத்தினால் பொருள் வருவதும், அதிக ஸெளக்யமும், வேசை ஸ்திரீகளிடத்தில் எண்ணமும், ராஜ சமானனாகவும், தாரா, புத்திர, பந்து ஸெளக்யத்தோடிருப்பதுவா மென்பது.

8. சந்திரன் சத்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் கலகத்தினால் பொருள் நாசமும், வஸ்திர யீனமும், கஷ்ட போஜனமும், க்ஷேத்திரங்களுக்கும், தாரா, புத்திரர்களுக்கும், ஆத்ம சமான சிநேகனுக்கும், வாகனங்களுக்கும், தோஷமாகும்.

9. வஸ்து, வாகன, ஆடையாபரண யீனமும், இதரதேச சஞ்சாரமும், பரிசாரகத்வமும், புத்தி பிரமையும், பந்துக்களுக்கு விரோத

மாவதும், பந்து மரணமாவதும் இந்த தெசை நடக்கும் காலமெல்லாம் துக்க சோகத்தையே அனுபவிப்பதுமாகும்.

10. சந்திரன் மித்திர க்ஷேத்திரத்திலிருந்து தெசை நடந்தால், அதிக தனலாபமும், பூமியை ஆள்கிற அரசன் இஷ்டமாவதும், உத்தியோகம் காயமாவதும், ஜல வஸ்துக்கள் லாபமாவதும், விசித்திரமான ஆடையாபரணங்கள் லாபமும், அடைவதாம்.

11. சந்திரன் அதி மித்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் அதிக சௌக்யமும், வித்யாதிக முடையதும், விஞ்ஞாதிகமான புஸ்தகாங்கிதங்கள் பண்ணும் க்யாத்வமும், ராஜாக்களால் பூஜிக்கப்படுதலும், பூமி க்ஷேத்திர தானியாதி விருத்தியும், தார லாபமும், ஆசைப்பட்ட வஸ்த்துக்கள் லாபமடைவதாம் என்பது.

12. சந்திரன் சம கிரகத்தினுடைய ராசியிலிருந்து தெசை நடந்தால் அதிக பூமியும், பொருளும் லாபமாவதும், உபாயமான சுகமும், பந்துக்களுக்கு வியாதி பீடையும், வெளி தேச பிரயாணமும், கஷ்ட சுகங்கள் சமமாவதுமாம்.

13. சந்திரன் நீசமாக இருந்து தெசை நடந்தால் விபத்தும், கிலேசாதிகமும், பொருள் நஷ்டமாகுதல், துக்கத்தினுல் வனவாசம் பண்ணுதல், காராகிரகமடைதல், சர்ப்பம் தீண்டுதல், அன்னபானுதிகளுக்கே கஷ்டமாதல், சோரபயம், அக்னிபாதை, ராஜபயம் நேருவதும், புத்திரர்களுக்கும் தாரத்திற்கும் குறைவுபடல் என்பது.

14. சந்திரன் க்ஷீணனுக இருந்து தெசை நடந்தால் சகலபலனும் ஈனமாதல், ராஜ்பமும், தனமும், பூமிகளும், புத்திர மித்திர களத்திராதிகளும் விரோதமாதலும், சுயஜன பகையாவதும், பிராணஹானியை அடைவதற்குச் சமானமாகிய தரித்திரத்தை அடைந்து யாசக விருத்தியை செய்வதாம்.

15. சந்திரன் பூரண சந்திரனுக இருந்து தெசைநடந்தால் மனசு பரிபூர்ணத்துவமாக இருப்பதும், அதிக வித்யா விஷயங்களினுல் ராஜாக்களால், பூஜிக்கப்படுதல், ஸ்திரீ, புத்திரர்களும், ஆள் அடிமைகளும், மனசுக்கிசைந்தபடி நடப்பதும், அதிக தனம் சேருவதால் மனேவிலாஸ சந்தோஷமும், குடும்பத்தில் விசேஷமாக சுபசோபனங்கள் நடத்துவதாம் என்பது.

16. சந்திரன் பாபகிரகங்களுடன் கூடி இருந்து தெசை நடந்தால் அக்னிபயமும், சோரபாதையும், அரசன் கோபித்தலும், துக்காதிகமும், புத்திரர்களும், ஸ்திரீயும், மரணமாவதும், பந்துக்களுக்கு பீடையும், வெளிதேசம் போவதும், அசுபங்களும் கர்மமும் நடத்துவதாகும்.

17. சந்திரன் சௌக்ய கிரகங்களுடனே அதாவது சுபகிரகங்களுடன் கூடி இருந்து தெசை நடந்தால் சுபகரமான வேலைகளே பிராப்தமாவதும், பசு கன்று காலிகளும், பூமி க்ஷேத்திரங்களும், வஸ்த்திர பூஷணுதிகளும், புண்ய தீர்த்தமாடுதலும், பரதாரத்தால் சௌக்ய மேற்படுதலாம்.

18. சந்திரன் பாப கிரகங்களுடனே கூடி தெசை நடந்தால் சுபகர்மங்கள் நேரிடாமல் தடையாவதும், அதிகமான கோபத்தை வகித்தும், அசுகமான போஜனமருந்துதலும், தாய்க்கு கர்மம் லபிக்கிறதும், அல்லது அவ்வர்க்கத்தாருக்கு பீடையும் உண்டாமென்பது.

19. சந்திரன் சுப கிரகங்களினல் பார்க்கப்பட்டால் இதரர்களுக்கு உபகாரியா யிருப்பதும், பெருமைவாய்ந்து பிரக்யாதிகமான கீர்த்தி பொருந்தியும், மனதில் கோரிக்கையாக இஷ்டப்படி நினைத்தவையான எத்தனுதிகளாலே அதிகமாக தனம் தேடுவதும், பந்துக்களுக்கு தன உதவிசெய்வதும், பூமி விசேஷத்தால் சம்பாத்ய தன பிராப்தியும், நீராரம்பமான தடாக கூப நந்தவன மேற்படுத்துவதும், ஜலவஸ்துக்களால் வியாபார லாபமும், ரத்தின கம்பளாதி வஸ்திர லாபங்களும், மனோ விலாஸமாயிருப்பது மாகுமென்பது.

20. சந்திரன் மூலத்திரி கோணத்திலிருந்து தெசை நடந்தால் வித்தியா பிரபன்னனுகி வெகுகிரந்தங்களை பரிசயிக்கும் தன்மையுமாய் விசேஷ புத்திருடையவனுக பந்துக்களுக்கு விரோதியுமாவதும் என்பதாம்.

21. சந்திரன் 4-வது வீட்டிலிருந்து தெசை நடந்தால் மாதாவுக்கு வியோகமும், அதிக சுகமுமாய் விசேஷ பூமியை யுடையதும், கிருஷியும், கோவிருத்தியும், நூதனமாக வீடுகள் கட்டுவதும், விசேஷ பாக்யவான் என்று பேர்பெறுவதாம் என்பது.

22. சந்திரன் 7-மிடத்திலிருந்து தெசை நடந்தால் தாரப் பிராப்தியும், புத்திர புத்திரிகைகள் உண்டாவதும், சயன ஸௌக்யாதி கேளீ விலாஸத்வமும், நூதன வஸ்திராபரணு லங்கிருதமாகவும், பிரமேக மூத்திர நீர் வியாதியும், மனசஞ்சல்லியமுமாகும்.

23. சந்திரன் 10-மிடத்திலிருந்து தெசை நடந்தால் வித்யா பிரபன்னனுவதும், அதிக கீர்த்திப் பிரதாபியாகவும், யக்யயாகாதிகள் நடத்துவதும், அனேக சௌக்யமுமாய், பூமி விருத்தியும், புத்திர லாபாதி வாகன ப்ராப்தியும், அணிபணியாதி பாத்திராதி வஸ்திர ஸுகந்தானு லேபனலோலனுவது என்பது.

24. சந்திரன் நீசாம்சையிலிருந்து தெசை நடந்தால் மனசு சோகத்தோடும், பிரயாசாதிகமும், தன ஆனியாவதும், கண்களிலும்

பாதங்களிலும், நோய் அனுகுவது, சத்துருவோ டெதிர்த்து எதிரி ஜயமடைந்து தான் தோற்பதும், உச்சாகமில்லா திருத்தலுமாம்.

25. சந்திரன் உச்சாம்சையிலிருந்து தெசை நடந்தால் அதிக மாக சௌக்யத்தை அடைகிறதும், தன்னிடத்தில் ஒரு மகத்துவ முண்டாய் அனேகருக்கு நல்லவனுதலும், நானுவித தொழிலினுல் தனம் தேடுதல், பூமியை ஆளும் அரசனுல் சன்மானம் பெறுவது, சரீர புஷ்டியாக இருப்பது என்பதும்.

26. சந்திரமகா தெசை முதல் பாகத்தில் ராஜ சன்மானமும், கீர்த்தி சௌக்கியமும், மத்திய பாகத்தில் தாரபுத்திரர் நாசம், கடைசி பாகத்தில் வீட்டில் தனதானிய சம்பத்துடன் சௌக்கிய மனுபவிப் பதுமா மென்பது.

## வேறு

1. சந்திரன் ஸ்தானபலாதிகனுக இருந்து தெசை நடந்தால் தனவந்தனுகி சுக சந்தோஷாதிகமாகவும், வித்யாப்யாசியாய், கீர்த்தி யோடும், தேவப் பிராம்மண தெரிசனுனுக்கிரத்துடன், ராஜத்வமா வது, ராஜ சமானத்வமாக அனேக ஜெனனுயகனுகியும், அதிக பூமி யை பரிபாலிக்கும், தன்மையாய் யசஸ்ஸுடன் ஸ்த்ரீபுத்திர ரத்தி ஞபரணங்களுடனே கிருஷிமூல தான்யாதி லாபத்தோடும், பசுமாடு கள் கிரைய விக்ரைய வியாபார தனவருத்துடையதுமாகி, பழவர்க் கங்களுடனேயும், தயிர் பால் நெய் இவைகளுடன் இஷ்டான்ன போஜன சுகியாய் கெந்த புஷ்பாதி அலங்கிருதமாக அனுபவிப்ப தாம்.

2. சந்திரன் ஸ்தான பலத்தில் ஈனனுக இருந்து தெசை நடந் தால் ஸ்தான நாசம், அர்த்த நாசம், விபத்துகள் நேருவதும், பந்து நாசம் அல்லது விட்டு பிரிகிறது, கிருஷி நாசம் என்பது.

3. சந்திரன் திக்பலத்தில் அதிகனுகி இருந்து தெசை நடந் தால் விசித்திரமான வஸ்த்து சம்பாதித்தல், வித்தியாதிகத்தை தேடு வதும், ராஜ பிரபுக்கள் மித்திரமாவதும், பந்து பூஜ்யத்வமும், கெஜம், அசுவம், பூமிகள் கிடைப்பது மாகும்.

4. சந்திரன் காலபலாதிகனுக இருந்து தெசை நடந்தால் குதி ரைவாகன சஞ்சாரியும், கிருஷியும், கோவிருத்தியும், தனுதிகமும், சதா வித்யா பாண்டியத்தில் வல்லவனுகி வேத கோஷம் பண்ணுவ தும், அழகுவாய்ந்த முகமும், தந்தமுடையதும், கேசாதிகனுகி வஸ் திர பூஷணுலங்ரதமாக வாகன சஞ்சாரியா யிருப்பதுவாம்.

5. சந்திரன் நைசார்க்கிக வீர்யாதிகனுன கிரக சம்மந்தம் பெற்று தெசை நடந்தால் மித்துரு சொத்துகள் வந்து சேரும், எத்

தினம் செய்யாமலே வாகனமும், பூமி க்ஷேத்ர இதரதேசமும் போய் பெருத்த லாபத்தை அடைவதாகும். ராஜாக்களால் பூஜிக்கப்படுதல் என்பது.

6. சந்திரன் குரூர சஷ்டியாம்சங்களிலிருந்து தெசை நடந்தால் வெகு துக்கமும், ஸ்த்ரீ புத்திரர் நாசமும், ராஜ கோபமும், வித்தியா விவாதம் பேசுவதும், சர்வ ஜனங்களுக்கும் கலகம் விளைவிக்கிறதும், கலகத்துள்ளாவதாம் என்பது.

7. மிருத்வம்ச ஷஷ்டியாம்சத்திலே சந்திரன் இருந்து தெசை நடந்தால் வெகு புத்திர லாபமும், ஆள் அடிமைகளும், தன சேகரிப்பும், எந்தத் தொழில் செய்தாலும் விக்னமில்லாமல் நடத்தலும், எதனாலும் ஜெயத்தையே அடைதலும், சுகாதிகமாகி அதிக கீர்த்தியோடு வித்தியாதிகமாவதும்.

8. சந்திரன் பார்வதாம்சத்திலிருந்து தெசை நடந்தால் மகா பிரதாபம் பொருந்திய கீர்த்தியுமாய் வித்தியாதிகமும், அதிக சௌக்யமும், தேவதார்சன அபிஷேக புண்ய கைங்கரியங்களை நடத்துவதும்.

9. சந்திரன் குரூரதிரேக் காணத்திலிருந்து தெசை நடந்தால் சரீர ரோகமும், மகாபயமும், சமானஸ்த்தர்களுக்கும், பசு, பந்து, தேவ பிராம்மணர்களிடத்தில் அபசாரப்படுவதாகும்.

## மேஷாதி துவாதச பாவங்களில் சந்திரனிருந்த தெசா பலன்

1. சந்திரன் மேஷ ராசியிலிருந்து தெசை நடந்தால் தனலாபமும், பூமி ஆளும் ராஜாக்கள் மித்திரராவதும், வஸ்திர வாகனங்களும் தேடிக்கொண்டு சௌக்யத்துட னிருப்பதாம்.

2. சந்திரன் விருஷப ராசியிலிருந்து தெசை நடந்தால் நல்ல கீர்த்திவாய்ப்பதும், அனேக வஸ்துக்கள் லாபமாக கிடைப்பதும், பூமி, க்ஷேத்திராதிகள் விருத்தியும், கிருஷி அதிகப்படுவதும், பசு, குதிரைகள் லாபமாக வருவதுமாகு மென்பது.

3. சந்திரன் மிதுன ராசியிலிருந்து தெசை நடந்தால் வித்தியா பலமாவதும், கியானாதிகமாவதும், தபஸ்ஸு சித்தியாவதும், கணித வழியை அப்பியசித்து அதனால் தனம் பெறுவதா மென்பது.

4. சந்திரன் கடக ராசியிலிருந்து தெசை நடந்தால் அதிக தன லாபமும், உத்தியோகத்தினால் அதிக மேன்மையான ஸ்தானத்திற்கு தலைவனாதல், ராஜ பிரபுக்கள் மித்திரமாவதும், பொருள், பூமிகள் அதிகப்படுதல் என்பது.

5. சந்திரன் சிம்ம ராசியிலிருந்து தெசை நடந்தால் வித்யாப் யாச சாஸ்த்திராதிகமாகி தத்வார்த்தங்களில் தர்க்கீகம் செய்வதான தேர்ச்சி உடையதாய் பூசுர தேவதா பக்தியும், ஆடையாபரண லாப மேற்படுவதாம் என்பது.

6. சந்திரன் கன்னியா ராசியிலிருந்து தெசை நடந்தால் சத் துருக்களால் பீடிதமும், மாதா மரணமாவதும், சதா கலகத்தையே விளைவிக்கிறதும், சத்துருபாதையுமாம்.

7. சந்திரன் துலா ராசியிலிருந்து தெசை நடந்தால் தனப் பிராப்தியும், சத்துரு நாசமாவதும், நானுவித காரியங்களில் எத்தன சித்தியாவது, யாத்திரை போவதும், புண்ணிய கர்மங்கள் சித்தி யாவது மென்பது.

8. சந்திரன் விருச்சிக ராசியிலிருந்து தெசை நடந்தால் ராஜ விரோதம் வருவது, பந்து நாசமாவதும், நினைத்த வேலைகள் நாசப்படு தல், தன விரையமாவதும், அவமான மேற்படுவதாகு மென்பது.

9. சந்திரன் தனுசு ராசியிலிருந்து தெசை நடந்தால் பத்தினி, புத்திரர்கள் சௌக்யமும், பந்துக்களில் கல்யாணமாவதும், பட்டு, பட்டாவளிகளும், ஆபரணுதிகள் லாபமும், பூமி, பசுவாகன க்ஷேத் திர லாபங்களுமாம்.

10. சந்திரன் மகர ராசியிலிருந்து தெசை நடந்தால் க்ஷேத்திர லாபங்களோடுங்கூடி அதிக தனவானுகியும், க்ஷேமாதிகமாகவும், நல்ல தீர்த்தயாத்திரை செய்வதும், புண்யாதிகபல லபிதமும், நூதன வஸ்திராபரணங்கள் கிடைக்கப் பெறுவதும்.

11. சந்திரன் கும்ப ராசியிலிருந்து தெசை நடந்தால் பூமி நாச மும், ராஜாக்களால் பீதியை அடைவதும், சத்துருவினுல் கலக பீடித மும், ஸ்தான நாசமும், மனஸ்தாபமாவதுமாம்.

12. சந்திரன் மீன ராசியிலிருந்து தெசை நடந்தால் ராஜமூல உத்யோக சித்தியும், பிராம்மணுளை ஆராதிக்கிறதும், தேவதார்ச்சனுதி சத்கைங்கரியங்கள் நேருவதும், மனுே இஷ்ட பிரகாரம் தனம் சித்தி யாவதாகும்.

## லக்கினுதி 12-பாவங்களில் சந்திரனிருந்து தெசை நடந்தால் பலன்

1. சந்திரன் லக்கினத்திலிருந்து தெசை நடந்தால் சரீர ஆ ரோக்யமும், சுக போஜனம் செய்வது, சயன சௌக்யமும், நூதன வஸ்திராபரணப் பிராப்தியும், ராஜாக்கள் மித்திரமாவதும், கீர்த்தி பிர தாப விருத்தியாவதாம்.

2. சந்திரன் லக்னத்திற்கு 2-ல் இருந்து தெசை நடந்தால் அனேகமாக தனார்ஜ்ஜிதமும், வெகு சௌக்யமும், குடும்ப சவாக்ஷணையை விசேஷமாக செய்வதும், வாக்குபலித்துவமும், இதமானவார்த்தையும், நல்ல வித்யாப்பியாசத்தால் கீர்த்தி பெறுவதும் என்பது.

3. சந்திரன் லக்னத்திற்கு 3-ல் இருந்து தெசை நடந்தால் சௌர்யமுடையதும், கெம்பீரத்துவமும், சகோதரர்கள் உற்பத்தியாவதும், காதுகளுக்கு பூஷண மணிவதுமாம்.

4. சந்திரன் லக்கினத்திற்கு 4-ல் இருந்து தெசை நடந்தால் பூமிகள், கிராமங்கள், கிருக கட்டடங்கள் மிகுதியாவது, அதிக தன லாபம் வருவதும், பந்துக்களினால் உபகாரம் பெறுவது, தான் உபகாரியாவது, அனேக வாகனாதிகள் கிடைத்தல், வித்தியாதர்க்கத்தில் தான் ஜெயமடைவது.

5. சந்திரன் லக்கினத்திற்கு 5-ல் இருந்து தெசை நடந்தால் சுபாதிகங்கள் நேருவதும், புத்ரோற்பத்தியாவதற்கு தோஷம் சம்பவித்தலும், நல்ல வித்தைகளை கற்பிக்கிறதும், தனாதிகாரியாகிறதும், தார சௌக்யமும், தேவ பூஜிதமும், மணி மந்திராதிகள் சித்தியாவதும்.

6. சந்திரன் லக்கினத்திற்கு 6-விருந்து தெசை நடந்தால் க்ஷய ரோகத்தால் பீடிக்கப்படுதலும், வாத, குன்மாதிரோக மேற்படுவது, தாயாருடன் கலகித்து கொள்ளுவது, மாதா மரணமாவது, பந்துக்களுடன் துவேஷித்து தூரப்போபது, புத்தி வினாசமாம் என்பது.

7. சந்திரன் லக்கினத்திற்கு 7-ல் இருந்து தெசை நடந்தால் தாரமும், புத்திரரும், மித்துருக்கள், பந்துக்கள் சௌக்ய சந்தோஷத்தோடுமிருப்பது, மனோ விலாசமாகவும், பெரிய ஸ்தானாதிபத்தியமும், பெற்று நல்ல தீர்த்த யாத்திரை புண்ய பலன்கள் சித்தியாவதுமாம்.

8. சந்திரன் லக்கினத்திற்கு 8-விருந்து தெசை நடந்தால்மிருத்துயு நேரிடுவதான பலனனுபவிப்பதும், க்ஷயரோக கிரகண வியாதியுமாய் தார, புத்திராதி நாசமாம்.

9. சந்திரன் லக்கினத்திற்கு 9-ல் இருந்து தெசை நடந்தால் அனேக தர்ம வேலைகளைச் செய்யவும், தடாக கூபாதிகளை எடுத்து நந்தவன தோட்ட மேற்படுத்துவதும், தேவதார்ச்சனைகளை ஆசரிப்பதும், பிராம்மண பூஜையும் செய்வது என்பது.

10. சந்திரன் லக்னத்திற்கு 10-ல் இருந்து தெசை நடந்தால் அனேக வேலைகள் செய்ய நேரிடுவதும், யக்ய யாகாதி கிரியைகளை செய்ய நேரிடுவதும், தேஹ சௌக்யமும், சுகமாக லாபம் வருவதுமாம்.

11. சந்திரன் லக்கினத்திற்கு 11-ல் இருந்து தெசை நடந்தால் அதிக தனலாபம் வருவதும், புத்ர விருத்தியும், பந்து ஜனங்களால் கொண்டாடுந் தன்மையான கவுரவம் வாய்ப்பதும், நூதன ஆபரணுதி பட்டு பட்டாவளிகள் கிடைப்பதுமாம்.

12. சந்திரன் லக்கினத்திற்கு 12-ல் இருந்து தெசை நடந்தால் சரீரத்தில் தாபமான பாதையும், காரிய விக்னமாவதும், ஸ்திரீ சுத நாசம், மாடு, கன்று, காலிகளுக்கும் பீடை, பூமியும் விரையமாகு மென்பது.

## ஆரோகணி சந்திர தேசா பலன்

சந்திரன் ஆரோகணத்திலிருந்து தெசை நடந்தால் அதிகமான சுப பலாதிகமும், கீர்த்திமானுகவும், நூதன வஸ்த்திராபரண லாபங் களும், கிருகத்தில் கல்யாணுதி சுபங்கள் நடத்துவதுமாகும்.

## அவரோஹிணி சந்திர தேசா பலன்

சந்திரன் அவரோஹிணியாயிருந்து தெசை நடந்தால் எத்த ணித்த காரியங்களெல்லாம் நாசத்தையடையும், சிரோபாதையும், மிஞ் சின விரையம், மூத்திர வியாதியால் துன்பம்.

## பொது.

சந்திர தெசை ஆதியில் ராஜாக்களால் சன்மானம் பெறுவதும், கீர்த்தி சௌக்யமும், மத்தியில் ஸ்திரீ, புத்திரர் நாசமும், கடைசியில் கிருகத்தில் புத்ரோற்பத்தி, தன லாபமும், சௌக்ய பலனுமாம்.

## சந்திர புக்தி மீ 10-க்குப் பலன்

சந்திரன் லக்னத்திற்கு கேந்திர கோணங்களிலிருந்தால் ராஜாக் களால் சன்மானமும், அதிக கீர்த்தி பெறுவதும், விவாஹம் நடத்தி கொள்வது, வீட்டில் மற்றவருக்கு நடத்துவதும், புத்திரரைப் பெறுவ தும், கிராமம் அல்லது விசேஷ பூமியை வாங்குவதும், வாகனங்கள் உண்டாவது, ராஜ்யாதிகாரம் பெறுவது.

சந்திரன் உச்சத்திலாவது ஆக்ஷியிலாவதிருந்தால், வெகு வாக னப்பிராப்தியும், ராஜாங்க மூலத்தினுல் லாபமும், அடைவதாகு மென் பது.

சந்திரன் திரிகோணங்களிலாவது, லாப ஸ்தானத்திலாவது இருந்து குருவால் பார்த்தோ' அல்லது கூடியோ இருந்தால், ராஜ்ப மூலமான லாபமும், மகா சௌக்யமும், யசஸ்ஸுடனேயும், சுப சோபனகாங்கள் நடத்துவது மாகிறதாகும் என்பது.

சந்திரன் பூர்ண சந்திரனுனல் பூர்ணபலத்தை தருவன், சேனுதி பத்தியம் பெறுவதாம் மகா சுகம்.

சந்திரனுக்கு 9, 10-மிடத்ததிபர்கள் கூடினுல் யானை, குதிரை, பல்லக்கு, வாகன சகிதனுக இருப்பது, தேவ, குரு பக்தியும், புண்ய கதா கேள்வியும், கீர்த்தனங்களை தான் பஜிப்பதுமாம்.

சந்திரன் பாப கிரகங்களுடன் கூடினுலும், தானே பாபியாக இருந்தாலும், நீசனுனுலும் 6, 8, 12-லிருந்தாலும் தன நாசம் வரும், ஸ்தானபேதம், மனசுக்கு துக்ககரமும், சரீராயாசம், மனஸ்தாபம் செய்து கொள்வது, ராஜாங்கத்தாரால் விரோதம் பண்ணுவது, தன் சுய வீட்டில் மனஸ்த்தாபத்தினுல், சந்திரன் ராசியான அக்னி மூலைத் திக்கில் பிரயாணம் போவது.

குலஸ்தர்களிடத்தில் விரோதப்பட்டு உக்ரமானவனுகி, குலத் துரோகியாய், சத்துருக்களினுல், ஆயுதங்களினுல் யுத்தகளத்தில் சண்டை செய்வதாகும்.

மித்திரர்களும், பந்துக்களும், தனக்கிதமான பிரபுவும் மரண மாவதும்.

இந்த புக்தியில் புண்யத்தையே செய்து வரவும்.

சந்திரன் 2, 7-மிடங்களிலிருந்து 8-மிடத்தானுடன் கூடினுல் சரீர ஜாட்யம், அவமானம், அபமிருத்யு பயமுமாம்.

வெள்ளை ரிஷப தானமும், மிருத்துயுஞ்சய ஜெபமும் செய்ய பின் சௌக்யமும், இஷ்ட சித்தியை பெறுவதாகும்.

## சந்திர தெசையில் செவ்வாய் புக்தி மீ 7-க்குப் பலன்

செவ்வாய் லக்னத்திற்கு கேந்திர கோணங்களிலிருந்தால் ஸௌ பாக்யமும், ராஜ சன்மானமும், வஸ்திராபரண பூஷிதமும், எத்தின காரியானுகூலமும், நூதன வீடு கட்டுதலும், கிராம, பூமிகள் விருத்தி யாவதும், வியவகாரத்தினுல் லாபமும், மஹா சௌக்யமும்.

செவ்வாய் உச்சத்திலாவது, ஆக்ஷியிலாவது இருந்தால் சகோ தரவர்க்கத்தார் விருத்தியும், கீர்த்தியும், சகோதரரினுல் லாபமடைவ தாம்.

செவ்வாய் 6, 8, 12 மிடங்களிலிருந்தாலும் நீசனுனுலும் கர்ம நாசமும், ராஜ பயமும், தேகாயாசமும், சித்தபிரமையும், நிஷ்டூரமும், தன் ஸ்வஜன கலகமும், சேவகம் செய்யுமவர்களால் சத்துரு வாத மும், பூமியை ஆளும் அரசன் வைரியாவதுமாகும். சதா துக்கமும், இதர தேசவாசமும், தான் வேறொருவருக்கு கலகம் விளைவிக்கிற தும், தன் காரியங்கள் நடக்கிறதற்கு மற்றொருவரால் விக்கினம் வரு வதும், சரீர உஷ்ணுதிகமும், ஜுரமிடியும் உண்டாவதாம் என்பது.

செவ்வாய் சுபருடன் கூடினாலும், சுபர்களால் பார்க்கப் பெற்றாலும், சுப க்ஷேத்திரங்களி லிருந்தாலும், நாலுகால் ஜீவன்களிட வியாபாரத்தினால் லாபமும், தன தான்ய விருத்தியும், வாகனாதி புத்திர விருத்தியும், கிருஷி, பசு, பார்த்தவர்களால் சந்தோஷமுண்டாக வாழ்வதாமென்பது.

செவ்வாயை சூரியன் கூடினாலும், பார்த்தாலும், அதிகாரபதவியிலமருவது, இராஜ்ய மூலத்தினால் தனவரவும், பூஷணாதிகள் பிராப்தியும், நினைத்தபடிக்கெல்லாம், நடந்து அதனால் தன விருத்தியாவதும்.

செவ்வாயை சந்திரன் கூடினாலும், பார்த்தாலும், மஹா உச்சாகியாய் விஷேச சுகமும், பந்துக்கள் கல்யாணமும், பூமிகள் வாங்குவதும், நீராதார கூபம் நடபாவிகள் உண்டாக்கி நந்தவனங்கள் வைப்பதுமாம்.

செவ்வாயை புதன் கூடினாலும் பார்த்தாலும், வேத சாஸ்திராதிகள் அதிகமாக பரிசயிப்பதும், பந்துக்களுக்கு உபகாரியாவதும், வாக்கு பலித்துவமுடையதாய் வித்யா பாண்டித்யாதிகலால் மனோஜெயமடைவதும்.

செவ்வாயை குரு கூடினாலும் பார்த்தாலும், சரீரத்திற்கு ஆரோக்யமும், தெய்வ பிராம்மணர்களை பூசிப்பதும், திரவிய லாபமடைவதும்.

செவ்வாயை சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும், தாரா புத்திரர் உண்டாவதும், நூதனமான வீடு கிடைப்பதும், அதிக லாபகாமும், அசுவவாகன சஞ்சாரியுமாவது.

செவ்வாயை சனி கூடினாலும், பார்த்தாலும், சஞ்சல சந்தாப குணமும், சரீரபிணியாவதும், ஜுரம், அதிசாரம் முதலான ரோகாதிகமும், சமான ஜென நாசனமுமாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11, மிடங்களிலுமிருந்தால் வாகனாதிகள் பிரப்தியும், ராஜாக்களால் சன்மானம் கிடைப்பதும், பசு, மாடுகளும், தான்யாதிகளும், விருத்தியாவதும், சகோதிர வர்கத்தவர்களுக்கு சுபாதிக்கமும், தாரா புத்திராதிகள் சௌக்கியமும், யுத்தத்தில் ஜெயமாவதுமாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு 6,8,12ல் இருந்து பாபக்கிரகங்களிட சம்மந்தமாவது, திருஷ்டியாவது பெற்றிருந்தால் பந்து நாசம் வரும். இதர தேசம் போவது, அல்லது எண்ணம் கொள்வது, பங்காளிகள் வழக்குண்டாவது, அதனால் பூமிகளும், சேத்திரங்களும் நாசமாவதும், இஷ்டர்களுக்கும், மித்திரர்களுக்கும் விரோதமாதல், சமான ஜன மரணமாம்.

6, 8, 12-மிடத்ததிபருடைய தெசையில் 2, 7, மிடங்களில் செவ்வாயிருந்து புத்தி நடந்தால் அபமிருத்யுவைப் பண்ணும்.

இந்த தோஷ நிவாரணத்திற்கு சுப்பிரமண்யருடைய பஞ்சாக்ஷர ஜெபம் செய்து சூரிய பிரார்த்தனையும். நாகம் செய்து தானம்செய்தால் தோஷம் நீங்கும் என்பது.

## சந்திர தெசையில் ராகு புக்தி மீ 18-க்குப் பலன்

ராகு லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலிருந்தால் ஆதியில் சௌக்ய பலனும்,பிறகு சத்துரு நாசமும், மகா பயமும், திருடர், அக்னி, ராஜாக்களால் வாதையும், நாற்கால் ஜீவன்கள் நாசமும், பந்து நாசம், மித்திரவிரோதம், அல்லது மித்திர மரணம், கலகத்தினால் மனசுக்கு கிலேசமுமாம்.

ராகுவுக்கு சுபரிட சம்மந்தமும், சுபர் பார்வையும் வரப்பெற்றால் தனதானிய சமுர்த்திமானவதும், யவன பிரபு சன்மானம், ஜாதகனுக்கு சுபாசுபங்களினால் திரவியம் விரயமாவதும்.

ராகு 8-மிடத்ததிடதியுடன் கூடினாலும், பார்க்கப்பெற்றாலும், தேகத்திற்கு பீடையும், விஷாதிகளினால் பீதியை அடைவதுமாம். சுபர்கள் கூடினாலும், பார்த்தாலும் இந்த தோஷம் நிவர்த்தியாம்.

ராகு 3, 11-மிடங்களிலிருந்து சுபக்கிரக சம்மந்தம் பெற்றாலும் உச்சராசியிலிருந்தாலும், வியாதிநாசமாம். ராஜ சன்மானமும் ஐஸ்வரியதிகமும், தன் புத்திரர்களுக்கு சுபசோபனகாமும், தன் பேர்பிரகாசிக்கத்தகுந்த பெரிய உத்தியோகத்தை வகிப்பது, எத்தின காரியார்த்த சித்தியை பெறுவது, தீர்த்தஸ்நானங்கள் லபிக்கிறதும், தேவாலய உச்சவாதி சேவைகள் சேவிப்பது, நாற்கால் வாகனங்கள் லாபமாக வருவது, வஸ்த்திர பூஷணாதிகள் சம்பாதிப்பதாம். சகலவித ஜெயம் அடைவது, ஞாதிகள் சத்துருக்கள் நாசமாவதும்.

ராகு 6, 8, 12-லும் நீச்சத்திலுமிருந்து பாபக்கிரகங்களுடன் கூடினாலும், பார்வையைப் பெற்றாலும், ரோக பீடிதம் உண்டாகி அதிக விரையம் நேரிடுமாம். கையில் தனமில்லாமையாகும். எதிரிகள் வைராக்யம் வரும். அந்த காலத்தில் புத்திர மரணமும் நேரும். பூமிகள் வியாஜ்யத்தில் சிதறிப்போகுமாம். ஸ்நானநாசம் பண்ணுவது, சத்துருக்களால் கலகம் விளைவது, இந்த தோஷயோக பனுபவித்துக் கொண்டிருக்க தேள், பாம்புகளும் தீண்டுமாம். ரக்தஸ்ராவ வியாதி, மூத்திர ரோகமும், அனுபவிக்கிறது, வாகனாதிகள் நஷ்டம் நேரும் என்பது.

ராகுவை சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ஜன்னி ஜுரமடிக்கிறது; அதிக கஷ்டம், மானபங்கம், சுயஸ்தான சலனமுமாம்

ராகுவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும், மாதாவுக்கு கஷ்டமும், மனசுக்கு கஷ்டமும், கலகமும் விளையுமென்பது.

ராகுவைச் செவ்வாய் கூடினாலும் பார்த்தாலும், ரத்தசிராவ வியாதியும், பசு, வகனம், க்ஷேத்திர பூமி நாசமும், மகா வியாதியை அனுபவிக்கிறதுமாகும்.

ராகுவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும், பந்துக்களுடன் சமானஸ்தனாக மதிக்கப்படுவது, விஷ்ணு கதைகள் பிரசங்கிப்பதும், அல்லது கேட்கிறது, வஸ்திர பூஷணாலங்கிருதனாதலுமாம்.

ராகுவைக் குரு கூடினாலும், பார்த்தாலும், தனம் பிராப்தியுண்டாகும், தேவார்ச்சனையும், விஷ்ணு பூசையும் நடத்துவதும், புத்திர தாராதி வர்க்கங்கள் சௌக்யத்தோடிருப்பதாம்.

ராகுவைச் சுக்கிரன் கூடினாலும் பார்த்தாலும், வஸ்த்திர பூஷணாதிலாபமும், மாணிக்க வஸ்துக்கள் கிடைப்பதும், குதிரை வாகன சஞ்சாரியாகவும், விசித்திர வீடுகட்ட லாபமுமாகுமென்பது.

ராகுவைச் சனி கூடினாலும், பார்த்தாலும், இதர தேசம் போவோமென்கிற எண்ணமுதிப்பதும், அல்லது போகவேநேரிடுவதும், புத்திர மரணமும், பந்துத்துவேஷமாவதும், அதிகமான மனஸ்தாபம் நேரிடுவது, ராஜத்துவாராவினால் தனச்சேதமாவதும்.

ராகு தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலிருந்தாலும், 3, 11-மிடங்களிலிருந்தாலும், சுபக் கிரகங்களிட சம்மந்தம், பார்வை பெற்றிருந்தாலும், தனலாபம் கிடைப்பதும் பூமி கிராமங்கள் விருத்தியாவதும், கன்று, காலிகள் விஷேசிப்பதும், வஸ்த்திர பூஷணாதி லாபமும், தீர்த்தயாத்ராதி ஸ்நாந பலப் பிராப்தியும், தேவதா குரு தரிசனங்கள் கிடைப்பதுமாம்.

ராகு தெசாநாதனுக்கு 6, 8, 12-லிருந்து பாபக்கிரகங்கள் கூடினால் புக்தி ஆதியில் 2-மாதம் வரையில் தேக கஷ்டமும், மகா பயமும், தாராபுத்திரர் விநாசமடைவதும், சமான ஜன மரணமாவதும், பந்துக்களுக்கு குரோதப் படுவதும், ஸ்திரீ விவாதமும், ஸ்தான நாசமும், அதிக பொருள்கள் விரையமுமாம்.

ராகு 2, 7-மிடங்களிலிருந்தால், அபமிருத்யு நேரும். இந்த தோஷம் நிவர்த்திப்பதற்கு மிருத்யுஞ்சய ஜபம் செய்யவும். மேஷாதி 5-வகை தானங்களால் சரீராரோக்கியமும், மகா சுகமுமாம் என்பது.

## சந்திர தெசையில் குரு புக்தி ௴ -16-க்குப் பலன்.

குரு லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும் 3, 11-மிடங்களிலும், உச்சத்திலும், சுவக்ஷேத்திரத்திலு மிருந்தால் திரவ்ய லாபமும், ராஜாக்கள் பிரீதியும், குடும்பத்தில் சுபாதிகம், மகாராஜவினுடைய ஆசிரமம் கிடைக்கிறது, இஷ்டசித்தியாவதும், புத்திர லாப

மும், சரீர சௌக்கியமும், வித்யாப் பிராப்தியுமாய் நல்ல கீர்த்தி கிடைக்கப்பெறுவது, சிவ கேசவாதி தேவாலய சேவாதரிசன பக்தியும், யஞ்சாதி கர்மபல பிராப்தியும், விஸ்தார பூமிகள் கிடைப்பதும், வஸ்திராபரண ஸ்ுகந்தாதி புஷ்பாலங்கிருதமும், நாற்கால் ஜீவ லாபமுமாம்.

குரு லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீசாஸ்தமயத்திலுமிருந்தால் பாப கர்மாவையே செய்கிறதும், குரு, புத்திரர்கள் நாசமாவதும், ஸ்தான பிரஷ்டமும், மனோ துக்கமும், அகஸ்மாத்தாக கலகம் விளைவதும், கிருகம், க்ஷேத்திரங்கள் நாசமடைவதும், வாகன வஸ்திரபூஷணாதிகள் ஈனமாவதும், தாயாதிகளால் கலகமும், கர்ப்பச் சின்னமாகிறதுமாம்.

குருவை சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ஜன்னி, சுர உபத்திரவமும், விவாதமும், யுத்தமும், கலகமும், சதா சத்துரு போராட்டமும், தாயாதி கலகமும், பூமிகள் விளைபொருளும் நாசமாவதுமாம்.

குருவை சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் கீர்த்தி லாபமும், சதா மனசு சந்தோஷமாக இருப்பதும், தன விர்த்தியும், வஸ்திராபரண லாபமும், ஸ்திரீ புத்திரர்களுக்கு சுபாதிகள் நடத்துவதாம்.

குருவை செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் சத்துரு விர்த்தியாவார்கள். தாயாதிகளால் கலகம் உண்டாவதும், பூமி, க்ஷேத்திர தானியாதிகள் நாசமடைவதாம்.

குருவை புதன் கூடினாலும், பார்த்தாலும் வேதசாஸ்திராதி பரிசயம், விசித்திர குருகலாபமும், விஷ்ணு பூஜா கைங்கரியமும் நடக்குமாம்.

குருவை சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீசௌக்யமும், பந்து விருத்தியும், வாகன வஸ்திர பூஷணப் பிராப்தியும், பலவித வஸ்த்துக்களும் லாபமாக நேருவது.

குருவை சனி கூடினாலும், பார்த்தாலும் புத்திர நாசமும், தன விரையமும், ஸ்தான நாசமும், ராஜாக்கள் பகையாவதும் அவர்களால் பீதியை அடைவதும், அடிமைவர்க்கத்தார்கள் விரோதமாவதும்.

குரு தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும் இருந்தால், களத்திர சுகசௌக்ய சந்தோஷாதிகமாயிருந்து தீர்த்த யாத்ராதி சேவையும், சிவாகம புராணாதி பிரஸங்கமும், ஸர்வ காரியங்களினால் பலன்கள் கிடைக்கப் பெறுவதும், சமான பிரபு தெரிசனமும், குருவாரமான வியாழக்கிழமையில் ராஜ சன்மானம் பெறுவதும், தனலாபாதிக மாவதுமாம்.

குரு தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து பாபர்களுடன் கூடியிருந்தால் தன நாசமும், தேகபாதையும், தாரா, புத்திரர்

கள் வியோகமும், நீச ஸ்த்ரீயால் கலகம் நேருவதுமாம்.

குரு 2, 7-மிடங்களிலிருந்து புக்தி நடந்தால் அபமிருத்யு தோஷம் சம்பவிக்கும். இந்த தோஷ நிவாரணைக்கு துர்க்கைக்காவது, லக்ஷிமிக்காவது ஜபம் செய்வது.

## சந்திர தெசையில் சனி புக்தி மீ 19-க்குப் பலன்.

சனி லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்சத்திலும், சுவ க்ஷேத்திரத்திலுமிருந்து புக்தி நடந்தால், பிரபு சன்மானமும், பந்துக்களுடன் ஒற்றுமையா யிருப்பதும், தன வாகனங்கள் சம்பாதித்தலும், யத்தின காரியார்த்த சித்தியும், தேகாரோக்யமும், மகா கீர்த்தியோடும், பிரசித்தியான பேரொடுப்பதும், தீர்த்தயாத்ராதிகளில் சிந்தை வைத்திருக்கிறதும், மேற்கு தேசம் போவது, அவ்விடத்தில் ராஜசன்மான மடைவதும், ஸ்வபிரபுக்களால் மகா சௌக்கியத்தை பெருகிறது, சூத்திர பிரபுக்களால் சுகமாக இருப்பது, பசு, எருமைமாடுகள் விருத்தியாவது, அடிமை, சேவகர்கள் அதிகமாக இருப்பதும்.

சனி லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், இருந்து தெசை நடந்தால் புக்தியாதி முதல் மாசத்தில் தேஹ பீடையும், சமான ஜன நாசமும், நாலுகால் ஜீவான்களால் நஷ்டமும், கலகமும், ராஜாக்கள் நிஷ்ட்டூரமும், பந்து நாசமும் அல்லது விரோதமாதலும். அடிமை வர்க்கங்கள் விரோதமாவதும், நீசரால் கலகம் விளைகிறதும், தன் இருப்பிடம் பேர்ந்து போவதும், நினைக்கிற எண்ணமும், தனமும் நாசமாதலாம்.

சனி சுவ க்ஷேத்திரத்திலாவது, சுய நவாமிசையிலாவது, துங்கத்திலாவது இருந்தால் பூலாபமும், புத்திரோற்பத்தியும், கிரக கட்டடம் செய்வதும், வீட்டில் கல்யாணம் நடத்துவது, ராஜா நுக்கிரகம், பட்டாபிஷேகம் கிடைப்பதுமாம்.

சனியை சுபர்கள் கூடினாலும், பார்த்தாலும் புத்திர மித்திரர்கள் சுகமாவார்கள், அதிக தனார்ஜ்ஜிதம் நேருவதும், ராஜபிரசாதம் கிடைத்தலும், சுகந்தமால்யாம்பர பூஷணாதிகளால் அலங்கரிக்கப்படுதல், வியவசாயத்தினால் அதிக லாபமாவதும், தாரா புத்திரர்களுனே சுகமாக வாழ்வதும்.

சனியை சூரியன் கூடினாலும், பார்த்தாலும், பிதாவும், பந்துவும் நாசமடைவதும், பூமியை ஆள்கிற அரசன் விரோதமாகுதல் அல்லது வர்க்கத்தாரால் அமுல் வருவதும், திரவிய நாசம், உத்தியோக பங்கமாவதாம்.

சனியை சந்திரன் கூடினாலும், பார்த்தாலும், ராஜாக்களால்

ஆசிரயிப்பதும், மகாசுகமாக இருப்பதும், நல்ல பட்டுபட்டாவளி வஸ்திர லாபம் பெறுவதும், புது பட்டணங்கள் போய் பார்ப்பதும், வியாபாரத்தால் தனலாபம் விசேஷிப்பதும்.

சனியை செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் காதகர்களால் பாதையும், மேல் ஸ்தானத்திலிருந்து அதாவது மலே, மரம், வண்டி வகையரா வாகனம் இவைகளாலும், கட்டடங்களால், மெத்தைமேல் உப்பரிகை, கோபுர மிவைகளிலாவது, வராவதி வகையராக்களினலாவது கீழே விழுவதும், தாயாதிகளால் வழக்கு நேருவது, கலகாதிகளால் ராஜாங்கத்திற்கு போர் நேர்ந்து தண்டனையை அடைய நேருவது.

சனியை புதன் கூடினாலும், பார்த்தாலும் வேத சாஸ்த்திரங்கள் கர்ப்பித்து சுய லிகிதமாய் எழுதும் திரமை வாய்ப்பதும், மாதுலவர்க்கத்தாருக்கு விருத்தியும் வஸ்த்திராபரணப் பிராப்தியுமாம்.

சனியை குரு கூடினாலும், பார்த்தாலும் புத்திரநாசம் வருவதும், புத்தி பிரமையும், சரீரபாதையும், தன் இருப்பிடம் விட்டு பிரிந்து போவதும் என்பது.

சனியை சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீ ஸௌக்யமும், பந்துக்களுக்குப் பிரீதியும், வாகனம் கிடைப்பதும், பூஷணதி வஸ்திர லாபமாவதும், அதிகார பதவியை பெறுவது என்பதாம்

சனி தெசாநாதனுக்கு கேந்திர கேணங்களிலும், 3, 11-மிடங்களிலும் இருந்து புக்தி நடந்தால் தனலாப முண்டாவதும், பசுமாடுகள் வீட்டில் தழைத்து விருத்தியாவதும், நீல வஸ்திர சம்பளாதிகள் வாங்குவதும், பரிசு பெருவது அல்லது பரிசளிப்பதும், தாஸர்களும், அடிமை ஜனங்களும் விருத்தியாவதும், சூத்திர பிரபுக்களால் சௌக்யமுண்டாவதும், நீசரிடத்தில் உத்தியோகம் செய்வதுமாம்.

சனி தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து புத்தி நடந்தால் ஞாதிகளால் கலகமும், பசு, தன தானியாதிகள் விரயம் நேருவதும், சரிசமான ஜனங்களால் கஷ்டம் உண்டாவதும், ராஜ கோபம் உண்டாவதுமாம்.

சனி 2, 7-மிடங்களிலிருந்தால் அபமிருத்யு தோஷமாம். இந்த தோஷம் நிவர்த்திக்கிறதற்கு ஆடு, எருமைக் கிடாக்கள் தானம் செய்வதும், விஷ்ணு ஸகஸ்ர நாம பாராயணம் செய்தால் தோஷ நிவர்த்தியாமென்பது.

## சந்திர தெசையில் புதன் புக்தி ஸ்ரீ 17-க்குப் பலன்

புதன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், ஆகூயிலும், உச்சராசியிலும், சுய நவாம்சையிலுமிருந்து பலம் பெற்றிருந்தால்

வெள்ளி பாத்திரங்களில் பால் போஜனமும், ராஜ சன்மானம் பெறுவதும், இஷ்டமான ஆடை ஆபரணுதி, வாகனங்களை வகிப்பதும், வித்யா விவாதமும், சத்கோஷ்டிகளோடு சேருவதும், வர்த்தகர் மூலமான தனலாப மடைவதும், ஸந்தான பிராப்தி யுண்டாவதும், அதிக சந்தோஷத்தோடு இருப்பதும், சௌரியம் செய்து தனம் நஷ்டம் செய்வதும், ஞான விர்த்தியுமாய் வித்தியா பாண்டித்யாதிகமாக சாஸ்திராதிகாரியாவது என்பதாம்.

சத்திர, சாமர ஆந்தோளிகாதி நானலங்கார பூஷிதனுவதாம்.

புதன் லக்னத்திற்கு 3, 11-மிடங்களிலிருந்தால் அதிக ஆடையாபரண லாபம் அடைவதும், கிரகத்தில் தானிய விருத்தியாவதும், பிரியமான வஸ்த்துக்களெல்லாம் வரப்பெறுவதுமாம்.

புதன் லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், இருந்தால் பந்து நாசமும், அதிக சிநேக ஜனங்கள் சத்துரு வாகிற தும், வீடு, பூமி, க்ஷேத்திரங்கள் நாசமடைவதும், ஞாதிகளால் கலகம் விளைவதும், இந்த புதன் வார தினத்தில் ராஜ கோபத்தை அடைவது, தாரா, புத்திரர்கள் பீடையாம். தேசாந்திரங்களில் கமனமும், பசு வாகன நாசமாவதுமாகும்.

புதன் லக்னுதிபதியுடன் கூடியிருந்தால் முதலில் சுபங்கள் நடத்துவதும், சௌக்யாதிகமும், தனலாபமும், தார பிரீதியும், புத்திர பிராப்தியுமாம்.

புதனைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும், ராஜ பிரீதியுண்டாவது, உத்தியோகத்தினல் தனலாபம் வருவது, பிதுரு வர்க்கத்தார் விர்த்தியாவது.

புதனைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் நூதன வஸ்த்திராபரணங்களுண்டாகும். இஷ்ட சித்தியாயும், சுகபோகியுமாய், கிரஹ கட்டடம் செய்வதும், கல்யாணுதி சுப விருத்தி யுண்டாமென்பது.

புதனைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் கலக்கமும், ஸ்தான நாசனமும், ஞாதிகளிட கலகம் வருவதும், ஸ்தான நாசமாவதும், சரீர குன்ம ரோகத்தால் பீடையாம் என்பது.

புதனைக் குரு கூடினுலும், பார்த்தாலும் குருவையும், தேவாலயங்களையும், பிராம்மணர்களையும் பூஜிப்பதும், தன லாபமும், பந்து விருத்தியாவதும், ராஜப்ரீதியுடனேயும், ராஜ சமானனுக இருப்பதாம்.

புதனைச் சுக்கிரன் கூடினுலும், பார்த்தாலும், அசுவ, சகட வாகனங்களும், நல்லவஸ்த்திராபரண ஸுகந்த பரிமளாலங்கார சுகவதன சரீரஸ்தனுகவும், ஸ்த்ரீ, புத்திராதிகமுடைய பாக்யத்தோடும், ஸங்கீத கான விநோத விசித்திர கிரக கட்டடங்களும், அமையப் பெறுவ

தாம் என்பது.

புதனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் அம்மான் வர்க்கம் நாசமாம். பந்துக்களும் விரோதமேற்படுவது, தன் பூர்வீக ஸ்தானத்தை விட்டுவிடுவது, அடிமைகள் நாசமாம்.

புதன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், இருந்து சுப கிரகங்களுடன் கூடினால் தனலாபங்களதிகமாவதும், தீர்த்தயாத்திரை செய்வது, பிரஸங்கங்கள் செய்வது, கேட்ப்பது, கல்யாணாதி, சுபாதிகள் நடத்துவது, விஷ்னு கதைகள் வாசிப்பது போதிப்பதும், சகல சாஸ்திராப்பி யாஸியாவதாம்.

புதன் தெசாநாதனுக்கு 6, 8, 12-லிருந்து பாப கிரகங்களிட சம்மந்த மடைந்திருந்தால் மனஸ்த்தாபமும், பந்து நாசமும், அதிக கஷ்டம் நேர்ந்து பலன் வருவது, ஸ்த்ரீ, புத்திர ஞாதிகளால் கலகம் விளைவதும், மாதுரு வர்க்கம் நாசமாவது என்பது.

புதன் 2, 12-மிடங்களிலிருந்தால் அகால மரணம் நேரும், இந்த தோஷ பரிகாரமாவதற்கு, லக்ஷிமி நாராயண ஜெபம் செய்ய தோஷ நிவர்த்தி என்பது.

## சந்திர தெசையில் கேது புக்தி ஸ்ரீ 7-க்குப் பலன்

கேது லக்னத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும் இருந்து சுப கிரகங்கள் கூடினாலும், பார்த்தாலும் வாகனங்கள் சேருவது, நூதன வீடு கட்டடம் செய்யவாவது கொள்வதாவதும், கிராமங்களில் விசேஷித்த பூமிகள் வாங்குவதும், வியவசாயத் தொழிலினால், விசேஷ லாபமுண்டாவதும், மஹாராஜா பேட்டி கிடைத்து ஸன்மானம் பெறுவதும், ராஜாவினால் கிராமங்கள் பரிசாக கிடைப்பதும், தெய்வ பக்தியும், கியாணாதிகமுமாய், எத்தனித்த காரியங்களிலே பலாவித்தியாவதும், சோரர்களுடனே உரவு பண்ணி அவர்களுடனே சமானஸ்தனாக இருப்பதும், தாரசுகம், பிராதாக்கள், புத்திரர்கள் இவர்களுக்கு கல்யாணாதிமங்களம் நடத்துவதும், க்ஷேத்திரங்களும் தனதானியாதி விருத்தியாய், சௌக்யமாக வாழ்வதாமென்பது, வஸ்திராபரண ப்ராப்தியும், சத்கர்மமாவானிடத்திலேயே சிந்தையாம்.

கேது லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், இருந்து பாபிகளுடன் கூடினாலும், பார்க்கப் பட்டாலும், தன் பூர்வ சொத்துகள் நாசமாவதும், இஷ்டமா யிருந்தவர்களே தனக்கு விரோதமான காரியங்களைச் செய்து கஷ்டப் படுத்துவதும், அகஸ்மாத்தான கலகம் விளைவதும், காராகிரக பிரவேசமாகிறதும், சோரராலும், அக்னியாலும், பீடிக்கப்படுவதும், ராஜகோபமும், தாரம்,

புத்திரர்கள் விரோதப் படுவதும், வைஷம்யத்தோ டிருப்பதும், சதா சத்துருத்வமே கொண்டாடுவதாம். யத்ன காரியங்கள் நாசமாவதும், விதவை ஸ்த்ரீயால் கலக முண்டாவதும், குலப்பிரபுவினுல் மனம் கஷ்டமடைகிறதும், தன்னுடன் சமானமான மித்திரன் மாணமாவ தென்பதாம்.

கேதுவை சூரியன் கூடினுலும், பார்த்தாலும் விஷத்தாலும், அஸ்திர சஸ்த்திரங்களினுலும், பீடிதமாவதும், அதிகாரங்கள் நாசமா வதும், ராஜகோப மேற்படுவதாம்.

கேதுவை சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் மாதுரு வம்சம் க்ஷீணமும், வயிற்றுநோய் காண்கிறதும், மனசுக்கு விஸனமாவதும், விவசாயத்தினுலே பலன் பூஜ்யமாமென்பது.

கேதுவை செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும், கத்திவெட்டு, ரணகாயம், கல்லாலடிபடுகிறது, மூள்ளுகளினுல் தைக்கப்பட்டு காலூனமாகிறதும், விஷ பீதியும், உஷ்ணபேதி, அதிசாரம், ஜுரம் இவைகளால் பாதையை அடைய நேருமாம்.

கேதுவை புதன் கூடினுலும், பார்த்தாலும் பந்துக்களுடன் சமானஸ்தனுகவும், அதிக இஷ்டகரமாகவு மிருப்பது, கிரைய விக்ரை யங்களினுல் லாபமும், வித்யாதிகர்களா யிருக்கிறவர்களுடன் சகித மாயிருப்பதுமாம்.

கேதுவை குரு கூடினுலும், பார்த்தாலும் வேதாப்யாசம் செய் வதும், சிஷ்ய வர்க்கத்தாருக்கு ஓதுவிப்பதும், அதிக வித்வான்க ளிடத்தில் பிரஸங்கிப்பதும், கிரகத்தில் கல்யாணுதி சுபாதிகளை நடத் துவதும், புத்திர புத்திரிகா உற்பவமும், யாத்திரை செய்வதும்.

கேதுவை சுக்கிரன் கூடினுலும், பார்த்தாலும் தாரம் பகையாவ தும், ஜார ஸ்த்ரீயாவதும், வேறே புருஷனுடனே பொருள்களோடு தேசாந்திரம் போய் விடுவதும், விஷம் தீண்டியாவது மறிப்பதும், அம்மை, கால்ராவினுல் பீடையுண்டாவதும், வாகனங்களும், பூமியும், நாசமாவதும், தானிய உற்பத்திக்கு குறைச்சல் படுகிறதுமாம்.

கேதுவை சனி கூடினுலும், பார்த்தாலும் அதிசார ஜுரத்தி னுல் பீடிக்கப்படுவது, தேசப் பிரயாண மார்க்கங்களில் களவு போ வது, நடந்து திரிவது, அகால போஜனம் செய்கிறது, ஜனப்பகை, தன் அடிமைகளே எதிர்த்து கொள்வது, தாழ்ந்தகுல ஸ்த்ரீயோடு கூடுவது, அவமானியுமாம்.

கேது தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங் களிலுமிருந்து சுப கிரகங்களினுல் கூடவாவது, பார்வை பெற்றுவது இருந்தால் குடும்பத்தில் சுப மங்களங்கள் நடத்துவதும், தேசப்பிர

யாணங்களினால் காரிய சித்தியாய் பொருள் லாபமடைவதும், மகா ராஜாக்களால் ஆதரிக்கப்படுவதும், சிவ பூஜையினால் சித்தி பெற்று பலன்களை அடைவதாகும் என்பது.

ராஜசன்மானமும், வஸ்திராபரணாதி அலங்கிருதப் பிரியன்.

கேது பக்தி ஆதியில் உபாய சௌக்யமான பலனும், தன் சொந்த கிருகத்தில் வஸ்த்து, வாகன லாபகாமும், புக்தி அந்தியத்தில் தன விரையம் நேரிடுவதாம்.

கேது தெசாநாதனுக்கு 6, 8, 12-லிருந்து பாப கிரகங்களுடன் கூடினால் பூத பிசாசங்களினாலும், சூனிய துவாரா மந்திர, யந்திரங்களாலும், பீடிக்கப்படுவதும், ரோகத்துடன் கஷ்டப்படுவதும், க்ஷுத்திர தேவதைகளால் பீதியாயிருப்பதுமாம்.

அகஸ்மாத்தாக சத்துரு பீதியை அடைவதும், நானாவிதரோக உபத்திரவங்களுடனே மூத்திர ரோகமும், விவகாரங்களால் ராஜபயம் நேரிடுவதும்.

கேது 2, 7-மிடங்களிலிருந்தால் இந்த புக்தியில் மரணம் கண்டிப்பானதுதான். இந்த தோஷம் நிவர்த்திக்காக ஆடுகளை தானம் தால், சர்வ தோஷங்களும் நிவர்த்தி, சுகமனுபவிப்பதா மென்பது.

## சந்திர தெசையில் சுக்கிர புக்தி மீ 20-க்குப் பலன்

சுக்கிரன் லக்னத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும் இருந்து சுப கிரகங்களிட சம்பந்த மடைந்திருந்தால் கல்யாணம் பண்ணிக் கொள்வது, மற்ற வர்க்கத்தாருக்கு நடத்துவது, பொருளீவது, புண்யாதி கர்மமே செய்வது, வெகு தனம் தேடுவதும், புத்திரர் ஜெனிப்பதும், மகா ராஜாக்களிட அபிமானம் கிடைப்பது, நினைத்தபடி யெல்லாம் முடிப்பித்து லாபமடைவதும், சுக்ரவாரத்தில் ராஜபேட்டிக்கு போய் காணுவதும், சந்தோஷம் பேசுவதும், சன்மானம் பெறுவதும், சுகந்த பரிமளாலங்காரமுள்ள கட்டிலின் மேல் சயனமும், மனோரம்யமான ஸ்த்ரீ சௌக்யமும், அதிக யோகவானாகவும், வாகனாதிக முள்ளதாக சதா அசுவாரூடனாய் மனோ உல்லாசத்தோடிருப்பதாம்.

சுக்கிரன் தெசாநாதனுடன் கூடினால் ராஜ்ய லாபமும், மஹா சௌக்கியமுமாம். கல்யாண மங்கள காமும், புத்திரரும், பௌத்திரர்களுமுண்டாவார்கள்.

சுக்கிரன் நீசமானாலும், அஸ்தமனமானாலும், பாபிகள் கூடினாலும், பார்த்தாலும், மனோ கிலேசாதிகளும், பூமி, வாகனங்கள் மூலத்தில் பலன் நஷ்டமாவதும், சகோதரர், புத்திராதிகளுக்கு பீடை

யாம், சிரசில் வலியாவதும், மனசு சந்தாபத்தை அடைகிறதும், தேகா யாசமாகவும், ஆலஸ்யத்தோடுங் கூடிய வேலை செய்வதும், ராஜ பயம் நேரிடுவதும், நாற்கால் ஜீவன்கள் நஷ்டமாவதும், தேகஜ்வர பாதை யை அடைவது, ராஜ பாதையாம்.

சுக்கிரன் உச்சராசியிலும், சுவ க்ஷேத்திரத்திலும் இருந்து பாக் யாதிபதி சம்பந்தம் வந்தால், தபோ பாக்கியங்கள் விருத்திப்பதும், தானதர்மங்களை செய்கிறதும். கிராம பூமிகள் லாபமாக கிடைப்பதும், புத்திரர், பௌத்திரர்கள் விசேஷமாவதுமாம்.

சுக்ரன் 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும் இருந்து தெசை நடந்தால் இதில் சரீரபாதையும், தாரா, புத்திரர்களுக்கு அரிஷ்டமும், பந்து விரோதமும், சுவ ஸ்தானத்தை விட்டு விடுவது, பந்து மித்திரர் கள் விரோதமும், நீச ஸ்த்ரீ கலகம் பண்ணுவது, கோக்கள் நாசம், பந்துக்கள் கலகமும், சத்துருபாதையே அனுபவிப்பதாம்.

சுக்கிரனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ராஜ கலகமேற் படுவதும், உத்தியோக பங்கம் வருவதும், கலகத்தால் சர்வ சொத் துக்களும் விரையமாய் விடுவதும்.

சுக்கிரனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும், வெள்ளை குதி ரை வாகனமேறுவதும், அதிக ஆடையாபரணம் சேருவதும், இஷ்ட சித்தியாவதும்.

சுக்கிரனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் கலகத்தால் பொருள் நாசமாகும். தாயாதிகளால் கலகம் நேருவதும், விவகாரத் தினால் தோல்வி பயம்.

சுக்கிரனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் இஷ்ட பந்துக் களால் தனம் வருவதும், தார புத்திர வர்க்கங்கள் சௌக்யமா யிருப் பதும், வாகனங்கள் தேவைக்கிசைந்தபடி கிடைப்பதும், வைசிய மூலம் அல்லது சொந்த வியாபாரத்தின் மூலமாயும் பலனடைவதாம்.

சுக்கிரனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் தேகாரோக்யமும், அதிக சுகமும், புத்ரோற்பத்தியும், எத்தின காரியார்த்தங்கள் சித்தி யாவதுமாம்.

சுக்கிரனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் தன் அடிமை ஜன கலகமே அதிகமாகும் பசுமாடு, எருமை மாடுகள் நாசகரமும், தன நாசம் வருவது.

சுக்கிரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11- மிடங்களிலும் இருந்து சுபகிரகங்களுடன் கூடியிருந்தால் இந்த புக்தி யில் அதிகமாக திரவிய லாபமாகும். வாகனங்களான அசுவம், ஆந் தோளிகாதி ஆரோகண பிராப்தியும், மகா ராஜாக்களால் பரிசுபெறுவ

தான வித்யாவினய விசேஷத்வமும், சுய வீட்டில் கல்யாண சுப சோபனமும், ஸ்த்ரீ சௌக்யமும், புத்திர விருத்தியும் உண்டாவது என்பதாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து பாப கிரகங்களுடன் கூடினால் தார ஹானியும், புத்திர வியாகூலம் வருவதும், ஸ்த்ரீகளால் விவாதமும், வல்லிடி வழக்கும் வந்து எண்ணின காரியங்கள் நாசமாகும். கிருஷி மூலத்தில் தானிய சூனியம் வந்து அகஸ்மாத்தாக கலகம் விளையுமென்பதும்.

சுக்கிரன் பாபியாக இருந்து புக்தி நடந்தால் மகா கஷ்டத்தையும், சர்வமும் சத்துருக்களினால் நஷ்டமாய் போகபாக்யங்கள் கெட்டு தாரா, புத்திரரும் ஹானியாவார்கள், பந்துக்களுக்கும் துவேஷம் வரும், க்ஷயத்தினாலும், ஜலத்தினாலும், கெண்டமாம். ஸ்த்ரீயாலும் தோஷம் வரும்.

சுக்கிரன் 2, 7-மிடங்களிலிருந்தால் அபமிருத்யு தோஷம் வரும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு ருத்திர ஜெபம் செய்து, வெள்ளை நிறமான பசு தானம் செய்து சாந்தியை விதிப்படி செய்ய தோஷம் தீரும் என்பது.

## சந்திர தெசையில் சூரிய புக்தி மீ 6-க்குப் பலன்

சந்திர தெசையில் சூரியன் கேந்திர கோணங்களிலும், உச்ச சுவ க்ஷேத்திரத்திலும், 3, 11-மிடங்களிலும், சுய நவாம்சையிலுமிருந்தால் நஷ்டமான ராஜ்யம் வருவதும், அதிக தனலாபமும், கிரகத்தில் கல்யாணாதி சுப கருமங்கள் முடிப்பதும், ராஜன் மித்திரனாக ஏற்பட்டு கிராம பூமிகள், ஆடையாபரண வாகனாதிகளை அடையப் பெறுவதும், ஸ்த்ரீ கெர்ப்பதானம் பண்ணிக் கொள்ளுகிறதும், சுவக்கிரகத்தில் லக்ஷ்மி கடாக்ஷமாயிருப்பதும், புக்தி அந்தியத்தில் சரீரம் ஆலஸ்யமாவதும், சுரபீடை யுண்டாவதும், மத்ய ஸ்த்ரீ சௌக்யமும், புத்திர விருத்தியும், பிதுருவும், பந்துவும் நேசமாக யிருப்பது என்பதாம்.

சூரியன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீசராசியிலுமிருக்க, ராஜக்குரோதமும், ஸ்தான நாசமும், பிதுரு மரணம் அல்லது பகையாவதும், ஆப்த்தாளானவர்களும், புத்திரரும் விரோதப்படுவார்களாம். அதிகாரம் தவறிப் போகும். தனக்குச் சமானஸ்த ஜனவர்க்கத்தார் சத்துருவாகி பாதைப்படுத்துவதும், மனசுக்கு கிலேசமும், உஷ்ணாதிக ஜுரபாதையும், துஷ்ட ஸ்த்ரீகளால் மூத்திர வியாதியும், கட்டி ரோகத்தால் பாதைப்படுவதும், வாத பித்தாதிகமும், கோக்கள் எருமைமாடுகள் நாசமாம். அந்திய புக்தியில் கிலேசமும், மாதுரு, பிதுருக்களுக்கு நாசமா மென்பது.

சூரியனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மாதுரு வம்சமே நாசத்தை அடையும். சிரசிலும், நேத்திரத்திலும், வயிற்றிலும் பாதையை அனுபவிப்பது, பந்துக்களுடன் கலகம் செய்துக் கொள்ளுதல்.

சூரியனைச் செவ்வாய் பார்த்தாலும், கூடினாலும் ஞாதிகளால் கலஹம் விளைகிறதும், பூமிகள், தானியங்கள் நாசமடைவதும், சமான ஜன நாசமாம்.

சூரியனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் பந்துக்கள் விர்த்தியாவதும், விசித்திர கிருஹ கட்டடங்கள் கட்டுவதும், வேதாந்தார்த்த கியானியாகவும், புராண சிரவணங்கள் பண்ணுவதும், கேட்பதும் என்பது.

சூரியனைக் குரு கூடினாலும், பார்த்தாலும், புத்திரர் ஜெனிப்பதும், கல்யாணாதிகளை புத்திர, புத்திரிகைகளுக்கு நடத்துவதும், தனகனக வஸ்து வாகனாதி சம்பத்துகளை பெறுவதும், திரேகாரோக்யமும், கீர்த்தியும், எடுத்த காரியங்களில் ஜெயத்தை அடைதலாம்.

சூரியனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீ சௌக்யமும், புத்திர சம்பத்துகளுண்டாவதும், அசுவவாகனப் பிராப்தியும், சர்வ திரவிய லாபமும் அடைவதாகும்.

சூரியனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் மகா கஷ்டமும், சத்துருக்களினால் பயமும், ராஜகோபமும், ஸ்தானபேதம் செய்வதும், ஜனங்களாலும், கலகம் விளைவிப்பதும்.

சூரியன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலு மிருந்தால், தார ஸௌக்யமும், மகா வுச்சாகமும், வாகனாதி, வஸ்திர பூஷணலாபங்களும், புத்திரோற்சவமும், கிருகத்தில் கோக்ஷீரஸமிர்த்தியும், வேத சாஸ்திரார்த்தங்களில் அதிக பாண்டியத்வ முடையதுமாய், ராஜசபையில் பிரஸங்கித்து ஸன்மானம் பெறுவதாகும்.

சூரியனுடன் 4-மிடத்தான் கூடினால் நூதன வீடுகளும், க்ஷேத்திரபூமிகளும், மாதாவுக்கு அதிக சந்தோஷ சுகமும், உண்டாகுமென்பது.

சூரியன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து பாபிகளுடன் கூடினால், ராஜாக்களாலும், சோரர்களாலும், அக்னியாலும், ஜுர பாதையும் ஸம்பவிக்கும். குன்மரோகம், க்ஷயரோகம், அதிசாரதி பீடிதமும், வெளிதேச பிரயாணம் போன இடத்தில் துக்கமும், மனசுக்கு பயித்ய பிரமையாவதும்.

சூரியன் 2, 7-மிடங்களிலிருந்தால் ஜுரங்களினால், பீடையை அனுபவிப்பதுமாகும்.

இந்த தோஷ நிவாரணைக்கு துர்க்கை ஜெபம்செய்து கோதானம் செய்ய தோஷ நிவர்த்தியாம்.

சந்திர தெசை சம்பூர்ணம்.

---

# செவ்வாய் தெசை பலன்

பொது.

1. செவ்வாய் தெசையில் ஆதியில் தனமில்லாமையும், மான ஹானியுண்டாம், மத்தியில் அந்நியராலும், ராஜாக்களாலும், சோரராலும், சேதமாவது, பிராதுரு வியோகம், சுதர்கள், தாராதி ஜன அரிஷ்டம் என்பது.

2. செவ்வாய் அந்தியபாதத்தில் கோசார ராசிலும், நல்ல ஸ்தானங்களி லிருந்தால், புத்திரருக்கும், தாரம், தாரவர்க்கத்தாருக்கும்; சகோதரருக்கும் நன்மை, பூமி, மாடுகள் விசேஷிக்கும் என்பது.

3. செவ்வாய் அதி உச்ச ராசியிலிருந்து தெசை நடந்தால் க்ஷேத்திராதி வஸ்த்துவாகன, பசுவாசுவ விருத்தியுண்டாம். எதனுலும் ஜெயமடைய நேருமாம். ராஜ்யாதிபதியாகிறது, அல்லது அனேகம் கிராமங்களுக்கு தலைவனுவதுமாம். சகோதரர்கள் உள்ளவன். ஸ்த்ரீசுதர்களும், சௌக்ய சந்தோஷமாக இருப்பது, தான் வாக்சாதுர்யனுகி அனேகர்களுக்கு தீர்ப்பு சொல்லும் படியான, கண்டிப்பான வாக்குடையவன் என்பது.

4. செவ்வாய் உச்ச ராசியிலிருந்து தெசை நடந்தால், ராஜ்யத்தை ஆளுகிறது, அல்லது ராஜாவுக்கு சினேகிதனுவது, தன தானிய பூமிகள் விசேஷிக்கும், பந்துக்களுக்குள் ஒரு அதிகாரத்வம் வகிக்கிறது, அனேக ஜனங்களை ஆதரிக்கும் எஜமானனுவது, அனேக வித வாகனங்களுடனே சதாவாகனுருடனுகி தேசமெல்லாம் விசேஷ சந்தோஷத்தோடு திரிந்து வருவனும்.

5. செவ்வாய் நீச ராசியிலிருந்து தெசை நடந்தால் சகோதரர் அடிமைகள் விரோதம், தன் சுற்றத்தாருடனும் பகை, போஜன யீனம் மாடுகள் கால் நடைகள், பூமி, தானியாதிகள் நாசம். பந்துக்களில் மரணம் நேருவதும், ராஜாங்க தண்டனை அடைவது, அக்னி பாதை, சோரபய மேற்படுவதாம்.

6. செவ்வாய் மூலத்திரிகோண ராசியிலிருந்து தெசை நடந்தால் இஷ்டான்ன போஜனமும், சுத்தமான ஜல ஸ்தான பானமும் நூதன வஸ்த்திராபரண லாபமும். சாஸ்திராதி புராணங்களில் கியானுதிகமும். மனோரம்மியமான தொழில் செய்து லாபம் வருமாம். சகோ

தார்கள் உண்டாவார்கள். அவர்களும் சௌக்யாதிகமாகவும், பூமிகளால் அதிக லாபத்தை அடைவதாமென்பது.

7. செவ்வாய் சுவ க்ஷேத்திரத்திலிருந்து தெசை நடந்தால், விசேஷ பூமிகள் கிடைக்கப்பெறுவது, கிருஷி மூலத்தினுல் தனதானியாதி லபம் வருவது. ஒரு ஸ்தானத்தில் அதிகாரியாய் ஆதிக்கியம் பெறுவது. சுகமாகவும், சதா வாகன சஞ்சாரியா யிருப்பது. நூதனமாக பேர் கிடைத்து சகோதர விசுவாசத்தோடு புத்திராதி, தாரப் பிரீதியாய் வாழ்வதாம் என்பது.

8 செவ்வாய் அதி சத்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால், சதா கலகமும், அதனுல் துக்கமும், ராஜகோபம் வருவது, சுய ஜனங்களெல்லோரும் பகையாவார்கள், பூமி நாசம், சகோதர மரணம், பொருள் விரையம், தார பீடை, ஒற்றுமையான மித்துரு மரணமாவான்.

9. செவ்வாய் சத்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால், வரும் லாபங்கள் செலவாய்விடும். சரீரபாதை, சரிசமான மானவர்கள் பகையை விளைவிப்பார்கள், சோரரால் பொருள் நஷ்டம், ராஜவால் தண்டிக்கப்படுவது, அக்னிவாதை, பீஜ வாதம், மூத்திர கிருச்ரோகமனுபவிக்கிறது, ஆஸனத்தில் பவுத்திரம் அல்லது மூல வியாதி நேத்திர கல்யமாம் என்பது.

10. செவ்வாய் சத்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால், ஸகலரும் மித்துருக்களாவார்கள். சோர பயம் உண்டாம், அக்னியாலும், பீடிதமுண்டாகும், பூமியால் வழக்கு நேரும், கிருஷி செய்தால், பலிதம் குறைவாம், ராஜகோபத்தினுல் துக்கம் வருமாமென்பது.

11. செவ்வாய் அதி மித்ரு ராசியிலிருந்து தெசை நடந்தால், கைவிட்டுப் போயிருக்கிற பொருள் வரும், ராஜாபிமானம், நல்ல வழியில் பூமியும், பொன் பொருள்கள் சம்பாதிக்கிறது, வஸ்த்திராபரணங்களும், சுக போஜன சௌக்யமும் உண்டாகும். யாகங்களும், யக்யங்களும் செய்விக்கும், யக்யகர்த்தாவாகி தீக்ஷை பெற்றுக் கொண்டு தேசாந்திரங்களிலே போய் ராஜாக்களாலும், யக்யயாக விவாஹங்களாலும், அதிக தனம் பெறுவதாம்.

12. செவ்வாய் சம ராசியிலிருந்து தெசை நடந்தால், நூதன வீடுகள் கட்டுவதும், கிரகத்தில் சதா தர்மத்தை நடத்திவருவதும், தனுதிகமுண்டாவதும், ஸ்த்ரீ, புத்திரர், சகோதரர், சத்துருவாய் விடுவார்கள், அக்னியால் கெண்டம், ராஜாவால் தண்டனை என்பது.

13. செவ்வாய் நீச கிரக சம்பந்தமடைந்து தெசை நடந்தால் மனோ விசாரமாக இருப்பது, ஒருவருடைய ஆதாரவை வேண்டி எதிர் பார்க்கிறது, இதரர் வீட்டிலேயே கடும் போஜனம் செய்வது, ஸ்த்ரீ

புத்திர நாசம், ராஜாங்கத்தாரால் அதிகாரம் செய்யப்பட்டு விதிக்குள் படுவதாம். களவு நேரும், அல்லது தான் களவு செய்து தண்டனை அடைவதாம்.

14. செவ்வாய் நீசமாயிருக்க உச்ச கிரக சம்பந்தம் பெற்றிருந் தால், அல்பசுகம், அல்ப போஜனம், வஸ்திர பூஷணுதிகளும் உபாய மாகவரும்.

ராஜ பூஜிதமுண்டாகும், தாராபுத்திராதி வர்க்கத்துக்கு அரிஷ்ட மேற்படுமென்பது.

15. செவ்வாய் பாப கிரகங்களுடன் கூடி தெசை நடந்தால், சதா பாப வேலேயே செய்வன், பசுக்களுக்கும், பிராம்மணருக்கும், தெய்வங்களுக்கும், தன்னுடன் கூடப் பிறந்தவர்களுக்கும், துரோகத் தையே செய்வதாகும், சதா ஒருவரை வஞ்சித்தும், யாசகவிருத்தியி லேயும் ஜீவிப்பதாம்.

16. செவ்வாய் சுபர்களிட சம்மந்தம் பெற்று தெசை நடந்தால், அல்பசுகம், தேகத்திற்கு இளைப்பு, ரோகாதிபாதை, பூமிகளால்வழக்கு நேருவது, ஜெயம் சமமாக அடைவது, வித்தையினுல் கோஷ்டிகளில் தர்க்கம்உண்டாகும், இதா தேசங்கள் எல்லாம் போய் திரிந்து வருகி றதும், வாசம் செய்வதும்.

17. செவ்வாய் சுப கிரகங்களினுல் பார்க்கப்பட்டு தெசை நடந் தால், பூமிகள் விசேஷிக்கும், பொன், பொருள்கள் லாபம், கோசார காலத்திலும், இந்தவித சுப பார்வையை பெற்ற செவ்வாய் அனுகூல ஸ்தானத்தில் வந்தால்' இன்னும் அதிக விசேஷமான சுப சோபனங் களை செய்வதாம்.

18. செவ்வாய் பாப கிரகங்களால் பார்க்கப்பட்டு தெசை நடந் தால் பாபபலனையே அடைய நேரும். விசேஷ துக்கமும் உண்டாகும். எதுவும் கஷ்டமாகவும், அதிக தாமசமாகவும் செய்து முடிப்பதாகும். ஜனங்களெல்லாருக்கும் தான் நிந்திக்கபடுவது, தாரம், புத்திரர் இவர் களைவிட்டு பிரிந்து தேசாந்திரம் போய்விடுவதாம். ராஜாங்கத்திலும், தண்டனை கண்டனையை அடைய நேருமென்பது.

19. செவ்வாய் கேந்திரத்திலிருந்து தெசை நடந்தால், திருடரா லும், அக்னியாலும், விஷத்தாலும் பீடிக்கப்படும். அதிக துக்கபலனை யே அடைவது, அதிக கலகங்கள் நேர்ந்து ஸ்தான பேதப்பட்டு போ வதாம். அதிக விரோதத்தை அடைவதாம். சதா தோசாந்திரங்களில் திரிவதாம்.

20. செவ்வாய் உச்சாம்சத்திலிருந்து தெசைநடந்தால், மனோனு கூல சந்தோஷாதி சம்பவமனுபவிப்பது, எடுத்தகாரியங்களில் ஜெயத்

ஷை அடையப்பெறுவது, நற்காரியம், கல்யாண சம்பவங்களினுல், பொருள்விரையம் நேருமென்பது, ராஜாவுக்கு முக்கிய பிரதானஸ்தான த்தில் தான் ஒருபெரிய அதிகார வேலையை வகித்து சுக சௌக்யமாக இருந்து கீர்த்தி பிரதாப பேர் பெறுவது.

21. செவ்வாய் நீசாம்சத்தில் இருந்து தெசை நடந்தால், நீச மான சேர்க்கையையும், பலரும் நிந்திக்கும்படியான துஷ்ட காரியங் கள் செய்வதும், எந்த வேலைகளை ஆரம்பித்தாலும் விக்னமாம். தன ஹானிவரும். ராஜாங்கத்தில் தெண்டனேயோ, அபராதமோ அடைய நேரும்.

22. செவ்வாய் சுயஸ்தானத்தில் பலாதிகனுக இருந்தால்அல்லது பலவானுக இருக்கிறவர்களுடன் கூடி இருந்தாலும், தார சௌக்கிய முண்டு, நூதன வீடுகட்டுவது, புத்திரர் உற்பத்தி, கீர்த்திவாய்ப்பது, சந்தோஷகரமான உத்தியோகத்திலமருவது, அதனுல் சௌக்யமுண் டாய் தனுதிகம் வரும் என்பது.

23. செவ்வாய் ஸ்தான வீரிய பலம் குறைந்து இருந்தால் நல்ல பலன்களை அடைய நேரிடாது, அதிகமான ஆபத்தினுலே துன்பப் பட நேரும், ஸ்தான நாசமாகும், பிறர் யேசும்படியான பழிப்பான பாவ ஜீவனத்தால் வயிறு வளர்ப்பதாம், பூமி, மாடு, தாரம் இவைகள் தூரமாம்.

24. செவ்வாய் திக்வீர்யாதிகனு யிருந்து தெசை நடந்தால், ராஜாங்கத்தில் ரணரங்க ஸ்தானமான தள நாயகனுகி, ராஜ்யமூலமாய் தனம் லபிக்க பெறுவன், அதிக சூரத்தன்மை, பிரதாபசாலியாவன். அதிக ஆடுமாடுகளுடையதும், விசேஷ கிராமங்களாவது, நானு கிரா மங்களில் பூமியாதிக்கத்தினுல் தானிய விர்த்தியில் அதிக கிருஷி யோடும், முயற்சியான யஸசுடையதும், வஸ்த்திர பூஷணும்பராதி அனிபணி பாத்திராதி வகை வஸ்த்துக்களுடன் வாழ்வதாகும்.

25. செவ்வாய் காலவீர்யாதிகனுகி தெசை நடந்தால் தான் ஆசைப்பட்ட வகைகளெல்லா வற்றினுலும், தனலாபம் வரும், அதிக சௌக்யத்தோடும், பட்டு பட்டாவளிகளான வஸ்திர லாபங்களும், ரத்தினுபரண முத்தாபரண வைடூரியாதிகள் லாபம். கோவும், யானை யும் வைத்திருப்பதாம்.

26. செவ்வாய் நைஸர்கிக வீர்யாதிகமான கிரகத்துடன் கூடி யிருந்துதெசை நடந்தால், கிருபாகடாக்ஷமான ராஜனுகிறது, அல்லது அப்படிக்கொத்த ராஜாபிமானம் பெறுவது, ஸமஸ்த்த பாக்யத்தோடு மிருக்கிறதாம். சகோதரர், தாரா, புத்திர, பந்துக்களுடனே விகிதமா யிருப்பது, ஸௌக்ய தேகியாயிருப்பதாம்.

27. செவ்வாய் நைஸர்கிக வீர்யாதிகமில்லாத கிரகத்துடன் கூடி தெசை நடந்தால், ஸ்தான நாசம், தன நாசம், நேத்திரம் குருடாகும், சரீரத்தில் பித்தம் அதிகமாகும், மனதிற்கு திருப்தியில்லாத குறைவான போஜனம் செய்கிறது, தாரத்திற்கும், பிதாவுக்கும், சகோதரருக்கும் பீடையை அடைய நேரும்.

28. செவ்வாய் வக்கிரமாயிருந்து தெசை நடந்தால், மகா பயமடைவதாம், திருடரால் அடிபடுவது, அக்னியால் வாதை, சர்வமும் நாசமாக்கி விட்டு வெளிதேசம் போய், நெருப்பு சம்பந்தமான வியாபாரத்தினால், ஜீவிப்பதாம். சுயம்பாகியுமாவதாம் என்பது.

29. செவ்வாய் குரூர ஸஷ்டியம்சத்திலிருந்து தெசை நடந்தால், தரித்ர ரோக பீடையை அனுபவிக்க நேரும், காராகிரக பிரவேசமும் நேருமாம். ஸமஸ்த பொருள்களும் அழிந்து கௌரவமும், மானமும் கெட்டு பாபி என்ற பேரெடுக்க செய்வதாம்.

30. செவ்வாய் ஸௌம்ய ஸஷ்டியம்சத்திலிருந்து தெசை நடந்தால், எப்போதும் சுபாதிகமாகவே நடக்கும், விவாகத்தினாலும், யாகாதிகளாலும், தீக்ஷைவகித்து சர்வத்திர ஜனங்களும் உபகாரியாயிருப்பதாகு மென்பது.

31. செவ்வாய் பாராவதாம்சத்திலிருந்து தெசை நடந்தால் மகா சுகமும், அதிக லாபாதிக சந்தான, தாரா, மித்துரு ஜனபந்து பூஜிதமும், பூமிகிராம புராதிபத்தியமும், தனதான்ய வாகனாதிக ஜனரக்ஷகர்தாவாவதென்பதாம். சுக போஜனவான்.

32. செவ்வாய் குரூர திரேக்காணத்தி விருந்து தெசை நடந்தால் சதா மனசு வியஸனத்தையே அடையும், சர்ப்ப பீதியையும் அடைய நேரும். கயிறுகளால் கட்டுப்பட நேருமாம்.

33. செவ்வாய் உச்சராசியிலிருக்க அம்சத்தில் நீசனாகி தெசை நடந்தால் சகோதரன் மரணமாம். ராஜாக்களால் அபராத தெண்டனையும், நெருப்பினால் இருப்பிடம் வெந்து போவதும், சரீரத்திற்கு அக்னியாலும், விஷத்தினாலும் கெண்டம் வரும்.

34. செவ்வாய் நீச ராசியிலிருக்க அம்சத்தில் உச்சனாகி தெசை நடந்தால் விசேஷ பூமிகள் உண்டாவது, தாரா, புத்திரர்களும், கிருஷி தனதானியாதிகளும் விசேஷித்து விருத்தியாகு மென்பது.

## மேஷாதி துவாதச ராசிகளில் செவ்வாய் இருக்கும் தெசை பலன்

35. செவ்வாய் மேஷத்திலிருந்து தெசை நடந்தால், தனலாபமுண்டாகும் பூமி, கிராமாதிகங்களுண்டாவதும், பூமிகளினால் தானி

யாதிக மாகும் எதிரிகள் நாசமடைவார்கள், வெகு கீர்த்திமானுவன்,

36. செவ்வாய் ரிஷபத்திலிருந்து தெசை நடந்தால், சத்துருக் களை ஜெயிக்கும் தன்மையாம். சதா சந்தோஷத் தோடிருப்பதாம். அதிக ஸௌக்யமும், க்ஷேத்திரங்கள் விருதியாவதும், தோற்பில்லா மல் ஜெயலாபமாகும். பூபாலனுன ராஜனுலும், ராஜாங்கத் தலைவர் களாலும், சன்மான மளிக்கப் பெறுவதும்.

37. செவ்வாய் மிதுனத்திலிருந்து தெசை நடந்தால், ஆடையா பரணப் பிராப்தியாகும். ராஜசன்மானம் கிடைக்கும். அதிக பந்துக் களுடன் கூடியிருப்பது, பூமி கிருஷியாதி தானியவிருத்தி, கோ லாப மாகும், ஸமஸ்த்த விதங்களினுலும் லாபமடைவதாம் என்பது.

38. செவ்வாய் கடகத்திலிருந்து தெசை நடந்தால், சத்துருக் களால் பாதையும், மனசில் பீதியையே அடைய நேருவதாகும். குடி யிருக்கிற வீடு கடன் காரர்களால் தொந்திரவு யேற்பட்டு ராஜாங்க மூலத்தினுல் கைவிட்டுப் போய்விடுவதும். பூமிகளுக்கும் நஷ்டமாவ தும். சகோதரரால் கலகம் விளைவதும், புத்திராள் மரணமாவார்கள். தனக்கு சமான ஜனங்களினுல் கஷ்டமடைகிறது, சுகயீனம் என் பது.

39. செவ்வாய் சிம்மத்திலிருந்து தெசை நடந்தால், சதாசௌக் கியத்தை அடைவதும், ராஜாங்கதில் அபிமானிக்கத் தக்கதும், மகா சந்தோஷகரமும், பூமி, கிராமாதி லாபங்களும், அதிக தன தானியாதி விசேஷ பலன்களும் அடைவதாம்.

40. செவ்வாய் கன்னியில் இருந்து தெசை நடந்தால், அதிக மான வித்தியா விசேஷத்தால் ராஜாக்களிட சன்மானம் பெறுவது; அனேகமான சிஷ்ய வர்கத்தாருக்கு போதகம் செய்வது, வாக்சாலத் வமாக பேசுவது, பந்து ஸங்கத்தாருக்கு தலைவனுதலாம்.

41. செவ்வாய் துலாத்திலிருந்து தெசை நடந்தால், அதிக கஷ் டமும், மானபங்கமும் வரும். ஸ்த்ரீ புத்திருக்கு பீடை, தனதானி யாதி, க்ஷேத்திரங்களும் விரையமாகு மென்பது.

42. செவ்வாய் விருச்சிகத்திலிருந்து தெசை நடந்தால், ராஜாக் களால் தனலாபம் வருவது, ராஜாக்களுக்கு முக்யஸ்தனுன மந்திரி யாகவோ, மித்துருவாகவோ இருப்பது, சுயஜனங்களுக்கு, உபகாரி யாம். அதிகமான பூமியை பரிபாலிப்பதாம், கோஷமூர்தியு முண்டா மென்பது.

43. செவ்வாய் தனுசில் இருந்து தெசை நடந்தால், ராஜாங்கத் தில் உத்தியோகம் செய்து தனம் சம்பாதிப்பதும், சகோதருடன் ஒற்றுமையா யிருப்பதும், சகோதர விருத்தியாவர்கள், சத்துரு

ஜெயம் அடைவது, சத்துரு நாசமாவார்கள். சகலவித தொழிலினு லும் தனலாபம் வருமென்பது.

44 செவ்வாய் மகரத்திலிருந்து தெசை நடந்தால், அரசனு வதும், ராஜஸன்மானம் பெறுவதும், ராஜாங்கத்திற்கு முக்யாதிகாரி யாவதும், அனேக ஜனங்களுக்கு தான் எஜமானத்வமாகவும், ஜனங் களை ஆதரிக்கும்படியான நல்ல அந்தஸ்துள்ளதுமான நற்குணமமைக் கப்பட்டு கீர்த்தி பெறுவதாகும். தளகர்த்தாவாக யுத்தத்தில் ஜெய மடைவதாகும், சகல காரியானுகூடியாம். வஸ்த்து, வாகனுதிகளும், நல்ல வஸ்த்திராபரணுதிகளுடனும், விசேஷ பூமிகளும், கோவிருத்தி யும், தானிய லாபமும், அடைவதா மென்பது.

45. செவ்வாய் கும்பத்திலிருந்து தெசை நடந்தால், அதிக கஷ்டமும், அவமானமும் நேரும். ஜனப்பகை, ராஜகோப மடைவது, சதா துக்கி, சகோதரரிடத்தில் பகை, பூமிகள், கால்நடைகள், நஷ்ட மாமென்பதும், பொல்லாத நடத்தையும், குடி கெடுத்தலுமாம். சதா கலகியாகி திரிவது என்பது.

46. செவ்வாய் மீனத்திலிருந்து தெசை நடந்தால், பணிபாத்தி ராதி வஸ்திராபரண முண்டாகும். கிராமாதிகாரியாவதும், விசேஷ பூமிகளை கிருஷி செய்து, துரவு, ஏரி முதலான நீர்ப்பாய்ச்சல்களை யேற்படுத்தி தானியலாப மடைவதாம். கோ சம்ரக்ஷணை செய்வதும், வித்யா பண்டித்யனுகி, ராஜசபைகளில் பூஜிக்கப்பட்டு சன்மானம் பெறுவதாகும் என்பது.

## லக்னுதி துவாதச பாவங்களில் செவ்வாய் நிற்கும் தெசா பலன்

47. செவ்வாய் லக்கினத்தில் இருந்து தெசை நடந்தால், சரீர கஷ்டம், உஷ்ணரோக பீடிதம், காந்தி குறைவது, அம்மை போட் டாவது அல்லது, கட்டிபாதை, சொரி, சிரங்கு, விரணங்கள், தேக பாதை அடைவது, சதா சத்ரு போராட்டம் வருவது, சுகம் குறைவு, தாரப்பகை, உடப் பிறந்தார்கள் நாசமடைவது, மூத்த சகோதரனுலே வஞ்சனையை அடையப் பெறுவது, புத்திரயீனம், பூமி, தானியாதி கள் நாசமாம் என்பது.

48. சேவ்வாய் 2-ல் நிற்கப் பலன் :—செவ்வாய் 2-ல் இருந்து தெசை நடந்தால், மகா சௌக்யமும், அதிக தனலாபமும் உண்டா கும். குடும்ப சம்ரக்ஷணனுவன், வாக்படுத்துவமாக இருப்பதும், ராஜ ஸன்மானம் பெறுவதும், கோ, பூமி, தன தானியாதிகமான பாக்யங்களைபெற்று கீர்த்தியோடு பிரதாபியா யிருப்பதாம். மற்றொரு வரை அடக்கி ஆளும் சக்திவந்தனு மென்பது.

49. செவ்வாய் 3-ல் நிற்கப் பலன் :—செவ்வாய் 3-மிடத்தில் இருந்து தெசை நடந்தால், சத்துரு ஜெயம், மனோ தைரியத்வம் விசேஷமாம். அதிக பூமிகள் சேரும், தானியலாபாதிக மாகும், நல்ல கீர்த்தியுண்டாவது, தேவேந்திர போகமாயிருப்பது, இஷ்டார்த்த சித்தியை அடைவது, நல்ல பலனையே லபிக்கப் பெறுவதாம் என்பது. கனிஷ்ட சகோதாருக்கு அரிஷ்டமாம் என்பது.

50. செவ்வாய் 4-ல் நிற்கப் பலன் :—செவ்வாய் 4-மிடத்தில் இருந்து தெசை நடந்தால், ராஜ்யாதிகாரத்வ முண்டாகும். மகா ராஜாக்களால் ஆசிரயிக்கப் படுவதுமாகும். சகல ஜனப்பிரியன், பந்து விசுவாசியா யிருப்பது, அனேக கிராமங்களை ஆளும் ஜமீன் சுரோத்திரியாதிகாரியாவதும், அயிசுவரியவான், கீர்த்தி பிரதாபி.

51. செவ்வாய் 5-ல் நிற்கப் பலன் :—செவ்வாய் 5-மிடத்தில் இருந்து தெசை நடந்தால், புத்திர நாசம், பூமியும், கிருஷி, தானியாதிகள் நாசமாகும். அதிகமான கஷ்டத்தை அடைகிறதும், ராஜாவினால் தண்டிக்கப்படுகிறது, சுய ஸ்தானம் நாசமாகும், வெளிதேசம் போய் கஷ்டமான பிழைப்பினால் ஜீவிப்பதென்பதாம்.

52. செவ்வாய் 6-ல் நிற்கப் பலன் :—செவ்வாய் 6-மிடத்தில் இருந்து தெசை நடந்தால், சத்தியவாதியுமாகி சத்துருக்களை ஜெயிப்பதாம். சரீர காந்தி பலாதிக முண்டாகும், ராஜ சமானனாகி யிருப்பது, தாரா, புத்திரர் சௌக்யம், பந்துக்கள் பூஜ்யனும், சகோதரர் விருத்தி, விசேஷ பூமிகளும், கோ விருத்தியுமுடையவன், சூரனும்.

53. செவ்வாய் 7-ல் நிற்கப் பலன் :—செவ்வாய் 7-மிடத்தில் இருந்து தெசை நடந்தால், தாரநாசம் வரும், புத்திர மரணம், பூமிகளும், தானியவிருத்தியும் குறையுமாம், சரீரத்திற்கு ஜுரத்தினாலும், அம்மையாலும் கஷ்ட நஷ்டம், கிருஷி நாசம், இதரர் வீட்டில் குடியிருப்பது, வெளி தேசம் போய் திரிந்து அலைவது.

54. செவ்வாய் 8-ல் நிற்கப் பலன் :—செவ்வாய் 8-மிடத்தில் இருந்து தெசை நடந்தால், அகால மிருத்யு வரும், ஜுரம், காசரோகம் வரும், வயிற்றில் வலியுண்டாம், கட்டிகண்டு அஸ்திர, சஸ்திராதிவையித்தியம் செய்வது, சண்டை வரும், அபவாதக் கேள்வி யுண்டாகும், துரோகியாகத் திரிவதாம்.

55. செவ்வாய் 9-ல் நிற்கப் பலன் :—செவ்வாய் 9-மிடத்தில் இருந்து தெசை நடந்தால், தர்மங்களையே செய்து புண்யாதிகமாகும். தர்ம வழியிலேயே பொருள் சம்பாதிப்பதும், தனாதிகாரியாவது, வெகுதானிய விருத்தியும், கோ ஜன சம்ரக்ஷகனாகவும், ஏரி, குளம், கிணறு, அகழிகள் எடுப்பித்து, கிரகத்தில் தர்ம தானாதிகள் செய்வ

தாம், சகோதாருக்கு கல்யாணம் செய்வதும், தர்மசத்திரம் கட்டிவைப்பதும், பிதுரு பக்தியா யிருப்பதும், பிதாவுக்கு கர்மம் நேருமாம்.

56. செவ்வாய் 10–ல் நிற்கப் பலன் :—செவ்வாய் 10-மிடத்திலிருந்து தெசை நடந்தால், இஷ்ட சித்தியை அடைவதாம். ராஜாங்கத்தில் அதிகாரியாவது, அதிக வித்யா கியானத்தினல், ஸர்ஜன சாங்கத்தியம் உண்டாகும். வேதாதி பத்தியாவதும், போதிப்பதும், சம்பாதிக்கும் பொருள்கள் எல்லாம் ராஜ மூலமேயாகும், தண்டனை நாயகன் என்றும் பேர் வாய்க்கும், அசுவமும் சதாகால வாகன சஞ்சாரியாம், யாகயக்யாதிகள் செய்விப்பவனுவதும், க்ஷேத்திரங்கள் நூதனமாக கிடைப்பதும், ஸ்லபத்தோடு சகல பலனும் அடைவதும், தாரா, புத்திராதிகளுடன் சௌக்யமாக இருப்பது என்பது.

57. செவ்வாய் 11–ல் நிற்கப் பலன் :—செவ்வாய் 11-மிடத்திலிருந்து தெசைநடந்தால், ராஜ மித்திரனுவது, விசேஷமான பூஷணுதிகள் உண்டாவது, விசேஷ பூமி கிராமாதிகமாவது, தனதானியாதி உற்பத்தியும், விசேஷிக்கும், கூடப் பிரந்த ஜேஷ்ட சகோதரனுல் பொருள்கள் கிடைப்பதும், பூமிகளும் கிடைக்கும் என்பதாம்.

58. செவ்வாய் 12–ல் நிற்கப் பலன் :—செவ்வாய் 12-மிடத்திலிருந்து தெசை நடந்தால், நஷ்ட விரையமும், அகால மரணமும் வரும், சமான ஜனங்களும், சகோதாருக்கும், அரிஷ்ட முண்டாகும், பூமிகளும், மாடு வாகனங்கள் நஷ்டமாகும், குடியிருந்த ஸ்தானமும் விட்டு போவதும், தாரப்பகை அல்லது கெண்டம் வரும், மனசுக்கு சோக பலன் என்பதாம்.

## செவ்வாய் திரிகோண ராசியிலிருக்க பலன்

59. செவ்வாய் திரிகோணத்திலிருந்து தெசை நடந்தால், ராஜ்ய பிராப்தியாகும். அரசனுவது அல்லது கிராமாதி பத்யம் பெறுவது, மந்திரியாகவாவது ஆவதாம், அனேகருக்கு நியாயாதிகாரி என்பது.

60. செவ்வாய் 6, 8, 12-லிருந்து தெசை நடந்தால், சுயஸ்தான நாசம் வரும், அதிக கஷ்டத்தை அனுபவிப்பதும், க்ஷேத்திரங்களும், பூமிகளும், தாரா, புத்திராரிஷ்டமும் என்பது,

## ஆரோகண செவ்வாய் தேசை பலன்

61. செவ்வாய் ஆரோகண ராசியிலிருந்து தெசை நடந்தால், சௌக்ய சந்தோஷ பலனுகும், க்ஷேத்திரமும், தானியார்த்த விருத்தியும், பிரவாளமணி, முத்தாபரணப் பிராப்தியாம் என்பது.

## அவரோகண செவ்வாய் தேசை பலன்

62. செவ்வாய் அவரோகண ராசியிலிருந்து தெசை நடந்தால்,

மகா பயமும், மனசில் அஞ்சுதலும், சத்துருக்களால் பாதை யுண்டாகும். மனஸ்தாபமே தேடி வருமாம், ஸ்தான நாசம் பண்ணும் என்பது.

## செவ்வாய் தெசையில் செவ்வாய் புக்தி ஸ்ரீ 4-நாள் 27-க்குப் பலன்.

செவ்வாய் லக்கினத்திற்கு கேந்திர திரிகோணங்களி லிருந்து லக்னுதிபதியோடு கூடினுல், உபாய சௌக்யம், உபாய லாப தனம் கிடைப்பது, சரீரம் ஆலஸ்யமாக வேலை செய்வதாம், புக்தி கடைசியில் சௌக்ய மென்பது. தாயாதிகளுடனே வியவகாரம் நடத்துவது, சகோதர விரோதம் நேரும். புத்திரர்கள் ஜெனிக்கும், வீட்டில் சுப சோபன சந்தோஷங்களோடும், கோ விருத்தியுட னிருப்பது, மகா ராஜாக்களால் வெகுமானம் பெறுவது, தனதானியங்கள் விருத்தியாவது.

செவ்வாய் லக்கினத்திற்கு கேந்திர திரிகோணங்களிலும், 3, 11 மிடங்களிலு மிருந்தாலும், உச்ச ராசியிலும், சுவ க்ஷேத்திரத்திலு மிருந்து புக்தி நடந்தால் தனக்கு ஒரு பிரபு இஷ்டமாய் அவனுல் சௌக்யமுண்டாகும், மகா ராஜாக்களால் ஆதரிக்கப்படுவதும், பவழம், முத்து இவைகளான ஆபரணுதி லாபமாம். சிவப்பு ஆடை தரிப்பது, இதுவரையில் காணுத பொருள் வருவது, சத்துருக்கள் போராட்டம் நிவர்த்தியாகி, சத்துருக்கள் நாசமடைவது, சகோதரருண்டாவது, தான் எண்ணிண எண்ணங்களும், எடுத்த காரியங்களும் தடையின்றி நடத்துவதாம் என்பது.

செவ்வாய் லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், பாப ராசியிலும், நீச ராசியிலு மிருந்தால், மகா பயமடைகிறது, அதிக உபத்திரவமான வியாதியால் பீடிக்கப் படுவதும், ஞாதிகள் கலகம் விளைவித்து சத்துரு பாதையை பண்ணுவதும், க்ஷேத்திரங்களும், தானியங்களும், குறைந்துபோம். சோர பாதை, அக்னியால் கெண்டம், ராஜாக்களால் தண்டனை கண்டனை கிடைப்பது, சமான ஜனங்கள் நாசமடைவார்கள். இஷ்டர்களும், பந்துக்களும், மாரகம் அல்லது விட்டுப்பிரிவதும், தாரா, புத்திரர்கள் நாசமடைவதாம்.

செவ்வாய் துங்காம்சத்திலும், சுய நவாம்சையிலு மிருந்து சுப கிரகங்களுடன் கூடினுலும், பார்க்கப்பட்டாலும், நூதன கிரகம் கட்டுவதும், வாங்குவதும், கோக்கள் விருத்தியாம். எருமை மாடுகள், பால் கரவல்கள் அதிகமாகும். மகாராஜாக்களால் சன்மானம் கிடைக்கப்பெறுவது, இஷ்டப்படிக் கெல்லாம் சுகாதிகமாவது என்பதாம்.

செவ்வாயை சூரியன் கூடினாலும், பார்த்தாலும் மனஸ்த்தாப மேற்படும். சரீரத்தில் உஷ்ணாதிகத்தால் ஜுரம் காணும், ராஜகோபம் வரும், அனேக மனஸ்த்தாபமுமாகும் இருப்பிடம் விட்டு பேருவது.

செவ்வாயைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் அதிக உற்சாகமும், அதிக சுகமும் உண்டாகும், எடுத்த வேலைகள் தடையில்லாமல் சித்தியாவது, தாரா, புத்திராதிகளுடனே கூடியிருப்பதாம் என்பது.

செவ்வாயைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் வேத சாஸ்த்திராதிகளறிவதும், வேதம் போதிப்பதும், அதிக வித்யா பாண்டித்தியத்தினால் சகல ஜனங்களினாலும் தனாதிக லாபத்தை பெறுவதாம். கணிதாதி வித்தியா சிற்ப சாஸ்திர மறிந்தவனாவன் என்பது.

செவ்வாயை குரு கூடினாலும், பார்த்தாலும் தேக சுகாரோக்யமாகவேயிருந்து கஷ்டமில்லாமல் தனம் வலுவில் வருவது, சிவாகம தீக்ஷையை வகித்து கொள்வது, வித்யா விவேகாதிகள் நிறைந்த ராஜ ஸபையில் பிரஸங்கம் செய்கிறது, யக்யயாக ஸுகர்ம்மாதி புண்யங்கள் செய்து பலசித்தியாவ தென்பதாம்.

செவ்வாயை சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் வாகன க்ஷேத்திரங்கள் விருத்தியாகும். சமான ஜனங்கள் எல்லோரும் சன்மானமளிப்பது, சமானமாக இருப்பது, நூதன ஆடையாபரணாதிகள் வீட்டில் நிறைந்திருப்பது, வாகன கோ, பூமிகள் விசேஷிக்கு மென்பதாம்.

செவ்வாயைச் சனி கூடினாலும், பார்த்தாலும் பித்தவாத ரோகங்களினால் பீடிக்கப்படுவது, அகஸ்மாத்தாக கலகம் விளையும், சமான ஜனங்கள் நாசமடைவார்கள்.

செவ்வாய் 2, 7-மிடங்களி லிருந்தாலும், அவர்களுடன் கூடினாலும், தேக ஜாட்டியமும், மனோ விஸனமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு, சுப்பிரமணியருடைய ஜெபம் செய்து ரிஷப காளை தானம் செய்தால் தோஷ நிவர்த்தியாகி ஆரோக்ய முண்டாகும்.

## செவ்வாய் தெசையில் ராகு புக்தி மீ 12-நாள் 18-க்குப் பலன்

ராகு லக்னத்திற்கு கேந்திர திரிகோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், பலமான சுப கிரகங்களுடன் கூடியிருந்தால், விதவை ஸ்த்ரீயைக் கூடுவதாகும், துர்க்கை பூஜா துரந்தரனாவனும். நல்ல காரியங்களும், புண்ய தீர்த்தயாகாதிகள் நிஷத்தமாம். சுய குலபிரபுவால்

மஹா ஸௌக்யமும், தாரா புத்திரர்கள் அன்னியோன்ய மாயிருப் பார்கள். ஞாதிகள் சத்துருவாகி நாசமடைவார்கள், தேகம் ஆரோக்ய மாகும். புக்தி ஆதியில் மத்யமான பலனும், பின் பாதியில் சௌக்ய பலனுகும்.

ஸேது தீர்த்த யாத்திரையும், புண்ய விரையமும், வெளிதேசம் போக எண்ணமும், தாரா, புத்திரவர்க்கமும், இஷ்டஜன பந்து வர்க்க மும், கிலேசத்தை அடைவார்கள். வெளிதேச யாத்திரையில் சோர பயம் நேரும். இவைகள் ஆதியில் நடந்து விடும். பிற்பாக காலத்தில் இஷ்டமானபடி பலன்கள் டிக கூடுமாம். ராஜா நுகூலமாவது என்ப தாம்.

ராகு லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களி லிருந்து பாப கிரகங் களுடனிருந்து சுப கிரகங்களால் பார்க்கப்பட்டாலும், சோர பயமும், அக்னி வாதை, ரெண கெண்டம் இவைகளால் துன்பமாகும். நாற் கால் ஜீவாதிகள் நாசம். வாதபித்த க்ஷயரோகத்தால் பீடிக்கப்படு வது, கர்ராக்கிரக பிரவேசமும் வருமென்பது.

ராகு லக்கினத்திற்கு 6, 8, 12-லிருந்தாலும், நீச ராசியிலிருந் தாலும், இதர தேசம் போவேமா என்கிற எண்ணங் கொள்வது, கெர்ப்பம் சின்னமாய் விடுகிறது, பந்துக்கள் பகை அல்லது மரணமா வார்கள். புத்திருக்கு பீடை, வியாஜ்யத்தால் கச்சேரி மூலத்தில் பொருள் விரையமாகும். பேய், பிசாசு மனைவி மக்களை பீடிக்கும், தன் சரீரத்தும் பாதையாம், புக்தி ஆதியில் விசேஷ சௌக்யமும், கடைசி யில் கிலேசமாம்.

ராகுவைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும், மனவருத்தமே நேரிட்டு கலகங்கள் விளையும். சிரசு பாதையும், வயிற்று வலியுமுண் டாகும். ஜன்னி சுரமும் அடிக்கும்.

ராகுவைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும், மாதாவுக்கும் மாதுரு வமிசத்தாருக்கும் பீடையுண்டாகும், மனசுக்கு கிலேசமும், மானபங்கமு முண்டாகும், பூமியும், கிருஷி தானியாதிகளும் நஷ்ட மாகுமென்பது.

ராகுவைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும், தேகத்தில் விரணரோக முண்டாகும், சஸ்த்திராதிகளினல் பாதை, காரிய விக்கி னம், மனஸ்த்தாபமும், கலகமும், அதிக துக்கமுமாம், சகோதரா ரிஷ்ட மென்பது.

ராகுவைப் புதன் கூடினுலும், பார்த்தாலும் இதர ஸ்த்ரீகளா திரவிய லாபமடைவது, பந்துக்களுக்கு உபகாரியாவது, சர்வ சாஸ்த் திராப்பியாசம் செய்வது, எடுத்த காரியங் களிலெல்லாம் ஜெயங் கொள்வது.

ராகுவைக் குரு கூடினாலும், பார்த்தாலும் வித்யா வேதியா அப்பியா சாதகமாம். அசுவவாகன முண்டாவது, பசுமாடு, கன்று கள் விர்த்தியாகும். கெற்பமாயிருக்கிற ஸ்த்ரீயைச் சேருவதுமாம்.

ராகுவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் வாகனாதிகள் கிடைப்பது, நூதன வஸ்த்திராபரணங்களினால் ஸ்த்ரீ புத்திராதி களுக்கு, சிங்காரிப்பதும், விவாஹ மங்களகர சௌக்ய சந்தோஷமா யிருப்பதாகும்.

ராகுவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் சகோதரர்கள் நஷ்ட மடைவார்கள், பந்துக்களுக்குத் துன்பம், சரீர கஷ்டமும் உண்டா கும். ஸ்தான பேதமாகும். ராஜாங்கத்தில் உத்தியோகம் செய்து உத்தியோக பங்கம் வருவது, அபராத தெண்டனைக் குட்படுவதாம் என்பது.

ராகு தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங் களிலாவதிருந்து புக்தி நடந்தால், தன் பேரில் அபக்யாதி, அவமான மும், பயமும் ஏற்படும். புத்தி ஆதி 6 மீ காலமளவும் கஷ்டமே அனு பவிக்க நேரும். ராஜாங்கத்தால் பூமிகள் நாசமாகும். பிற்பாதியில் மகா சௌக்யமும், ராஜப் பிரீதியுண்டாய் தனலாபத்தை பெறுவது, கிழக்கு திக்கில் பிரயாணமாகி போய் எத்தனித்து செய்யும் காரியங் களினால் தன முண்டாகும்.

ராகு தெசாநாதனுக்கு 6, 8, 12-லிருந்து பாப கிரகங்கள் கூடி னால் இந்த புக்தியில் காரிய நாசமாகும். மாதுரு பந்துக்களில் துக்க மடைவார்கள்.

ராகு 2, 7-மிடங்களி லிருந்தால் அகால மரண மேற்படுமாம், இந்த தோஷ நிவாரணத்திற்கு மிருத்யுஞ்சய ஜெபம் செய்து கருப்பு நிறமான பசுவையாவது, எருமைக் கிடாவையாவது தானம் செய் தால், சௌக்யமுண்டாகு மென்பதாம்.

## செவ்வாய் தெசையில் குரு புக்தி மீ 11-நாள் 6-க்குப் பலன்

குரு லக்னத்திற்கு கேந்திர திரிகோணங்களிலும், 3, 11-மிடங் களிலுமிருந்து மித்துருக்களுடன் கூடினாலும், உச்ச ஸ்வக்ஷேத்திரங் களிலிருந்தாலும், சுய நவாம்சத்திலும், சுபர் வீட்டிலுமிருந்தால் ராஜாவினிடத்தில் மந்திரியாக அமருவது, ராஜ மந்திரிகளாலும், ஸன் மானம் பெறுவதும், வாகன லாபமும், பந்து பூஜிதமும், பூஷணாதி கள் பிராப்தியுமாம்,

அதிக தனம் சம்பாதிப்பதும், புத்ரோற்பத்தி யுண்டாகும், விவ காரமூலத்தில் ஜெயமுண்டாகும். வஸ்திர பூஷணாலங்கார முண்டாவ துடன் எத்தனித்த காரியங்களெல்லாம் சித்தி, குடும்பத்தில் கல்யாண வேலைகளை நடத்துவது.

குரு தெசாநாதனுடன் கூடினால் கிருஷி மூலத்தினால் தான்ய விருத்தியும், கோ விருத்தியும் விசேஷிப்பது. ராஜ காரியங்களில் பிர வேசித்து நூதன பிரபு இஷ்டமாவது, எடுத்த காரியங்கள் ஜெயமாகு மென்பது.

குரு லக்கினத்திற்கு 6, 8, 12-லிருந்து பாப கிரகங்களுடன் கூடினாலும், பாபர்களிட பார்வையை அடைந்தாலும், நீசமானாலும், பலயீனமாக யிருந்தாலும் திருடர், அக்னி இவைகளால் பாதையும், விஷந்தீண்டுவது, அல்லது பிரமாதமான ரோகத்தை அடைவது, மூத் திர கிருச்சரோகத்தினால் உபத்திரவப் படுகிறது. குறைவான போஜ னம். கிழிந்த வஸ்த்திரம் தரிப்பது, கழனிகளில் தானிய உற்பத்தி குறைந்து போவது, பந்து நாசம், ஸ்தானபேதமாம். சகோதரத் துவேஷம் அல்லது மரணமாவதும், மகாதுக்கத்தையே அனுபவிப்பது.

குருவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் விசேஷ தனலாப முண்டாகும். ராஜாங்கத்தில் பெரிதான உத்தியோக ஸ்தானத்தில் உத்தியோகம் பண்ணுகிறது, அதனால் சன்மானம் வாங்குவது, பிள்ளை கள்ஜெனித்து சந்தோஷிப்பதுமாம்.

குருவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் சரீர ஆரோக்ய மும், மனசு சந்தோஷமும், நல்ல கீர்த்தியை பெறுவதும், பந்துக்க ளுடன் நேசித்திருப்பதும், மாதுரு பக்தியும், மாதாவுக்கு நூதன ஆடை ஆபரணாதிகள் கிடைக்கப் பெறுவதுமாகும். கோ க்ஷீரசமிர்த்தி யாம். சுக போஜனம், நல்ல வஸ்திராபரண மணிவது, கல்யாணாதி சுபங்கள் நடத்தி சந்தோஷிப்பது. புத்திரிகாப் பிராப்தியாகு மென் பது.

குருவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும், பூமிகளும், கால்நடைகளும், தானியமும், நாசமும். ரத்தகாசம், பித்த ரோகம், பயித்யமும், பிடிக்கு மென்பது குடும்பத்தில் சதா கலகமே நடக்கும்.

குருவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் மாதுரு வர்க்கத்தார் விருத்தி, ராஜ ஸன்மானமும், ஆரோக்யமுமாம், குடும்பத்தில் வியா பாரமேற்பட்டு, தனலாப முடையதாகு மென்பது.

குருவைச் சுக்கிரன் கூடினால், விசேஷ ஆடை ஆபரணாதிகள் உண்டாகும், அசுவவாகன சஞ்சாரியாவது, கல்யாணங்கள், நூதன கட்டடங்கள் கட்டுவது, தனதானியாதி சம்பத்துடன் நீர்பாய்ச்சல்,

வயல் தோட்ட நிலங்கள் சம்பாதிப்பதும், பசு விருத்தி, பால்சமுர்த்தி யுடன் ஸ்த்ரீ புத்ரருடன் ஸௌக்ய சந்தோஷத்தை அடைவது மாகும். அதிக போகியாம்.

குருவை சனி கூடினல் எருமை மாடுகள் நாசமடையும், வீட்டில் பெண்டிரால் கலிகமும், விவாதமும் உண்டாகும், தனக்கு குருவா யிருக்கிறவருக்கு மரணம் நேருவது, புத்திராரிஷ்ட மடைவது, பிராம் மணர்கள் பகையாவார்கள், கைப்பொருள் இல்லாததால் ருணப் பட்டு ஜம்பமாக செலவு செய்து பழைய பொருளை பிறரிட உபத்திர வத்தினல் போக்கடிக்கப்படுவது, சரீர பித்த ரோகத்தால் பீடிக்கநேரு மென்பது.

குரு தெசாநாதனுக்கு கேந்திர கோணத்திலும், 3, 11-மிடங் களிலும் இருந்தால் புத்திரப் பிராப்தியும், மனே உற்சாகமும், ராஜாக் களாலும், பிரபுக்களாலும், சன்மானம் கிடைப்பது. அபூர்வ வஸ்த் துக்கள் கிடைப்பது. கல்யாணுதி சுப சோபனம் நடத்துவது, கர்ப்ப மாயிருக்கிற ஸ்த்ரீயை கூடுவது, மித்துரு ஜன சமூஹத்தோடு கூடி யிருப்பது.

குரு தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து பாப கிரகங் களுடன் கூடினலும், பாபிகளால் பார்வையைப் பெற்றாலும், சதா மனசில் பாப காரியத்தையே செய்யநினைப்பது, ஒருவருக்கு அபகாரத் தை செய்வது, குரூர புத்தியினல் சத்துருத்வமான காரியத்தில் பிர வேசிப்பது, மற்றொருவரால் மனசுக்கு சஞ்சலம் மிகுதியாகும். புக்தி ஆதியில் சுபசோபனங்கள் செய்வதாகும், தனதானியாதி சமிர்த்தியா யிருக்க கூடிவருவது, புக்தி மத்திய காலத்திலும், அந்திய புக்தி காலத்திலும், கிலேசத்தை அடைய நேருமாம். மரண வார்த்தையை கேட்க்க நேரும். நாற்கால் ஜீவராசிகள் நஷ்டமாகும். தேகபாதை யைப்பண்ணி விடுமாம். குரு ராகுவுடன் கூடினல் திருடராலும், அக் கினியாலும், விஷத்தினலும் பயமாகும்.

குரு 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணமாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு ருத்திர மந்திரம், 1000-ம் ஜெபித்து ஸ்வர்ன தானம் செய்தால், சர்வ சம்பத்துக்களையும் லாபமாக அடையநேரு மென்பது.

## செவ்வாய் தெசையில் சனி புக்தி மீ 13-நாள் 9-க்குப் பலன்

சனி லக்னத்திற்கு கேந்திர கோணங்களிலும், உச்ச சுவக்ஷேத் திரத்திரங்களிலு மிருந்தால், தனலாபமும், பூமிகளினல் கிருஷி செய்து தானிய பலிதலாபாதிக மேற்ப்படுவதுமாகும். தாரா புத்தி

ரர்களுக்கு சௌக்கியாதிக பூஷணும்பர லாபத்தை அடையப் பெறு வார்கள். நீச ஸ்திரீயைச் சேருவன். நீச விருத்தியை செய்து நீச ரிடத்தில் சேவகம் செய்வதாகும். யாத்திராதி காரியங்களினுல் நஷ்ட மடைவது. கருப்பு வஸ்திரங்கள் தரித்திரத்தினுல் பீடிக்கப்பட்டு உடைதரிப்பது. தாஸி தாஸர்கள் விர்த்தியாவார்கள். கன்னியா ராசி ஜனனமாக இருக்கிறவர்களுக்கு இந்த சனி புக்தி நல்ல பலனும் சௌக்பமும் உண்டாக்குவது என்பது.

சனி மூலத்திரிகோணத்திலும், துங்கத்திலும், சுய நவாமிசையி லும், துங்காமிசத்திலும், லக்னத்திற்கு உபஜெய ஸ்தானங்களிலும், சுப பார்வையை பெற்றிருந்தால், ராஜயத்தை ஆள்கிற ராஜ்ய ஸ்தா ஞுதிகாரியாவதும், கிராம கிராமாதிக்கமும் உடையதாய், தானிய விருத்தியும், உண்டாய், பசுவாகன சகடாதி அணிபணி பாத்திராதி வகைகளை யுடையவனுக, அனேக ஜனங்களை போஷிக்கும் உதாரத்வ முடையதாய் கீர்த்தியோடு வாழ்வதாகும்.

சனி நீச ராசியிலாவது, சத்துரு ராசியிலாவது 6, 8, 12-மிடங் களிலாவது, 2, 9-மிடங்களி லிருந்து பாப கிரகங்களுடன் கூடினுல் மகா பயத்தை துலுக்க ஜாதி பிரபுவால் அடைய நேருமாம். தன தானியங்கள் நஷ்டமாகிறது. சோரராலும், அக்னியாலும், ராஜாக்க ளாலும் பீதியை அடைவது. அண்ணன் தம்பிகளினுல் கலகம் அல் லது சகோதர மரணம் நேருமாம். பந்து விரோதம். பிராணிகளான கால் நடைகள் நஷ்டமாவது, திடீரென்று சத்துரு யேற்படுகிறதும், ராஜாங்கத்தில் அபராதபணம் கட்ட நேரும், அல்லது தெண்டனை நேருமாம். அதிக தன விரையமே நேரும். மாதா பிதாக்களுக்கு கர்மம் செய்வதாகும். அதிக பிரீதியான சினேகர்கள் வருத்தமாவார் கள்.

சனியை சூரியன் கூடினுலும், பார்த்தாலும் தேக உஷ்ணுதி பாதையாம். தலைவலி யுண்டாகும் சதா கலகத்தினுல் சத்துருக்க ளோடு போராடபட்டு பயமும், துக்காதிகமு மாகும்.

சனியை சந்திரன் கூடினுலும், பார்த்தாலும், வஸ்த்திர பூஷ ணுதி லாபகரமாகும். மாதுருவுக்கும், மாதுரு வர்க்கத்தாருக்கும், விருத்தி, சுகாதிகமாம், தாரா புத்திராதிகளுடன் சந்தோஷிப்பது.

சனியை செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் ராஜப் பிரீதியும், தன விரையமும் உண்டாகும். சரீரத்திற்கு நலிகாட்டும், ஜுர ரோகத் தால் பீடிக்கும், தனக்கு சமான ஜன நாசமாம். சகோதராருக்கு கெண்டம், பூமிகள், மாடு, கிருஷி முதலியதும் ஜீரணிக்கும். வல்லடி வழக்கு நேருமென்பதாம்.

சனியை புதன் கூடினலும், பார்த்தாலும், ராஜாக்களால் ஆதரிப்பது, இஷ்டானு கூலமாம். புத்திர புத்திரிகைகள் ஜெனிப்பதாகும்.

சனியை குரு கூடினலும், பார்த்தாலும் தாரா புத்திராதி, தன சம்பத்துடன் சந்தோஷிப்பது, அரசர்கள் நேசம் வரும், பசுமாடுகள் விருத்தி. பிராம்மண பிரபுவினல் சகாய சுக முண்டாமென்பது.

சனியை சுக்கிரன் கூடினலும், பார்த்தாலும் வஸ்திராபரண வாகனதி பிராப்தி, அதிகார விருத்தி, அதிக தனதிக முண்டாவது, விசேஷ கிருஷி தானிய பலாதிக மாகு மென்பது.

சனி தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலுமிருந்து சுப கிரகங்களுடன் கூடினல் அதிக திரவிய லாப முண்டாகும். வித்யாதிகமாய் சபா பிரஸங்கத்வத்தினல் கீர்த்தி பெறுவன். சத்துரு ஜெயமுடையவன், பசுமாடு எருமை மாடுகள் விருத்தி. சூத்திர பிரபுவினல் சுகமுண்டாம்.

சனி தெசாநாதனுக்கு 6, 8, 12-லிருந்து பாப கிரகங்களுடன் கூடினல் சரீரத்திற்கு ஹானியும், விசேஷ வியாதியினல் பயமுமாகும்.

சனி 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் வரும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு மிருத்யுஞ் ஜெயஜெபம் செய்ய தோஷ நிவர்த்தி என்பது.

## செவ்வாய் தெசையில் புதன் புக்தி ஸ்ரீ 11-நாள் 27-க்குப் பலன்

புதன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலுமிருந்தால் சத்கதா பிரஸங்காதிகளில் பிரபலமாவது, தான தர்மங்களை ஆசரிப்பது. விசேஷ யசஸ்ஸான பேர் வாய்க்கிறது. அனேக லோக ஜனங்களுக்கு நீதியை உபதேசிக்கும் கர்த்தாவாகிறது. நித்யமும் ஷட்ரஸோ பேதமாக இஷ்டான்ன போஜனம் பண்ணுகிறது, வஸ்த்து வாகனதிகள் அதிகரிக்கிறது, கியானதிகமாய் சுக்யானியாய், யாகாதி கிருத்ய கர்த்தாவாகி வேண்டுவதான பொருள் சம்பாதிப்பது, நூதன வஸ்த்துக்கள் கிடைப்பது, மகா ராஜாக்களால் ஆதரிக்கப்படுவது, யத்தினகாரியார்த்த சித்திகள் உண்டாவது, கிருகத்தில் கல்யாணதி சுபங்கள் நடத்தல், கிரைய விக்ரயங்களினல் தனலாப மடைவது, மகான்களான வேதாந்தி புருஷாள் தெரிசனம் கிடைப்பதாம்.

புதன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், தெசாநாதனுடன் கூடியிருந்தால் சத்துருக்களால் அதிக பயத்தை அடைவதாகும். இதா தேசம்போக எண்ணப்படுவது, சரீரத்திற்கு

சகலரோக உபத்திரவமும் உண்டாவது, இருதயத்தில் துரோக சிந்தையே கொள்வது, அதனுல் மானபங்கம் வருவது, நாற்கால் ஜீவ வாகனங்கள் நாசமடையுமாம், தன் இருப்பிடம் விட்டு பேர்வது, தனக்கு மித்திரனே கலகத்தை விளைவிக்கிறது.

புதனை சூரியன் கூடினுலும், பார்த்தாலும் ராஜாங்கத்தினுல் சுகமுண்டாகும், நினைத்த காரியங்களினுல் தன லாப முண்டாகும், அணிபணி வஸ்திராதி பூஷணுலங்கிருதனுவதாம் என்பது.

புதனை சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் மாதுரு வம்சம் விர்த்திக்கும், ஆரோக்யமும், நூதனமான மாடமாளிகைள் அமைக்கப் பெறுவது, வித்யாதிக புத்தி விசேஷிப்பதாம். வித்யா விஷயமாக தனம் விருத்தியாம்.

புதனை செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் தேகதாபத்தை அடைவதாகும். புக்தி முதலில் கஷ்டம் வருவது, மன சஞ்சல்யமும், சமான ஜனங்கள் நாசமடைவார்கள்.

புதனை குரு கூடினுலும், பார்த்தாலும் புத்திர விருத்தியுண்டாகும். ஆத்மக் கியானுதிக நற்கேள்வியும், பிராமண பக்தியும், தேவார்ச்சனுதி புண்ய தீர்த்தாபிஷேகப் பிராப்தியும் உண்டாகும்.

புதனை சுக்கிரன் கூடினுலும், பார்த்தாலும் ஸ்த்ரீ சௌக்யாதி சந்தோஷ முண்டாம், மணி வஸ்திராதி லாபமாகும். வாகனுதிகள் உண்டாவது, முத்து ரத்னுபரணப் பிராப்தியாகும். கிரய விக்ரய தன லாபாதிக மேற்படுவது.

புதனை சனி கூடினுலும், பார்த்தாலும் பூமிகளும், விளை பொருளான தானிய நாசமாகும். திடீரென்று கலக மேற்படுவது, தனக்கு சமான ஜனங்களுக்கு பீடையாம் என்பது.

புதன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், இருந்து சுப கிரகங்களுடன் கூடினுல் பந்து மித்திரர்களுடன் சமானமாக கூடி இருப்பது, எடுத்த வேலைகளெல்லாம் சித்தியாவதும், க்ஷேத்திரங்களும், கிரகங்களும் விசேஷமாகும். விசேஷ நூதன வஸ்திராபரணங்கள் கிடைக்கப் பெறுவது. ராஜாங்கத்தில் உத்தியோக அதிகாரத்தினுல் பாக்ய விருத்தி யுண்டாவது.

புதன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களி லிருந்து பாபகிரக சம்பந்தம் பெற்ருல், தாரா, புத்திராதிகளுக்கு பீடையாம். ஸ்தான நாசமும், ராஜாக்களால் பயமேற்படும். வியவகாரங்களினுல் பயமாகும். எண்ணிய காரியங்களினுல் தன நாசம், காரிய விக்னமுண்டாகும்.

புதன் 2, 7-மிடங்களி லிருந்தால் தேக பாதையும், மனோ துக்க முமாகும். இந்த தோஷ நிவர்த்திக்க, சூரியனை பிரார்த்தனை செய்து, குதிரை தானம் செய்து, விஷ்னு ஸஹஸ்ர நாமம் பாராயணம் செய்தால், சர்வ சம்பத்கரமும், சௌக்யமும், உண்டாய் சர்வ பாபாரிஷ்ட தோஷங்கள் நாசமாகு மென்பது.

## செவ்வாய் தெசையில் கேது புக்தி மீ 4-நாள் 27-க்குப் பலன்.

கேது லக்னத்திற்கு கேந்திர கோணங்களிலாவது, 3-11-மிடங்களிலாவ திருந்தாலும், உச்சராசியிலிருந்தாலும், ஸ்வல்ப சௌக்கியமும், ஸ்வல்ப லாபமுமாகும். வரவுக்கு மிஞ்சின செலவு நேருமாம். புக்தி முதலில் உபாய சௌக்யம் உபாயமான பூமி கிடைப்பது, பிற்பாதியில், திரவிய லாபமும், விசேஷ சௌக்யமு முண்டாகும். ராஜ ஸன்மானம் கிடைப்பது. சகோதராதி வர்க்கங்கள் சௌக்கியமாவார்கள். தான் ராஜாங்கத்தில் அதிகாரத்தை செலுத்தி அதனால் பொருள் பெறுவது, தீர்த்த யாத்திராதி பலன்கள் கிடைப்பது. குருவையும், பிராம்மணரையும் பூஜிப்பது, தேவஸ்தல தெரிசனம் கிடைக்குமாம். தீக்ஷை பண்ணிக் கொண்டு யாகயஞ்யாதிகளை செய்வது, செய்விப்பது மான சத்கிரியாதிகளை நடத்தி கீர்த்தி பெறுவதாகு மென்பது.

கேது லக்னத்திற்கு 6,8,12-மிடங்களிலும், நீச ராசியிலும் சத்துரு ராசிகளிலுமிருந்து புக்தி நடந்தால், விஷங்களினாலும், சோரர்களினாலும் அக்நியாலும், சதா ஒருவரிடத்தில் போராடும் கஷ்டத்தினாலும், துக்கத்தை அடைகிறது, எந்த வேலையையும் தாமஸமாக செய்வது, தூங்கி கொண்டே சோம்பலோடு இருப்பது, தாரா புத்திரர்களுக்கு அம்மையாலும், ஏவல் சூனியத்தினாலும், பிசாசினாலும், பீடையுண்டாகும். தனக்கு ஆப்தமான சினேகிதர்கள் விரோதப்படுவதுமாகும். இதராளிட உதவியை வேண்டுகிறது, தன் இருப்பிடம் விட்டு வேறே கிராமம் அல்லது அசல் வீட்டில் குடியிருப்பது, சுமங்கலியான ஸ்த்ரீயினால் கலகமே விளையும் என்பதாம். தனக்கு திருட்டு புத்தி யுண்டாகும். அவமானமும், அபக்யாதியுமாம்.

கேதுவை சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ராஜாங்கத்தில் தண்டனை அபராதமடைவதாகும். திருட்டுத்தனத்தினால் பாதையை அடைவது தலைநோக்காடு, ஜுரங்களினாலும் பீடிக்கப் படுவதுமாம்.

கேதுவை சந்திரன் கூடினாலும் பார்ததாலும், மாதாவுக்கு கஷ்டமும், மனசுக்கு விசனமும் யேற்படும் அகால போஜன மருந்துவது, மித்துருக்களும், பந்துக்களும் விரோதமாவார்கள்.

கேதுவை செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் தேகத்திற்கு ரோக முண்டாகும். மனசுக்கு சஞ்சல மேற்படும். சர்வ ஜனங்களும் கலகம் செய்வார்கள், சத்துருக்களினால் பீடிதமாகும்.

கேதுவை புதன் கூடினாலும், பார்த்தாலும் அஸ்திர சஸ்திராதி பிரயோக பழக்கமாகும். கையினால் சித்திரம் எழுதுதல், புஸ்தகங்கள் எழுதுதல், ஒருவருக்கு ஓதுவிக்கும் உபாத்தியாயராவது, அல்லது லா சட்டங்களினால் பேசும் திறமையை யுடையவனாகவு மாவதும், கணக்குகள் எழுதுவதும்.

கேதுவை குரு கூடினாலும், பார்த்தாலும் புத்திரப் பிராப்தியும், அதிக சுகமுமாகும். தனதானிய விருத்தியும், ராஜாபிமான மேற்படுதலும், தான் எத்தனித்த காரியங்களெல்லாம் ஸ்வல்பத்தில் முடிக்கிறது.

கேதுவை சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீ விரோதத்தினால் அதிக கலக மேற்படுவது, தாரநாசமாவது, பூமிதானியாதிகள் நஷ்டமடையும். மாடு, கன்று, காலி, வாகனங்கள் நஷ்டமடைதல், பந்து நாசமும் சித்த பிரமையும் வரும் என்பது.

கேதுவை சனி கூடினாலும், பார்த்தாலும் அடிமை சேவகர்களுக்கு ஹானியாகும். நீசரிடத்தில் அடிமைப்படல், கலகமுண்டாவதும், நீச ஸ்த்ரீ கலகம் விளையுமாம். தேசந்திரிகுதல், அகால போஜனம், ருணபாதையால் பீடிக்கப்படுவது, தன் பொருள்களை இதரர்களுக்கு ஓதுவிப்பது என்பது. தாஸி செலவாகு மென்பதாம்.

கேது தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து, பாப கிரகங்களுடன் கூடினால் சமான ஜனங்களுக்கு அரிஷ்டமும், தாரா புத்திரர்களுக்குப் பீடை, அன்யோன்யமானவாள் விரோதப்படுகிறது, நீச ஸ்த்ரீயினால் கலகம் உண்டாவது. சதா மனதுக்கம், அம்மை வைசூரியால் ரோகபாதை யடைவது. ரணவியாதியால் ராஜ வைத்தியம், பிசாசு, பில்லி, சூன்யத்தினால் ஆடுவது, புத்திர மறிப்பு, சதா விரோத மென்பதாம்.

கேது தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலிருந்து சுப கிரகங்களிட சம்பந்தமாவது பார்வையாவது பெற்றிருந்தால், அதிக ஸௌக்யமும், இஷ்டமான பலாதிகள் கைகூடுதலும், மனோ ஜெயமடைதல், ராஜாபிமானம், ராஜ ஸன்மானம் பெறுதல், தனதானிய விசேஷாதி சௌக்யத் தோடிருப்பதாம்.

கேது 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரண முண்டாகும். இந்த தோஷ நிவர்த்தியாவதற்கு, ஸ்ரீ ருத்திர ஜெபம் செய்து ஆடு தானம் செய்து பிறகு சாந்தி கிரமும் செய்தால் தோஷ நிவர்த்தியாய் ஆயுராரோக்யமாகு மென்பது.

# செவ்வாய் தெசையில் சுக்கிர புக்தி மீ 14-க்குப் பலன்

சுக்கிரன் லக்னத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்சத்திலும், சுவ க்ஷேத்திரத்திலும் இருந்தால் ராஜ்ய பட்டாபிஷேகம் கிடைக்கும், அதிக ஸௌக்யா திகமாகும். யானை, குதிரை வாகனங்களும், அணிபணியாதி நூதன வஸ்திராபரண பட்டு பீதாம்பரங்களும் வந்து குடும்பத்தில் அனுபவிக்க நேரும்.

சுக்கிரன் லக்னாதிபதியுடன் கூடினால் தாரமும், புத்திரர்களும் சுக விர்த்தியா யிருப்பார்கள். ஆயுராரோக்யமும், அயிசுவரிய மதிகமாம். பாக்ய விருத்தியும், மந்திரிக்கு சமானமான புத்தியுடன், குடும்பத்தில் சுப சோபனங்கள் செய்வதான பாக்யவானாகவும், பூமி க்ஷேத்திர விருத்தியுண்டாய், கிணறு, துரவு, நந்தவனம் இவை உண்டாக்கி, உல்லாசத்தோடிருப்பது என்பது.

தெசாநாதன் லாப ஸ்தானத்திலிருந்து, லக்னாதிபதியிட புக்தி வந்தால் புத்திர லாபமும், அதிக சௌக்யமும், யானை, குதிரை சகடாதி வாகனங்கள் நிறைந்திருப்பது, ராஜாக்களிலும், ராஜ உத்தியோகஸ்தர்களாலும், சன்மானம் பெறுவதும், வீட்டில் லக்ஷ்மி கடாக்ஷத்தை பெற்று அதிக அயிசுவரியவானா யிருப்பது என்பதாம்.

சுக்கிரன் லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலுமிருந்தால் ஸ்த்ரீ விரோதமாவது, தாரா, புத்திரர்களுக்குப் பீடையாம். எடுத்த காரியங்கள் விக்னமாகி நின்று விடுகிறது, அதிக பொருள் விரையமாவதாம். சமானர்கள் சத்துருவாக வருகிறது, வாகனாதிகள் விசேஷிப்பதில்லாமல் க்ஷீணிக்கிறது, கிருஷி மூலத்தில் உற்பத்தி செய்யும் தானியங்கள் குறைவாகும், வாகன கோக்களும் நஷ்டமாகிறது, ஸ்த்ரீ மூலத்தில் வருத்த மேற்பட்டு பிராண ஹானியும் நேருமாம். அவமானமாவதுமா மென்பது.

சுயக் கிராமத்தில் அக்னி பீடிதத்தால் பயமுண்டாகி அவ்வித கலகத்தினால் ஸ்தானம் விட்டு தென் திசையில் பிரயாணமாகி, ராஜஸமான ஸ்தரிடத்தில் பகை செய்து கொள்வதும், பின்பு அவர்களிட கோப சாந்தியை பெற்று இஷ்ட பலன்கள் லபிக்கவும், ராஜ ஸன்மானமும், சுக்கிரன் சுபர்களிட சம்மந்த மடைந்திருந்தால், தன லாபமுண்டாய் சௌக்யமாவதாம்.

சுக்கிரன் பாக்ய லாபாதிபதிகளுடன் கூடினால் ரோக நாசமும், பிதா சுகமும், அதிக தன லாபாதிகமாகி சுப விஷயாதி விவாஹ மங்கள காமும், பூமிகள் லாபமுமா மென்பது. புத்திர விருத்தி உண்டாகும்.

சுக்கிரனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் புஜச் சேதம் வருமாம், தன் பத்தினி சரீர நலியில் வருந்துவது, பத்தினியுடன் பரஸ்பர விரோதமாக இருக்கிறதுமாம்.

சுக்கிரனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் கெந்த, புஷ்பாதி நூதன வெளுப்பு ஆடைகளும், முத்து ரத்னாதி ஆபரணங்களணிவது, இதுவரையில் தான் அடையாத பொருளை அடைகிறது, மாதா வம்சம் விருத்தியாகு மென்பதாம்.

சுக்கிரனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் பத்தினி கெற்பம் சின்னப்படும், ஆப்தாளும் நாசமாகிறது, சத்துருக்கள் பாதையையேசெய்து பாதையை அடைவதாம்.

சுக்ரனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் வித்தியாப்யாஸாதிகளைச் செய்கிறது, பந்துக்களுக்கு உபகாரமாகி யிருக்கிறது, சபைகளில் பாட்டுக் கச்சேரி செய்கிறதும், விகடனாகவும், கவிசாதுர்யக்கியானாதிகமாகு மென்பது. சிற்பியாவதுமாம் என்பது.

சுக்கிரனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் தேகாரோக்யமும், அதிக தனார்ஜ்ஜிதமும் உண்டாகும். பண்டிதாளுடன் சகவாஸிக்கிறது, பிராம்மண பிரபுவினால் சுகமும், தனாதி சகாயமுமாகும்.

சுக்கிரனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் இதுவரையில் இருந்த இடம் விட்டு பேருவது, உத்தியோக பங்கம் உண்டாவது, அனேக விதமான சிந்தையை அடைகிறதுமா மென்பது.

சுக்கிரன் தெசானாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலுமிருந்து, சுப கிரக சம்மந்தம் பெற்றிருந்தால் சரீர சௌக்யமாகவும், ஸ்த்ரீ சௌக்யமும், புத்திர விருத்தியும் உண்டாகும். சுய குல பிரபுவால் மகா சுக சந்தோஷ மேற்படும்.

சுக்கிரன் தெசானாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலுமிருந்து, பாபிகளுடன் கூடினால் இந்த புக்தியில் வியாதியும், மனோ துக்கமும், கலகமும், பிராணாபத்து வருவதும், எத்தின காரியங்கள் தடைப்படல், தனச்சேத மாகுதல், ராஜகோபத்தினால் கஷ்டமாகிறது, சத்ரு பீடை, புத்திரர்களுக்கு அரிஷ்டம், தாரப்பகை அல்லது மரணமாகுவது.

பூர்ண சந்திரனா யிருக்கிறதானால் பூர்ண பலனும், இதாராஜ்யாதி பத்தியமும் உண்டாகும். வடக்கு திசையிப் பிரயாணம் செய்து ராஜ தரிசனமும், சன்மானாபிமானமும் அடைவதாகும்.

க்ஷீண சந்திரனாயிருக்கிறதானால் குறைந்த பலனும், தன விரையமுமாகி, தாரா, புத்திராதிகளுக்கு பீடையுண்டாய், ராஜாக்களாலும், சோரராலும், அக்னியாலும் பீடிக்கப் படுவதாகும்.

சுக்கிரன் 2, 7-மிடங்களிலிருந்தால் சரீர பாதையும் வருமாம். இந்த தோஷ நிவாரணத்திற்கு வன துர்க்கையை ஜெபம் செய்து, துர்க்கா தானம் செய்தால் ஆரோக்ய ஐசுவரியாதிக முண்டாகுமென் பது.

## செவ்வாய் தெசையில் சூரிய புக்தி மீ 4-நாள் 6-க்குப் பலன்

சூரியன் லக்னத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங் களிலும், உச்ச ராசியிலும், சுவ க்ஷேத்திரத்திலும், மூல திரிகோண மிவைகளிலிருந்து நடந்தால் தீர்த்த யாத்திரையும், ராஜாபிமானத் தால் தனலாபம் வருவது, சிவ புராணிகமான கதாகாவ்ய பிரஸங்கி தர்வமும், யக்யதான பலங்களை அடைவதும், எத்தின காரியங்க ளெல்லாம் செய்து முடிப்பது, புத்ரோற்பத்தி யுண்டாவது, அதிகசுக சந்தோஷாதிகமாய் மித்திராாலும், பிரபுக்களாலும், சௌக்யமும், தனலாபமும் பெருகுவது, சூரியனிட வாரமாகிய ஆதிவாரத்தில் ராஜ ஸன்மானம் பெற்று நூதன வஸ்திராபரணங்களை அணிவதுமாகும்.

சூரியன் லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும் இருந்து புக்தி நடந்தால் குரோதமும், கலகமும், ஸ்தான நாசமும், ராஜ பயமும், பிதாவுக்கு கர்மம் செய்வது, மனோ துக்கத்தை அடை வதும், ஆப்தமானவர்கள் நாசமடைவது, சமான ஜனங்களிடத்தில் துவேஷிப்பது, பைத்திய ரோகங்களினால் பீடிப்பது, உஷ்ண ஜுரம் பீடிப்பது, ஆலஸ்யமாக இருந்து காரிய நாசமடைவது.

சூரியனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் திரவிய லாப மும், மகா சுகமும், அதிக பிரதாபியான பேரெடுப்பது, ஆரோக்ய முண்டாவது, எடுத்த காரியங் களெல்லாம் சித்தியைப் பெறுவதா மென்பது.

சூரியனைச் செவ்வாய் சம்மந்தப் பட்டாலும், பார்த்தாலும் யுத் தங்களும், சத்துரு பீடையுமாம். ஸ்த்ரீ புத்திருத்குப் பீடையாம். இஷ்ட ஜனங்களுக்கு அரிஷ்டமுண்டாவது, ஞாதிகளுடன் போராட் டம்.

சூரியனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் உத்தமமான ஆயுதங் களையும், தனமும்சம்பாதிப்பதாம். பந்துக்களுக்கு உபகாரமாதல், சபா பூஜிதனாவது.

சூரியனைக்குரு கூடினாலும், பார்த்தாலும் சந்தேகமில்லாமல் புத் திரப்பிராப்தியாகும். ஸ்த்ரீ சௌக்யமும், தனலாபமும் உண்டாகும். ஒரு பிரபு சினேகனாகி சுகமுண்டாகு மென்பது.

சூரியனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் வாகனங்கள் கிடைப்பது, அபூர்வ வஸ்த்துக்கள் பிராப்தியாவது, பூஷணாதிகளுண் டாவதுமாகும்.

சூரியனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் யானை, குதிரை, பசு மாடுகள் நஷ்டமாகும், அடிமைகள் கெடுவர்கள், தாரக் கிலேசம் வரு மென்பது.

சூரியன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடினாலும் சுப சோபனாதிக மாகவே யிருப்பது, வஸ்திராபரணங் களுண்டாவதும், மகா ராஜாவி னால் ஆதரிக்கப்படுதலும்.

கிழக்கு திசையில் பிரயாணம் நேர்ந்து எத்தின காரியங்களெல் லாம் சித்தியாகும். ஸுகந்த சந்தனாதி புஷ்பாலங்கிருத வாஸனைகளை அணிவதாகும்.

சூரியன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலுமிருந்து பாப சம்பந்தமாயிருந்தால் சதா சத்துரு விருத்தியால் மனக்கலக்கமும், மித்துருக்கள் மரணமாவார்கள். ராஜகோபமேவந்து கலகாதிக மாகும். சந்தாபமும், சுரபாதையுமாகு மென்பது.

சூரியன் 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணமாம். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு தாமரை புஷ்பம் தானம் செய்ய தோஷ நிவர்த்தியா மென்பது.

## செவ்வாய் தெசையில் சந்திர புக்தி ஸ்ரீ 7-க்குப் பலன்.

சந்திரன் லக்னத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங் களிமிருந்தாலும், உச்ச ராசியிலிருந்தாலும் கிருகத்தில் கல்யாண வைபவங்களும், சத்திர சாமர பூஷணாதி வஸ்த்திர லாபம் உண்டாவ தாகும். வித்தியா விவேகாதி கத்வமுடையவனாக சதா கீதவாத்யாதி கோஷங்கள் முழங்க நடனவீணைகான விநோத சகிதமாக இருப்பதும், தாரா, புத்ராதி சௌபாக்ய விசேஷமாகுவது, தன்னை எதிர்த்த சத் துருக்கள் அழிவார்களாம். வாகன சஞ்சாரியாய் விசேஷ பூமி கிரா மங்களுக்கு தலைவனாகவும், பூர்வ காலத்தில் பூமியில் மறைத்து வைத் திருந்த புதையல் கண்டெடுப்பதாம். கிருஷி தானியாதி விசேஷ பலிதமாவது, எந்தத் திக்கில் பிரயாணம் செய்தாலும் நினைத்த காரியங் கள் சித்தி பெறுவதென்பதாம்.

சந்திரன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீசராசியிலும் இருந்தால் கிரோரோகம் உண்டாம். சகல பேரோடும் அதிக மனஸ்

தாப மேற்படுவது, அப்பிரியமான போஜனம் உண்பது, இஷ்ட பந்துக்களுக்கும் விரோதமாவது, கிருஷி க்ஷேத்திராதிகள் நாசமடையும், மாதுருவுக்கும், மாதுரு வர்க்கத்தவர்களுக்கும் அதிக கஷ்டம் உண்டாவது, விதவையால் கலகம் யேற்படுவதாம்.

சந்திரனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் பிரபுக்களினால் சுகம் உண்டாகும், அபூர்வ வஸ்த்துக்கள் கிடைப்பது, பத்தினிக்கு நோய் உண்டாம், பந்துக்களுக்கு அரிஷ்டம் வரும் என்பதாம்.

சந்திரனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் தாபத்வமான சுரமடிக்கும், விவாத கலகங்கள் உண்டாகும், யுத்தத்தினால் தோற்டம், பூமிகளினால் கஷ்ட நஷ்டமும் வருமென்பது.

சந்திரனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் விசித்திரமான வீடு கட்டுவதும், வாங்குவதும், பந்துக்களுக்கு சவுக்யமும், வித்யாதி பிரஸங்கத்தினால் ராஜ ஸன்மானம் பெற்று பூஜிக்கப்படுவது என்பது.

சந்திரனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் புத்திரர்கள் விருத்திப்பது, அதிக தனலாபமும், விசேஷ சௌக்யமுண்டாவது, வித்தியாதிக்கத்தினால் கீர்த்தி பெற்று தனலாபம் வருவதா மென்பது.

சந்திரனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீ, புத்திரர்கள் சௌக்யமாம். சமஸ்த்த விஷயாதி ஜெயமடைதலும், வஸ்த்திராபரணங் களதிகமாகும்படி பெறுவதாம்.

சந்திரனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் ஆளடிமைகள் நாசமாம், வீடுவிட்டு பேருவது, கிராமாந்திரமாகுவதும், பூமிகளும் கைவிட்டு போவது, சமான ஜனம் நாசமாம் என்பது.

சந்திரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து, பாப கிரகங்களுடன் கூடினால் சரீர பாதையும், மனஸ்த்தாபமு முண்டாகும். புத்திக்கு சஞ்சல்யமும், ராஜ கலகமும் நேறுவது, யாத்திரை போனாலும், நிஷ்பலமாய் விடுமாம்.

சந்திரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடியிருந்தால் தனலாப முண்டாவதும், நூதன வஸ்திராபரண பிராப்தியாம், புத்திரிகை ஜனனமாவதும், ஸ்த்ரீ பிரீதியாதி சந்தோஷமும், ஆயுர் விருத்தியும், எதிலும் ஜெயத்தை அடைவதாம் என்பது.

சந்திரன் 2, 7-மிடங்களிலிருந்தால் அப மிருத்யு வுண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு துர்க்கா தானம் செய்து சாந்தியை விதிப்படி செய்ய தோஷ நிவர்த்தியாய் சுகாதிகமாகு மென்பது.

# இராகு தெசை ஷை 18-க்குப் பலன்

பொது.

1. அத்யந்த கஷ்டம், புத்தி பிரமம், தார நாசம், மனோ விசாரம், புத்திர மரணம், பிதுருவர்க்க நாசம், தேசாந்திரங்களில் நினைவு, சுற்றத்தார்கள் விரோதம், ஸர்வ காலமும் விஸனமாகவே யிருப்பது.

2. ராகு அதி உச்சபாகத்திலிருந்து தெசை நடந்தால் சுய பந்துக்களைச் சவரக்ஷணை செய்வது, மனோ விலாசமா யிருப்பது, ஒரு முக்ய பட்டணத்திற்கு அதிபதியாவது, சிரேஷ்டமான நினைத்த வஸ்துக்கள் லாபமாக பெறுவது, வாகனாதிகளும், விசேஷ பூமி க்ஷேத்திர ஸமுர்த்தியை உடையதுமாம்.

3. ராகு உச்சபாகத்திலிருந்து தெசை நடந்தால் பூமியை ஆளும் அரசனால் பூஜிக்கப் படுதல், நூதன சிரேஷ்டமான வஸ்திராபரணாதிக லாபமாவது, தன் பத்தினி ஸௌக்ய சந்தோஷமாக யிருப்பது, விவாஹம் நடத்துவது, பொன்னாபரணம் கிடைக்தல்.

4. ராகு அதி மித்ர ராசியிலிருந்து தெசை நடந்தால் விசேஷ சுகம், நூதன கட்டடங்கள், கிராமங்கள் கிடைத்து விருத்தியாவது, தீர்த்த யாத்ரா விசேஷங்களுண்டாவது.

5. ராகு மித்ரு ராசியிலிருந்து தெசை நடந்தால் வித்யா விலாசமாம், சுய பந்துக்களுடன் அனுகூலமாயிருப்பது, பரோபகாரியாம், ரத்ன நகை நாணயங்களுடையது, பட்டு பட்டாவளிகளணிவது, யக்யயாகாதிகளுக்கு தீக்ஷை பெற்று யக்யகர்த்தாவாவது.

6. ராகு சமராசியிலிருந்து தெசை நடந்தால் கொஞ்சம் கஷ்டமும், கொஞ்சம் சுகமும் உண்டாகும், பாதையும் கொஞ்ச முண்டாம், தெசைக் கடைசியில் ஸ்தான நாசம் வருமென்பது மனோ விஸனமாம்.

7. ராகு சத்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் அரசனாலும், ராஜாங்கத்தாராலும் கோபிக்கப்படுகிறது, தனதானிய நாசம், யுத்த பயம் நேருவது, எந்த வேலைகளைச் செய்ய முயன்றாலும் தடையாகி தன விரையமாவது.

8. ராகு அதி சத்ரு ராசியிலிருந்து தெசை நடந்தால் ஸ்தான பேதம், பந்துக்கள் மரணம், தன விரையம், ராஜ கலகம், விஷ ஸர்ப்ப பாதையாம், இஷ்டமான காரியங்களும் கஷ்டத்தினால் நடத்துவது, பலனில்லாமை, அனேகவித வியாதியை அனுபவிப்பது.

9. ராகு நீச ராசியிலிருந்து தெசை நடந்தால் நீசரிட சம்மந்தத்தினால் மனவருத்த முண்டாவது, விதவை ஸ்த்ரீயினால் கலகம்

உண்டாவது, மனசில் அச்சமும், பயமும் அடைவது, சுய பத்தினி களுக்கு கெண்டம், சுக யீன மென்பது.

10. ராகு அதி நீச ராசியிலிருந்தால் மகா பயம் உண்டாகும், தனக்கு சமான ஜனங்கள் நாச மடைவது, நாற்கால் ஜீவன்கள் நஷ்டம் என்பது.

11. ராகு சுபருடன் கூடி யிருந்து தெசை நடந்தால் யுத்தத்தில் தோல்வியில்லாமல் ஜெயத்தை அடைவது, சௌக்யமும், சந்தோஷமு மாகயிருப்பது, உத்யோகத்தினுல் லாபமடைவது, புரங்களுக்காவது, கிராமங்களுக்காவது அதிபதியாம். ராஜாவால் பூஜிக்கப்படுதல், சுய ஜன அனுகூலம் என்பது.

12. ராகு பாபருடன் கூடி தெசை நடந்தால் சதா பாப சிந்தையும், பாப செய்கையும், சுய கிராமத்தை நாசமாக்கி விடுவது, வியாதியையனுபவிப்பது, பிரபுக்களிட கோபத்தை வகிப்பது, மனோ விஸனமாக யிருப்பதாம்.

13. ராகு பாபர் வீட்டிலிருந்தால் பாப காரியத்தையே செய்ய நேரும், தாரா புத்திரர்களுக்குப் பீடை என்பது.

14. ராகுவைப் பாபர்கள் பார்க்க தெசை நடந்தால் சுய குல தர்மத்தையும், கர்மத்தையும் விட்டுவிடுவது, உத்யோக பங்கம் வருவது, சரீராயாசம், திருடராலும், அக்னியாலும், ராஜாவாலும் பீடிக்கப்படுவது.

15. ராகுவை உச்ச கிரகங்கள் சேர்ந்து தெசை நடந்தால் ராஜ்ய லாபமுண்டாகும், தாரா புத்திராதிகளும். வஸ்திராபரணுதி லாபமும் பெறுவது.

16. ராகுவை நீசக்கிரகங்கள் சேர்ந்து தெசை நடந்தால் நீசத் தொழில் செய்து ஜீவிப்பது, அவிகித போஜனம், அவிகித தாரம், சத்துரு, புத்திரரும் சம்பவிப்பதாம்.

17. ராகு தெசை ஆதியில் சுகமும், மத்தியில் அதற்கதிக சுகமும், கடைசியில் தன நாசமும், குருவுக்கும் சினேகிதருக்கும் கெடுதலாமென்பது.

## மேஷாதி 12 ராசிகளில் ராகு நிற்கும் பலன்

1. ராகு மேஷத்திலிருந்து தெசை நடந்தால் மனோ சந்தோஷமும், மங்கள வாத்ய முழக்கமும், பூமிக்கு அதிபதியாவது, அல்லது ராஜாக்களால் பூஜிக்கபடுவது, ஸ்த்ரீபுத்திராதி, மித்ரு பந்துக்களுடன் சௌக்யமா யிருப்பது.

2. ராகு ரிஷபத்திலிருந்து தெசை நடந்தால் பூமி லாபம், தன லாபம், ராஜ பூஜ்யம், பூஷண வஸ்திர லாபங்களும், வித்யா வினயாதிகம், அதிகமான கோ விருத்தியுடையதும், தானியாதிகமாம், விசேஷ லாபத்தையே எப்போதும் அனுபவிப்பதாம். சிரேஷ்டமான வதுஸ்க்கள் சம்பாதிப்பது பொன்னுபரண முண்டாகும்.

3. ராகு மிதுனத்திலிருந்து தெசை நடந்தால் சத்ருவால் பாதிக்கப்படுகிறது, ராஜ பீதியுமாம். ஸ்த்ரீ பாதையை அனுபவிக்கிறது, அதிக கஷ்டம், பந்து விரோத மனஸ்தாப முண்டாவது.

4. ராகு கடகத்திலிருந்து தெசை நடந்தால் சுபாதிக பலன் அடைவது, ராஜ்யாதிபதியாவது, தாரா புத்ர தனங்களுடையதும், விசேஷ பாக்யமும், அதிக ஸௌக்யமும் உண்டாவதும், பூமிகளும், க்ஷேத்திரங்களும் அதிகமாவது, சதா ஜெயத்தை அடைவது, வித்யாதிகமும், சீமானென்று பேர்வாய்ப்பது, நானுவித தானிய லாபம் பெறுவதும், சகல காரியங்களிலும் சித்தி பெறுவது என்பதாம். ஜெய சீலன்.

5. ராகு சிம்மத்திலிருந்து தெசை நடந்தால் பூமி ஆளும் ராஜாவால் கோபிக்கப் படுவது, நிவர்த்திப்பது, தனதானிய நாசத்தை அடைவது, க்ஷேத்திரங்கள், தானியாதி சம்பத்துகள் நாசமாகும் என்பது.

6. ராகு கன்னியிலிருந்து தெசை நடந்தால் ஆபரணுதிகம் உண்டாகும், சிரேஷ்டமான நூதன பட்டு பட்டாவளி வஸ்திராதிகள் தரிப்பது, பூமிக்காசனும், வித்வான்களால் பூஜிப்பது, வாகனங்கள் கிடைப்பது, ஸ்த்ரீ சௌக்யம், புத்திரோற்பத்தி யுண்டாவது, முன்னிட்டு கைவிட்டுப்போன ஜென்ம பூமி லாபமாவது.

7. ராகு துலாத்திலிருந்து தெசை நடந்தால் க்ஷேத்திர நாசம், தன நாசம், கிருஷியினுல் நிஷ்ப்பலமாதல் ராஜாங்கத்தில் பயம், ஸ்தான நாசம், சமான ஜனங்களால் கஷ்டம், பிதாவிற்கு கர்மம், பந்து பீடை என்பது.

8. ராகு விருச்சிகத்திலிருந்து தெசை நடந்தால் ராஜ பூஜிதம், பந்து மித்துருத்வம், அதிக பசு மாடுகள், விசேஷ பூமிகள் உண்டாவது; சத்துரு நாசமா மென்பது, அதிக தனலாபம், யுதத்தில் சத்துரு நாசமாம்.

9. ராகு தனுசிலிருந்து தெசை நடந்தால் பசு பால் காவல் முதலானது நிவர்த்தியாம், சுற்ற விரோதம், மகாபயமும், சத்துருக்களால் கஷ்டம், பிதாவிற்கும், பந்துக்களுக்கும், மரண ஹானியாம்.

10. ராகு மகரத்திலிருந்து தெசை நடந்தால், கிராமாதிபத்யமும், ராஜாங்கத்தால் பூஜிக்கப் படுகிறது, தாரா புத்ராதிகள் சௌக்யம், க்ஷேத்திரங்களும், தனதானிய கோ லாபாதிகமும், பூமி விசேஷமும் உண்டாகு மென்பது.

11. ராகு கும்பத்திலிருந்து தெசை நடந்தால் கஷ்டமும், கடன் படுவதும், சத்துருக்கள் விருத்தி, க்ஷேத்திரங்கள், மாடுகன்று காலிகள் நஷ்டமும், தாராபுத்திரர் அரிஷ்ட மடைவது, இருப்பிடம் நாசமும், சரீர கஷ்டம் உண்டாகும், விஷந் தீண்டுவது என்பதாம்.

12. ராகு மீனத்திலிருந்து தெசை நடந்தால் கஷ்டம் வரும், மனஸ்தாபம், மகாபயம், திருடராலும், அக்னியாலும் ராஜ பாதையை அடைவது, சமான ஜனம் நாசமாம்.

## லக்னாதி 12 பாவங்களில் ராகு நிற்கும் பலன்

1. ராகு 1-ல் நிற்கப் பலன் :—ராகு லக்னத்திலிருந்து தெசை நடந்தால் உஷ்ணமும், சரீர காந்தி குறைவும், இருப்பிடம் நாசமும், சத்ரு விருத்தி; பந்து விரோதமும் வரும்.

2. ராகு 2-ல் நிற்கப் பலன் :—ராகு 2-மிடத்திலிருந்து தெசை நடந்தால் தானிய நாசமும், அதிக கலகமும், மனோ பயமும், அச்சமும், தாரா புத்திரர் நாசமாம். ராஜாங்கத்தில் கோபத்தை அடைகிறது, தன விரையம், நேத்திரத்திற்கு வைகல்யமாம், வாக்கு வாதம் செய்கிறது.

3. ராகு 3-ல் நிற்கப் பலன் :—ராகு 3-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் அதிகமான ஆடையாபரணங்களை அணிவதும், பந்துக்களால் உபகாரமாகும், வித்வான்களாலே பூஜிக்கப்படுதல், ராஜாக்கள் மித்ராவார்கள், நகராதிபத்யமும் வரும், ரத்னலாபமாம்.

4. ராகு 4-ல் நிற்கப் பலன் :—ராகு 4-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் பந்துக்களுக்கு பீடையும், மாதா மரணமும் நேருவது, பூமிகள் நாசம், ராஜாங்க கோபம் உண்டாகும். சமான ஜனங்களுடன் கஷ்டம் நேருவது, கிருஷியினால் நஷ்டம் என்பது.

5. ராகு 5-ல் நிற்கப் பலன் :—ராகு 5-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தார புத்திரருக்கு ஹானி யுண்டாம், திடீரென்று கலகம் நேரும், யத்ன காரியங்கள் நடக்காததும், நஷ்டமடைவது என்பது.

6. ராகு 6-ல் நிற்கப் பலன் :—ராகு 6-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் சத்துருக்கள் நாசமடைவார்கள், சரீர காந்தியும், திடமும் உண்டாகும். ராஜாங்கபிமானம், நினைத்த உயர்ந்த வஸ்த்துக்

களெல்லாம் லாபமாவது, அதிகமான பொன் ஆடையாபரணப் பிராப்தியும், முத்தாபரணங்கள் கிடைப்பதாம்.

7. ராகு 7–ல் நிற்கப் பலன் :—ராகு 7-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் ராஜாங்க பயம், அதிக துக்கம், விவாதத்வம், மனோ பீதி, ஸ்தானம் விட்டு போவது, நூதன தேசம் போவது, தார தோஷம் உண்டாகுவது, நீசரால் பீடை, அதிக மித்துருவானவர் களுடன் பகைக்கிறது, மனதில் வைரத்தையே கொள்வது.

8. ராகு 8–ல் நிற்கப் பலன் :—ராகு 8-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தேகாயாசம் வரும், பந்துக்கள் நாசம், சத்ரு பாதை, கடன்களினால் மனோதுக்கம், ராஜ கோபமடைவது, தார பீடையும் நேரு மென்பது.

9. ராகு 9–ல் நிற்கப் பலன் :—ராகு 9-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தானிய விருத்தியும், தனலாபமும், அதிக தர்மம் செய்கிறது, தர்ம புத்தியாதிகமாவது, பந்துக்களுக்கு உபகாரமாவது, ராஜாக்கள் மித்திரராவது, தீர்த்தயாத்திரை செய்வது, சத்காரியங் களே லபிக்குமாம்.

10. ராகு 10–ல் நிற்கப் பலன் :—ராகு 10-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் சுபங்களும் யக்யயாகாதி கர்மங்கள் நடத்துவது, மந்திர ஜெப சித்தியும், தேவதாராதனமும், பிராமண பக்தியும், ராஜாக் களால் பூஜிக்கப்படுதல், பேரீவாத்ய கோஷாதியுடன் யசஸ்ஸாகவும், அதிக தனம் உள்ளதுமாக சதா தர்ம பத்தினி ஸகிதமாக, க்ஷேத்திர பூம்யாதிகமாக தனதானிய வஸ்திராபரண வாகனாதிகளை பெறுவ தாம்.

11. ராகு 11–ல் நிற்கப் பலன் :—ராகு 11-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் நினைத்தபடிக்கெல்லாம் லாபமடைவது, ராஜாக் களால் பூஜிக்கப்படுதல், பந்துக்கள் உபகாரமாவார்கள், தனதானியங் கள் விசேஷிக்கும், வாகனாதி சமிர்த்தி, வஸ்திராபரண லாபமா மென் பது, வாக்சாத்தியத்துடன் உதாரி வாக்குடையவன்.

12. ராகு 12–ல் நிற்கப் பலன் :—ராகு 12-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் பூமிகள் நாசம், பொருள் நஷ்டம், சமான ஜனங் கள் சோகத்தை அடைவார்கள், ஸ்த்ரீ புத்திரர்களுக்கு பீடையா மென்பது.

வேறு

13. ராகு கேந்திரத்திலிருந்து தெசை நடந்தால் ராஜாக்கள் சினேகம் கொள்வார்கள், வாகனாதி பூஷண புத்திரலாபம், வாக்படுத் துவமுண்டாகும், மனோ விலாஸமாயிருப்பது, க்ஷேத்திரவிருத்தி, தன தானிய விருத்தி யுண்டாகும்.

14. ராகு திரிகோணத்திலிருந்து தெசை நடந்தால் சுபாதிகம் உண்டாகும், க்ஷேத்திரங்களும், தானியங்களும், விருத்தியாவது, நடன ஸங்கீத வாத்ய வினோத வினய சம்பன்னனாவது.

15. ராகு 6, 8, 12-மிடங்களிலிருந்து தெசை நடந்தால் அநேக விபத்துண்டாகும், மாதுரு நாசம், மனோதுக்கம், தாரா புத்திராதி களுக்கு அரிஷ்டம் என்பது.

16. ராகு தெசை ஆதியில் துக்கமும், மத்தியில் சுகமும், யசஸ் ஸுகம், அந்தியத்தில் ஸ்தான நாசம், குரு புத்திரர்கள் மரணமாவார் கள்.

### ராகு ஆரோகணத்தில் நிற்கும் பலன்

17. ராகு ஆரோகண ராசிகளிலிருந்து தெசை நடந்தால் அதிக தனலாப முண்டாகும், தாரம் புத்திரர்களுக்கு சௌக்யம், கிராமாதி காரம் உண்டாவது, பிரபு சினேகிதத்தால் சுக முண்டாகு மென் பது.

### ராகு அவரோகணத்தில் நிற்கும் பலன்

18. ராகு அவரோகண ராசிகளிலிருந்து தெசை நடந்தால் ராஜ கலகமும், மனசுக்கு கிலேசாதிகமாகும், மானபங்கம் வரும், அதிக கஷ்ட நஷ்டங்களும், அதிக ஆபத்தும் விளையுமென்பது.

## ராகு தெசை ராகு புக்தி மீ-32 நாள் 12-க்குப் பலன்

ராகு லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங் களிலுமிருந்து, சுப கிரகங்களுடன் கூடினால் பூமியை ஆளும் அரச னாவது, திரவிய லாபம், பந்து ஸன்மானம், அனேகர்களால் பூஜிக் கப்படுதல், தீர்த்தயாத்திரை பண்ணுவது, சபா பிரஸங்கம் செய்வது, தேவ ஸ்தலங்களுக்கு போய் தெரிசிப்பது, அபூர்வமான வஸ்துக் கள் சம்பாதிப்பது, தாரா புத்திரர்களுக்கு சௌக்யமும், பூமி, கிராம, க்ஷேத்திரங்களினால் கிருஷி மூலத்தில் தானிய விருத்தியும், குல பிரபு வினால் விசேஷ சுகமாகும். குடும்பத்தில் சுபாதிகள் நடத்துவது, கிராமாதிகாரியாவது, ஸ்த்ரீ பிரசங்க கச்சேரி உல்லாசத் தோடிருப் பது, விதவைகளாலே சஹவாஸமும், தனம் வருத்து மென்பது.

ராகு லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து, பாப கிரகங் களுடன் கூடினால் ஸ்த்ரீ விரோதம் நேருவது, அமங்கலிய ஸ்த்ரீகளால் கலகமே விளையும், தாரா புத்திராதிகளுக்கு பீடையும், க்ஷேத்திர நாசம் வருவது, தான் யத்தனித்த காரியங்கள் கெட்டுப்போவது, ஞாதிகளால் கலகம் விளைவது.

ராகுவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ஜன்னி ஜுரங் காணுவது, நாற்கால் ஜீவன்கள் நஷ்டமாகும், சர்வ மனுஷாளுடனே கலகித்து பகையை அடைய நேரு மென்பது.

ராகுவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மாதாவுக்கு ஹானியும், மனசு சதா கிலேசமடைவது, மானபங்கம் வரும், சத் துருக்களால் யுத்தமும், அப ஜெயமும் நேரு மென்பது.

ராகுவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் திடீரென்று கலகம் விளைவது, திருடர் பயம், சத்துரு பாதை, விஷந் தீண்டுவதும், சமான ஜனங்கள் நாச மடைவதாம்.

ராகுவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் சொந்த சுற்றத் தாரால் பீதியுண்டாவது, அபவாதம் நேருவது பயமாக இருப்பது, திடீரென்று ஆச்சரியமாக கலகம் ஸம்பவிக்குமாம்.

ராகுவைக் குரு கூடினாலும், பார்த்தாலும், பிராம்மணர்களால் கலகம் விளைவது, ஸமான ஜனங்களால் கோபிக்கப்படுவது, புத்திர பீடை யுண்டாகு மென்பது.

ராகுவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் தன் பத்தினிக்கு வியாதி நேர்ந்து உபத்ரவிக்கும், வாகனாதிகள் நாசமாவதும், தன தானிய நஷ்டம் என்பது.

ராகுவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் அடிமைகளாலும், தனக்கு கீழ்ப்படிந்தவர்களாலும் கலகம், தனதானிய நஷ்டம் உண் டாம், மனச்சிந்தை, மானபங்கம், ராஜ கலகம், சோரபீதி, தேசாடன மிவைகளுண்டா மென்பது.

ராகு 2, 7-மிடங்களி லிருந்தால் அபமிருத்யு தோஷமாம். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு பாம்பு தானம் செய்து, துர்க்கை ஜெபம் செய்து ராகு ப்ரீதி செய்ய தோஷ நிவர்த்தி என்பது.

## ராகு தெசை குரு புக்தி மீ-28 நாள் 24-க்குப் பலன்.

குரு லக்னத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங் களிலும், உச்ச ராசியிலிருந்தும், சுய க்ஷேத்திரத்தி லிருந்தாலும், மித்துருவுடன் கூடி நவாம்ச லக்கினத்திலும், சுய நவாமிசையிலிருந் தாலும் ராஜாக்களால் பூஜிக்கப்படுவது, அதிக சௌக்கியமும், சத்ரு சம்மாரியாயும், விசேஷ பிரக்யாதியும் நாளுக்கு நாள் சுக்லபக்ஷ சந் திரன் போல் விருத்தியாவது, வாகனாதிகளும், தனதானியமும், வீடு வாசல் விசேஷாதிகமும், கோ, பூமி விருத்தி யுண்டாவது, நிருதி திக்கிலாவது, மேற்கு திக்கிலாவது பிரயாணம் போவது, அவ்விடத்தில் ராஜ தெரிசனம் கிடைப்பது, எத்தனித்த காரியங்க

ளெல்லாம், சித்தியாக்கி கொண்டு சுய தேசம் திரும்பி வருவதும், பிராம்மண உபகாரமும், தீர்த்தயாத்ராதி புண்ய பலனுண்டாவது, கிராமம் வாங்குவது, வாகன லாபம், தேவ பிராம்மணர்களை பூஜிப்பது, புத்திரோற்பத்தி, நித்தியம், இஷ்டான்ன போஜனம் அருந்துவது.

குரு நீசமானாலும், அஸ்தங்கத தோஷமடைந்தாலும், சத்துரு ராசியிலாவது, 6, 8, 12-மிடங்களிலாவதிருந்து, பாபிகளுடன் கூடியாவது, பார்வையை பெற்றுவதிருந்தால் தினமும் பாப சிந்தையும், பாப செய்கையுமா யிருத்தல், தன தானியங்கள் விரையமாவது, புத்ர பீடையும், அதிக பயமும், உண்டாவது, துரோகாதிகமும், ராஜாங்கத்தில் விரோதப்படுகிறது, வஸ்து வாகனாதிகள் நஷ்டமாவது, ஸ்தான பேதம், மனோ வியசனம் இப்படியாக பாப பலத்தையே சந்தேகமில்லாமல் அடைவதாகும்.

குருவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ராஜாவால் கலகம் விளைவது, கைப்பொருள்கள் விரையமாய் விடுகிறது, சகலரிடத்திலும் மனஸ்தாபம் வருவது, ஸ்தான நாசமும் உண்டாகும்.

குருவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் வஸ்திராபரண லாபமுண்டாவது, வெள்ளைநிற குதிரை வாகனம் கிடைப்பது, விசேஷ லாபமும், ராஜ ஸன்மானமும் கிடைக்கும் என்பது.

குருவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் பயித்திய வியாதி யுண்டாகும். உயர்ந்த ஸ்தானத்திலிருந்து பூமியில் விழுவதும், ரெணவியாதி யுண்டாய், கத்தியால் அறுக்க நேருமாம் என்பது.

குருவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் வித்யாப்யாசம் செய்வது, அழகான நூதன வீடுகள் கிடைப்பதும், விஷ்ணு பக்தியும், சதா வேதபாராயணமும், செய்வதாம்.

குருவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் நூதன வஸ்திராபரணங்களணிவதும், வாகனமும், பல்லக்கும் ஏறுவது, இஷ்டசித்தி யுண்டாவதாம்.

குருவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் தாஸி மூலத்தினாலும், அடிமைகளாலும், டம்பங்களாலும் தனம் விரையமாகுமாம், சதா சத்துரு விருத்தியும், மனஸ்தாபமும், தாயாதி ஜனங்களினால் பகை உண்டாகும் என்பது.

குரு தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலுமிருந்து சுப கிரக சம்மந்தமா யிருந்தால் தனலாபம் விசேஷிக்கும், புத்திரோற்சவமாகிறது, சந்தோஷானந்த மனஸுடனிருப்பது, சுய குல பிரபுவினால் அதிக சுகமாகும், க்ஷேத்திர தானிய

விருத்தியும், சிவ பக்தியுட னிருப்பது, யாத்திரையினுல் காரிய சித்தி யுண்டாவது, இஷ்டப்படிக்கெல்லாம் ஒரு பிரபுவினுல் சகாய சுக முண்டா மென்பதாம்.

குரு தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து பாபிகளு டன் கூடினுல் புத்தி வைகல்யமும், தார புத்ரர்களுக்கு பீடையாகும், எடுத்த வேலை நாசமாகும், சர்வ ஜனங்களால் கலகம் விளையுமாம், ராஜ கோபம், திரவியங்கள் நாசமும், பிராம்மணரால் கலகமும் விளையுமென்பது.

குரு 2, 7-மிடங்களிலிருந்தாலும், அந்த அதிபதிகளுடன் கூடி னுலும் அகால மரணமுண்டாம், இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு 100 ருத்திர ஜெபம் செய்து, பொன் தானம் செய்தால், அபமிருத் துயு தோஷம் நிவாரணமாகும்.

## ராகு தெசையில் சனி புக்தி மீ 34 நாள் 6-க்குப் பலன்

சனி லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங் களிலும், உச்ச ராசியிலுமிருந்தால் கலகம், ராஜதுவேஷம், பந்து நாசம், சமான ஜனப்பகை, நாற்கால் ஜீவன்கள் நஷ்டமாகும், சத்ரு விருத்தி, தார புத்திரருக்குப் பீடை, திடீரென்று கலகம் நேருவது, ஸ்தான நாசம், உண்டாவது, யாத்திரையில் காரிய விக்னம், பந்துக் களினுல் கலகம், நீசரிடத்தில் சேவகம் பண்ணுகிறது, அதிக கஷ் டத்தை அனுபவிக்கிறது, தன் குல பிரபுவினுல் கலகம் நேருவது, தன் வாரமான சனிக்கிழமையிலும், புக்தி கடைசியிலும் தேக ஸௌக்ய பலனுமென்பது.

சனி லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களில் பாப சம்பந்தமா யிருந்தால் இஷ்டபடி பலன்கள் கூடுதல், கொஞ்சம் கஷ்டமும், கொஞ்சம் சுகமும், ஆதியில் ஸௌக்யம், தனப்ராப்தியும், ஆளடிமை வர்க்கங்கள் விருத்தியாவது, தானியாதி தன விருத்தியும், பூமி கிரா மம் விருத்தியாவது, சூத்திர பிரபுவினுல் சுகம் உண்டாகும், புக்தி அந்தியத்தில் திரவிய நாசம், பிராமண கஷ்டமும், ஸ்த்ரீ புத்ரவர்க்க பீடையும், ஞாதிகள் சத்துருவாய் விடுவார்கள்.

சனி சுப கிரகத்துடன் கூடி லக்னத்திலாவது, சுய நவாமிசையி லாவது, 10-மிடத்தில் காரியாதிபதியுடன் கூடியிருந்தாலும் தாரா புத்திரர்கள் விருத்தி, புக்தி ஆதியில் திருடர் பயமும், விஷத்தினுலும், சஸ்திரங்களினுலும் அபாயமாகும். பிற்பாடு ஸௌக்யமும், அதிக தனம் உண்டாவதும், கீர்த்தி புருஷனுகுவதாம்.

85 , 86 pages missing in book

புதனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் தனதானியாதி சம்பத்துகள் விருத்தி, வாகனங்களும், ஆடை யாபரணாதிகளும், தண்டிகை யுடையதும், இஷ்ட சித்தியை அடைவதாம்.

புதனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் அடிமைகள் கெடுவார்கள், பூமிகள், விளைவு தானியங்கள் நஷ்டமாகும், சர்வ ஜனங்களாலும் கலகம் விளையும்.

புதன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடினால் அனேக திரவிய லாபம், ஸ்த்ரீ புத்ரர்களும், பங்காளிகளும் விசேஷிப்பார்கள், சத்ரு நாசமாம், பசு மாடுகள், தானியாதிகள் விருத்தியாகும், சுகாதிகமா மென்பது.

புதன் தெசாநாதனுக்கு, 6, 8, 12-மிடங்களி லிருந்து, பாப கிரகங்களுடன் கூடினாலும், நீசக்கிரக சம்மந்தமானாலும் பாப எண்ணமும், பாப செய்கையும், மனோ விசனமும், உத்யோக பங்கம், ஆலஸ்யம், ஸ்தான நாசம், மகா பயமும், அகால மரண பயமும் நேரும், இமிசையையும், தரித்திரத்தையும் அனுபவிப்பது.

புதன் 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் நேரும், இந்த தோஷம் நிவர்த்தி யாவதற்கு விஷ்ணு மந்திரம் 1000-ம் ஜெபித்து ஸ்ரீ மூர்த்திதானம் செய்து சாந்தியை செய்ய அரிஷ்ட நிவர்த்தியாகும்.

## ராகு தெசையில் கேது புக்தி மீ 12 நாள் 18-க்குப் பலன்

கேது லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலு மிருந்தால் வெள்ளை குடை உண்டாவதும், வெள்ளை குதிரை வாகனம் கிடைப்பது, மகாராஜாக்களால் ஆதரிக்கப்படுவது, இஷ்டப்படிக் கெல்லாம் சித்தியாவது, தாரா புத்ராதிகள் சௌக்யமாவார்கள், யுத்தத்தில் ஜெயமடைவதும், கல்யாணாதி சுப காரியங்கள் அதிகமாவது, அதிக தன தானியாதிகள் வீட்டில் நிறைவது, பெண்ணுக்கு கல்யாணம் நடத்துவது, திருடரால் பொருள் வரும், மணி, மந்திரம், அவுஷதம் கிடைப்பது, இஷ்டப் படிக்கெல்லாம் சித்தியாவது.

கேது புக்தியில் புத்திபிரமம், ராஜ துவேஷம், வாத ஜுரமடித்தல், க்ஷுத்திர தேவதைகளாலும், சூனிய மந்திரங்களினாலும், வியாதி களினாலும் பீடிக்கபடுவது, தாரபுத்ராதிகள் ரோகமனுபவித்தல், கால் நடைகள் நாசமாம்.

கேதுவை வாகனாதி கூடினால், வாகன சித்தி, சுப கிரகம் கூடி

ஞலும், பார்த்தாலும் புத்திரலாபமும் அதிக சுகமுமாம், ராஜ யோக மனுபவித்தல் சர்வ சம்பத்துகள் லாபமாகும் என்பது.

கேது லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களிலிருந்தால் மரணம் நிச்சயம்.

கேது 2-ல் இருந்தால், விஷம் தீண்டும், 3-யிருந்தால் அஜீரண மாம். கேது 9-ல் இருந்தால், பிதா மரணம். 4-ல் இருந்தால் தாய் மரணம். கேது 3, 6, 11-மிடத்திலிருந்தால் அதிக ஸௌக்யமும், தனலாபமுமாம்.

கேது உச்சமாயிருந்தால் ராஜ்யாதிகாரம் செய்வன், தன தானியாதிகள் விசேஷிக்கும், நல்ல ஆடையாபரண வாகனுதிகள், கிருஹத்தில் பசு பால் கறவல் உண்டாவது.

கேது லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும் இருந்தால் சத்துரு விருத்தி, திருடர் பயம், நெருப்பு கெண்டம் உண்டாவது, தரித்திரத்தையும், பயிர் பலித குறைவு, சமான ஜனங்கள் அரிஷ்டம், பிரபு விரோதம், ஸ்தான நாசம் வரும், விதவைகளால் கலகாதிகம் நடக்கும், தன நஷ்டம் உண்டாகும் என்பது, குல பத்தினியும், புத்திரரும் நாசமடைவது, பூமிகள், தானியங்கள் க்ஷீணமடைவது.

கேதுவைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும் விஷஜுரமடிக் கிறதும், ராஜ விரோதம், தேக பீடை, ஸ்தான நாசம், புத்தி சஞ் சலமாம்.

கேதுவைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் மனஸ்தாப முண்டாகும், நீசரால் கலகம், விதவா ஸ்த்ரீயினுல் கலகமாகும்.

கேதுவைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் கிராணிபேதி யும், க்ஷயரோகமுமனுபவிப்பது, தாழ்ந்த ஜாதியால் கஷ்டம், தாயாதி ஜன பீடையாம்.

கேதுவைப் புதன் கூடினுலும், பார்த்தாலும் மாமன்மார்கள் நாசமாம். பந்து விரோதம், சினேகமாயிருக்கிற பிரபு விரோதமா மென்பது.

கேதுவைக் குரு கூடினுலும், பார்த்தாலும் தாரா, புத்ராதிகள் பீடிதமடைவது, சரீர பீடை, தன நாசம், பிராம்மணுளால் பயமேற் படுவது.

கேதுவைச் சுக்கிரன் கூடினுலும், பார்த்தாலும் ஸ்த்ரீ வியாதி பயத்தினுல் ஆபத்தை அடைவது, ஸ்த்ரீ மூலத்தினுல் கலகமும், வஸ்திராபரண ஈனமாம், பெண்கள் மூலத்தில் பொருள் விரையம் என்பது.

கேதுவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீ புத்திருக்கு பீடையுண்டாகும். சமான ஜனங்கள் சோகத்தை அடைவதும், நீசரிடத்தில் அடிமையா யிருப்பதும், பயப்படுதலுமாம்.

கேது 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணமாம், இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சர்ப்பதானம் செய்யவும்.

## ராகு தெசை சுக்கிர புத்தி மீ 36-க்குப் பலன்

சுக்கிரன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், உச்சத்திலும், ஆட்சியிலு மிருந்தால் ராஜ்பாதிகார மும், அதிக சௌக்யம், யானை, குதிரை, பட்டு பீதாம்பரங்கள் நிறைந்திருக்கிறதுமான அயிசுவரியமும், வித்தியாதிகம், வினோதக் கேள்வி, நடன சங்கீத பிரியமும், ஸ்த்ரீ சௌக்யம், புத்திரவிருத்தி, கல்யாணம் நடத்துவது, அபூர்வமான வஸ்த்துக்கள் கிடைப்பது, அதிக ரத்னாபரண லாபம் உண்டாவது, சுய குல பிரபுவினால் சௌக் யமடைவது.

ராஜ்யாதிகாரம் பெறுவது, ஸுகந்த பரிமளாலங்கார புஷ்ப சயனமும், சௌக்யமுடைய வாகனங்கள் லபிக்கப் பெறுவதா மென்பது.

சுக்கிரன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலு மிருந்தால் ஸ்த்ரீ விரோதம், வாகனாதி பசுக்கள் நஷ்டம், பெண்டு களால் விவாதமும், கலகமும், எத்தனித்த காரியங்களெல்லாம் நாசமடைவதாம், சமான ஜன கோபங்கள் உண்டாவது, நாற்கால் ஜீவன்கள் நஷ்டமாவதும், யுத்தத்தில் சத்துருவால் பயமாகும், யாத் திரையில் காரிய விக்னம், தாரா புத்திரர்களுக்கு கஷ்டம், சதா ஆபத்தை அடைவது, புத்தி பிரமையாம்.

சுக்கிரனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீ மூலத்தில் தன விரயம், சுயகுல பிரபு விரோதம், சர்வ ஜனங்களாலும் கலகம் உண்டாகும்.

சுக்கிரனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் பிரதிதினமும் பலகாரத்துடனே போஜனம், மாதுரு வம்சம் விர்த்திக்கும், சத்துரு ஜெயமாம்.

சுக்கிரனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் தர்க்க சாஸ்த் திரம் பயிர்ச்சி, பிரபு விரோதம், எத்தனித்த காரியங்கள் கெடுதி ஏற்படும்.

சுக்கிரனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் வேத சாஸ்திரங் கள் வாசிக்கும் எண்ணமும், அதிக சௌக்யமும், கிரகத்தில் கல் யாணமும், பந்துக்களுக்கு இஷ்டமாக இருப்பது.

சுக்கிரனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் புத்திர புத்திரிகைகள் உண்டாவது, வீட்டில் கல்யாணங்கள் நடத்துவது, சரீராரோக்யமும், விசேஷ சுகமுமாம்.

சுக்கிரனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் அடிமைகள் விரோதப்படல், சிநேக ஜனங்களும் விரோதம், தேச தேசாந்திரங்களுக்கு போவது.

சுக்கிரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடியிருந்தால், நூதன வீடு கட்டடம் செய்வது, விசேஷ பூமிகளுண்டாவதும், இஷ்டமான வஸ்துக்கள் பிராப்தியாவது, தாஸி வேசிகளுடன் கூடுவது, தன் வீட்டில் தானிய விருத்தி அதிகமாகும், அதிகமாக ரத்னாபரணங்களுடைத்தாதல் என்பது.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களில் நீச ராசியிலிருந்து, பாப கிரகங்களுடன் கூடினாலும், பார்க்கப்பட்டாலும் ஸ்த்ரீ மூலத்தில் தன விரையம், தனதானிய வருத்துகள் இல்லாமையும், பெண்டுகளுடன் போராடுவதும், அதிக பயமுமாம். பெண்டு பிள்ளைகள் மரணம் அல்லது விட்டுப் பிரிதல், பூமி நாசம், ராஜாங்க பயம், வயிற்றுவலி, தலை நோய், கண் பார்வை மங்கல், மனோ விஸனமென்பதாம்.

சுக்கிரன் 2, 7-மிடங்களி லிருந்தால், அகாலமரணம் நேருமாம். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு, துர்க்கை ஜெபமும், துர்க்கை தானமும், செய்ய தோஷ நிவர்த்தியாகி சுக மடைவதாகும்.

## ராகு தெசையில் சூரிய புக்தி மீ 10-நாள் 24-க்குப் பலன்

சூரியன் உச்சத்திலும், ஆட்சியிலும், கேந்திரத்திலும், 4, 9, 11-மிடங்களிலு மிருந்து, சுப கிரகங்களுடன் கூடினாலும், பார்த்தாலும் ராஜ சன்மானமும், கீர்த்தியும், அல்ப சௌக்யமும், சுபமும், அசுபமும், சுவற்ப கிராமத்திற்கு அதிகாரியாதல், தாரா புத்ரர்களுக்கு சந்தோஷமுமாம்.

சூரியனை லக்னாதிபதியாவது அல்லது பாக்யாதிபதியாவது கூடி குரு சந்திரர்கள் பார்த்தால் ராஜ்யாபிஷேக மாகிறதும், அல்லது ராஜாக்களால் அபிமானம் கிடைக்கிறது, வெகு லாபம் பெறுவது, வெள்ளை குதிரை வாகனம் கிடைத்து தேச யாத்திரை செய்வதும், ராஜாக்களால் பூஜிக்கபெற்று லாபத்தை அடைவது, மனோ இஷ்டப்படி நிறைவேறுவதும்.

சூரியன் உச்சமாகவும், இரு பார்சுவங்களில் நிற்கிற கிரகங்கள்

பலவான்களாகவு மிருந்தால் ஸ்த்ரீ புத்ருடன் அதிக வைபவத்தோடும், ஜனங்களுக்கு நாயகனுகும், அதிகார முடையதாம்.

சூரியன் லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும் இருந்தால் சரீர ரோகமும், சமான ஜனங்கள் நாசம், இடம் பெயரல், ராஜபயம், கலகத்தால் மனவிசனமாகுவது, நெருங்கின பந்துமரணம், சண்டையில் பிராணுபத்து நேருவது, சினேகிதர்கள் சத்ருக்களாகிறது, எத்தன காரியங்கள் தடையாய் விடுவது.

சூரியனைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் அன்ன தானம் செய்வதாகும், சமான ஜாதி பிரபுவினுல் சன்மானம் பெருவது, வஸ்திரா பரணங்கள் சித்திக்கும் என்பது.

சூரியனைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் இதர ஸ்த்ரீயால் கலகம் விளையும், விஷத்தினுலாவது, ஆயுதங்களினுலாவது, அக்னியாலாவது பாதை வரும், சகோதர நாசமாவார்க ளென்பது.

சூரியனைப் புதன் கூடினுலும், பார்த்தாலும் நூதன வஸ்திராபரணங்கள் பிராப்தி, சதா பந்துக்களுக்கு உபகாரியாவது, பசுமாடு தானியாதிகள் விசேஷிப்பது.

சூரியனைக் குரு கூடினுலும், பார்த்தாலும் வேத சாஸ்திரங்கள் பயிர்ச்சியாம், யக்ய தீக்ஷை பெறுவது, சபைகளில் பிரஸங்கிப்பது, குரு தேவதாராதன பிராம்மண பூஜையும், செய்வதாகும்.

சூரியனைச் சுக்கிரன் கூடினுலும், பார்த்தாலும் மாணிக்காபரணங்கள் கிடைக்கும், அபூர்வமான வஸ்த்துக்கள் பிராப்தியாம், சினேகிதமான பிரபுவினுல் சுகமடைய நேரு மென்பதாம்.

சூரியனைச் சனி கூடினுலும், பார்த்தாலும் அனேக ஆளடிமைகள் விருத்திக்கும், க்ஷேத்திரங்களினுல் பலிதக்குறைவு, தாழ்ந்த குலஸ்தரிடத்தில் உத்யோகம் செய்வது.

சூரியன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுப கிரகங்கள் கூடினுலும், பார்த்தாலும் தனலாபமே அதிகரிக்கும், ராஜஸன்மானம் கிடைப்பது, வாகனங்கள் கிடைப்பதும், வித்யா வினேத ஸங்கீத ஜெயத்வம் கீர்த்தியினுல் விசேஷமாவது, பிதுர் வர்க்கத்தார் விருத்திப்பது, பிரபாவத்வமும், யசோபலாதிகமாவது, நூதன வஸ்திரங்களும், ஆயுதங்களும், சம்பாதிப்பது, அதிகாரத்தினுல் தனம் பெறுவத்தாம்.

சூரியன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாப கிரகங்களுடன் கூடினுல் திரவிய நாசம், ஸ்தான பேதம், வாகனுதிகள் நஷ்டம், மான பங்கம், மனக் கிலேசம், ஸமான ஜனுரிஷ்டம், சத்ருக்களால் பீடையும், சதா ஆபத்துமாம்.

சூரியன் 2, 7-மிடங்களி லிருந்தால் அகால மரணம் வரும்,

இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சூரிய பிரார்த்தனையும், எள்ளும், தாமரை புஷ்பமும், தானம் செய்தால் சர்வ தோஷமும் நாசமாகு மென்பது.

## ராகு தெசையில் சந்திர புக்தி மீ 18 க்குப் பலன்

சந்திரன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், உச்ச ராசியிலுமிருந்தால், பூர்ண சந்திரனானால், பூர்ண பலனும், மத்திய சந்திரனானால் மத்தியம பலனும், சர்வ காரியங் களும் ஜெயமாவது, கல்யாணாதி சுபங்கள் நடத்துவது, அபூர்வ மான வஸ்த்துக்கள் கிடைப்பது, இஷ்டமான ஆடையாபரணாதி களணிவது, மனோ உல்லாசம், மகா சௌக்யம், நல்ல கீர்த்தியைப் பெறுவது, பத்தினி சௌக்யமும், புத்திர பிராப்தியும், பந்துக்களுக்கு உபகாரமும், இஷ்டமான பிரபுவால் சௌக்யம், கோவிருத்தி, மாதுரு வம்சம் விருத்தியும், புத்திர புத்திரிகைகள் ஜெனிப்பது.

சந்திரன் லக்னத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலு மிருந்தால் மாதுரு நாசம், பிரபு மனஸ்தாபம், பூமி விரையம், மாடு கள் நஷ்டம், தனதானியங்கள் நாசமாகும், பெண்டாட்டி போராட் டம், கலகம், சம பந்துக்களுக்கு பீடை, அதிக நெருங்கின பந்து விரோதமும், வித்யா ஹீனம், கீர்த்திக்கு பங்கமாம், தான் எத்த னித்த காரியங்களெல்லாம் தடையாகும்.

சந்திரனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ராஜாங்கத்தால் பீதியை அடைவது, தாப ஜுரமடித்தல், ஸ்தான பேதம், மனோ வியஸனமாம்.

சந்திரனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் சஸ்திரங்களி னால் சேதிப்பது, சமான ஜனங்களுக்கு பீடை, அகால மிருத்யு பயமும் உண்டாகும்.

சந்திரனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் வித்யாதிகத்தினால் கீர்த்தியும், ஜெயமும், இஷ்டப் பொருள்கள் லாபமாவது, எத்தன காரியங்கள் சித்தியாகு மென்பது.

சந்திரனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் தனலாபமும், புத்திர விருத்தியும், கெஜ வாகனம், பசு விருத்தி, குதிரை, குடை யுடைய தும், வஸ்திராபரணங்கள் மிகுதியாவதும் என்பதாம்.

சந்திரனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீ சௌக்ய சுகாதிகமும், பந்துக்கள் கொண்டாட்டமும், பிரபு சினேகம், எத்த னித்த காரியங்கள் அனுகூலமாம்.

சந்திரனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் பசுமாடு, எருமை மாடுகள் நஷ்டமாகும், இஷ்டமானவர்கள் விரோதமாவதும், அனேக வித மூலத்தினால் பொருள் சேதமாகு மென்பது.

சந்திரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும் சுப கிரகங்களுடன் கூடியிருந்தால் அதிக ஆடையாபரண சம்பவம், விசித்திரமான வஸ்திரங்கள் கிடைப்பதும், அனேக வித மூலங்களினால் தனலாபம் வருமென்பதாம்.

சந்திரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலு மிருந்து பாபிகளுடன் கூடினல் பிராண ஹானி வரும். சத்துருவாலும் ரோகத்தாலும், இமிசையை அடைவது, மான பங்கமும், கலகமும், வயிற்று வலியுமாம். நாற்கால் ஜீவராசிகள் நஷ்டம், தனதானியங்கள் நஷ்டமுமாமென்பது.

சந்திரன் 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் வரும் இந்த தோஷ பரிகாரத்திற்கு மிருத்யுஞ்ஜய ஜெபம் செய்து, நெருப்பு தானம் செய்ய இஷ்ட சித்தியாகு மென்பது.

## ராகு தெசை செவ்வாய் புக்தி மீ-12 நாள் 18-க்குப் பலன்.

செவ்வாய் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், உச்ச ராசியிலும், சுபருடன் கூடியும், அமிசத்தில் சுபசகிதனுக இருந்தாலும் விசேஷ பூமி, கிராமாதி பத்யம், தானியாதிகம், அதிக ஆடை ஆபரணுதிகள் வீடு நிறைந்திருப்பதும், முத்துக்களினல் செய்தநகைகளும், இஷ்டப்பட்ட வஸ்துக்கள் கிடைக்க பெறுவது, யுத்த ஜெயமடைவது, கீர்த்தி வகிப்பது, அனேக திரவியங்கள் லாபமாக சம்பாதிப்பது, கூடப்பிறந்த சகோதரர்களுக்கு க்ஷேமகரமும், தாரா புத்ராதிகள் விருத்தியாவார்கள்.

செவ்வாய் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீசராசியிலுமிருந்தால் அபவாதம் வருவது, விசேஷ கஷ்டமனுபவித்தல், கீர்த்தி பங்கம், பங்காளி வழக்கு, திருடரால் பொருள் சேதம், மித்திரர்களும் அல்லது சமீபமான பந்துக்களும் விட்டுப் பிரிவது, எல்லோராலும் கலகமனுபவித்தல், ஸ்தானம் பெயர்ந்து போக எண்ணம் கொள்வது, தான் செய்கிற காரியங்களெல்லாம் நஷ்ட மடைதலாம், கிரஹணி பேதி, க்ஷய ரோகம், சுவாச காசம் இவைகளால் பீடை என்பது.

செவ்வாயைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும் உஷ்ண ஜுரம் அடித்து அபாயம் நேருவது, யுத்தத்தினல் ஆபத்துகள் சம்பவித்தல், சமான ஜன நாசமாம்.

செவ்வாயைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் பிரபுவால் சுகமாகும். கல்யாணுதி சுபங்கள் நடத்துவது, பூமி கிராமங்கள் விசேஷிப்பது.

செவ்வாயைப் புதன் கூடினுலும், பார்த்தாலும் அம்மான் வர்க்கம் நாசமாகும். விவகார பயம், பந்துக்களுக்கு அவிகிதமாவது.

செவ்வாயைக் குரு கூடினாலும், பார்த்தாலும் புத்திர நாசம், தன விரையமாம், சக்தி குறைவு, காந்தி ஈனமாவது, எந்த வேலை களும் நாசத்தை அடைவதாம்.

செவ்வாயைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் குதிரை வாகனம், தண்டிகை முதலான வாகனங்கள் ஏறுவன். தாராபுத்திரர் கள் சௌக்யமும், விட்டில் கல்யாணங்கள் நடத்துதல் என்பது.

செவ்வாயைச் சனி கூடினாலும், பார்த்தாலும் பசுமாடுகள், பூமிகள் நஷ்டமாகும், சமான ஜனங்களுக்கு பீடையுண்டாம், நாற் கால் ஜீவன்கள் நஷ்டமாகு மென்பது.

செவ்வாய் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலு மிருந்தால் கோ விருத்தியும், தானிய விருத்தியும், குதிரைவாகனமேறி சஞ்சரிப்பது, புத்திர புத்திரிகைகள் விருத்திப் பது, நாற்கால் ஜீவன்கள் விருத்தியாம். நல்ல வஸ்திராபரண பிராப்தி யும், ஜெயத்வமும், கீர்த்தியுடையதுமாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களில் பாப சம் மந்தமாயிருந்தால் பங்காளி வழக்கு விரோத மேற்படும், விதவை களால் கலகமாம். க்ஷேத்திர நாசமும், தானிய நஷ்டமும் வரும், சமான ஜனங்களுக்கும் அரிஷ்டம், தன நாசம், புத்ர பீடை, அப கீர்த்தியை வகிப்பது என்பதாம்.

செவ்வாய் 2, 7-மிடங்களிலிருந்தால் அப மிருத்யு தோஷம் வரும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சுப்பிரமணியரை பூஜித்து சர்ப்பதானம் செய்தால், சர்வ அரிஷ்டமும் நாசமாகும், சுகாதிக மென்பது.

# குரு தெசை வருஷம் 16-க்குப் பலன்

### பொது.

1. பொன்னபரணம், விசித்திர ஆடை அணிவது, கிரக லாபம், கீர்த்தி பிரதாபம், வித்யா விநோத வைபவமும், ஸ்வ ஜனங்களால் கொண்டாடப்படுதல், ஸ்த்ரீ புத்திரர்கள் விருத்தி, கோ, தானிய லாபமும், தெசை பூராவிலும் தனலாபமு முண்டாகு மென்பது.

2. குரு தெசையில் கிராமாதி லாபம், பூமியை ஆளும் ராஜா வாகிறது, பிராம்மணரால், அரசரால், தன லாபம், மேதாவியாகியும், காந்தி தேஜோவந்தனுமாய், நல்ல வித்வானும், நீதி காரியபிரவர்த்த கனுமாவன்.

3. குரு அதி உச்சராசியிலிருந்து தெசை நடந்தால் வாகனாதி, ஆடை, ஆபரண, ரத்தின, லாபம், அதிக சௌக்யம், ஸ்வ ஜனங் களால் ஆமோதிக்கப்படுதல், தன் பேரால் முத்திரை யிடுதல், அங்கி

தங்கள் பண்ணுகிறது, கீர்த்தியாக இருப்பது, முத்திரிகாதிகாரியா மென்பது.

4. குரு உச்ச ராசியிலிருந்து தெசை நடந்தால் சவுக்யாதிக மும், புத்திர புத்திரிகா பந்துக்கள் விருத்தி, யாக யக்யாதி சத்கிரியா விசேஷம், மனோவிவேக கியானுதி கர்வம், ஒரு ஆதிபத்யம் செய்வது.

5. குரு உச்சாம்சத்திலிருந்து தெசை நடந்தால் பாக்கிய விருத்தி, ராஜ ஸமானம், முத்திரிகாதிகாரத்வம், தங்கம், பொன், ரத்தினங்கள் கிடைப்பது, சர்வ ஜன முக்யஸ்தனுவது, எப்போதும், சௌக்யமாகவே யிருப்பது.

6. குரு உச்சகிரக சம்மந்தமாக இருந்து தெசை நடந்தால் விசேஷ சுகம், தடாகம், சோபுராதிகள் நிர்மாணம், ராஜ பூஜிதம்.

7. குரு நீச கிரகங்களுடன் கூடி தெசை நடந்தால் மனோ துக்கம், இதர சகாயத்தை கோருவது, சேவகம் செய்வது, வாதிப்பு செய்கிறது, தன் புத்திரர்கள் தாரத்துடன் விரோதப்படல்.

8. குரு பரம நீச ராசியிலிருந்து தெசை நடந்தால் இருந்த இடத்திற்கு நாசமாம், ராஜ கோபத்தால் வருத்தம், சமான ஜன நாசனம், அதிக கஷ்ட ஜீவனமும், தார புத்ரவர்க்க பீடை, தன விரையமாம்.

9. குரு நீசகிரகத்துடன் கூடி தெசை நடந்தால் ஸ்ரீ நாசமும், புத்திர சோகமும், பந்து ஜனப்பகையும், மனோ விசாரம், கிருஷியில் நஷ்டம், தானிய நாசம், அதிக கஷ்டமும் உண்டாகும்.

10. குரு நீசமாயிருந்து தெசை நடந்தால் ராஜ கோபம், பந்து விரோதமும், இதர தேச பிரயாணம் செய்கிறது, தன நஷ்டம், மனோ விகாரம், கிருஷி நாசமும் வரும்.

11. குரு உச்சாசியி லிருந்தாலும் நீசாமிசையை அடைந்து இருந்தாலும், அதிக யோக போகாதிக மாயிருந்தாலும், சீக்கிரத்தில் நசிக்கும் என்பது.

12. நீசராசியி லிருந்தாலும், உச்சாமிசையை அடைந்து இருந்தால் முதலில் பாக்கியம் குறைவுபட்டு இருந்தாலும், எப்போதும் பாக்ய விருத்தியே அதிகரிக்கும்.

13. குரு அதிமித்ர ராசியிலிருந்து தெசை நடந்தால் ராஜ்யாதிகாரம் செய்கிறது, ராஜாக்களால் பூஜிக்கப்படுதல், விசேஷ பூமிகள் உண்டாவது, தன தானிய சமிர்த்தி, தார புத்திரர்கள் சந்தோஷ சௌக்யமடைவதும், புத்திரோற்பத்தி கீர்த்தியும் லாபாதிகமுமாம்.

14. குரு மித்துரு வீட்டிலிருந்து தெசை நடந்தால் ராஜ்யாதிகாரம், உயர்ந்த வஸ்த்துக்கள் லாபம், புராண கீத கதாப்யாசம் செய்

வது, கேட்ப்பதும், விநோதக்கேள்வி, தானியாதி விருத்தி, பசுவாகனங்கள் விசேஷிக்கு மென்பது.

15. குரு ஆட்சி வீட்டிலிருந்து தெசை நடந்தால் வித்யா விநோத வைபவமும், வீட்டில் பொன்னால் செய்கிற வஸ்த்துக்கள் நிரைவதும், மண்மனே, வீடு, பூமி, கிராமங்கள் கிடைப்பதும், அதிகமான தானிய உற்பத்தியும், ராஜ்யாதிகாரமும், நவரத்ன லாபமும் உண்டாகும்.

16. குரு சம கிரக ராசியிலிருந்து தெசை நடந்தால் கொஞ்சம் மும், தானிய விருத்தியும், ராஜாக்கள் அபிமானமும், பந்து இஷ்ட ஜன அனுகூலமும், நல்ல தீர்த்தயாத்ராதி பலமும் கிடைக்கும்.

17. குரு சத்துரு வீட்டிலிருந்து தெசை நடந்தால் தன நாசம் வரும், மனோ விசாரம், சரீர கஷ்டம், பூமிகள் விரையம், ஸ்தான நாசமும் உண்டாகும்.

18. குரு அதி சத்துரு வீட்டிலிருந்து தெசை நடந்தால் அதிக பயமும், தார புத்திராதி நாசமும், சரீர பாதையும் உண்டாகும்.

19. குரு சுப கிரகசம்பந்த மாயிருந்து தெசை நடந்தால் சௌக்யமும், எத்தின காரியங்கள் கூடுதல், தனலாபம், பந்து ஸம சந்தோஷம் உண்டாகும்.

20. குரு பாப கிரகத்துடன் கூடியிருந்து தெசை நடந்தால் கஷ்ட பலனும், அனேக ஜனங்களுடன் கலகம் செய்துக் கொள்வது, எத்தனித்த காரியங்க ளெல்லாம் நாசம் வரும்.

21. குரு சுப கிரகத்தின் பார்வையை பெற்று தெசை நடந்தால் இதர தேச ராஜாக்களால் தன சன்மானம் பெறுவது, தேவ பூஜை, பிராம்மணருக்கு அன்னதானம் செய்கிறது, தீர்த்தாபிஷேகம், குருவை பூஜிக்கிறது.

22. குரு பாப கிரகங்களின் பார்வையைப் பெற்று தெசை நடந்தால் உபாய சௌக்யமும், உபாய லாபமும், கொஞ்சம் மனோ சந்தோஷமும், கொஞ்சம் கீர்த்தி யசஸ் உண்டாவதும்.

23. குரு கேந்திரத்திலிருந்து தெசை நடந்தால் அதிக சௌக்யமும், உயர்ந்த வஸ்த்துக்கள் லாபமும், நல்ல கீர்த்தியும், பிராம்மண பக்தியும், பாரியையும், புத்திரரும் சௌக்கியமாக இருப்பது, குடும்பத்தில் கல்யாணாதி சுபங்கள் நடத்துதல்.

24. குரு திரிகோண ராசியிலிருந்து தெசை நடந்தால் சௌக்யமும், தனம் சம்பாதிப்பதும், எத்தினவேலைகள் கைகூடுதலும், புத்திர உற்பத்தியு முண்டாகும்.

25. குரு லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலிருந்து தெசை நடந்தால் அதிக பய முண்டாம், சமான ஜனங்களால் கஷ்டம் உண்டாம், ஸ்தான நாசமும் வரும்.

26. குரு மூலத்திரிகோண ராசியிலிருந்து தெசை நடந்தால் ராஜ்யாதிகாரம், தன லாபமும், பூமி லாபமும், தார புத்ராதி சௌக்யமும், வாகன சஞ்சார பிராப்தியும், சொந்தமான கஷ்டார்ஜ்ஜிதமாக சம்மதமான பொருள் கிடைக்கப் பெறுவதும், யாக யக்யாதி கைங்கரியங்கள் கிடைப்பது, ஜனங்களுக்கு உபகாரியும், ஜன புகழ்ச்சியும், காரிய கீர்த்தியும் உண்டாகும்.

27. குரு ஸ்தானபலாதிகமாயிருந்து தெசை நடந்தால் விசேஷ பூமி, கிராம லாபம், தாரா புத்திர சௌக்யம், யானை, குதிரைகளுடன் ஸ்வபவமா யிருப்பதும், அதிக சுகமும், விசித்திரமான ஆடைகள் கிடைக்கப் பெறுவது, பூஷணாதி லாபமும், திக்வீர்யாதிக மாயிருந்தால், லோப பிரசித்தியா யிருப்பன். காலபலத்தில் அதிகனாக விருந்தால் ராஜ சன்மானங்கள் கிடைக்கும்.

28. குரு நைசர்க்கிகபலம் பெற்று தெசை நடந்தால் சகஜமான சுகமும், மகுத்துவமான பேர் வாய்ப்பதும், வித்யா விலாஸமும், ரதி கேளீ சௌக்யமும், கங்கை முதலான பூமி வலம், நதி, ஸமுத்திர தீர்த்தஸ்நான யாத்ரா பல சித்தியும் உண்டாகும்.

29. குரு வக்கிரமாயிருந்து தெசை நடந்தால் மகுத்துவமும், புத்ர பிராப்தியும், தனலாபம், அதிக சுகம், யுத்தத்தில் ஜெயமடைதலும் ராஜாக்களின் உறவும், சுகந்த பரிமள சந்தனாதி அலங்கிருதமும், நூதன பட்டு பட்டாவளிகள் கிடைப்பதும், சந்துஷ்டியான மனோவாக்குடனிருப்பது.

30. குரு திக்வீர்யாதிக மாயிருந்து தெசை நடந்தால் ராஜாக்களால் கிருபாகடாக்ஷம் பெறுவது, அனேக பாக்யங்களை அனுபவிப்பது, சதா தேசாந்திரங்களில் கமன முண்டாயிருப்பது.

31. குரு குரூர ஷஷ்டியாம்சத்திலிருந்து தெசை நடந்தால் அதிக கஷ்டங்கள் உண்டாகும், ராஜ கோபமும், அவமானமும் உண்டாகும்.

32. குரு சுப சஷ்டியாம்சத்திலிருந்து தெசை நடந்தால் அதிக சௌக்யமும், வாகனங்கள் கிடைப்பது, பந்து சன்மானம், யக்யாதி சுப கருமங்கள் செய்வதுமாம்.

33. குரு பாராவதாமிசத்திலிருந்து தெசை நடந்தால் அதிக சுகமும், பக்ஷண, ரவா பாயாஸ போஜன சௌக்யமும். வஸ்திர லாபமும், விசேஷ பொன்னால் செய்த நகை லாபமும் உண்டாகும்.

34. குரு பாபகிரக திரேக்காணத் திலிருந்து தெசை நடந்தால் அதிக கஷ்டமும், ஜெயில் பிரவேசமும், புத்தி பிரமையும், தார நிவர்த்தியுமாமென்பது.

## மேஷாதி 12 ராசிகளில் குரு நிற்கும் பலன்

35. குரு மேஷத்திலிருந்து தெசை நடந்தால் க்ஷேத்திர லாபம், வஸ்திர பிராப்தியும், மனோ விலாசமும், மேலான ராஜ்யாதிபத்யமும், ஸமான ஜன சன்மானமும் கிடைக்கும்.

36. குரு ரிஷபத்திலிருந்து தெசை நடந்தால் ராஜ்ய பிராப்தி, ராஜ சன்மானம், தன தானியாதி விருத்தி, கோ சமுர்த்தியும், சிரேஷ்டமான ரத்தின லாபங்கள், சமான ஜனங்களிட சேர்க்கையுண்டாம்.

37. குரு மிதுனத்திலிருந்து தெசை நடந்தால் தாரா புத்திர நாசமும், கிருஷி நாசமும், அதிக கஷ்டமும், ஸ்வ பந்து ஜன விரோதமும், ராஜ கோபமும், ஸ்தான நாசமும் உண்டாகும்.

38. குரு கடகத்திலிருந்து தெசை நடந்தால் ராஜாக்கள் சினேகிதம், உயர்ந்த வஸ்த்துக்கள் லாபமாக கிடைப்பது, க்ஷேத்திர விருத்தி, தன பிராப்தியும், பசு வாகனங்களும், தானியாதிகளும் நிறைந்து இருப்பது, பூமிக்கு அதிபதியாகிறது, ஸ்வ ஜனங்களுக்கு அனுகூலமா யிருப்பது.

39. குரு சிம்மத்திலிருந்து தெசை நடந்தால் பூமி லாபமும், ராஜாக்களால் பூஜிக்கப்படுதல், நினைத்தபடி எத்தின காரியங்கள் சித்தியாவது, மலைகள், காடு முதலிய வனங்களுக்கு அதிகாரியாவதாம்.

40. குரு கன்னியிலிருந்து தெசை நடந்தால் பூமிகளும், தன தானியாதிகளும் நஷ்டம், மாடு, கன்று, காலிகள் நஷ்டம். தாரா புத்திர பந்து வர்க்கங்கள் விரோதம், தேகாயாஸமும் உண்டாகும், ஸ்தான நாசமென்பது.

41. குரு துலாத்திலிருந்து தெசை நடந்தால் ஸ்தான சலனம் நேருவதும், அதிக கஷ்டமும், பிராம்மணர்களுடன் கலகமும் உண்டாகு மென்பது.

42. குரு விருச்சிகத்திலிருந்து தெசை நடந்தால் மனோ விலாசமும், பெரிய ஸ்தானத்திற்கு ஆதிபத்ய அதிகாரியாவது, தேவதா பூஜை, பிராம்மண பக்தி, யக்யாதி கிருத்திய புண்ய பலன்கள் பிராப்தி.

43. குரு தனுசு ராசியிலிருந்து தெசை நடந்தால் தாரா புத்திரர்கள் விருத்தி, தனலாபம், காரிய சித்தி; உயர்ந்த ரத்தின லாபம்,

நூதன வஸ்திர லாபம், மித்திரரான ராஜ பிரபுவால் தனலாபம், அதிக ஸௌக்யமும், கீர்த்தியு முண்டாகும்.

44. குரு மகரத்திலிருந்து தெசை நடந்தால் அதிக கஷ்டமும், தாரா புத்திரர்கள் நாசமும், தன நாசமும், க்ஷேத்திர நாசமும், ராஜ கோபமும், புத்தி விகாரமும், இதர ஸ்தல வாஸமும், அதிக விரோத மும், சத்துரு விருத்தியு முண்டாகும்.

45. குரு கும்பத்திலிருந்து தெசை நடந்தால் பசுமாடுகளுக்கு பீடை, சுற்றத்தாருக்கு பீடை, சத்துரு விருத்தி, சமான ஜன கஷ்டம், தன விரையமாம்.

46. குரு மீனத்திலிருந்து தெசை நடந்தால் அதிகமான கீர்த்தி, புண்ய தீர்த்த யாத்திராதி பலனும், கியானுதிகம், நல்ல யக்யதீக்ஷை பலன் லபிக்கிறது, க்ஷேத்திர லாபம், தாரா புத்திர ஸௌக்யமும், புத்ரோற்பத்தி, சகல ஜெயம், கிராம நகர புராதிபதியாதல், வித்யா விவாத ஜயம், கோ விருத்தி, தானிய விருத்தி என்பது.

## குரு லக்னுதி 12 பாவங்களில் நிற்கும் பலன்

47. குரு 1–ல் நிற்கப் பலன் :—குரு லக்கினத்தில் இருந்து தெசை நடந்தால் ஸௌக்யமும், ராஜ ஸன்மானமும், தாரா புத்ராதி கள் ஸௌக்யமும், பந்து சந்தோஷம், அதிக பொன் தேடுதல், பட்டு பட்டாவளிகள் உண்டாதல்.

48. குரு 2–ல் நிற்கப் பலன் :—குரு 2-மிடத்திலிருந்து தெசை நடந்தால் குடும்ப ஸம்ரக்ஷணையும், வாக்படுத்துவமும், ஸத்தியவசன னும், தேவாலய கைங்கரிய சுபசோபனகரமும், அதிக தனவானுகுவ தென்பதாம்.

49. குரு 3–ல் நிற்கப் பலன் :—குரு 3-மிடத்திலிருந்து தெசை நடந்தால் சகோதர விருத்தி, யுத்தத்தில் ஜெயிப்பது, அதிக தைரிய மும், பராக்கிரமமும், எத்தன காரியங்கள் முடிப்பதுமாம்.

50. குரு 4–ல் நிற்கப் பலன் :—குரு 4-மிடத்திலிருந்து தெசை நடந்தால் அழகான வீடு கட்டடங்கள் விருத்தி, க்ஷேத்திர விருத்தி. தனதானிய விசேஷம், உயர்வான பூஷணங்கள் லாபமாக கிடைப் பது, பசு, யானை, குதிரை, சகடாதி வாகனங்கள் கிடைப்பது, அதிக வித்வான் என்பது.

51. குரு 5–ல் நிற்கப் பலன் :—குரு 5-மிடத்திலிருந்து தெசை நடந்தால் புத்திர விருத்தி, சுகாதிகம், தனலாபம், விசேஷ சுபங் களும், பிராம்மண பூஜிதமும், அன்ன தானம் செய்கிறதும், பிரபுவா வதும், உயர்ந்த ரத்னுபரணங்கள் கிடைப்பது, நினைத்த காரியங்கள் கைகூடுதல்.

52. குரு 6–ல் நிற்கப் பலன் :—குரு 6-மிடத்திலிருந்து தெசை நடந்தால் ஸ்தான பேதம், மனே துக்கமும், ராஜ கோபமும், தன தானிய நஷ்டம், தாரா புத்திர பீடை, மரண சமான ஆபத்து விளைவது.

53. குரு 7–ல் நிற்கப் பலன் :—குரு 7-மிடத்திலிருந்து தெசை நடந்தால் சுபாதிகம், கலியாணம், தாராபுத்ராதி ஸௌக்யம், ரத்ன லாபமும், நூதன பட்டு வஸ்திரங்கள் தரிப்பது, நல்ல காரியங்கள் செய்கிறது, செய்விக்கிறதும், புண்ய தீர்த்த தேவ தரிசனார்த்தமாக யாத்திரை செய்வது, தர்ம காரியங்களில் சிந்தைவைத்து பிரவர்த்தனாக பேரெடுப்பதும், புத்திசாலியுமாம்.

54. குரு 8–ல் நிற்கப் பலன் :—குரு 8-மிடத்திலிருந்து தெசை நடந்தால் புத்திர மரணம், ஸமான ஜன நாசம், தானியக் குறைவு, பொன், பொருள் நஷ்டம், மாடு கன்றுகளுக்கு ஆனியுண்டாகும்.

55. குரு 9–ல் நிற்கப் பலன் :—குரு 9-மிடத்திலிருந்து தெசை நடந்தால் அதிக ஸௌக்யம், பிரபல தர்ம புத்தி, ஈசுவர ஆராதனம் செய்கிறது, மந்திர ரகஸ்யங்களில் அதிக கியானம், புத்திர புத்திரிகா விருத்தி, விசேஷமாக பொன்னுடையதா மென்பது.

56. குரு 10–ல் நிற்கப் பலன் :—குரு 10-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் நல்ல கீர்த்தியும், தாரா புத்திர விருத்தி, சத்கர்ம யக்யாதி கைங்கரியங்கள் பிராப்தி, க்ஷேத்திரம், கோ, பூமி, வாகனாதிகள் லாபம், வஸ்திர லாபமாம்.

57. குரு 11–ல் நிற்கப் பலன் :—குரு 11-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் பொன்கள் சம்பாதிப்பது, உயர்ந்த ஆபரண லாபம், பூமி, க்ஷேத்திரவிருத்தி, தாராபுத்திர ஸௌக்யம், சுகம், பந்து சௌக்யம், ராஜ பூஜிதை, ராஜ ஸமான வைபவங்கள், அதிக சுகமா மென்பது.

58. குரு 12–ல் நிற்கப் பலன் :—குரு 12-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் புத்திர நாசம், புத்தி விகாரம், அவமானம் நேரிடுகிறது, சமான ஜனங்களுக்கு அரிஷ்டம், அதிக விரையமா மென்பது.

## குரு ஆரோகணத்தில் நிற்கும் பலன்

59. குரு ஆரோகணத்திலிருந்து தெசை நடந்தால் ராஜ்யாபிஷேகம் உண்டாகும், கீர்த்தி லாபமும், அதிக ஸௌக்யமும், பொன் பூஷண நல்ல வஸ்திராதி லாபமும், புத்திர லாபமும் உண்டாகும்.

## குரு அவரோகணத்தில் நிற்கும் பலன்

60. குரு அவரோகணத்திலிருந்து தெசை நடந்தால் ராஜ கல

கம், தன விரையம், மனஸ்தாபம், ஸ்தான பேதம் இவைகள் உண்டாகும்.

## குரு தெசையில் குரு புக்தி மீ 25 நாள் 18-க்குப் பலன்

குரு லக்கினத்திற்கு கேந்திர திரிகோணங்களிலாவது, 3, 11-ம் இடங்களிலாவது, உச்ச, ஆட்சியிலாவது இருந்தால் புண்ணிய தீர்த்த ஸ்நானங்களும், தேவாலய ஸேவையும், யக்ய யாகாதி சுகர்ம பிராப்தியும், புத்திர ஜனனமும், பிராமண பிரபுவால் சௌக்யமும், அன்ன தானம் செய்கிறது, வித்யாதிகம் சங்கீத பாண்டித்யமும், இஷ்ட ஜன பந்து சேர்க்கையும், க்ஷேத்திர விருத்தி, தானிய லாபம், பசு மாடு, கன்று கால்நடை விர்த்தி, வாகன சஞ்சாரியாகி உல்லாசத் தோடிருப்பது, தன் குருவாரமான வியாழக் கிழமையில் ராஜ சன்மானம் பெறுவது, வீட்டில் கல்யாணங்கள் நடத்துதல், எடுத்த காரியம் சித்தியாகிறது, யுத்தத்தில் ஜெயமுண்டாம்.

குரு கோபுராமிசத்திலிருந்து 9, 10-மிடத்ததிபருடன் கூடினல் பிராம்மண பிரபு ஸன்மானமும், சுய குல பிரபுவினல் அதிக லாபாதிக பலனும், நாற்கால் ஜீவன்கள் லாபமா மென்பது.

குரு லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், நீச ராசியிலாவது, நீசாம்சமிசத்திலாவது இருந்தாலும், பாப கிரகங்களுடன் கூடினலும், பாப கிரகங்களிட பார்வையைப் பெற்றாலும், அஷ்டமாதியுடன் கூடினலும், புக்தி முதலில் ராஜ கலகமும், தன தானிய நாசமும், சத்துரு பயமும், மகா பீடையும், தாயாதி ஜனங்கள் துவேஷமும், கலகஙகளினல் மனே விசனமும், அரசனல் மரண பயம், தார புத்ரர்களை விட்டுப் பிரிவதும், தேக பீடையுண்டாகும் மென்பது.

குருவைச் சூரியன் கூடினலும், பார்த்தாலும் ராஜாக்கள் துவேஷிப்பார்கள், அதிக கலகம் விளையும், மனே விசனம், ஸ்தான பேதமும் வரும்.

குருவைச் சந்திரன் கூடினலும், பார்த்தாலும் யானை, குதிரை, நூதன வஸ்திராதி வாகனங்கள் பிராப்தி, மாதா வம்சத்தாருக்கு விருத்தி, சினேகிதமான பிரபுவினல் சுக முண்டாகும்.

குருவைச் செவ்வாய் கூடினலும், பார்த்தாலும் சத்துருவிருத்தி, தன விரையம், யுத்தத்தில் தோல்வி, பங்காளி வழங்கும் நேரும்.

குருவைப் புதன் கூடினலும், பார்த்தாலும் வித்யாப்யாசம் செய்கிறது, பந்து ஜன உபகாரமும், எத்தன காரிய சித்தியாம்.

குருவைச் சுக்கிரன் கூடினலும், பார்த்தாலும் தார புத்திரர்கள் சௌக்யமும், ரத்ன லாபமும், நூதன வஸ்திராபரணமும், வீட்டில் கல்யாண சுப சோபனங்கள் நடத்துவதாம்.

குருவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் அனேக விதங்களினால் நஷ்டம், தன் அடிமைகளுடன் கலகம், தன் . குருவுக்கும் புத்திரருக்கும் நாசம் வரும்.

குரு லக்கினத்திற்கு 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணம் சம்பவிக்கும், இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு ருத்திர ஜெபம் செய்து, பொன்னால் பிரதிமை செய்து தானமும், விதிப்படி சாந்தியும் செய்ய தோஷ நிவர்த்தியாகி சுகமனுபவிப்பதாம்.

## குரு தெசையில் சனி புக்தி மீ-30 நாள் 12-க்குப் பலன்.

சனி லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலுமிருந்து தெசை நடந்தால் காரிய சித்தி, மகாராஜாக்களால் வரவேற்கப்படுவது, கிருஷி வாகன விருத்தி, க்ஷேத்திர லாபம், தானியாதிக உற்பத்தியும், நீலநிறமான வஸ்துக்கள் கிடைப்பது, சூத்திர பிரபுவால் சுகம், புத்திர பிராப்தி பந்து விருத்தி இவைகள் நடக்கும். புக்தி கடைசியில் ஸ்தான நாசம், சுய தேச ஜன கலகம், இப்படி 5—மாதம் நடந்து, அதன்பின் சௌக்ய பலன் நடக்கும்.

சனி லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலாவது, நீச ராசியிலாவதிருந்தால் தார வியோகமும், கலகமும், புத்திர நாசனமும், பந்து பீடை, பசு, வாகன நஷ்டம், தானிய உற்பத்தி குறைவுபடுவது, சர்வ ஜன விரோதமும், தனக்கு சினேகிதமான பிரபுவிற்கு அபமிருத்யுவும் வரும், சூத்திர ஸ்த்ரீயால் கலகம் விளையும், அபகீர்த்தியும், மான பங்கமும், நீசரிடத்தில் சேவகா விருத்தி செய்கிறது, பொருள் நாசமும் வரும்.

சனியைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் சிரோரோகமுண்டாகும், அதிகார பங்கம், தன் ராஜ மூலத்தினால் தன நாசனமும் வரும்.

சனியைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் வாத ரோகமும், மாதுர்வமிச வர்க்கத்தாருக்கு நாசனம், புத்திர நாசம் வரும்.

சனியைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் யாத்திரையில் சண்டை நேரும், சுய ஜனப்பகை, மித்துருக்களுடன் கலகம் உண்டாகும்.

சனியைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் இஷ்டமான ஜனங்களுடன் கூடியிருப்பது, அனேக வீடுகளில் மாறிமாறி குடியிருப்பது, ஸங்கீத வித்வான்களிட சேர்க்கையாயிருப்பது.

சனியைக் குரு கூடினாலும், பார்த்தாலும் புத்ர சோகமுண்டாம், தேகாயாஸம், ஸ்தான நாசம், புத்திக்கு சஞ்சலமும், வருமென்பது.

சனியைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீ ஸௌக்ய மும், யாக மூலங்களில் தனலாபம், மகாராஜாக்களால் மரியாதை பெறுவது, இஷ்டப்படி சித்தி பெறுவதாமென்பது.

சனி தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங் களிலும், சுப கிரகங்களுடன் கூடியிருந்தால் தன லாபமுண்டாம், தார ஸௌக்யம், புத்திர லாபம், பொன்னாபரண, வஸ்திர லாபங்க ளுண்டாம், சூத்திர புருஷ பிரபுவினால் சௌக்யம், யுத்தத்தில் சத்துரு நாசம்.

சனி தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களில் பாப சம்மந்தமா யிருந்தால் நீசராலும், சத்துருக்களாலும் கலகம் விளைவது, பந்துஜன பீடை, பாரியா, புத்திரர்கள் விரோதம், ராஜபயம், எத்தனித்த காரிய பங்கமாகிறதும், அனேகவித வழிகளில் தனமழியுமென்பது.

சனி லக்கினத்திற் 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் சம்பவிக்கும். இந்த தோஷ நிவர்த்திக்கு கருப்பு நிறமான ஆடு தானம் செய்து மிருத்யு ஜெபம் செய்ய தோஷ நிவர்த்தி என்பது.

## குரு தெசையில் புதன் புக்தி மீ 27- நாள் 6-க்குப் பலன்

புதன் லக்கினத்திற்கு கேந்திர திரிகோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், உச்சமித்திர சுவ க்ஷேத்திரங்களிலாவ திருந்தால் வித்யாதிக பாண்டித்யமும், பந்து பிரியத்வமும், தன் பேரால் முத் திரை யிடுதலான பெரிய அதிகார உத்யோகமும், தனக்கு சினேகித மாகிய பிரபுவினால் சுகமும், ராஜாக்களால் தன்னை ஆதரிக்கப்படு கிறது, இஷ்டப்படி நடத்துதலும், சுப சோபனகர சந்தோஷமும், வியவசாயத்தில் அதிக லாபமும், விவகார ஜெயம், வாகனுபானாதி கள் கிடைப்பது, புத்திரோற்பத்தியும், கல்யாணம் நடக்கிறதும், அழ கான வீடு அமைகிறதும், ஸேது ஸ்நான பிராப்தியும், யக்ய தீக்ஷா சிந்தையுமாம்.

புதன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், சத்துரு கிரக சம்மந்தம் அல்லது பார்க்க இருந்தால் சத்துரு விருத்தி, சமான பிரபுவினால் கோபிக்கப்படுதல், நாற்கால் ஜீவன்கள் நஷ்டம், அபகீர்த்தியும், அச்சமாயிருப்பதும், குலாசாரக் குறைவுபடல், தாழ் ந்த ஜாதிகள் சகவாசம், குருவினால் கோபிக்கப்படுதல், ஸ்த்ரீ நாசம், புத்திர பீடை, பங்காளிவர்க்க அரிஷ்டம், சமான ஜன மர ணம், பூமி, மாடுகள், தானிய நாசமும் உண்டாகுமென்பது.

புதனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் பந்து சன்மானம், தேசாந்திர கமனம், சிரோ வியாதி, விசேஷ பயமுமாம்.

புதனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மனசுக்கு அதிக சந்தோஷம், அதிக சுகம், வஸ்திராபரண பிராப்தி, எத்தின காரிய சித்தியும் என்பது.

புதனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் ஆயுத பாதையும் யுத்தத்தில் அபஜெயமும் வரும், பிரியமில்லா உணவு செய்வதாம் என்பது.

புதனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் வேத சாஸ்திர பயிற்சி, யாகம் துவக்குகிறது, தீக்ஷை வகிப்பது, சபா பிரசங்கம் செய்கிறது. சதா சிவனையாவது, அரியையாவது சிந்தனை செய்து கொண்டே யிருப்பது.

புதனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் கதாகாவிய சாஸ்தி ராதி புராண பாராயணம் செய்கிறது, வாகன விருத்தியும், வேசி சங்கமமும் உண்டாகும்.

புதனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் பசுக்கள் பீடை, அடி மைகளுக்கு பலவாறு துன்பம் அல்லது பகையாம், பூமிகள் நஷ்டம், தானிய பலிதக் குறைவு, எடுத்த காரியங்கள் தடைப்படுதலாம்.

புதன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடத்திலும், சுப கிரகங்களுடன் கூடியாவதிருந்தால் தன லாபம், சர்வ வேலைகள் தடையின்றி நடக்கிறது, பந்து ஜன உறவுகளுக்கு அன்யோன்யம், தாரா புத்ராதிகளுக்கு சௌக்யம், கிருஷியில் அதிக லாபமுண்டாகும்.

புதன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாப கிரகங் களுடன் கூடியிருந்தால் கலகம், வியாதி பீடை, துக்கம், அதிக தரித்திரமும், பந்து நாசம், மனஸ்த்தாபம், பசு நாசம், வித்யாவாதத் தினால் கலகம் வருதல், சமான ஜன நாசனம் உண்டாகும்.

புதன் 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணம் வரும் இந்த தோஷம் நிவர்த்திக்கு மகா தானம் செய்து சுவர்ன வர்ண பிரதிமை தானம் செய்ய தோஷ நிவர்த்தியாகும்.

## குரு தெசையில் கேது புத்தி மீ 11 நாள் 6-க்குப் பலன்

கேது லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங் களிலும், உச்சராசியிலு மிருந்தால் கீர்த்தி பிரதாபமும், ஆரோக்ய மும், ராஜாக்களால் கவுரப்படல், ரத்தினங்கள் சேருவது, மித்திர

ஜன சுகம், மந்திராப்யாசம் செய்கிறது, புத்திரிகை ஜனனம், சுப சோபனகரம், ஸ்த்ரீ ஸௌக்யம், தனலாபம், யக்ய கர்ம சித்தி, ஆலயங்கட்டுவித்தல், தேவதா ஸ்தாபன பிரதிஷ்டை செய்கிறது, புண்ய தீர்த்த ஸ்நான பலன் கிடைப்பது, சத்காலக்ஷேபம் செய்கிறதும், கேட்கிறதும், தாரா புத்திர விருத்தி, தூர தேச விவாஹ பத்திரிகை கல்யாண சடங்கு செய்வது, எத்தின காரியங்கள் கை கூடுதலாம்.

கேது லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலுமிருந்தால் ஸ்தான பேதம், மான பங்கம், அதிக பயம், உத்யோக பங்கம், வித்யா விவாத தோர்ப்பு, தாரா புத்திரவகை கெடுதலாம், கிருஷியில் அல்ப பலன், எத்தினத்தடை, பசு பீடை, தன நாசம் வரும்.

கேதுவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் அனேக விதத்தில் தன விரையம் வரும், தலை நோக்காடு, சத்துரு நாசம் என்பது.

கேதுவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மாதாவுக்கு கஷ்டம், புத்தி கேடும், இருப்பிடம் விட்டு மாறுதல், அகால மரணம் சம்பவிக்கு மென்பது.

கேதுவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் யுத்தத்தில் சத்துரு பயம், கலகம் விளைவது, மானபங்கம், தாயாதி ஜன நிஷ்டூரமும் வரும்.

கேதுவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் பந்து விருத்தி, விவகார ஜெயம், கிரைய விக்ரயத்தில் சந்தோஷம் உண்டாகும்.

கேதுவைக் குரு கூடினாலும், பார்த்தாலும் குருவிற்கு பீடை, புத்தி விகாரம், சரீரபாதை, புத்திர பீடையுண்டாம்.

கேதுவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும், ஸ்த்ரீ மூலமாக கலகம் விளையும், வாகன நாசம், சங்கீத சகவாஸமா மென்பது.

கேதுவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் அதிஸார பேதி கண்டு இளைப்பது, சமான ஜன நாசம், சினேகித வர்க்கத்தாருக்குப் பீடை.

கேது தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடியும், உச்ச ராசியிலுமிருந்தால் எடுத்த வேலைகளெல்லாம் சித்தியாவது, தன் மித்துரு பிரபுவினால் அதிக சுகம், பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும், விவாஹம் நடப்பித்தல், வீட்டில் தனம் நிறைந்திருக்கு மென்பது.

கேது தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாப கிரகங்களுடன் கூடியுமிருந்தால் புத்திரரும், மித்திரரும் நாசமாம். ஸ்தான பேதம், ராஜ பயம், விதவைகளால் கலகம், நீச ஸ்த்ரீ சங்கமம்,

சூத்திர பிரபு விரோதம், சொந்தமான பிரபுவினல் அபமிருத்ய, தோஷம் நேருமாம்.

கேது 2, 7-மிடங்களி லிருந்தால் அகால மரணமாம். இந்த தோஷம் நிவாரணத்திற்கு சிவலிங்க பூஜை, அர்ச்சனை செய்து ஆடு தானம் செய்தால் தோஷ நிவர்த்தி என்பது.

## குரு தெசையில் சுக்கிர புக்தி மீ 32-க்குப் பலன்

சுக்கிரன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், உச்ச ராசியிலும் இருந்தால் கல்யாண சுபாதிகளும், சத்திரசாமராதி வைபவ சந்தோஷமும், விசேஷ சௌக்யமும், பந்து ஜன சமூஹமும், தார புத்ராதி ஸௌக்யமும், புத்ர புத்திரிகைகளுக்கு விவாகம் நடப்பித்தலும், ஒரு பிரதான பட்டணத்திற்கு தலைவனுதலும், ராஜாக்களால் கவுரவப்பட்ட மளிக்கப்படுதலும் என்பது.

சுக்கிரன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீசராசியிலுமிருந்தால் ஸ்தான நாசம் வரும், ராஜ கோபம், க்ஷேத்திர நாசம், தன விரையம், பசு நாசம், சமுசாரத்துடனே கலகம், இஷ்ட பந்து விரோதம், சினேகிதருக்கு பீடை, திருடரால் பொருள் நஷ்டம், மனஸ்தாபம் உண்டாமென்பது.

சுக்கிரனைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும் மலைகளுக்கு அதிகாரியாகிறது, காடுகளுக்கும் விசாரணை கர்த்தா, எந்த வேலையினுலும் நஷ்டம், குதிரை முதலான வாகனங்கள் நஷ்டமாம்.

சுக்கிரனைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் வாகனுதிகள் விருத்தி, ரத்தின லாபம், பொன்னுபரண பிராப்தி, வஸ்திர பிராப்தி, நினைத்தபடிக் கெல்லாம் கூடுதல்.

சுக்கிரனைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் யுத்தத்தில் சத்ரு பாதை, திருடர் பயம், அக்னி பயம், விஷத்தினல் பீடை, சமான ஜன நாசனமாம்.

சுக்கிரனைப் புதன் கூடினுலும், பார்த்தாலும் வேத சாஸ்திர நிபுணத்வமும், கால க்ஷேமாதி பிரஸங்கிதமும், யக்ய தீக்ஷா சிந்தனையும், நல்ல அழகான கட்டட லாபமும், இஷ்ட பந்துக்களுடன் சந்தோஷமாக கூடியிருப்பதுவாம்.

சுக்கிரனைக் குரு கூடினுலும், பார்த்தாலும் தேவப் பிராமண ராஜாக்களிடத்திலே பிரியமும், அன்னதானம் செய்கிறது, ராஜ சபையில் பூஜிக்கப்படுதல்.

சுக்கிரனைச் சனி கூடினுலும், பார்த்தாலும் சதா கிலேசம், இடம் பெயரல், சமான ஜன மரணம், நாற்கால் வாகனுதிகள் நஷ்டமாம் என்பது.

சுக்கிரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடியுமிருந்தால் தனலாபமுண்டாம், கல்யாணுதி சுப சோபனங்கள் நடத்துவது, வாகன லாபமும், அதிக ஸெளக்யம், தனதானிய விருத்தி, இதுவரையிலும் காணுத வஸ்துக்கள் சம்பாதிக்க கிடைப்பதும், தீர்த்த யாத்திரை போவதும், பசுவாகன விருத்தி, தானிய சமுர்த்தி, பூமி மூலங்களில் கிணறு, நந்தவனம், தோப்பு தோட்டங்களினுல் தானிய முதலிய வஸ்த்து லாபாதிகமா மென்பது.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாப கிரகங்களுடனும் இருந்தால் க்ஷேத்திர நாசம், அவமானப்படல், தாரா புத்திரர்களுக்கு பீடை, எத்தினகாரியம் பங்கமாவதும், ரத்த சிராவ வியாதி பீடிதம், பிராண ஹானி, நாற்கால் ஜீவ வாகனங்கள் நஷ்டமா மென்பது.

சுக்கிரன் லக்கினத்திற்கு 2, 7-மிடங்களிலிருந்தால் அபமிருத்யு தோஷ மென்பது, இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு லக்ஷிமி நாராயண தானம் செய்ய தோஷ சாந்தியா மென்பது.

## குரு தெசையில் சூரிய புத்தி மீ 9 நாள் 18-க்குப் பலன்

சூரியன் கேந்திர திரிகோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலுமிருந்து, பாக்யாதிபன் கூடியிருந்தால் விசேஷ பாக்ய முண்டாகும், தனுதிபன் கூடியிருந்தால் அதிக தன லாபமும், சுகாதிபதியுடன் கூடியிருந்தால் அதிக ஸெளக்ய சந்தோஷ பூமி லாபமும், ராஜாக்களால் நகரத்திற்கு தலைவனுதலும், கிராமாதிகாரத்வ கீர்த்தி பிரதாபியுமாய் உயர்ந்த லக்ஷண குணங்களான குதிரை, ரிஷப வாகனங்கள் கிடைப்பதும், அனேக வழிகளில் தன லாபாதிகமும், தாரா, புத்திராதி சௌக்ய சந்தோஷமும், சூரியனிட வாரமான ஞாயிற்று கிழமையில், ராஜாக்களால் சன்மானம் பெறுவது, இதர தேச கல்யாண பத்திரிகை வருவதும், குல பிரபுவால் அதிக சௌக்யம், ரத்தினுபரணங்கள் வருவது, மந்திரசித்தி, வியாக்யானுதி, ஞான சித்தி, தீக்ஷா கர்மாதிகளில் கியானம், மலை, காடுகளில் சஞ்சாரம், தீர்த்தயாத்திரை கிடைப்பது, மகான்களிட தரிசனம் கிடைப்பது, நினைத்தபடிக் கெல்லாம் முடிப்பது.

சூரியன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலிருந்தாலும், பாப கிரகங்களுடன் கூடினுலும், பாபிகளால் பார்க்கப்பட்டாலும் புத்திர புத்திரிகா விநாசமும், அதிகமாக தன விரையமும், குரு நாசமும், ஸ்தான சலனமும், பந்து மனஸ்தாபமும்,

எந்த வேலைகளுக்கும் பங்கமும், யுத்தத்தில் தோற்பு, மேற்கு, வடக்கு இந்த திசைகளில் யுத்தமும் சம்பவிக்குமாம்.

சூரியனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் அபூர்வமான வஸ்த்துக்கள் கிடைப்பது, மனோ சந்தோஷமும், அதிக சுகமும், சினேகித பிரபுவினால் சுகாதிகமுமுண்டாகும்.

சூரியனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் ஆயுதங்களினால் சரீரத்தில் காயம் நேர்ந்து ரண பாதையை அனுபவிப்பது, சமானஜன நாசம், விஷத்தாலும், கட்டியாலும் பாதை நேருவது.

சூரியனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் அதிக வித்யா சாஸ்திராப் யாசமும், பந்துப் பிரியாதிகம், சொந்த அதிகாரியாக யிருப்பது, ராஜாக்களினால் மரியாதையும் வாய்க்கும்.

சூரியனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் சிவ பூஜாவிதிகளில் ஆசையாயிருப்பது, கதை பண்ணுகிறது, கேட்பதும், குருவாரமான வியாழக்கிழமையில் ராஜ தரிசனம் கிடைக்கும்.

சூரியனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் நிச்சயமாக முத்துக்களினால் அலங்கரித்த ஆபரணலாபம், பொன்னாபரண பிராப்தியும், விவாஹம் நடத்துகிறது, தோட்டங்களில் கிணறு எடுத்து, நந்த வனகைங்கரியம் செய்வது.

சூரியனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் பொருள் விரையமும், மனோ விசனமும், ஸ்தான நாசம், அகால மரணமும் சம்பவிக்குமென்பது.

சூரியன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலுமிருந்தால் தன நாசனமும், மனோ துக்கமும், பந்து பகை, வயிற்று வலி, பூமிகள் நாசம் இவைகள் நடந்து புக்தி கடைசியில் உற்சாகமும், பந்து கல்யாணமும், அதிக சுபாதிகளில் தனச் செலவும் நேரும்.

சூரியன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாபிகளுடன் கூடியுமிருந்தால் அதிக கஷ்டமும், ஸ்தான நாசமும், சமான ஜன நாசமும், தன் பிள்ளைகளோடே சண்டை, வழக்கு தொடுப்பது, காரிய விக்னம், மனோ துக்கமும், பிதாவுக்காவது, பிதாவுடனே கூடப் பிறந்தவர்களுக்காவது மரணம், வாகன விநாசம், அடிமை கலகமும் நேருமென்பது.

சூரியன் 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரண சம்பவம் வரும், இந்த தோஷ பரிகாரத்திற்கு சூரிய பிரார்த்தனை செய்யவேண்டியது. ஆடு தானமும் செய்தால் ஆயுராரோக்யம் உண்டாகும்.

## குரு தெசையில் சந்திர புக்தி மீ 16-க்குப் பலன்

சந்திரன் கேந்திர கோணங்களிலும் 3, 11-மிடங்களிலும், உச்ச ஆட்சியிலுமிருந்தாலும், சுப கிரகங்களுடன் கூடினாலும் ராஜ்ய லாபம், கீர்த்தி சௌக்யம், வாகன பிராப்தி, அனேக வஸ்த்துக்கள் சம்பாதிப்பது, தாரா புத்திர சௌக்யமும், பால் போஜனம் செய்கிறது, இஷ்டான்ன சௌக்யமும், தன் குலாசாரத்தில் ஒழுங்காக இருப்பது, ராஜ சன்மானம், சகல சம்பிரமமா யிருத்தல். வீட்டில் கல்யாணம் நடத்துதல், புத்திரலாபமும் உண்டாகும்.

யானை, குதிரை முதலான வாகன லாபமும், தார சவுக்கியமும், அனேக சேனைகளுக்கு தலைவனாதலும், அதிக தனதானிய லாபமும், பசு, பால், கன்று, காலிகள் லாபமும், கிருஷி விருத்தி, வீட்டுக்கு வடக்கு திசையில் அதிக சௌக்கியமும், ராஜாக்களால் யானை, குதிரை அயிசுவரியங்கள் அதிகமான வெகுமானமாக பரிசு அளிக்கப் பெறுவது.

சந்திரன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலாவது, க்ஷீண சந்திரனாகவாவது, பாப சம்பந்தமாகவாவது, நீசமாகவும், அஸ்தங்கதமாகவாவது இருந்தால் ராஜ துவேஷம், மனோ துக்கம், தன விரயம், கீர்த்தி நாசம், புத்தி பிரமமும், சரீர ஜாட்டியமும், ஜன விரோதமும், தேசத்தை விட்டு போகிறதும், அதிக வியாதியால் பீடிக்கப்படுகிறது, பீனஸ ரோகம், சதா ரோகியும், மூத்திர கிருச்சாதி வியாதியாம்.

சந்திரனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் குரூர புத்தியும், கலகமும், ஸ்தான நாசமும், ராஜ கோபமும், காரிய நாசமும், சுர பீடிதமுமாம்.

சந்திரனை செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் யுத்தத்தில் அபஜெயம், அக்கினி வாதை, மனஸ்தாபம், சமான ஜன நாசமாம்.

சந்திரனை புதன் கூடினாலும், பார்த்தாலும் கிரைய விக்கிரைய லாபத்தில் சந்தோஷம், வர்த்தகருடன் கூடியிருப்பது, விவகாரத்தில் ஜெயமடைவது.

சந்திரனை குரு கூடினாலும், பார்த்தாலும் குரு பக்தி, தேவதார்ச்சனை, பிராமண பூசை, சிவ தீக்ஷா பிரசங்கமும், அனேக மூலத்தில் தனலாபமும் வருமென்பது.

சந்திரனை சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் உயர்வான நகைகளணிவதும், வாகன லாபமும், காரிய சித்தியுமுண்டாகும்.

சந்திரனை சனி கூடினாலும் பார்த்தாலும் சமான ஜன நாசம், பிசாசு பயம் உண்டாகும்.

சந்திரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடியுமிருந்தால் காரியசித்தியும், ஜெயத்வமும், தேகாரோக்கியமும், பாரியா புத்திர சௌக்கியமும், கிருஷி லாபமும், க்ஷேத்திர விருத்தி, தனப்ராப்தி, பந்து சமுகத்தோடு இஷ்டன்ன போஜனமும், யுத்தத்தில் சத்துரு நாசமும், சிந்தனையும், சோகமும், விஜனசனமுமா மென்பது.

சந்திரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடத்திலும், பாபிகளுடன் கூடியுமிருந்தால் காரிய ஹானியும், மான ஹானியும், உத்தியோக பங்கமும், ஸ்தான சலனமும், பந்து நாசமும், சதாசிந்தையும், காரிய நாசமுமாம்.

சந்திரன் லக்கினத்திற்கு 2, 7-மிடங்களிலிருந்தால் அபமிருத்யு தோஷ மென்பது. இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு ஆடு தானம் செய்ய வேணும்.

## குரு தெசையில் செவ்வாய் புக்தி மீ 11 நாள் 6-க்குப் பலன்.

செவ்வாய் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும் 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலும், ஆட்சியிலும் இருந்தால் பூமி லாபமும், புத்திர, பௌத்திர விருத்தியும், கிருஷி லாபமும், க்ஷேத்திர விருத்தியும், அடிமைப் படைகள் விசேஷிப்பது, இஷ்டஜன சௌக்யமும், கல்யாணாதி சுபாதிகமும், யக்ய யாகாதி, பல சித்தி பெறுவதும், ஸந்தானம் உண்டாவதும், ராஜ சன்மானமும், தூர தேசத்து பிரிய மனுஷாளைக் காண்பதும், பாரியா, புத்திர சௌக்கியமும், நாலு மூலத்தில் தனவருத்து, சரீராரோக்யமும், அதிக சுகமும், தீர்த்த யாத்திரை புண்யபல பிராப்தியும் உண்டாகும்.

செவ்வாய் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும் நீசராசியிலுமிருந்தாலும், தயாதி கலகமும், அதிக கஷ்டமும், ராஜபாதை, சோர பயம், அக்கினி பீடை, விலங்கு பூணுதல், ஜெயில் வாஸம், பயித்யம் பிடித்தல், கட்டி பாதை, மேலிருந்து கீழே விழுவது, வெளி தேசம் போக எண்ணம், ஸ்திரீகளால் தன நாசனம், வஞ்சனை எண்ணம் தோணுவது.

செவ்வாயை சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ராஜ கோபம் வரும், பொருள் நஷ்டம், உத்தியோகத்தில் பங்கம் அல்லது ஸ்தான சலனம் வரும், எல்லோராலும் கலகமேற்படு மென்பது.

செவ்வாயைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் அதிக சௌக்யமும், தனலாபமும், மனோச்சாகம், ஜெயமடைவது, உத்தியோக பிராப்தி, காரிய சித்தியுமாம்.

செவ்வாயை புதன் கூடினாலும், பார்த்தாலும் விசித்திர மான வீடு கட்டடம் கிடைப்பது, சத்திய சந்தோஷ வசனமும், பந்து விருத்தி, விவகாரத்தினால் ஜெயமுண்டாகும்.

செவ்வாயை குரு கூடினாலும், பார்த்தாலும் புத்திர விருத்தியும், தனலாபமும், வஸ்திர லாபமும், பூஷண லாபமும், கல்யாண சுபங்கள் நடத்துவதாம்.

செவ்வாயைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் வாகனாதி லாபம், முத்தாபரணங்கள் ரத்தினங்கள் பிராப்தி, விசேஷ தன லாபமுமாம்.

செவ்வாயைச் சனி கூடினாலும், பார்த்தாலும் வாகனாதி, பசுக்கள் நஷ்டம், நீசரோடும், சத்துருக்களோடும் கலகமும், குரு மரணம், புத்திர நாசமும் உண்டாகும்.

செவ்வாய் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடினாலும் தனலாபமும், வித்யா விலாசம், விசேஷ பாண்டித்யமும், சமான பிரபு நேசம் மஹா ராஜா வால் ஆதரவு பெறப்படுகிறதும், இஷ்ட சித்தியும், பூமி லாபம், புத்திர லாபம், தோட்டங்கள் வைப்பது, தானியாதி விருத்தி விசேஷிப் பது.

செவ்வாய் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாப ருடன் கூடியுமிருந்தால் ஸ்தான நாசம் வரும், பந்துக்களுக்கு அரிஷ்டம், அனேக விதங்களினால் தன விரையம், கிருஷி நாசமும், பூமி கிராமாதிகள் விரையமும், எண்ணின காரியக்கேடும், சமான ஜனங்களுக்கு சோகமும், பங்காளிகளும் சத்துருக்களும், விருத்தி யாவார்கள் என்பது.

குரு 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணமாகும். இந்த தோஷம் பரிகாரத்திற்கு சுவர்ன தானம் செய்யவேணும்.

## குரு தெசையில் ராகு புக்தி மீ 28 நாள் 24-க்குப் பலன்

ராகு லக்கினத்திற்கு கேந்திர திரிகோணங்களில் பாப கிரகங் களுடன் கூடியிருக்க அதிக கலகமும், சினேகித பிரபு விரோதமும், சுய கிராமத்தில் தானிய நாசம், புத்திரர், மித்திரர், விரோதப்படுதல், ஆத்ம பந்து நாசனமும், மனோ வியாகூலம், விதவையை சேருகிறது, தாரம் விட்டு பிரிவது மரணமாகிறது.

ராகு மேல்சொன்ன ஸ்தானங்களில் சுபருடன் கூடினால் பாப சுபம் கலந்த மிசிரம பலனாக, கொஞ்சம் சுகம், கொஞ்சம் கஷ்ட

மும், ராஜ கோபம், கோப சாந்தி, சுவல்ப கிராமாதிபத்யம், சகோ தரத்வேஷம், சுய கிராமத்தில் தானியாதிகம், சம்பத்காமுமாம்.

ராகு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், மித்திர வீட்டி லிருந்தாலும், ஆட்சியிலிருந்தாலும் கலகம், ராஜ துவேஷமும், திருடர் பயமும், மனோ துக்கமும், திரவிய நாசனம், சத்துருவால் பய மும், பிசாசு பீடையால் அபமிருத்யு பயம், திடீரென்று கலகம் விளைவது, சூனிய மந்திரங்களினால் ரோக பயமும் உண்டாகும்.

புக்தி முதலில் கொஞ்ச கஷ்டம், நானாவித வியாதி பீடிதம், அதற்குப்பின் கொஞ்சம் சவுக்யம், தன லாபம், தாரா புத்திராதி வர்க்க சௌக்யம், ராஜ மூல சுகம், சினேகித புத்திர மித்ரகளத்திர சுகம், உத்யோக பிராப்தி.

ராகுவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் சோர பாதை, அக்னி பயம், ராஜ பீடை, உத்யோக சலனம், சுய ஸ்தான பேதம் இவைகள் உண்டாகும்.

ராகுவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் தாய் வமிச வர்க்கம் நாசம், அபகீர்த்தி வருதல், சிரசு பாதை, வயிற்றுவலி, நேத்திர வைகல்யமாம்.

ராகுவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் யுத்தத்தில் சத்துரு பயம், பங்காளி வழக்கு, வியாதி பயம், பெரிய ஆபத்து விளையுமாம்.

ராகுவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் மாமன்மார்கள் விருத்தி, பந்து சன்மானம், எத்தின காரிய சித்தியமாம்.

ராகுவைக் குரு கூடினாலும், பார்த்தாலும் தாராபுத்திர வர்க்க பீடை, புத்தி மாறுதல், தன விரையம், சமான ஜன நாசம்.

ராகுவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் தார வர்க்கத் தாருக்கு நாசனம், சனியோடு கூடினாலும் பார்வை பெற்றாலும் அடியவர்களாச மென்பதாம்.

ராகு தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும் 3, 11-மிடங் களிலும், சுபருடன் கூடியிருந்தால் சுபங்களிலும், கிருஷி லாபமும், க்ஷேத்திர லாபமும், தன வருத்தும், மித்திர பிரபு மூலத்தினால் சுகம், அபூர்வ வஸ்து பிராப்தியாகும், இஷ்ட லாபமாம்.

ராகு தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், தன் நீசாம் சத்தி லிருந்தாலும், சம ஜன கோபம், ஸ்தான நாசம், அஸத்ய வானாக செய்கிறது, பாப காரிய சிந்தை, கலகம், ராஜ பயமும், எத்தின காரிய பங்கம், குரு துவேஷமும் உண்டாகும்.

ராகு 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் சம்பவிக்கும். இந்த தோஷ நிவர்த்திக்கு எள்ளு, ஹோமம் செய்யவேணும். மேல் வெள்ளியால் எருமைக்கிடா செய்து விட்டால் பின்பு ஆயுராரோக்ய அயிசுவரிய முண்டாகு மென்பது.

# சனி தெசை ௵ 19-க்குப் பலன்

பொது.

1. சனி தெசையில் நிஷ்காரணமாக அபவாதமும், சத்துரு பயமும், ராஜ பீடை, அக்னி பயம், க்ஷேத்திரார்த்த நாசம், ஸ்தான நாசம், மான பங்கம், தாரா, புத்திராதிகளுக்கு ரோக பயம், தனம் நாசம், மனோ விசாரம், எப்போதும் கஷ்ட பலனே நடக்கு மென் பது.

2. சனி ஜன்ம காலத்தில் ஸ்தான பலாதிகனாக இருந்தால் நல்ல குணமான தாரமும், அதிக சுகுணமுள்ள புத்திராளும், நல்ல வர்களுக்கு உபகாரமும், நல்ல கீர்த்தி லாபமும், சோரராலும், சத்துரு வாலும், ராஜாவாலும், அக்னியாலும் பயமும், பந்து நாசனமும், நேத்திரத்திற்கும், ஆசனத்திலும், வியாதி ஏற்பட்டு துக்கப் படுவது.

3. சனி ஜன்ம காலத்தில் திக்கு பலாதிகனாக இருந்து தெசை நடந்தால், நல்ல சுகமும், கீர்த்தியும் பூமி நாசம், சகோதர ஹானி, பந்து ஜனங்களால் விரோதமும் வரும்.

4. சனி காலபலாதிகனாக இருந்து தெசை நடந்தால் காள கூட விஷத்தினால் பீதி, தார புத்திராதிகளுக்கு அரிஷ்டம், ராஜாவினா லும், சோரராலும் பயப்பிராந்தி உண்டாம்.

மறுபடி தான்யலாபமும், பூமி விசேஷிப்பதும், கிருஷி லாப மும், வாகன விருத்தியும் உண்டாகும்.

5. சனி வக்கிரமாக இருந்து தெசை நடந்தால் பிரயோசன மில்லாமல் செய்யும் காரியமும், உத்தியோக பங்கமும், துக்காதிக மும், சகோதர நாசமுமா மென்பது.

6. சனி குரூர சஷ்டியாம்சத்தில் இருந்து தெசை நடந்தால் அதிக பயமும், ராஜ கோபமும், ஸ்தான பேதமும், ஜெயில் வாசமு மாக இருப்பதாம்.

7. சனி சுபர்களிட சஷ்டியாமிசத்தில் இருந்து தெசை நடந் தால் அதிக சௌக்யமும், தாரா, புத்திராதி விசேஷமும், அதிக சம்பத்தும், பந்து ஜன சந்தோஷமும் உண்டாகும்.

8. சனி ஜன்மகாலத்தில் வெய்சேஷிகாமிசத்தில் இருந்து தெசை நடந்தால் சௌக்ய பலனும், விசேஷமாக ராஜ சன்மானமும்,

விசித்திர வஸ்திர அலங்காரமும், ஆபரணாதி லாபமும் உண்டாகும்.

9. சனி பாபத் திரேக்காணத்தில் இருந்து தெசை நடந்தால் அதிக பயம், பாசக் கயிற்றினால் கழுத்திற்கு தூக்கு போட்டுக் கொள்ளுகிறதும், விஷ ஜந்துவால் பயமும், சோரராலும், ராஜாவாலும், அக்னியாலும், ஆபத்தும், பயமும், பொருள் நஷ்டமும் ஆகும்.

10. சனி நீச ராசியில் இருந்து உச்சாமிசனாக இருந்தால் தெசை ஆரம்ப காலத்தில் துக்க கஷ்டமும், முடிவு காலத்தில் சுக சந்தோஷ பலனும் அனுபவிக்கச் செய்யும் என்பது.

11. சனி ராசியில் உச்சனாக இருந்து அமிசத்தில் நீசனாக இருந்தால் தெசை ஆதியில் சுக சந்தோஷ லாபபலனும், தெசை முடிவு காலத்தில் கஷ்டமும், துக்கமும், விரையபலனுமாம்.

12. சனி பரம உச்சத்தில் இருந்து தெசை நடந்தால் பூமிகள் விசேஷித்து கிருஷியினால் தனலாபமும், சுய பந்து ஜனங்களால் சந்தோஷமும், தாரா புத்திராதி சௌக்யமும், பசுவாகன விருத்தியும், அடிமை ஜனாதிகமும், வஸ்திராபரண ரத்ன லாபங்களும் உண்டாகும்.

13. சனி உச்சராசியில் இருந்து தெசை நடந்தால் தனலாபமும், நல்ல கீர்த்தியும், தனக்குச் சமான ஜனங்களால் மரியாதை பெறுதலும், மனோ உல்லாசமும், பெரிய ஸ்தானத்தில் ஆதிபத்தியமும் உண்டாகும் என்பது.

14. சனி மூலத்திரிகோண ராசியில் இருந்து தெசை நடந்தால் வாகன வஸ்த்ர பூஷண தனலாபங்களும், கோ விருத்தியும், ரத்ன லாபமும், பூமி க்ஷேத்ராதிகமும், சத்ரு நாசமும், அதிக சுகமும், வித்யா பாண்டித்திய தத்துவஞான வைபவமும், பந்துக்களுக்கு உபகாரியுமா மென்பது.

15. சனி ஆட்சி ஸ்தானத்தில் இருந்து தெசை நடந்தால் பசு விருத்தி, நவரத்தினாதி லாபம், வாகன பிராப்தி, பொன்னாபரண சேர்க்கை, தார புத்திராதிகள் சௌக்யம், மேன்மையான வஸ்த்துக்கள் லாபம், ராஜாவினால் சுகம், சுயகுல ஜனங்கள் விருத்தியாவார்கள்.

16. சனி அதி மித்ருராசியில் இருந்து தெசை நடந்தால் ராஜாக்கள் மூலமாய் சுகமும், புத்திர லாபமும், நல்லவர்களுடைய சேர்க்கையும், அதிக சௌக்யமும், வித்யாதிகமும், அதிக கீர்த்தியும், சத்ரு ஜயமும், ரத்னாபரண வஸ்த்ரலாபமும் உண்டாகும்.

17. சனி மித்ரு ராசியில் இருந்து தெசை நடந்தால் க்ஷேத்ரங்களும், விசேஷ பூமிகளும், கோ, வாகனாதிகளும், அடிமை யாட்

களும் விசேஷிக்கும், ராஜ சன்மானம் கிடைக்கும், உயர்ந்த வஸ்த்துக்கள் லாபமாகும், சமான ஜனங்களால் விசேஷ லாபகரமுண்டாகும்.

18. சனி சம கிரக ராசியில் இருந்து தெசை நடந்தால் கொஞ்ச சுகம், தனலாபம், சுய கிராமவாசமும், இதர தேச வாசமும், சமான ஜனங்கள் ஸ்னேகமும் உண்டாகும்.

19. சனி சத்ரு ராசியில் இருந்து தெசை நடந்தால் மனோ விசாரமும், புத்தி பிரமையும், மான பங்கமும், ராஜாங்க விரோதமும், சொந்த ஜனங்களால் வருத்தமும், சமான ஜன கஷ்டமும், இதர தேச வாசமும் உண்டாகும்.

20. சனி அதி சத்ரு ராசியில் இருந்து தெசை நடந்தால் மான ஹானியும், தன நாசமும், மதிமயக்கமும், அதிக துக்கமும், மனோ பீதியும், தாரா புத்திரர் நாசமும், அதிக கஷ்டமும், சமான ஜன பீடிதமும், பூமி நாசமும் உண்டாகும்.

21. சனி நீச ராசியில் இருந்து தெசை நடந்தால் பாப செய்கையும், பாப மூலத்தினல் தனந்தேடுதலும், அதிக கஷ்டமும், மான பங்கமும், பசுவாகனுதி அரிஷ்டமும், க்ஷேத்திர நாசமும் உண்டாகும்.

22. சனி சுபக்கிரகங்களுடன் கூடி இருந்து தெசை நடந்தால் அதிக சுகமும், பசுவாகனுதி விருத்தியும், அடிமை ஜனுதிகள் விருத்தியும், எத்தின காரிய சித்தியும் உண்டாகும்.

23. சனி பாபக் கிரகங்களுடன் கூடி தெசை நடந்தால் ராஜ ப்யமும், நாற்கால் ஜீவன்கள் நஷ்டமும், சமான பந்து ஜனங்கள் நாசமாம்.

24. சனி கேந்திர ராசியில் இருந்து தெசை நடந்தால் ராஜாங்க அபிமானமும், வித்துவான்களிட சேர்க்கையும், அனேக தொழில் மூலங்களில் தன லாபமும், விதவிதமான பூஷண லாபம், தாரா, புத்ரர்கள் சௌக்யமும், ராஜ்யாதிகாரமும் உண்டாகும்.

25. சனி திரிகோண ராசியிலிருந்து தெசை நடந்தால் விசேஷ சுபங்கள் நடத்துவதும், பந்துக்களுக்கு பிரீதியாயும், சகாயமாயும் இருப்பது, மனோ சந்தோஷமும், கிருஷியினல் தான்ய லாபமும், க்ஷேத்ர விருத்தியும் உண்டாகும்.

26. சனி துர் ஸ்தானங்களில் இருந்து தெசை நடந்தால் துக்கமும், அதிக வியாதியும், யுத்த பயமும், பூமி நாசமும், பசு வாகனுதி நஷ்டமும் உண்டாகும்.

27. சனி அமிசத்தில் உச்சனுக இருந்து தெசை நடந்தால் விதவிதமாக சுகான்ன போஜனமும், பாக்ய விருத்தியும், இதர தேச பிரயாணமும், கிராமாதிகாரமும், சபைக்கு தலைவனுவது அல்லது மண்டலாதிபதியாவது என்பது.

28. சனி அமிசத்தில் நீசனுக இருந்து தெசை நடந்தால் ஆசார ஹீனமும், கஷ்ட ஜீவனமும், அனேகரிடத்தில் சேவகா விருத்தி செய்வதும், தன நஷ்டமும், தாரா புத்திராதிகளுக்கு அரிஷ்டமும், அதிக துக்கமும் உண்டாகும்.

29. சனி சூரியனுடன் கூடி இருந்து தெசை நடந்தால் உறவினர் பகையும், இதர ஸ்த்ரீ சேர்க்கையும், அடிமை விரோதமும், தோஷகரமான செய்கையும், சதா பாப காரியமே செய்து ஜீவிப்பது என்பது.

30. சனி சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டு தெசை நடந்தால் ஸ்த்ரீ லாபமும், புத்ரோற்பத்தி, அடிமையாள்கள் சேர்க்கையும், அதிக தனலாபமும், பசுவாகன லாபமும் உண்டாகும். பிற்பாதியில் அதிக கஷ்டமும், பசு, வாகன நஷ்டமும், பூமி நாசமும், விவகாரத்தில் கஷ்டமும், கிருஷி நாசமும் உண்டாகும்.

31. சனி பாபக் கிரகங்களினுல் பார்க்கப்பட்டு தெசை நடந்தால் அடிமையாள்களுக்கும், தாரா, புத்ராதிகளுக்கும், சகோதரர்களுக்கும் கஷ்டத்தை உண்டாக்கும், அபவாதமும், அவமானமும் நேரிடும். அகால போஜனம், பிரீதிகரம் இல்லாமல் துக்கத்துடன் பொருள் தேடுவது.

## மேஷாதி 12 ராசிகளில் சனி நிற்கும் பலன்

32. சனி மேஷ ராசியிலிருக்கப் பலன்:—சனி மேஷத்திலிருந்து தெசை நடந்தால் க்ஷேத்திர நாசம், பசுவாகன நஷ்டம், சமான ஜனங்களினுல் கஷ்டம், பந்துக்களால் பாதை, தாராபுத்திர வர்க்க பீடை, ஸ்தான நாசமாம்.

33. சனி ரிஷப ராசியிலிருக்கப் பலன்:—சனி ரிஷப ராசியிலிருந்து தெசை நடந்தால் கிருஷியினுல் தனலாபம், உயர்ந்த வஸ்துக்கள் லாபம், நீலமான ரத்தினுபரணங்களும், நீல வஸ்த்துக்கள் லாபமும், கிராமாதி பத்யமும், சுகாதிகமுமாம்.

34. சனி மிதுன ராசியிலிருக்கப் பலன்:—சனி மிதுனத்திலிருந்து தெசை நடந்தால் பூமி, க்ஷேத்திரங்கள் லாபமும், ராஜாக்களால் பூஜிக்கப்படுதல், ஸ்த்ரீ புத்திர ஸௌக்யாதி வைபவமும், சுற்ற விருப்பம், ஆள் அடிமை விருத்தி, அதிக லாபமும் அடையச் செய்யுமென்பது.

35. சனி கடக ராசியிலிருக்கப் பலன் :—சனி கடகத்திலிருந்து தெசை நடந்தால் அதிக கஷ்ட பலனும், சமான ஜன கஷ்டம், ஸ்தான நாசமும், பசு நாசமுமாம்.

36. சனி சிம்ம ராசியிலிருக்கப் பலன் :—சனி சிம்மத்திலிருந்து தெசை நடந்தால் ராஜ கோபமும், சத்துரு விருத்தியும், க்ஷேத்ராதி நாசமும், மனோ விசாரமும், ஸமான ஜன பீடை, அதிக கஷ்டம் உண்டாகும்.

37. சனி கன்னி ராசியிலிருக்கப் பலன் :—சனி கன்னியில் இருந்து தெசை நடந்தால் ஸௌக்யமும், ராஜ சன்மானமும், சிநேக ஜன விருத்தி, தனதானிய சமுர்த்தி, கோலாபம், தானிய லாபம், க்ஷேத்திர லாபம், சுகாதிகமாம்.

38. சனி துலா ராசியிலிருக்கப் பலன் :—சனி துலாத்தில் இருந்து தெசை நடந்தால் ராஜ்யாதிகார வைபவமும், விசேஷமாக தானிய விருத்தி, ஸ்த்ரீ புத்திர சௌக்யாதி சந்தோஷமும், அனேக ரத்தின லாபமும், ஸத்கீர்த்தியும், அனேக தீர்த்த யாத்திரா பலன் கிடைக்கும்.

39. சனி விருச்சிக ராசியிலிருக்கப் பலன் :—சனி விருச்சிகத்திலிருந்து தெசை நடந்தால் புத்தி பிரமையும், மான ஹானியும், தார, புத்திராதிகளுக்கு பீடையும், தன நாசமும், யுத்தத்தில் சத்துரு பயம், விவாத கலகமும் உண்டாகும்.

40. சனி தனுசு ராசியிலிருக்கப் பலன் :—சனி தனுசிலிருந்து தெசை நடந்தால் தேவ பிராமண பூஜையும், பந்துக்களில் கல்யாணம், உயர்ந்த ரத்தின வஸ்திராதிகள் பிராப்தி, நீல நிற வஸ்துக்கள் கிடைப்பது, தன் புத்திரர்களுக்கு ஸௌக்யம், கீர்த்தி லாபமுமாம்.

41. சனி மகர ராசியிலிருக்கப் பலன் :—சனி மகரத்திலிருந்து தெசை நடந்தால் அனேக தானிய லாபம், க்ஷேத்திர விருத்தி, சமான ஜனங்களாலும், ராஜாக்களாலும் கவுரவமளிக்கப் பெறுவது, நல்ல புண்ய தீர்த்தயாத்திராதி பலன் கிடைப்பது, விசேஷ சுகமும் உண்டாகும்.

42. சனி கும்ப ராசியிலிருக்கப்பலன் :—சனி கும்பத்திலிருந்து தெசை நடந்தால் வாகனரோகணங்களும், அதிக கீர்த்தியும், யுத்தத்தில் ஜெயமும், புத்திரர்களுக்கு சுகமும், பந்துக்களுக்கு சந்தோஷமும், சதா அன்னதானமும், அனேக தானிய விருத்தியும் உண்டாகும்.

43. சனி மீன ராசியிலிருக்கப்பலன் :—சனி மீனத்திலிருந்து தெசை நடந்தால் கொஞ்ச கஷ்டமும், கொஞ்சசுகமும், குரு துவேஷமும், பந்து ஜனப்பகையும், தன் குலாசார நாசமுமாம்.

## சனி லக்னுதி 12 பாவங்களில் நிற்கும் பலன்

44. சனி 1-ல் நிற்கப் பலன் :—சனி லக்கினத்தில் இருந்து தெசை நடந்தால் சரீரத்தில் வாத ரோகத்தால் பீடிக்கப்பட்டு சக்தி யில்லாமையுமா யிருப்பது, குலோச்சார விரோதம், ராஜ கோபமும், சமான ஜன நாசனம் உண்டாம்.

45. சனி 2-ல் நிற்கப்பலன் :—சனி 2-மிடத்திலிருந்து தெசை நடந்தால் தனங்கள் நஷ்டம், நேத்திர விரோதம், பத்தினிக்கு பாதை, அனேக கலமும், இதரர் வீட்டில் குடியிருப்பதும், இதரருடைய அன்னத்தையே புசிப்பதும், அயலார் சொத்திற்கு அதிக பேராசைப்படுவதும் என்பது.

46. சனி 3-ல் நிற்கப்பலன் :—சனி 3-மிடத்திலிருந்து தெசை நடந்தால் அதிக வைபவமான நற்காரியமும், தனுதிகமும், பந்துக் களில் தான் முக்ய கியாதியாக யிருப்பதும், அதிக கீர்த்தி, சகோதர விருத்தி, புத்திர சமுர்த்தியும், ராஜாங்காதிகாரம் பெறுவதும், அநேக வித விசித்திர வஸ்திர பூஷணங்கள் வரப்பெறுவது என்பதாம்.

47. சனி 4-ல் நிற்கப் பலன் :—சனி 4-மிடத்திலிருந்து தெசை நடந்தால் பந்து சமுர்த்தியும், ராஜ சன்மானமும், கிராமம், பூமிகள் விசேஷிப்பதும், பசு, வாகன விருத்தியும், ஆள் அடிமைகளுக்கு க்ஷேமகரமும், தானியாதிக உற்பத்தியுண்டாகும்.

48. சனி 5-ல் நிற்கப் பலன் :—சனி 5-மிடத்திலிருந்து தெசை நடந்தால் அதிக கஷ்டமும், ஆள் அடிமைகளுக்கு கெடுதியும், பசு வாகன நஷ்டமும், பூமி, க்ஷேத்திரங்கள் நஷ்டமும், ராஜ கோபமும், புத்தி சபலமும், கெட்ட புத்தியுடன் நடப்பதும், சமான பிரபு நாசனமும், யுத்தத்தில் ஜெயமாம்.

49. சனி 6-ல் நிற்கப் பலன் :—சனி 6-மிடத்திலிருந்து தெசை நடந்தால் பெருந்தன்மையான குணமும், தனக்கு விரோதிகளுக் கெல்லாம் நாசகரமும், ராஜ சன்மானமும், பூமி, க்ஷேத்திராதி, கிருஷி மூல தானியாதிகம், ஆளடிமை சேருவது, பாரியா, புத்திராதிகள் சௌக்யமும், ஒரு பட்டணத்திற்கு தலைவனுவதும்.

50. சனி 7-ல் நிற்கப் பலன் :—சனி 7-மிடத்திலிருந்து தெசை நடந்தால் அதிக கீர்த்தி லாபமும், ராஜா மூலத்தினுல் சுகமும், க்ஷேத்திர லாபமும், பொருள்கள், தனங்கள் விசேஷிப்பது, தாரா, புத்திரர்களுக்கு ஸௌக்யமும், சுதந்திரமான முத்திராதிகாரியாவது, அதிக சுபசோபகரமான நல்ல பலனையே அடைவது என்பதாம்.

51. சனி 8-ல் நிற்கப் பலன் :—சனி 8-மிடத்திலிருந்து தெசை நடந்தால் அதிக கஷ்டமும், தன் புத்திருக்கு பீடையும், தன நாச

மும், மதி கெடுதலும், ஸ்தான நாசமும், அகால மரண பாதையும், தன் கிராமத்தில் சத்துரு விருத்தியும், ராஜ கோபம், சர்வ காரியங்களிலும், நாசமடைகிறதும், பசு, வாகன நாசமும், மரணமே வருகிறது, நீசரிடத்தில் அடிபடுவது என்பது.

52. சனி 9–ல் நிற்கப் பலன் :—சனி 9-மிடத்திலிருந்து தெசை நடந்தால் தானியாதிகம், விசேஷமான ஸ்தல தரிசனமும், விசேஷ தீர்த்த யாத்திரை லாபமும், க்ஷேத்திர விருத்தி, ராஜாக்கள் சிநேகங் கொள்வது, நீலநிறமான வஸ்திர பூஷணாதிகள் கிடைப்பது என்பது.

53. சனி 10–ல் நிற்கப் பலன் :—சனி 10-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் நல்ல கீர்த்தி லாபமும், சகல ஜயத்துடன் கூடிய பிரபுத்வமும், கதா புராணாதிகளான நற்கேள்வியால் புத்தி விசேஷிப்பதும், நல்ல புண்ய தீர்த்த யாத்திராதி பலன்கள் சித்திக்குமென்பது.

54. சனி 11–ல் நிற்கப் பலன் :—சனி 11-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தனலாபமும், சத்துரு நாசமும், க்ஷேத்திர விருத்தி, தானிய லாபம், பசுபால் சமுர்த்தியும், வாகன லாபமும், தாரா, புத்திராதிகள் ஸௌக்யமும், பங்காளி வர்க்க விருத்திகரம் என்பது.

55. சனி 12–ல் நிற்கப் பலன் :—சனி 12-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் அதிக கஷ்டமும், ஆள் அடிமைகள் நாசமும், தனச் சேதம், பசு, வாகனாதிகள் நஷ்டம், பூமி க்ஷேத்திரங்கள் நாசம், தார பீடை, சரீராயாஸமா யிருப்பது, சதா சத்துருவினால் பகை வருவது, ஆரம்பிக்கிற வேலைகளெல்லாம் தடைபடுகிறது.

### சனி ஆரோகணத்தில் நிற்கும் பலன்

56. சனி ஆரோகண ராசிகளிலிருந்து தெசை நடந்தால் ஆள் அடிமை, ஜன வர்க்க ஜன விசேஷ மாகுவது, தாரா, புத்திராதி விசேஷ கரமும், அதிக தன லாபம், க்ஷேத்திர விருத்தியும், பசு வாகன விருத்தி, தானிய விருத்தியுமுண்டாகும்.

### சனி அவரோகணத்தில் நிற்கும் பலன்

57. சனி அவரோகண ராசிகளிலிருந்து தெசை நடந்தால் ஸ்த்ரீ நாசம், க்ஷேத்திர ஹானியும், பசுவாகனாதிகள் நாசமும், சமான ஜன கஷ்டமும், கால் நடைகள் நாசமுமாகுமென்பது.

## சனி தெசையில் சனி புக்தி மீ 36 நாள் 3-க்குப் பலன்

சனி லக்கினத்திற்கு கேந்திரகோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலிருந்தாலும், வாகன லாபமும், தன பிராப்தியும்,

கோ விருத்தியும், தானியாதி விருத்தியும், மகாராஜாவால் அபிமானிக்கப்படுவதும், இஷ்ட சித்தியும், அதிக சுகமும், ரத்தின பூஷண லாபமும், மித்துரு ஜனுபி விருத்தியும், மேற்கு திசையில் பிரயாணனம், ராஜ தெரிசனமும், சூத்திர பிரபு மூலத்தினுல் சுகமும், யுத்தத்தில் சத்துரு நாசமும், நீலநிறமான வஸ்த்து வாகன பிராப்தியும், தானிய விருத்தி, கோ, தன சமுர்த்தியும், சத்துரு நாசமும், எத்தின காரியார்த்த சித்தியும், தேகாரோக்யமும் உண்டாகும்.

சனி தெசையில் சனி புக்தியில் வியாதி, பீடை, ஸ்தான நாசம், மனோ துக்கம், ராஜ பாதை, சோர பாதை, அக்னி பீடை, தாயாதி ஜனங்களினுல் கலகமும், குரூர மாஸங்களில் அதிக பயம், சுப மாஸங்களில் சுப பலமும், நீச ராசியிலிருக்க தன நாசமும், தனுசு மீன ராசிகளிலிருந்தால் இந்த புக்தியில் சுகமும், ராஜ யோகமும், விசேஷ தனலாபமும் உண்டாகும்.

சனி லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலாவது, நீச ராசியிலாவதிருந்து புக்தி நடந்தால் வியாதி பயமும், மனோ விஸனமும், அதிக கஷ்டமும், சத்துரு பயமும், ஸமான ஜன நாசனமும், நாற்கால் ஜீவராசிகள் நாசமும், நீச ஜாதிகளிடத்திலும், சத்துரு ஜனங்களிடத்திலும், கலகம் விளைவதும், அதிக துக்கமும், நாணு மூலங்களிலும், தன நாசமும், தானிய நாசமும், உத்யோக பங்கமும், ஸ்தான நாசமும், அபகீர்த்தியுமாம்.

சனியைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும் தலை நோய் காணும், புத்தி சபலம், உத்யோக பங்கம், ஸ்தானம் பேர்ந்து போதல், ராஜ குரோதமுமாம்.

சனியைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் வர்க்கம் நாசமாம், மனோ விசாரம், அதிக துக்கம், எந்த வேலையிலும் நஷ்டமாம்.

சனியைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் யுத்தத்தில் அப ஜெயமும், சந்தேகமில்லாமல் ஜுரம், அதிஸாரம், கிராணி ரோகங்களுண்டாம்.

சனியைப் புதன் கூடினுலும், பார்த்தாலும் வித்யா பாண்டித்யத்தினுல் தன லாபம் வரும், பந்து பிரியமும், எத்தின காரியங்கள் சித்தியாமென்பது.

சனியைக் குரு கூடினுலும், பார்த்தாலும் புத்திர நாசம், தன நாசம், சரீர பாதை, புத்தி சபலத்வமும், உண்டாகும்.

சனியைச் சுக்கிரன் கூடினுலும், பார்த்தாலும் தார நாசமும், தகப்ப ஸாபமும், வியாதி பீடை, அன்னிய ஸ்த்ரீகளால் கலகமுமாம்,

சனி அஷ்டமாதிபதியுடன் கூடினாலும், அஷ்டமத்தில் இருந்தாலும், 2, 7-மிடங்களில் இருந்தால் அபமிருத்துயுவாம். இந்த தோஷ பரிகாரத்திற்கு மிருத்தியுஞ்ஜய ஜெயம், அதற்குப்பின் தில தானமும் செய்யவேணும். பின்னால் சாந்தி செய்வது.

## சனி தெசையில் புதன் புக்தி மீ 32 நாள் 9 க்குப் பலன்.

புதன் லக்கினத்திற்கு கேந்திர கோணத்திலிருந்தாலும், 3, 11-மிடங்களிலிருந்தாலும், உச்சராசியிலிருந்தாலும் விவாஹம் நடத்தலும், பாக்ய விருத்தியும், வித்யா விருத்தியும், பந்து ஜன உபகாரமும், வஸ்திராபரண ஸமூர்த்தியும், ஸமான பிரபு ஸன்மானமும், மிலேச்ச பிரபுவினால் சகாயமும், இஷ்ட சித்தியும், அதிக சுகமும், தன் புதன் வாரத்தில் ராஜ தெரிசனமும், கிரைய விக்கிரையங்களில் லாபமும், விவகாரத்தில் ஜெயமும், சபா பூஜ்யதையும், அன்னதானம் நடத்தல், விஷ்ணு பூஜையும், தேவ பிராமண பூஜையும், தாரா, புத்திராதி ஸௌக்யம், அபிவிருத்தியாம்.

புதன் லக்கினத்திற்கு 6, 8, 12-லிருந்தாலும், நீச ராசியிலிருந்தாலும் சுற்றத்தாருடன் கலகம், நானாவித துக்கம், தாராபுத்திரருடன் கலகம், வடக்கு திக்கில் சத்துரு பயம், எடுத்த வேலை தடைபடுதல், பந்து ஜன பீடை, கிருஷி நஷ்டம், க்ஷேத்திர நாசம், வாகனாதிகள் விரயம், பசு ஹானி, வித்யா நாசம், மாதா வர்க்கத்தாருக்கு பீடையாம்.

புதனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் பந்துக்களுக்குப் பிரீதியுமாய், விவாஹ காரிய எத்தனம், ராஜாவால் ஸௌக்யம் உண்டாகும்.

புதனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் முத்துக்களுடன் ரத்தினங்களை அடையப் பெறுவதும், மேன்மையான வஸ்துக்கள் சம்பாதிப்பது, இஷ்ட சித்தியுமாம்.

புதனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் சத்துரு விருத்தி சமையல் சாலைக்கு அதிகாரியாவதும், சகோதரர்கள் அபிவிருத்தி என்பது.

புதனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் வேத சாஸ்திரங்களை அப்பியாசிப்பதும், பிரஸங்கிப்பதும், ராஜ சினேகிதமும், சந்தேகமின்றி பிள்ளை பிறக்குமென்பது.

புதனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் வஸ்திர பூஷணாதிகள் கிடைப்பது, ராஜ பேட்டி காண்பது, ஸ்திரீ மூலத்தினால் சுகம்,

புதனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் சரீர பாதை, வெகு ஜனங்களுடன் கலகம் செய்வது, அபகீர்த்தியும், பயம், ஆளடிமைகளால் கஷ்டம் நேருவது என்பது.

புதன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடினாலும், சுபமும், சம்பத்காரமும், பொன், பூஷண பிராப்தியும், இதுவரையில் காணாத பொருளைக் காண்பது, பசு, எருமை மாடுகள் விருத்தி, நித்தியம் பிராம்மணருக்கு அன்னமளிப்பதும், சுபசோபனங்களையே நடத்துவது, சூத்திர பிரபுவினால் சுக முண்டாகிறது, சமான ஜன சினேகமும், கிராமாதிகாரமும் உண்டாகும்.

புதன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலுமிருந்து, பாப கிரக சம்பந்தமானாலும், பாப கிரக பார்வை பெற்றாலும், பாப காரியத்தில் எண்ணமும், திடீரென்று கலகம் விளைவதும், பந்து ஜன நாசமும், வித்யாவாதத்தினால் பயமும், வெளிதேச எண்ணமும் உண்டாகும்.

புதன் 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணம் சம்பவிக்கும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு எருமை தானம் செய்யவும்.

## சனி தெசையில் கேது புக்தி மீ 13 நாள் 9-க்குப் பலன்

கேது லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலிருந்தால் கலகமும், நாண விரோதமும், சகல வேலைகளும் பங்கப்படுகிறது, நாற்கால் ஜீவராசிகள் நஷ்டம், சமான ஜனங்கட்கு துக்கம், பந்து கலகம், தாரா, புத்திராதிகளுக்கு பீடை, பிரயாணத்தினால் காரிய விக்னம், விதவை ஸ்த்ரீயினால் கலகம், நீசரிடத்தில் சேவகா விருத்தி, சூத்திர பிரபுவினிடத்தில் விரோதம், ஸ்தான பேதம் செய்கிறது, தனச் செலவு, கிராணி, சுர பீடை, உத்தியோகம் மாறுதல், புத்திமாராட்டம், அவமான மடைகிறது, அபகீர்த்தி உண்டாகும். கேது தெசாநாதனுக்கு 8, 12-மிடங்களிலிருந்தால் அதிக கஷ்டம் உண்டாகும்.

கேது லக்கினத்திற்கு 11-மிடத்திலிருந்தாலும், 3, 6-மிடங்களிலிருந்தாலும் வாகனங்களுண்டாவது, யுத்தத்தில் சத்துரு ஜெயம், தாரா, புத்திரர்கள் சௌக்கியம், சினேகித பிரபு மூலத்தினால் சுகம், உத்யோக லாபம், அதிக சுகம், தனதானிய சமிர்த்தி, குதிரை முதலான வாகன பிராப்தி, மகாராஜானுக்கிரகம் கிடைப்பது, யாகயக்ய தீக்ஷாதி தர்ம காரிய சித்தி, மந்திர சித்தியும் உண்டாகும்,

கேதுவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்தான நாசம், உத்தியோக நாசம், துக்கமும், மனோ சிந்தை, ரோக பயமும் உண்டாகும்.

கேதுவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் பால், பழத்துடனே இஷ்டான்ன போஜனம் செய்கிறது, வித்தியாதிக கீர்த்தியும், சர்வ காரியமும் ஜெயமாகும்.

கேதுவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் தனதானியங்கள் நஷ்டம், ஸ்தான நாசம், இதர கிரக வாசம், யுத்தத்தில் சத்ரு பயம் உண்டாம்.

கேதுவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் வித்தியாப்பியாசம் செய்வான், புராண கதைகள் கேட்பதும், சபைகளில் தான் சொல்லுவதும், எத்தின காரியங்கள் சித்தி பெறுவதுமாகும் என்பது.

கேதுவைக் குரு கூடினாலும், பார்த்தாலும் குருக்களுக்கு நாசம் அல்லது புத்திரா அரிஷ்டம், பிராமண விரோதம், அனேக விதங்களிலும் தன விரயம் செய்வது.

கேதுவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் நூதன வஸ்த்ராபரணங்கள் கிடைப்பதும், பூமியில் முன்னோர்களால் புதைத்து வைத்த தனத்தை எடுப்பது, ராஜ சமானனாக ஐஸ்வரியங்களுடன் கீர்த்தியோடு வாழ்வதாம்.

கேதுவைக் சனி கூடினாலும், பார்த்தாலும் தாரா, புத்ராதிகளுக்கு அரிஷ்டம், சமான ஜனங்களுக்கு சோகம் வருவது, நானாவித ரோக பாதைகளை அனுபவிக்கிறது.

கேது தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடி இருந்தால் தார சௌக்யம், பாக்ய விருத்தி, எத்தின காரிய சித்தி, ரத்தின லாபம், பொன், பூஷண சேர்க்கை, மனோவுல்லாசம், வித்தியாதிகத்தினால் ஜயம் பெறுவது, அதிக வைபவத்துடன் இருப்பது, யுத்தத்தில் சத்ருவை ஜெயிப்பது.

கேது தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களில் பாபக் கிரகங்களுடன் கூடி இருந்தால் தாரா, புத்திர நாசம், சகல காரியமும் அபஜெயம், யாத்திரையில் காரியக் கெடுதி, இஷ்டப் பிரபு நாசம், விதவைகளால் கலகம், எடுத்த வேலை தடைபடுகிறது.

கேது 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் வரும். இந்த தோஷம் நிவாரணத்திற்கு மிருத்யுஞ்ஜய ஜபம் செய்து சுவர்ணமும், எள்ளும் தானம் கொடுத்து சாந்தி செய்யவும்.

## சனி தெசையில் சுக்கிர புக்தி ஸ்ரீ 38-க்குப் பலன்

சுக்கிரன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் மிடங்களிலும், தன் உச்ச ராசியிலும் இருந்தால் விவாஹம் நடத்து தல், சர்வ காரியங்களிலும் ஜெயம் பெருதல், புத்ர லாபம், வீட்டில் சகோதர சகோதரிகளுக்கு விவாஹம், பந்து விருத்தி, உயர்ந்த வஸ்திராபரணங்கள் கிடைப்பது, நூதன கிரகம் கிடைப்பது, தாரா, புத்திராதிகள் சௌக்யம், சதா வாகன சஞ்சாரியாய் இருப்பது, தன் பேரினால் அதிகார முத்திரை யிடுதல், கீர்த்தி லாபம், அனேக காரியங்களினால் சித்தி பெறுவது, நல்ல புண்ய பலப்பிராப்தியும் உண்டாகும்.

சுக்கிரன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களில் இருந்தும், நீச ராசியில் இருக்க பாபக் கிரகங்களுடன் கூடி இருந்தால் நீச ஸ்த்ரீ களை கூடுவது, அதிக கலகம் விளைவது, தன நாசம் வருவது, பந்துக் களுக்கு பகை, அனேக காரியங்கள் நாசம், வாகனாதி, கால், நடை கள் விரையம் அடைவது, மனோ துக்கம், மான பங்கம், அபகீர்த்தி மனதில் அச்சம், புத்திர, மித்திர விரோதம். தன் தாரத்திற்கு வியாதி யினால் பீடிதமுண்டாம்.

சுக்கிரனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் எத்தனித்த வேலை தடைபடுவது, தன் பிரபுவுடனேயாவது அல்லது தனக்கு மேலான அதிகாரியுடன் விரோதத்தினால் மனவியாகூல மடைவது.

சுக்கிரனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் ரத்னாபரணங் கள் கிடைத்தல், உத்தமமான அஸ்வ லாபமும், விசித்ர வஸ்த்ர லாபமும் உண்டாகும்.

சுக்கிரனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் வியாதியினால் துன்பப்படுகிறது, அதிக பயம், சமான பிரபுவினால் கோபிக்கப்படு கிறது, தாயாதி ஜனங்களுக்கு அரிஷ்டம் என்பது.

சுக்கிரனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் வேத சாஸ்த்ரங் கள் அப்பியாசிப்பது, பந்து விருத்தி, குடும்பத்தில் விவாஹாதி சுபசோபனங்கள் நடத்துதல், புத்ர பிராப்தியும் உண்டாகும்.

சுக்கிரனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் புதையலெடுப்பது, யாக யக்யங்களுக்கு கர்த்தாவாவது, எப்போதும், புண்ணிய வேலையையே செய்வது.

சுக்கிரனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் தாரவர்க்கத்தாருக்கு நாசம், தன் இஷ்டப் பிரபுவுக்கு அதிக கஷ்டம், தன் சனி வாரத்தில் ராஜாங்கத்தால் கெடுதி சம்பவிக்கும்.

தெசாநாதனுக்கு சுக்கிரன் கேந்திர கோணங்களிலும், 3, 11-

மிடங்களிலும், சுபக்கிரகங்களுடன் கூடி இருந்தால் அதிக லாபமும், ராஜாக்களால் சன்மான மரியாதை பெறுதலும், விசேஷ சுகமும், புத்ரோற்பத்தியும் உண்டாகும்.

வீட்டில் பசுமாடுகளும், அதிக தனதானியங்களும் நிறைந்திருக்கும், வஸ்த்ர பூஷண வாகனுதிகளும், விவசாயங்களில் தானிய லாபமும், தூரதேச போக்குவரத்துக்கு எண்ணங்கொள்வதும், புண்ய தீர்த்தஸ்தான ஸ்தல விசேஷமும், சுப காரியங்களில் சிந்தனை கொள்வதும், அனேக காரியங்களினுல் தனந்தேடுதல் என்பது.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களில் பாபியுடன் கூடியிருந்தால் அதிகார பங்கம், தன நாசனம், அனேக ஜனங்களுடனே கலகித்துக் கொள்ளுவது, ஸ்தான நாசம், மானபங்கம், ஸ்த்ரீ மூலத்தினுல் கலகம் விளைந்து அதிக கஷ்டப்படுவது.

சுக்கிரன் லக்கினத்திற்கு 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணம் வரும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு 5 ஆடு தானம் செய்யவும்.

## சனி தெசையில் சூரிய புக்தி மீ 11 நாள் 12-க்குப் பலன்

சூரியன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், லாபஸ்தானத்திலும், உச்ச ராசியிலும், பலமுடையவனுய் இருந்தால் ராஜ்யாதிகார வைபவம், ரத்ன மாணிக்காபரணமும், தீபாந்தரங்களில் வஸ்த்து லாபமும், தன் வாரத்தில் ராஜ சன்மானமும், பந்துக்களுக்கு உபகாரமும், வித்யாதிகமும், சகல ஜெயமும், யுத்தத்தில் சத்ரு நாசமும், தன் பேரினுல் அங்கீதமும், வித்வான்களால் கொண்டாடப்பட்ட கீர்த்தி விசேஷமும், சர்வ காரிய சித்தியும், சரீர ஆரோக்யமும் உண்டாகும்.

சூரியன் லக்கினத்துக்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும் இருந்தால் ராஜ கலகம், யுத்தத்தில் அபஜெயம், குலாசார ஹீனம், நாற்கால் ஜீவன்கள் நாசம், தேக சோம்பலாக இருப்பதும், அதிக துக்கமும், பயித்திய ரோகமும், சமான ஜனங்களுக்கு கஷ்டமும் உண்டாகும்.

சூரியனைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் புத்தி மாறுதல், விசேஷ பயம், அனேக ஜனங்களுடன் கலகம், அதிசார வியாதியினுல் பயம் உண்டாகும்.

சூரியனைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் சுற்றத்தார்களுக்கு பீடை, அம்மை ஜுரங்களினுல் ஆபத்து, அஸ்த்ர, சஸ்த்ர

ஆயுதங்களினல் அடிபட்டு பாதை படுகிறது, நீசரிடத்தில் கலகம் விளைவித்து கொள்ளுவது.

சூரியனைப் புதன் கூடினுலும், பார்த்தாலும் தீர்த்த யாத்திரை யினுல் புண்ய பலன் கிடைப்பது, புதவாரத்தில் ராஜ சன்மானமும், கிரைய விக்கிரயங்களில் அதிக லாபமும் உண்டாகும்.

சூரியனைக் குரு கூடினுலும், பார்த்தாலும் புத்திரர்களுக்கு ரோக பீடிதம், தேக பாதை, தன விரையம், தன் தாரத்துக்கு கெர்ப்ப நாசம், மனோ சிந்தை, வியாதி சம்பவமும் உண்டாகும்.

சூரியனைச் சுக்கிரன் கூடினுலும், பார்த்தாலும் நாற்கால் ஜீவன் கள் லாபம், வஸ்த்ராபரண பிராப்தி, எத்தின காரியசித்தி உண்டா கும்.

சூரியனைச் சனி கூடினுலும், பார்த்தாலும் பிதா வர்க்கத்தா ருக்கு மரணம், அடிமை நாசம், கிருஷி தானிய நாசமும் உண்டா கும்.

சூரியன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுபக்கிரகங்களுடன் கூடி யிருந்தால் தனதானிய லாபம், அதிக சுகம், விசேஷ கீர்த்திப் பிரதாபம், யுத்தத்தில் சத்ரு நாசம், மேற்கு திக்கில் பிரயாணம் போன இடத்தில் கலகம், தாரா, புத்ராதி சௌக்யம், பசுவாகன லாபம், மித்ர பிரபுமூலத்தினல் சகா யம், எத்தின காரிய சித்தி.

சூரியன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களில் பாபக்கிரகங் களுடன் கூடியிருந்தால் வியாதி பீடை, சமான ஜன நாசம், கலகம், புத்தி சபலம், மனோ விசனம், வாகனுதிகள் நஷ்டம், சத்துருவால் பயமுண்டாகும்.

சூரியன் லக்கினத்திற்கு 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மர ணம் சம்பவிக்கும். இந்த் தோஷம் நிவர்த்தியாவதற்கு சூர்ய பிரார்த்தனை செய்து, பூசணிக்காயில் பொன்னைப்போட்டு தானம் செய்தால் தேகாரோக்யம் உண்டாகும்.

## சனி தெசையில் சந்திர புக்தி மீ 19-க்குப் பலன்

சந்திரன் குருவினல் பார்க்கப்பட்டாவது, மற்ற சுபக்கிரகங் களுடன் கூடியாவது இருந்தால் சந்தேகமில்லாமல் ராஜ்யபரிபாலனம் செய்வான், மிலேச்ச பிரபு இஷ்டமாவது, குடும்பத்தில் தாரா, புத்திர விருத்தி, ஆள் அடிமை ஜனங்கள் அதிகரிக்கும், மாதா, பிதாவுக்கு சுகம், பசுவாகன விருத்தி, விசேஷ சௌக்யம் உண்டாகும்.

சந்திரன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம்

இடங்களிலும், உச்ச ராசியிலும் இருந்தால் கங்கா ஸ்தானமும், சேது ஸ்தானமும் கிடைக்கும், எத்தின காரியார்த்த சித்தி, விவாக சுப வேலைகள் பிராப்தமாகும், ஐஸ்வரியாதிகம் உண்டாகும்.

குதிரை வாகன சஞ்சாரியும், சர்வ ஜனங்களுக்கு உபகாரம் செய்கிறதும், மனோ வுல்லாசமும், சபைகளிலே ஜபம் அடைகிறதும், சமான ஜனங்களால் சன்மானிக்கப் படுகிறதும், அனேக விதங்களி னால் தனலாபமும் வருமென்பது.

சந்திரன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியி லும், க்ஷீண சந்திரனாகவும், பாபக் கிரகங்களுடன் கூடியும், பாப க்ஷேத்திரங்களிலும் இருந்தால் அதிக கஷ்டமும், ராஜ கோபமும், தன விரையமும், மாதா பிதாக்களுக்கு கர்மம் செய்கிறது, பெண், பிள்ளைகளுக்கு அரிஷ்டமும், இஷ்டர்களுக்கு கஷ்டமும், தேகாலாஸ் யமும், சரீர பீடையும் உண்டாகும்.

சந்திரனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் தலை நோய் காண்பது, பிதுரு வர்க்கம் விரோதப்படுவது, ஸ்தான சலனம் ஏற்படு வதாம்.

சந்திரனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் யுத்தத்தில் பயமும், தாயாதி ஜன கலகமும், சத்துரு விருத்தியும் உண்டாகும்.

சந்திரனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் தர்மகாரிய விருத்தி யும், அன்னதானாதிகமும், தேவ பிராமண விஸ்வாச பக்தியும் உண் டாகும்.

சந்திரனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் குதிரை முதலான வாகனங்கள் கிடைப்பதும், வீட்டில் கலியாண சம்பிரமமும், ராஜாக் கள் இஷ்டத்தினால் சகல காரிய சித்தியும், அதிக சுகமும் உண்டா கும்.

சந்திரனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் பால் போஜனம் செய்கிறதும், ராஜாக்களால் பூஜிக்கப்படுகிறதும், அதிகார சித்தி, ராஜ சினேகிதமாய் இருப்பதாம்.

சந்திரனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் வாத ரோகங்களினால் பீடிதமும், ஆள் அடிமைகள் நாசமும், பசுவாகனாதிகள் நஷ்டமும், நீசராலும், சத்ருக்களாலும் கலகமும் உண்டாகும்.

சந்திரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுபக்கிரகங்களுடன் கூடியுமிருந்தால் சுக பலன் களையே பெறுவான், விசித்திர வஸ்திராபரண லாபமும், தனதானிய விருத்தியும், உயர்ந்த வஸ்த்துக்கள் கிடைப்பதும், வித்வான்க ளுடனே நேசிப்பதும், புண்ய தீர்த்தாதிபல பிராப்தமும், தூர தேசத்

தில் இருந்து கலியாண பத்திரிகை காண்பதும், எத்தின காரியங்கள் சித்தியாகிறதும், அனேக மூலங்களினால் தன லாபத்தைப் பெறுவதுமாகும்.

சந்திரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாபக்கிரகங்களுடன் கூடியுமிருந்தால் தூரதேசப் பிரயாணமும், காரிய விக்னமும், யுத்தத்தில் பிராணபயமும், பந்துக்கள் விரோதமும், அனேக வித மனோ சிந்தையும், பசுவாகன நஷ்டமும், தன விரையமும், துக்கமும் உண்டாகும்.

சந்திரன் 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணம் சம்பவிக்கும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு வெள்ளை பசு தானம் செய்யவும்.

## சனி தெசையில் செவ்வாய் புக்தி ஸ்ரீ 13 நாள் 9-க்குப் பலன்.

செவ்வாய் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், உச்ச ராசியிலும் இருந்தால் தாயாதி விருத்தி, சகோதர நாசம், தாயாதிகளில் வியாஜ்யம், சரீர கஷ்டம், புத்தி சபலம், தேசாந்திர கமனம், இஷ்ட விரோதம், காரா கிரக வாசம், ராஜ பயம், பந்து நாசம், தீடீரென்று கலகம், தாரா புத்திரர்களுக்குப் பீடை, ராஜாவுடனே கலகம், தன் எஜமானனால் அதிக பயம், சமான ஜன சோகம், கிருஷி நஷ்டம், க்ஷேத்திர நாசம் என்பது.

செவ்வாய் லக்கினத்திற்கு 6, 8-மிடங்களிலும், 3, 11-மிடங்களிலும், பலாதிகனாய் இருந்தால் ராஜாக்களுடனே சினேகம், அதிக சுகம், தனதானியாதிகம், இஷ்ட சித்தி, கலியாண வைபவம், ஐஸ்வரியாதிகம், தன் வாரத்தில் ராஜ தரிசனம், எத்தன காரிய சித்தி, சகோதர விருத்தி, தாயாதி ஜன நாசனம், நாற்கால் ஜீவன்களுக்கு அபிவிருத்தியும் உண்டாகும்.

செவ்வாயைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் சகோதர நாசம், மதிமயக்கம், மானபங்கம், அபகீர்த்தி இவைகள் உண்டாகும்.

செவ்வாயைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்திரீ லாபம், புத்ர லாபம், மனோ வுல்லாசம் வித்யா பாண்டித்தியம், அதிகாரத்துவம் இவைகள் உண்டாகும்.

செவ்வாயைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் பந்து உபகாரமும், தன் பத்தினிக்கு சந்தோஷகரமும், அதிக பாண்டித்யமும் அழகான வீடு அமைப்பது என்பது.

செவ்வாயைக் குரு கூடினாலும், பார்த்தாலும், புத்திர பீடை, தன விரையம், தேக பாதை, புத்தி சபலம், அதிகாரத்தில் பங்கம் வரும் என்பதாம்.

செவ்வாயைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் போக பாக்ய மும், அதிகமாக ஸ்த்ரீ போகமும், வீட்டில் கலியாண வைபவமும், நல்ல வஸ்திராபரணங்களும் உண்டாகும்.

செவ்வாயைச் சனி கூடினாலும், பார்த்தாலும் தாழ்ந்த குலஸ்த ருக்கு அடிமை செய்வது, அதிக பயம், உத்தியோகம் மாறுதல், சமான ஜனங்களுக்கு பீடை உண்டாகும்.

செவ்வாய் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 6, 11-மிடங்களிலும், பலாதிகனாய் இருந்தால் விவாஹாதி சுகமும், தாரா, புத்ராதிகள் சௌக்யமும், மனோ உற்சாகமும், பூமி லாபமும், தான்ய விருத்தியும், பசு விருத்தியும், தனசமுர்த்தியும், எத்தனகாரிய சித்தியும், சரீர ஆரோக்யமும் உண்டாகும்.

செவ்வாய் தெசாநாதனுக்கு 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலு மிருந்தால் அபகீர்த்தியும், அதிக பயமும், மானஹானியும், சோர பாதையும், அக்னி பீதியும், சத்ருக்களினால் பீடிதமும், ஸ்தான நாச மும், எத்தன காரியப்பங்கமும், ஆயுதங்களினால் பாதையும் உண்டா கும்.

செவ்வாய் 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணம் சம்பவிக் கும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு எருமைக்கிடா தானம் செய்யவும்.

## சனி தெசையில் இராகு புக்தி மீ 34 நாள் 6-க்குப் பலன்

தஞ்சாவூர்.

ராகு புக்தியில் கலகங்களினால் மனோ விசனம், ராகு லக்னாதிபதி யுடன் கூடியிருந்தால் ஆதியில் சௌக்யமும், தனலாபமும், மத்திய பாகத்திலும், அந்திய பாகத்திலும் துக்கமும், மரண சமாச்சாரம் கேள்விப்படுகிறது, ஹிருதய சம்பந்த ரோக பாதை, மானபங்கம், தனதானிய பசுவாகன நாசமென்பது.

ராகு லக்கினத்திற்கு உபஜெய ராசிகளிலும், விருஷபம், கட கம், கன்னி, மிதுனம், இந்த ராசிகளிலும் இருந்தால் ராஜ சன்மான மும், மகாராஜாக்களால் அபிமானமும், இஷ்டான்ன போஜனமும், பட்டுபட்டாவளிகள் பிராப்தி, பூஷணலாபம், இஷ்ட தெய்வ கடாக்ஷத்தினால் சகல காரிய சித்தி, சனி செவ்வாய் ராகு கூடி இருந் தால் தார சோகம், மாதா பிதா நாசம், பந்து விசனமும் உண்டா கும்.

ராகுவைக் குரு கூடினாலும், பார்த்தாலும் குலாசார பங்கம், புத்திர பீடை, திரவிய நஷ்டம், தேகபாதை உண்டாகும்.

ராகுவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் தார புத்ராதிகளுக்கு நாசம், பாரியா விரோதம், மனோ துக்கம், பசுவாகனாதிகள் நஷ்டம் என்பது.

ராகுவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் சமான ஜன நாசம், சண்டாள சாதியாருடன் கலகம், அந்த மூலத்தினால் அதிக தனம் நாசம் என்பது.

ராகு தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 6, 11-ம் இடங்களிலும், சுபக்கிரகங்களுடன் கூடி பலாதிகனாக இருந்தால் தனதானிய விருத்தி, வாகனாதிகள் பிராப்தி, தாரா, புத்ராதிகள் சௌக்யம், சமான பிரபுவினால் சன்மானம், அனேக மூலங்களினால் தனலாபம் உண்டாகும் என்பது.

ராகு தெசாநாதனுக்கு கேந்திரங்களிலும், நீச ராசியிலும், 12-ம் இடத்திலும், பாபக் கிரகங்களுடன் கூடியிருந்தால் அதிக கஷ்டம், விசேஷ ஆபத்து, பந்து சோகம், வியாகூலம், விதவைகளால் கலகம், தாயாதிகளுடனே கலகம், ராஜாங்க மூலத்தினால் தன நாசம் வரும் என்பது.

ராகு 2, 7-மிடங்களில் இருந்தால் சந்தேகமில்லாமல் அகால மரணம் சம்பவிக்கும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சர்ப்ப தானம் செய்து, சுப்பிரமணியரிட ஜெபமும், செய்ய தேகாரோக்யம் உண்டாகும்.

ராகு லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 6, 11-மிடங்களிலும் அமிசையில் உச்சமாயும், உச்ச ராசியிலும் இருந்து பலாதிகமுள்ள கிரகங்களுடனே கூடியிருந்தாலும் அல்லது யோக காரக கிரகங்களுடன் சம்பந்தப்பட்டாலும் ராஜ்ய லாபம், ராஜ சன்மானம், நித்யாசார சுகர்ம பிராப்தி, தேவதா பூஜை, குரு பக்தி, எத்தன காரியார்த்த சித்தி, தாரா, புத்ராதி சௌக்யாதிகம், புத்திர பிராப்தி, விசேஷமான சுகமும், அதிக தன லாபமும் உண்டாகும்.

ராகு லக்கினத்திற்கு 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும் இருந்தால் சரீரத்தில் அதிக வியாதி சம்பவிக்கும், எத்தன காரிய பங்கம், விதவை ஸ்த்ரீகளால் கலகம், நீச ஸ்த்ரீயுடன் சகவாஸம், தாழ்ந்த குலத்தாருக்கு அடிமை செய்வது, சூத்திர பிரபுவினால் கஷ்டம், பசுவாகன நஷ்டம், அடிமை ஆள்கள் நாசம், தன நாசம், அதிகார நாசம், சகோதரிகளுக்கு அரிஷ்டம், பாட்டனாருக்கு மரணம், சரீர பாதை, புத்திமாருட்டம் உண்டாகும்.

ராகுவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ராஜாங்கத்தில்

தண்டனை அடைவது, தன விரையம், பித்தவிகாரம், ரோக பாதை, காடு, மலைகளில் சஞ்சரிக்கிறது.

ராகுவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மாதுரு பீடை, அதிக பயம், அபிமான பங்கம், அப கீர்த்தியும் உண்டாகும்.

ராகுவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் ஆயுதங்களினால் காயமும், சகோதர நாசம், அக்னி பாதை உண்டாகும்.

ராகுவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் வித்யா லாபம், வஸ்திராபரண பிராப்தி, மித்ரு விரோதம் என்பது.

## சனி தெசையில் குரு புக்தி மீ 30 நாள் 12-க்குப் பலன்.

குரு லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலுமிருந்தால் தாரா, புத்திர விருத்தி, வீட்டில் கலியாணாதி சுப விருத்தி, விசித்திரமான வீடியற்றுவது, உயர்ந்த வஸ்த்துக்கள் பிராப்தி, அதிக தனலாபம், ராஜ்யாதிகாரம், யக்யயாகாதிகளில் சிந்தை, தன் பிரபுவினால் சுகம், தன் வாரத்தில் பிரபு தரிசனம், க்ஷேத்திர விருத்தி, தான்ய லாபம், வாகனாதி விசேஷம், நித்யம் அன்னதானம் செய்கிறது, புண்ய தீர்த்த யாத்ராபலன் இவைகள் உண்டாகும்.

குரு லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும் இருந்தால் குருவுக்கு ஹானியாம், புத்திர ஹானி வரும், பந்து விரோதம், குல தர்ம நாசம், தன நாசம், புத்தி விகல்பம், சரீர ஜாட்டியம், ஸ்தான நாசம், உத்தியோக பங்கம், க்ஷேத்திர நாசம், தானிய நாசம், யுத்தபயம், சத்துரு விருத்தியு முண்டாகும்.

குருவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் குரு விசுவாஸ பக்தியும், தேவ பிராமண பூஜை, தீர்த்த யாத்ரா பல பிராப்தி, சிவ பூஜா பலமும் சித்திக்கும்.

குருவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் ஒரு பட்டணத்திற்கு அதிபதியாவதும், குதிரை, பல்லக்கு முதலிய வாகனங்களும், யுத்தத்தில் ஜெயமும் உண்டாகும்.

குருவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் ரத்தினங்களில் சிகப்பு நிறமான ரத்தின லாபமும், சகோதர விருத்தி, க்ஷேத்திர விருத்தியும் உண்டாகும்.

குருவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் குருவை பூஜிப்பது, சிவ பூஜா பல சித்தியும், புத்திர பிராப்தியுமுண்டாகும்.

குருவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீ சௌக்யம், விசேஷ லாபமும், வாகன பிராப்தி, பூஷணங்களணிவது, மஹா ராஜாபிமான முண்டாகும்.

குருவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் அடிமைகள் நாசம், பசு வாகன பீடை, தானிய க்ஷயம், தேஹ பாதையு முண்டாகும்.

குரு தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங் களிலும், சுப கிரகங்களுடன் கூடியுமிருந்தால் கல்யாணாதி சுபகாரங் கள் நடத்துவதும், தாராபுத்திர ஸௌக்யமும், புத்திர ஜனனமும், தன்மித்துரு பிரபுவினால் ஸௌக்யமும், ராஜாங்க மூலத்தில் தனலாப மும், பிராம்மண பிரபு சினேகமும், பந்து ஜனோபகாரமும், யக்ய கர்மாதிக பலபிராப்தி, அன்ன தானமும் செய்வது என்பது.

குரு தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாபிகளுடனும் கூடியிருந்தால் குரு, புத்திரர் நாசமாம், சமான ஜனரிஷ்டம், இஷ்ட மான ஜனங்களுக்கு விரோதம், தன நாசனமும், சூத்திர ஜனங்கள் இடத்தில் ஸேவகா விருத்தியும், அதிக வியாதியினால் துன்பப்படல், ஸத்ரீ பீடை, பந்து விரோதமும் வரும்.

குரு தன்னிட நவாமிசத்தில் பலத்துடன் கூடியிருந்தால் பின் னிட்டு ஸௌக்கியமும், நஷ்டமான ராஜ்யம், திரும்பி வருவதும், தன லாபமும், புத்திரரும், பேரன்மாரும், விருத்திப்பது, புக்தி அந் தியபாகத்தில் ரோக பீடிதமும், சுபரால் பார்க்கப்பட்டால் சரீரகாந்தி யுண்டாகும்.

குரு லக்கினத்திற்கு 2, 7-மிடங்களிலிருந்தால் அபமிருத்யு தோஷம் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்திக்கு திரியம்பக ஜெபம் செய்து, பொன்னால் செய்த ஆடு தானம் செய்தால் ஆரோக் கியமுண்டாகும் என்பது.

சனி தேசை சம்பூரணம்

---

# புதன் தெசை வருஷம் 17-க்குப் பலன்

பொது.

1. புதன் தெசையில் ஆதிபாகத்தில் தனதானிய சம்பத்தும், மத்திய பாகத்தில் ராஜ ஸன்மானமும், கடைசி பாகத்தில் சுற்ற விரோத மேற்படு மென்பது.

2. புதன் ஸ்தான பலாதிகனாக யிருந்தால் கீர்த்தியும், சுப பலன்களையும் அடையச் செய்யும்.

3. புதன் ஸ்தான பலஹீனனாக இருந்தால் ஸ்தான நாசம், தார, புத்திரர்களுக்கு பயம், இதர தேச வாஸத்தினால் துக்கமும், அனேகவிதமான அவமான காரியங்கள் நடத்துவது.

4. புதன் திக்பல சகிதனாக இருந்தால் இதர திக்குகளினால் அடையப்படும் தனம் அதிகமாகும், ஸௌகியாயும், ராஜ சினேக முடையவனாகியும், கந்த புஷ்பாதிகளை சதா அணிவதாம்.

5. புதன் காலபலாதிகனாக இருந்து தெசை நடந்தால் சரீர சௌக்யம், தாரா, புத்திராதிகள் சந்தோஷம், கெங்கா ஸ்நானங்களி னால் பரிசுத்தம், சன்மானம் பெறுவது.

6. புதன் நைசர்க்கிக பலமுடையவனாக இருந்து தெசை நடந்தால் பிரயத்தனம் இல்லாமல் சுபாதிகள் நடத்துதல், வித்யா விவாதமும், சுற்றத்தாருடனே பகை, தாய்க்கு கெண்டமும் அல்லது தாய் வர்க்கத்தாரு நாசமாம்.

7. புதன் வக்கிரசேஷ்டையிலிருந்து தெசை நடந்தால் பாக்ய லாபமும், தார புத்திராதிகள் விருத்தி, தனச்சேர்க்கை, புராணங்கள் வாசிப்பது, தீக்ஷை வகிப்பது, ஸமுத்திர ஸ்நானம் செய்கிறது.

8. புதன் நைஸர்க்கிக பலமுடைய புதன் தெசையில் அனேக பிராணிகளிடத்தில் விசுவாசமும், ரதிகேளீ விலாஸத்வமும், ராஜா வுக்கு சமானமாக பாக்யமுடையவனாவன் என்பது.

9. புதன் குரூர சஷ்டியாம்சிசையிலிருந்து தெசை நடந்தால் அதிகபயமும், திருடரால், அக்னியால், ராஜாவாலும் பயமுண்டாகும். சுபக்கிரக சம்பந்தமும், பார்வையு மில்லாவிட்டால் இந்தபலன் நடக்கு மாம்.

10. புதன் மிருத்வமிச சஷ்டியாம்சையிலிருந்து தெசை நடந் தால் ராஜ்ய லாபமும், அதிக ஸௌக்யமும், மிருது ஸ்வாபகுணமும், சர்வ பிராணிகளிடத்தில் கருணையும், கிருஷியும், அதிக புத்திர, புத்ரி களும், தன சம்பத்துக்களும் அதிகமாகு மென்பது.

11. புதன் வைய்சேடிகாமிசத்தில் இருந்து தெசை நடந்தால் அதிகமாக ராஜ பூஜிதமும், வாஸனாதிரவிய வஸ்த்துக்களும், வஸ்திரா பரணங்களும், புஷ்ப மாலைகளும் அணிவதும், வித்தியா சபையில் பேசும் வல்லபத்வமும், ஏகாந்த சௌக்கியம் இவை முதலான பலன் கள் நடக்கு மென்பது.

12. புதன் குரூர திரேக்காணத்திலிருந்து தெசை நடந்தால் சோர பாதை, அக்னி பயம், ராஜாக்களால் பீடிதம், ஸ்தான நாசம், அதிக ஆபத்து முண்டாகும்.

13. புதன் பரம உச்சராசியிலிருந்து தெசை நடந்தால் தேசாதி

பத்யம் வரும், பல்லக்கு முதலிய வாகனதிகள் பிராப்தியும், வித்யா விசேஷமும், உயர்ந்த ரத்தினங்கள் லாபமும், க்ஷேத்திர லாபமும், கிருஷி விருத்தி, தானிய லாபமுமுண்டாகும்.

14. புதன் உச்சராசியிலிருந்து தெசை நடந்தால் தன விருத்தி, புராண கதா கீதாதி பிரஸங்கம் கேட்பது, அப்பியாசிப்பது, பந்து ஜன உபகாரமும், தன் பந்து, பட்டணவர்க்க ஜன விருத்தியாம்.

15. புதன் நீச ராசியிலிருந்து தெசை நடந்தால் புத்தி யீனமும், பந்துக்களை விட்டுப் பிரிவதும், பூர்வ ஸ்தானம் விட்டு பெயருதல், பந்து விரோதமும், வெளி தேச பிரயாணமும், வனவாஸமும், செய்ய நேருமென்பது.

16. புதன் அதிநீச ராசியிலிருந்து தெசை நடந்தால் ஸ்தான நாசம், தன நாசம், அதிக கஷ்டம், விவாதத்தினல் பயமும், குல நாசமும், மனோ விசாரமும், வீடும் அயலாருக்கு சேரு மென்பது.

17. புதன் உச்ச ராசியிலிருக்கும் கிரகத்துடன் கூடி தெசை நடந்தால் அதிக சுகமும், பின் வயதில் பாக்யமும், நல்ல வித்தையும், விசேஷ வர்த்தகமும், கோ லாபமும், கிருஷி தானிய லாபாதிகமுமா மென்பது.

18. புதன் நீசராசியிலிருக்கும் கிரகத்துடன் கூடி தெசை நடந்தால் அதிக கஷ்டமும், ஸ்தான சலனமும், பந்து நாசம், காரிய தாமஸமும் மனோ வியாதியும் உண்டாகும்.

19. புதன் உச்ச நவாம்சையிலிருந்து தெசை நடந்தால் அதிக புத்ர பிராப்தியும், விசேஷ ஆபரண லாபமும், மனோ விலாஸமும், ரதி கேளீ விலாஸமும், சந்தோஷமும், மனோதிடமும், ஜலாபிஷேகமும் உண்டாகும்.

20. புதன் நீச நவாம்சையிலிருந்து தெசை நடந்தால் நீசவிருத்தியும், அதனல் ஜீவனமும், அடிமையாவதும், பிறரால் பரிகசிக்கும்படியும் நேருமென்பது.

21. புதன் உச்சமானலும், நீச நவாம்சையிலிருந்து தெசை நடந்தால் ராஜ்யாதிகார வைபவசுக சந்தோஷ கீர்த்திகளெல்லாம் உடனே நசிக்கும் என்பது.

22. புதன் நீச ராசியிலிருந்தாலும் உச்ச நவாம்சையிலிருந்து தெசை நடந்தால் முதலில் அசுபகாரியங்களும், கடைசி பாகத்தில் சுப பலனும் கொடுக்கும்.

23. புதன் மூலதிரிகோண ராசியிலிருந்து தெசை நடந்தால் தன லாபமும், தாரா, புத்திர ஸௌக்யமும், வஸ்திர லாபமும், விசேஷ

பூஷண லாபமும், ரத்தின லாபமும், க்ஷேத்திர விருத்தியும், கிருஷி லாபமும், தானிய சமுர்த்தியு முண்டாகும்.

24. புதன் ஆட்சி ராசியிலிருந்து தெசை நடந்தால் அதிக சுகமும், பந்துக்கள் விசுவாசமும், விஷ்ணு பூஜையும், அந்தணர் பக்தி, சினேகித பிரபுவினுலே சுகமு முண்டாகும்.

25. புதன் அதிமித்ர க்ஷேத்திரத்திலிருந்து தெசை நடந்தால் ராஜ சினேகிதம், தாரா புத்திராதி வைபவமும், க்ஷேத்திர விருத்தி, தனதானிய சமுர்த்தியும், சத் கீர்த்தியும், அதிகார லாபமும், உண்டாகும்.

26. புதன் மித்துருராசியிலிருந்து தெசை நடந்தால் தன லாபம், வியாபார லாபம், கிருஷி லாபம், தானியாதிகம், கோ விருத்தியும், குதிரைவாகன லாபமும், வஸ்திர பிராப்தியும், ரத்தினலாபமும், உண்டாகும் என்பது.

27. புதன் சம கிரகத்தினிட ராசியிலிருந்து, தெசை நடந்தால் அல்ப சுகமும், சுவல்ப லாபமும், கஷ்ட சுகமும், சமமாக நடக்கும்.

28. புதன் சத்துருராசியிலிந்து தெசை நடந்தால், அதிக கஷ்டமும், பந்து ஜன பகை, அபகீர்த்தியும், வினயத்துவ மில்லாமை, சரீர பாதை, சமான ஜனங்களுக்கு கஷ்டமாம்.

29. புதன் அதிசத்ரு ராசியிலிருந்து தெசை நடந்தால், ஆசாரயீனம், அதிக கஷ்டமும், மனோ விசாரமும், ராஜ பயமும், சுப பந்து விரோதம், சொந்த இல்லம், காலி வாகனங்கள் நஷ்டமாம்.

30. புதன் சுப கிரகங்களுடன் கூடி தெசை நடந்தால், அதிக சௌக்யமும், தாரா புத்திராதி சௌக்யமும், வீட்டில் கல்யாண சுபங்களும் நடக்கும்.

31. புதன் பாப கிரகங்களுடன் கூடி தெசை நடந்தால், பசுவாகன நாசம், பந்து ஜன விரோதம், சமான ஜன பீடை என்பது.

32. புதன் சுப கிரகங்களால் பார்க்கப்பட்டு தெசை நடந்தால் கீர்த்தி, வித்யா பாண்டித்தியத்தினுல் சபா பிரஸங்கம், ராஜாக்களால் பரிசு பெறுவது, சரீரகாந்தியும், பிரதாபமும், யசஸ்ஸும் உண்டாகும்.

33. புதன் பாப கிரகங்களால் பார்க்கப்பட்டு தெசை நடந்தால் தானியக் குறைவு, பந்து ஜனவிரோதம், வெளி தேச பிரயாணம், ஸ்தான நாசம், ஒருவருடைய உபகார வழியிலிருந்து ஜீவிப்பது, அதனுல் கலகம், அதிக கஷ்டமும் உண்டாகும்.

34. புதன் கேந்திரங்களிலிருந்து தெசை நடந்தால் பந்து ஜன விருத்தியும், புத்ரோற்சவாதி சந்தோஷமும், நித்யமும் அன்ன தானமும் செய்வதாம்.

35. புதன் லக்னத்திற்கு, 6, 8, 12-மிடங்களிலிருந்து தெசை நடந்தால், தன நாசம், சமான ஜன துக்கமும், ஸ்தான சலனமுமுண்டாகும்.

## மேஷாதி 12 ராசிகளில் புதன் நிற்கும் பலன்

36. புதன் மேஷ ராசியிலிருக்கப் பலன் :—புதன் மேஷ ராசியிலிருந்து தெசை நடந்தால் ராஜ சினேகம், பந்து சன்மானம், உயர்ந்த ரத்ன பூஷண லாபம், பாரியா, புத்திரர் சௌக்யம், தாயாதி ஜன சுகமும் உண்டாகும்.

37. புதன் ரிஷப ராசியிலிருக்கப் பலன் :—புதன் ரிஷப ராசியிலிருந்து தெசை நடந்தால் நடன, சங்கீத, வித்யாதிக அகஸ்யாதி விநோத கோஷ்டிகளுடன் சந்தோஷமாய் இருப்பது, பெரிய அதிகாரியாவது.

38. புதன் மிதுன ராசியிலிருக்கப் பலன் :—புதன் மிதுன ராசியிலிருந்து தெசை நடந்தால் வித்யாதிகமும், ராஜ சன்மானமும் பெறுவதும், சதா சௌக்ய சந்தோஷத்துடன் இருப்பதும், சங்கீத கியானங்களை பயிற்சி செய்வதும், ஜயப் பிரதாபமும், அதிக கீர்த்தியும், தானியாதிகமும், பூமி, பசுவாகனங்கள் அதிகரிப்பதும்.

39. புதன் கடக ராசியிலிருக்கப் பலன் :—புதன் கடக ராசியிலிருந்து தெசை நடந்தால் பந்து பகை, சரீர காந்தி குறைவது, பிராம்மணருடனும் நல்லோருடனும் விவாதம் செய்வது, ஸ்தான நாசம், அதிகாரம் மாறுதல் என்பதாம்.

40. புதன் சிம்ம ராசியிலிருக்கப் பலன் :—புதன் சிம்ம ராசியிலிருந்து தெசை நடந்தால் நகராதிபத்யமும், விசேஷ பிரபு சன்மானமும், கிரி, வனாந்தரங்களில் சஞ்சாரமும் உண்டாகும்.

41. புதன் கன்னி ராசியிலிருக்கப் பலன் :—புதன் கன்னி ராசியில் இருந்து தெசை நடந்தால் அதிக சுகம், விசேஷ கீர்த்தி, ராஜ பரிபாலனம், விசித்ர வஸ்த்ராபரண லாபம், தாரா, புத்ராதி சௌக்யம், மித்ர ஜன விருத்தியும் உண்டாகும்.

42. புதன் துலா ராசியிலிருக்கப் பலன் :—புதன் துலா ராசியிலிருந்து தெசை நடந்தால் பசு, வாகன லாபம், ராஜ சினேகிதம், கணக்கில்லா வீடுகளை அடைவதும், இதர ஸ்த்ரீ சேர்க்கையும் உண்டாகும்.

43. புதன் விருச்சிக ராசியிலிருக்கப் பலன் :—புதன் விருச்சிக ராசியிலிருந்து தெசை நடந்தால் அதிக கஷ்டமும், உறவினர் பகையும், பூமி நாசமும், சகோதர நஷ்டமும் உண்டாகும்.

44. புதன் தனுசு ராசியிலிருக்கப் பலன் :—புதன் தனுசு ராசியிலிருந்து தெசை நடந்தால் சுகமும், யுத்தத்தில் ஜயமும், ராஜ்ய லாபமும், பொன் பொருள்கள் விசேஷிப்பதும், நூதன ஆடைகள் அணிவதும், எப்போதும் சந்தோஷ வைபவத்துடன் இருப்பதும், சங்கீத வித்யாதிகத்தில் முயற்சிப்பதும்.

45. புதன் மகர ராசியிலிருக்கப் பலன் :—புதன் மகர ராசியில் இருந்து தெசை நடந்தால் தன லாபம், பந்து சந்தோஷம், வித்யா விநோதம், ராஜ சிநேகிதம், மனோ சந்தோஷம், சபா பூஜிதம், மித்ர ஜன சௌக்யமும் உண்டாகும்.

46. புதன் கும்ப ராசியிலிருக்கப் பலன் :—புதன் கும்ப ராசியிலிருந்து தெசை நடந்தால் தண்டிக்கை, வாகனம் கிடைப்பது, அதிசயமான பட்டுபட்டாவளிகள் கிடைப்பது, பொன், பொருள் விருத்தி, அதிக மதுரமான போஜனம் அருந்துவது, சங்கீத வித்யா கேள்வியும் உண்டாகும்.

47. புதன் மீன ராசியிலிருக்கப் பலன் :—புதன் மீன ராசியில் இருந்து தெசை நடந்தால் சுற்றத்தார் பகை, தாரா, புத்ர நாசம், சமான ஜன நாசம், பூர்வ ஸ்தானம் விட்டு பெயர்வது, அதிக கஷ்டத்தை அனுபவிப்பது என்பது.

## புதன் லக்னாதி 12 பாவங்களில் நிற்கும் பலன்

48. புதன் 1-ல் நிற்கப் பலன் :—புதன் லக்கினத்தில் இருந்து தெசை நடந்தால் தேகாரோக்யம், கீர்த்தி விருத்தி, உயர்ந்த பூஷண லாபம், வித்தியா பிராப்தி, ராஜ சன்மானமும் உண்டாகும்.

49. புதன் 2-ல் நிற்கப் பலன் :—புதன் 2-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தன லாபம், குடும்பத்தவர்களை தானே ரக்ஷிக்கிறது, மனோ வுல்லாசம், ருண நிவர்த்தி என்பது.

50. புதன் 3-ல் நிற்கப் பலன் :—புதன் 3-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் நல்ல சங்கீத கியானமும், உயர்ந்த ஆபரண லாபமும், சகோதரஜன சௌக்யமும், தார லாபமும், யுத்தத்தில் ஜயமும், ராஜ பூஜிதமும் உண்டாகும்.

51. புதன் 4-ல் நிற்கப் பலன் :—புதன் 4-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் பந்து விசேஷம், தானிய விருத்தி, விசித்திர கிரக லாபம், நடன சங்கீத கேளிக்கைகளில் பிரியமாய் இருப்பது.

52. புதன் 5–ல் நிற்கப் பலன் :—புதன் 5-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் புத்திர விருத்தி, ஞானுதிகம், சர்வ ஜனங்களால் பூஜிக்கப்படுவது, குரு உபதேசம் பெறுவது, மந்திரார்த்தங்களே அறிவது, தானிய சமுர்த்தி, க்ஷேத்ராதிக விருத்தி, அதிக சுகம், ராஜ சிநேகம், தீர்த்த ஸ்நானம், உயர்ந்த ரத்தினுபரணங்கள் கிடைக்கும் என்பது.

53. புதன் 6–ல் நிற்கப் பலன் :—புதன் 6-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தேகத்தில் ரோக விருத்தி, சத்ரு பயம், பந்து நாசம், அதிக கலகம், ராஜ கோபம், ஸ்தான நாசமும் வருமென்பது,

54. புதன் 7–ல் நிற்கப் பலன் :—புதன் 7-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் அதிக சௌக்கியமும், விசேஷ சுபசோபனுதி காமும், பந்து ஜன உபகாரமும், கலியாணமும், நூதனமான இஷ்ட வஸ்த்துக்கள் கிடைப்பது.

55. புதன் 8–ல் நிற்கப் பலன் :—புதன் 8-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் சமான ஜனங்களுக்கு தேகாரிஷ்டம், அதிக கஷ்டம், இருப்பிடம் நாசம், மனே விசாரம், சோரரா லும், அக்னியா லும் பாதை, சத்ருக்கள் போராட்டம் என்பது.

56. புதன் 9–ல் நிற்கப் பலன் :—புதன் 9-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தர்ம காரிய சித்தி, சம்பூர்ண ஞான விருத்தி, சர்வ ஜனங்களால் பூஜிக்கப்படுதல், ஐஸ்வரிய சமுர்த்தி, தனுதிகாரியாய் இருப்பது, க்ஷேத்ரார்த்த லாபம், வஸ்த்ர, வாகனுதிகம், ராஜ்யாதிகாரம், தாரா, புத்ர சௌக்யம், பிதுருவர்க்க ஜன பலாதிகம், சுக சந்தோஷாதிகம் என்பது.

57. புதன் 10–ல் நிற்கப் பலன் :—புதன் 10-மிடத்திலிருந்து தெசை நடந்தால் கீர்த்தி, கலியாண பிராப்தி, விசேஷ தன லாபம், அதிக சுகமும் உண்டாகும்.

58. புதன் 11–ல் நிற்கப் பலன் :—புதன் 11-மிடத்திலிருந்து தெசை நடந்தால் விசேஷ லாபம், க்ஷேத்ர விருத்தி, பசு, வாகன லாபம், தானிய விருத்தி, உத்தியோக பிராப்தி, மனே வுல்லாசம் என்பது.

59. புதன் 12–ல் நிற்கப் பலன் :—புதன் 12-மிடத்திலிருந்து தெசை நடந்தால் ஸ்தான நாசம், பந்து நாசம், க்ஷேத்திரார்த்த நாசம், பசுவாகன நஷ்டம், அனேகவித கஷ்டமும், பரதேச வாசமும் உண்டாகும்.

### புதன் ஆரோகணத்தில் நிற்கும் பலன்

60. புதன் ஆரோகணத்திலிருந்து தெசை நடந்தால் ராஜ்ய

பல பிராப்தி, விசித்ர கிரக லாபம், கலியாணாதி சுப சோபனகரமும், உண்டாகும்.

### புதன் அவரோகணத்தில் நிற்கும் பலன்

61. புதன் அவரோகண ராசிகளில் இருந்து தெசை நடந்தால் கஷ்ட பலமும், சுய ஸ்தான நாசமும், பந்து கலகமும், உண்டாகும்

## புதன் தெசையில் புதன் புக்தி மீ 28 நாள் 27-க்குப் பலன்

புதன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலும் இருந்தால் பந்து கலியாணம், கிரைய, விக்கிரைய மூலங்களிலும் தன லாபம், தீபாந்தரங்களினால் தன பிராப்தி, அநேக வித ரத்ன லாபம், விசித்திர கிரக லாபம், அதிகார விருத்தி, சத்காலக்ஷேபங்கள் கேட்டல், ஞான விருத்தி, சதா அன்னதானம் செய்கிறது, பந்து சமூகத்தில் பிரியமாய் இருப்பது, புத்ரோற்பத்தியும், தார சௌக்யமும் உண்டாகும்.

புதன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், பார்த்தாலும், அஸ்தங்கதனயிருந்தாலும் பந்து விரோதமும், தார, புத்திரர் பீடை, காரிய நாசம், மனோ துக்கம், சதா சிந்தையும், வியாகூலமும், பரதேசவாசமும், ராஜ கோபமும், தனவிரையமும், குலாசார யீனமும், புஷ்பிணி ஸ்த்ரீயுடன் சகவாசமும், அகால போஜனமும், எத்தன காரிய பங்கமுமாம்.

புதனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ஆரணியங்களுக்கும், கிரிகளுக்கும் விசாரனை கர்த்தாவாவன், பிதுர்வர்க்க ஜனங்க்ளுக்கு சுபாதிகம், ராஜப் பிரீதியும் சந்தேகமில்லாமல் கிடைக்கும்.

புதனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் சொந்த மனைவிக்கு சௌக்யம், புத்ரோற்பத்தி, விசேஷ பூஷண லாபம், நூதன கிரக லாபமும் உண்டாகும்.

புதனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் யுத்தத்தில் சத்ருவினால் தோற்கப்படுகிறது, தாயாதிகளால் கலகம், விவகாரத்தில் அபஜயம் என்பதாம்.

புதனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் புத்ரோற்பத்தி சந்தேகமில்லாமல் கிடைக்கும், தேவதா தரிசனம் கிடைப்பது, அபூர்வமான இஷ்ட வஸ்த்துக்கள் கிடைப்பது.

புதனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் விசித்ர வஸ்த்ராபரண பிராப்தியும், வாகன லாபம், அதிகார மேன்மையும் உண்டாகும்.

புதனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் காராகிரக பந்தனம், ராஜ நிஷ்டூரம், பந்து துவேஷம் உண்டாகும்.

புதன் 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் சம்பவிக்கும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு விஷ்னு சகஸ்திர நாமம் பாராயணம் செய்தால் சகல கஷ்டமும் நிவர்த்தியாகும், லக்ஷிமி நாராயண தானம் செய்யவும்.

## புதன் தெசையில் கேது புக்தி மீ 11 நாள் 27-க்குப் பலன்

கேது லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலாவது 3, 6, 11-ம் இடங்களிலாவது, உச்சத்திலாவதிருந்தால் கீர்த்தி லாபமும், பிரதாப விருத்தியும், யுத்தத்தில் சத்துரு நாசம், ராஜ சன்மானமும், வாகன சமுர்த்தி, தன் பேரால் முத்திரையிடுதலான வியாபாரமும், தாரா வமிசத்தாருக்கு அபிவிருத்தியும், மேற்குதிசை பிரயாணமும், ராஜ தெரிசனமும், கிருஷிலாபமும், க்ஷேத்திர விருத்தி, தானியாதிகம், ஸ்த்ரீ மூலத்தினால் தனலாபம், அபூர்வமான வஸ்த்துக்கள் தெரிசனமாகிறது, தேவதாதெரிசனமும், எத்தன காரியார்த்த சித்தியுமாம்.

கேது லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலாவது, நீசாமிசையிலாவ திருந்தாலும், பாப கிரகங்களுடன் கூடினாலும் அல்லது சத்ரு கிரகங்களுடன் கூடினாலும், சண்டாளர் ஜாதியுடனே கலகம், அந்த மூலத்தில் அதிக திரவிய நஷ்டம், தாயாதி கலகம், நீச ஜனங்களிடத்தில் அடிமைப்படுவது, அதிக பயம், பசு, வாகன நஷ்டம், தானிய நாசம், பூர்வ ஸ்தான பேதம், உத்தியோகம் மாறுதல், எத்தன காரிய பங்கம், சமான ஜனங்களுக்கு பீடை.

கேதுவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் சிரோரோகம், அதிக பயம், பித்த வியாதி, ராஜ பீதி, சோர பாதை, அக்னி பீடை, உண்டாகும்.

கேதுவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மாதாவுக்கு கர்மம், மனோ விசனம், அகால போஜனம், தன நாசனமும் உண்டாகும்.

கேதுவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் சகோதர நாசம், ஆயுதங்களினால் காய பாதை, சோர பயம், அக்னி பீடை, விஷ ஜந்துக்களினால் ஆபத்து உணடாகும்.

கேதுவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் குடும்பத்தில் விவாஹாதி சுபங்கள் நடத்துவது, பந்து ஜன விருத்தி, எத்தன் காரியார்த்த சித்தி உண்டாகும்.

கேதுவைக் குரு கூடினாலும், பார்த்தாலும் குரு துவேஷம், புத்திராளுக்கு தோஷம், இஷ்ட பிரபு விரோதமும், சமான ஜன நாசமும் உண்டாகும்.

கேதுவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் தாரப் பங்கை, புத்திர துவேஷம், அதிக கலகம், வாகனாதி நாசமும் உண்டாகும்.

கேதுவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் சமான ஜன நாசம், கிருஷி நஷ்டம், க்ஷேத்ராதி விரையம், தானிய நாசமும் உண்டாகும்.

கேது தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், 6-மிடத்திலும், சுபக்கிரகங்களுடன் கூடியிருந்தால் தனாதிக விருத்தி, அஸ்வாதி, பசுவாகன லாபம், பந்து சேர்க்கை, வித்யா லாபம், அதிக கீர்த்தி, எத்தன காரிய சித்தி உண்டாகும்.

கேது தெசாநாதனுக்கு 8, 12-மிடங்களில் பாபக்கிரகங்களுடன் கூடியிருந்தால் அதிக கஷ்டம், மானபங்கம், அபகீர்த்தி, மனோ துக்கம், சமான ஜன நாசம், ஸ்த்ரீ விரோதம், பந்து கோபம், சமஸ்த பொருள்களும் நாசம், நாற்கால் ஜீவன்களுக்கு நஷ்டம்.

கேது 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் சம்பவிக்கும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு எருமை தானம் செய்யவும்.

## புதன் தெசையில் சுக்கிர புக்தி மீ 34-க்குப் பலன்

சுக்கிரன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், உச்ச ராசியிலுமிருந்தால் கல்யாணாதி, சுபங்கள் நடத்துதல், தான தர்மாதிகம் செய்யும்படியான திரவியாதிகமும், சத்திர, சாமர வைபவமும், புர்ராதிபத்யமும், நரவாகன பிராப்தியும், அதிகார விருத்தி, மித்துரு பிரபு மூலத்தினால் சுகம், தாரா, புத்ராதிகளுக்கு சுகமும், விசித்திர கிரக லாபமும், நூதன வஸ்த்ராபரணமும், ரத்தினங்களும், முத்துக்கள் கோர்த்த ஆபரணங்களும் நிறைந்திருக்கும், தானிய லாபமும், தன் வாரத்தில் ராஜ சன்மானமும், பந்து ஜன பிரியமு முண்டாகும்.

சுக்கிரன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும் இருந்தால் காரிய நாசமும், மனோ சிந்தை, அதிக துக்கம், தாரஹாணி, புத்திர பீடை, பந்து விரோதம், ருண பாதை, ரோக பீடை, வாகனாதிகள் நஷ்டமென்பது.

சுக்கிரனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ராஜ கோபமும், தன விரையமும், எத்தன காரிய நாசம், ஸ்தான நாசமுமாகும்.

சுக்கிரனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மாதுர் கஷ்டம்,

மனே விசனம், செய்யுந் தொழிலில் நஷ்டம், சர்வ சொத்துக்கள் நஷ்டமாம்.

சுக்கிரனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீ மூலத்தினால் கலகம், தாரத்திற்கு தேக பாதை, சகோதர பகை யுண்டாகும்.

சுக்கிரனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் தர்ம காரிய சிந்தையும், எழுத்து வேலையும், கணித, காவிய, சிற்பாதி, வாக் வித்யா குணங்களினால் பொருள் தேடுவது.

சுக்கிரனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் புத்திர விருத்தி, தனாதிக சித்தி, தேகாரோக்யம், விசேஷ கீர்த்தி, சர்வ காரிய சித்தியுமுண்டாகும்.

சுக்கிரனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் அடிகைளால் கலகம், கிருஷி நாசம், பூமி க்ஷேத்திரங்கள் விரையம், தன தானிய நாசமுமாம்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களில் சுபருடன் கூடியிருந்தால் பொன், பொருள் லாபமும், ஆடையாபரண விருத்தி, உயர்ந்த வஸ்த்துக்கள் கிடைப்பது, பசு, வாகன லாபமும், வீட்டில் கல்யாண சம்பிரமம், தாரா, புத்திராதி ஸௌக்யமும், இஷ்ட பிரபுவினால் சுகம், சதா அன்ன தானமும், பந்து ஜன உபகாரமும் உண்டாகும்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், பாபிகளுடன் கூடியிருந்தால் தார நாசம், சமான ஜன பீடை, யாத்திரையில் காரிய நாசம், தூரதேச மரண சங்கதி வருவது, அகஸ்மாத்தான கலகம் விளையும்.

சுக்கிரன் 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணம் மென்பது. இந்த தோஷ நிவர்த்திக்கு வெள்ளைப் பசுதானம் செய்யவும். துர்க்கை லக்ஷிமி ஜெபம் செய்த பிறகு ஆயுராரோக்ய முண்டாம்.

## புதன் தெசையில் சூரிய புக்தி மீ 10 நாள் 6-க்குப் பலன்.

சூரியன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலாவது, 3, 11-ம் இடங்களிலாவது, உச்ச ராசியிலாவதிருந்தாலும் மகா ராஜாக்களால் மரியாதை பெறுதல், வாகனாதி பத்யமும், கிழக்கு திசையில் பிரயாணமும், போன இடத்தில் ஜெயமும், சத்துரு நாசமும், தாரா, புத்ர சௌக்யமும், பிதுர்வர்க்க விருத்தியும், மந்திர சித்தியும், சூரிய பிரார்த்தனை செய்கிறதும், சிவ தீக்ஷா பல பிராப்தியும், சிவ பூஜா சிந்தையும், மகான்களிட தெரிசனமும், தீர்த்தயாத்திரா பலமும்

சந்நியாச ஆசிரமம் பெறுகிறதும், சந்நியாசிகள் தெரிசனமும், யுத்தத்தில் ஜெயமும், ரத்தின லாபமும், பந்து ஜன சந்தோஷமுமாம்.

சூரியன் செவ்வாயுடன் கூடினாலும், பார்க்கப்பட்டாலும் ஆதியில் பூமிகள் லாபமாக கிடைக்கும்.

சூரியன் லக்னாதிபதியுடன் கூடினால் ஆதிபாகத்தில் சௌக்யம், தன லாபமும், மத்யாந்த பாகத்தில் துக்கமும், மரணக் கேள்வியும் உண்டாகும்.

சூரியன், சனி, செவ்வாய், ராகுவுடனே கூடினாலும் அல்லது பாபகிரக பார்வை பெற்றிருந்தாலும் சரீரத்தில் ரண பாதை, மனஸ் தாபமும், காரிய நாசமும் வருமென்பது.

சூரியன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும் இருந்தால் சத்ருக்களால் விவாதமும், சதா கலகமும், தன விரையமும், யுத்தத்தில் சத்ரு பயமும், நாற்கால் ஜீவன் நாசமும், பிதா வியோகமும், பந்து ஜன அரிஷ்டமும், இதா பிரபு மூலமாக தன விரையமும், தன் புத்திருடன் கலகமும், எத்தன காரிய பங்கமும், ஜெபில் வாசமும், கடன் தொந்திரவும், பித்தரோகம், க்ஷய ரோகம் இவைகளும் உண்டாம்.

சூரியனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் ரத்னாபரண லாபமும், விசித்திர வஸ்திராலங்காரமும், குரு, புத்ராதி சௌக்யமுமாம்.

சூரியனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் பவழம், ரத்தினங்கள் லாபமும், சிகப்பு வஸ்திரம், அணிதலும், தன விசேஷமும் உண்டாகும்.

சூரியனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் அனேக விதங்களில் தன லாபம், பந்துக்களில் கலியாண வைபவம், தாசி ஸ்த்ரீயுடன் கூடுவது.

சூரியனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் புத்திரர் விருத்தி தேக சௌக்யம், தன பிராப்தி, விசேஷ வஸ்த்துக்கள் கிடைப்பது.

சூரியனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் வாகனாதிகமும், பசு விருத்தியும், உயர்ந்த பூஷண லாபமும், கலியாணாதி சுப காரியங்களும் நடக்கும்.

சூரியனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் வஸ்திர வாகனாதிகள் ஹீனத்துவமும், பசு ஹாணி மித்திர பந்துக்கள் வியூகம், அடிமைகள் நாசம்:

சூரியன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுபக் கிரகங்களுடன் கூடியுமிருந்தால் உத்தியோக பிராப்தி, தத்துவதர்க்க ஞான வார்த்தைகள் பிரசங்கிப்பது, புத்திரர்

ஜன்னம், நூதன பந்துக்கள் பிராப்தமாவது, சதா சம்பத்துக்களுடனே சந்தோஷ மனுபவிக்கிறது.

சூரியன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாபக்கிரகங்களுடன் கூடியும், பார்க்கப்பட்டு மிருந்தால் தன விரையம், மனோ துக்கம், விவாஹத்தில் கலகம், ஸ்த்ரீ பீடை, பந்து நாசம், தானிய நாசம், பசு ஹாணி, அதிகார பங்கமும் வரும்.

சூரியன் 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணம் சம்பவிக்கும், இந்த தோஷம் நிவர்த்திக்கு சூரிய பிரார்த்தனே செய்யவேண்டும்.

## புதன் தெசையில் சந்திர புக்தி மீ 17-க்குப் பலன்

சந்திரன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், ஆட்சி உச்சங்களிலும், ஆட்சி நவாமிசமாக இருந்தாலும், குருவினுல் கூடியும், பார்த்து மிருந்தால் பூமி லாபம், அஸ்வ வாகனம் கிடைப்பது, சமான பிரபு சன்மானம், ரத்ன பூஷண லாபம், பந்துக்களில் விவாஹ சம்பிரமம், மித்ரவர்க்க ஜன விருத்தி, பசு விருத்தி, அடிமை ஜனுதிகம் உண்டாகிறது, தன் இஷ்ட பிரபு மூலமாக சுகம் வருவது, தன தானிய சமூர்த்தி, எத்தன காரிய சித்தி, தீபாந்தரங்களில் இருந்து வஸ்த்துக்கள் கிடைப்பது, சமான ஜன விருத்தி என்பது.

சந்திரன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், பாபக் கிரகங்களுடன் கூடியும், பார்க்கப்பட்டும், க்ஷீண சந்திரனுகவும், சத்துரு வீட்டிலுமிருந்தால் அப கீர்த்தி, அதிக பயம், மனோ துக்கம், விவகார நாசம், ருண பாதை, தானியார்த்த நாசம், பசு ஹாணி, ஸ்த்ரீ துவேஷம், புத்திரர் பீடை, மாதுரு விரோதம், காரிய தாமசம், பந்து கலகம், ஞாயமான காரியங்கள் கெடுதலுமடையும், ராஜ விரோதமும் வரும்.

சந்திரனேச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும் வழி பிரயாணமும், ஸ்தான நாசமும், தன விரையமும் உண்டாகும்.

சந்திரனேச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் விவாஹ சுப கரங்கள் நடத்துவது, சகோதர ஜன விருத்தி, பந்து விருத்தியும் உண்டாகும்.

சந்திரனேப் புதன் கூடினுலும், பார்த்தாலும் சாஸ்திரங்களே அப்யாஸிப்பது, புண்ணிய தீர்த்தஸ்நான பல பிராப்தி, வியாபார மூலத்தில் தன லாபம் என்பது.

சந்திரனேக் குரு கூடினுலும், பார்த்தாலும் குரு பக்தி, பிராமண பக்தியும், மந்திர வித்யாதிகமும், சத்காரிய பிராப்தியும் உண்டாகும்.

சந்திரனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் இதர ஸ்த்ரீயுடன் சேருவது, பூஷணாதிகள் அணிவது, எத்தன காரிய சித்தி, என்பது.

சந்திரனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் நீசருடன் கலகமும், பசு ஹானி, ஸ்த்ரீ நாசம், தன விரையம், மானபங்கமும் வரும் என்பது.

சந்திரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுபக் கிரகங்களுடனும் கூடியிருந்தால் புத்ர லாபம், தன லாபம், அஸ்வ வாகன பிராப்தி, உயர்ந்த பூஷண லாபம், எத்தன காரிய சித்தி, மஹா ராஜாக்களால் மரியாதை பெறுவது, தாரா, புத்ராதி சௌக்யம், கிருஷி லாபம், தானிய விருத்தி, தான தர்மாதி பரோபகாரங்கள் செய்வது, துர்க்கையை பூஜை செய்வது என்பது.

சந்திரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாபிகளுடன் கூடி இருந்தால் அநேக ஜன விரோதமும், பந்து துவேஷமும், மனோ விசனமும், சர்வ காரிய நாசமும், ஸ்தான சலனமும், நீச ஸ்த்ரீயுடன் கலகமும், வஸ்த்ர ஹீனமும் உண்டாகும்.

சந்திரன் 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் சம்பவிக்கும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு துர்க்கை ஜபம் செய்து, வெள்ளியினால் பிரதிமை தானம் செய்தால் தோஷம் நிவர்த்தியாகும்.

## புதன் தெசையில் செவ்வாய் புக்தி மீ 11 நாள் 27-க்குப்பலன்.

செவ்வாய் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், ஆட்சி உச்சங்களிலும், லக்னாதிபதியுடன் கூடியிருந்து, தன் ஸ்தானவர்க்கங்களில் பலமாய் இருந்தால் சிகப்பு நிறமுள்ள நூதன பட்டுபட்டாவளி வஸ்த்ர லாபமும், ரத்ன மாணிக்காபரணங்களும், விசித்ரமான கிரக நிர்மாணமும், கிராமாதி பத்யமும், பூமி, க்ஷேத்ர லாபமும், தன் வாரத்தில் ராஜ சன்மானமும் பெறுவதும், இஷ்டப் பிரபுவால் சுகம், கிருஷி லாபம், தூர தேச பந்து தரிசனம், சுப காரிய விருத்தி, புத்ர ஜனனமும் உண்டாகும்.

செவ்வாய் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச அமிசையிலும், நீச ராசியிலும், குரூர திரேகாணத்திலும் இருந்தால் வாகன நாசம், தனதானிய நாசம், சமான ஜன கஷ்டம், தாயாதி கலகம், தார, புத்ராதி வியோகம், எத்தன காரிய பங்கம், பித்த விகாரம், கிராணி பேதி, க்ஷய ரோகம், இஷ்டப் பிரபு விரோதம், பிரயாணத்தில் காரிய நாசம், திடீரென்று கலகம், ருண பாதை, சோர பயம், சத்ரு பாதை, விஷ பீதி, உயர்ந்த ஸ்தானத்திலிருந்து கீழே விழுகிறது என்பதாம்.

செவ்வாயைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் பிரபு மூல மாக சுகம், அதிகார விருத்தி, யுத்தத்தில் ஜயம் கொள்வது.

செவ்வாயைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் பால், பழம், பலகாரங்களுடனே இஷ்டான்ன போஜனம் செய்வது, தன் ஸ்த்ரீ யுடன் கூடி சயன சுகமாக இருப்பது, சங்கீத நடன வித்யாப்பி யாசம் செய்வது.

செவ்வாயைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் பந்து மித்ரு ஜனங்களுடன் இஷ்டமாய் இருப்பது, வர்த்தகத்தின் மூலம் தன பிராப்தி, சர்வ காரியங்களிலும் சித்தி பெறுவது.

செவ்வாயைக் குரு கூடினாலும், பார்த்தாலும் புத்திர பீடை, தன விரையம், குரு துவேஷம், தர்ம ஹானி, புத்தி மாறுதல்.

செவ்வாயைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் கர்ப்ப தோஷம், தாரத்திற்கு ரத்த சம்பந்தமான ரோக பாதை வருமென்ப தாம்.

செவ்வாயைச் சனி கூடினாலும், பார்த்தாலும் நீச ஜனங்களுட னேயும், சத்ருக்களுடனேயும் கலகம் செய்து கொள்வது, பசு ஹானி, அடிமை ஆட்கள் நாசம், எத்தன காரிய பங்கமாம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11 மிடங்களிலும், உச்ச ராசியிலும், சுபக்கிரகங்களுடன் கூடியிருந் தால் வாகன பிராப்தி, ஸ்த்ரீ, புத்திர விருத்தி, சுபாதிக விரையம், சுப மூலமாக தன லாபம், தன் பேரினால் முத்திரையிடுதலான உத்தி யோகம், கீர்த்தி லாபம், நீல வஸ்திராதி லாபம், சுகந்த பரிமள போக சௌக்யம், தீர்த்தஸ்நான பல பிராப்தி, சேது யாத்திரை, இஷ்ட பிரபுவினால் விசேஷ சௌக்யம், சர்வ காரிய சித்தி.

செவ்வாய் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசி யிலும், பாபக்கிரகங்களுடன் கூடி யிருந்தால் பந்து விரோதம், அக்னி பயம், தேகத்தில், ஆசனத்தில் பாதை, விஷ பீதி, சர்ப்ப பயம், தார, புத்ராதி பீடை, இஷ்ட பந்து நாசம், சமான ஜன விரோதம், தாயாதி கலகம் உண்டாகும்.

செவ்வாய் 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் சம்ப விக்கும். இந்த தோஷ நிவர்த்திக்கு குதிரைக் குட்டி தானம் செய்யவும், மிருத்யுஞ்ஜய ஜபமாவது, கந்தர் பூஜையாவது செய்தால் தோஷ நிவர்த்தி.

## புதன் தெசையில் ராகு புக்தி மீ 30 நாள் 18-க்குப் பலன்.

ராகு லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்

களிலும், உச்ச ராசியலும், சுபாமிசையிலும், சுபக்கிரகங்களுடன் கூடியும், சுபர் பார்வை அடைந்தும் இருந்தால் ராஜ சல்லாபமும், சம்பத்தும், நூதன பிரபு இஷ்டமும், நாற்கால் ஜீவன் லாபமும், புண்ய தீர்த்த ஸ்தானமும், தேகாரோக்யமும், விசேஷ சௌக்யமும், பிரபு மூலமாக அதிக சுகமும், வஸ்த்ராபரண பிராப்தியும், இஷ்ட சித்தியும், சுகாதிகமும் உண்டாகும்.

ராகு லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், நீச அமிசையிலும், நீச கிரக சம்பந்தமும், குரூர கிரகங்களுடன் கூடியுமிருந்தால் விஷ பீதி, சோரபாதை, அக்னி பயம், தார சோகம், வியாதி பீடை, மரண சமான பயம், ஸ்தான பேதம் உண்டாகும். கடகம், சிம்மம், கும்பம் இந்த ராசிகளில் ராகு இருந்தால் கலகமும், சத்ருக்களாலும், ராஜாக்களாலும் யுத்தத்தில் அப ஜெயமடைவதும் என்பதாம்.

ராகுவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் சிரோ ரோகம், நேத்ர பாதை, பிதுருவர்க்க நாசம் என்பது.

ராகுவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மாதுரு வியோகம், ஸ்த்ரீ நாசம், அதிக விரோதம், சர்வ ஜன கலகம், தன விரையமும் உண்டாகும்.

ராகுவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் தாயாதி விருத்தி, கலகமும் பந்து மரணமும் உண்டாகும் என்பது.

ராகுவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் விவேக சூன்யமாய் இருப்பது, யுக்தாயுக்தங்கள் இல்லாமையான பிரஸங்கம் செய்வது, கடன் விருத்தியும் உண்டாகும்.

ராகுவைக் குரு கூடினாலும், பார்த்தாலும் குருவும், புத்திரர்களும் நாசம், புத்தி சபலம், சரீர பாதை, தன விரையம் என்பது.

ராகுவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் தார, புத்ராதிகளுக்கு சுகம், விவாஹம் செய்வது, வாகனாதி பிராப்தி, புத்திர ஜனனம்.

ராகுவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் சரீர வியாதி, மனோ விசனம், பசு பீடை, அடிமை ஜன நாசம், தன் பத்தினிக்கு தேக பாதை உண்டாகும்.

ராகு தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், 6-மிடத்திலும் சுபக்கிரகங்களுடன் கூடியிருந்தால் அபூர்வமான ராஜ தரிசனங்கள் கிடைப்பது, இஷ்ட வஸ்த்துக்கள் பிராப்தி, தார சௌக்யம், பந்து சௌக்யம், புத்திர, மித்திரர்களுக்கு சந்தோஷம், சர்வகாரிய சித்தி.

ராகு தெசாநாதனுக்கு 8, 12-மிடங்களிலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தால் சரீர பாதை, புத்தி பிரமம், இதர ஸ்த்ரீ கமனமும், அப கீர்த்தி, அதிக பயம், விதவை ஸ்த்ரீயால் கலகம், அகால போஜனம், எத்தன காரிய நாசம்.

ராகு 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு ருத்ர சகஸ்திர நாமம் பாராயணம் செய்து, ஆடுதானம் செய்தால் தோஷ நிவர்த்தியாகி சர்வசம்பத்தும் உண்டாகும்

## புதன் தெசையில் குரு புக்தி மீ 27 நாள் 6-க்குப் பலன்

குரு லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலும் இருந்தால் இஷ்ட வஸ்த்து பிராப்தி, தன தானிய சமர்த்தி, ஆத்ம சமான பந்து தரிசனம், ராஜாக்களால் மரியாதை பெறுவது, தடாகம், குளம், கிணர் இவைகள் நிர்மணமும், நந்தவனம் வைப்பதும், விருக்ஷ ஜாதி வகையரா தோட்டம், தோப்பு வைப்பதும், சிவாலய பிரதிஷ்டை செய்வதும், யக்ய யாகாதிகளில் புண்ய சித்தி உண்டாவதும், புத்திர பிராப்தி, அதிகாரப் பிராப்தி, தார சுகம், யுத்த ஜயம், ரத்ன லாபம், ஸ்வர்ண லாபம், வாகனுதி பிராப்தி, மந்திர, யந்திர, கர்ம சித்தி உண்டாகும், சௌக்யமும், தன லாபமும் உண்டாகும், செவ்வாயுடனுவது, கேதுவுடனுவது கூடி இருந்தால் கலகம் உண்டாகும்.

குரு 6, 8, 12-மிடங்களிலும், நீசராசியிலும், சனி செவ்வாய், ராகு வுடனே கூடியுமிருந்தால் கலகமும், பந்து நாசமும், சோர பாதையும், ராஜ பயமும், துக்கமும், மாதா, பிதா மாணமும், ஜுரத்திலுல் பயமும், ரணரோகமும், அக்னி பயமும், பசு, வாகன நாற்கால் ஜீவன்கள் நாசமும், பூமி நாசமும் உண்டாகும்.

குருவைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும் கிருஷி மூலத்தில் தன லாபம், உத்தியோக பிராப்தி, ராஜ சன்மானம் உண்டாகும்.

குருவைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் வஸ்திர லாபம், அதிக சுபம், மன சந்தோஷம், சௌக்கியம், மாதுரு வம்ச விருத்தி என்பது.

குருவைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் யுத்தத்தில் ஜயமும், தன் வாரத்தில் ராஜ சன்மானமும், பூமி லாபமும் உண்டாகும்.

குருவைப் புதன் கூடினுலும், பார்த்தாலும் வஸ்திர பூஷண லாபம், வித்யா விநோதாதிகமான பண்டிதாளுடனே சகவாசித்தலுமாம்.

குருவை சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீ சௌக்கியம், விவாஹ சுபாதிகம், வாக விருத்தி, இஷ்ட பிரபுவால் விசேஷ கீர்த்தி, வீடு, வஸ்திரா பரணங்களுடன் நிறைந்து இருப்பது.

குருவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் களரோக பிராப்தி, அடிமைவர்க்க நாசம், பெரியவாளுடன் விரோதப் படுவதாம்.

குரு தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், சுபக் கிரகங்களுடன் கூடியிருந்தால் தன லாபம், உத்தியோக பிராப்தி, தாரா, புத்திர சௌக்கியம், விவசாய லாபம், க்ஷேத்திர விருத்தி, தானிய லாபம், சுயகுல பிரபு மூலத்தினால், அதிக சௌக்கியம், தன் வாரத்தில் ராஜ தரிசனமும், சாஸ்த்திராதி கிரந்த அர்த்த விசாரணையும் நடக்கு மென்பது.

குரு தெசாநாதனுக்கு, 6, 8, 12-மிடங்களிலும், பாபக்கிரகங்களுடன் கூடியுமிருந்தால் பிராம்மண விரோதம், புத்ரபகை, தேக பாதை, புத்தி நாசம் அதிக கலகம், ஸ்தான நாசம், சமான ஜன கஷ்டம், நாற்கால் ஜீவன் நஷ்டம்.

குரு 2, 7-மிடங்களி லிருந்தால் அகால மரணம் சம்பவிக்கும். மிருத்தியுஞ்ஜய ஜபம் செய்து பொன்னால் பிரதிமை தானம் செய்தால் சகல தோஷ நிவர்த்தி.

## புதன் தெசையில் சனி புக்தி மீ 32 நாள் 9-க்குப் பலன்

சனி லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலும் இருந்தால் புண்ணிய தீர்த்த ஸ்தானமும், தேவ தரிசனமும், மேற்குதிக்கு பிரயாணமும், ராஜ தரிசனமும், மாதுரு விருத்தி, பந்து விருத்தியும், ராஜப்ரீதி, அடிமை ஜன சமுத்தியும், சூத்திர பிரபு மூலமாக சுகமும், அநேக க்ஷேத்திராபி விருத்தியும், தானியாதிக வுற்பத்தியும், பசு, ரத்தினாதி லாபமும், புத்திர ஜனனமும் உண்டாகும்.

சனி லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும் இருந்தால் பந்து கலகம், சமான ஜன நாசம், இதர தேச வாசம், பூர்வ வாசஸ்த்தான கிராமஸ்திதி நாசம், அதிகார பங்கம், யுத்தத்தில் பயம், நீசஜனங்களிட கலகம், தன்வாரத்தில் ராஜாக்களால் நிவர்த்திக் கப்படுவது.

சனியை சூரியன் கூடினாலும், பார்த்தாலும் பிதுரு நாசம், தன விரயம், சிரோபாதை, கலகம் பிரபலயுத்தம் சம்பவிக்கும்.

சனியை சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மாதா மரணம், பந்து நாசம், அகால போஜனம், எத்தன காரியம் தடையாகு மென்பது.

சனியை செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் தாயாதி விரோதத்தால், தன நாசம், விஷ பாதை, ஆயுத பீடை, உஷ்ண ரோகம் சம்பவிக்கும்.

சனியை புதன் கூடினாலும், பார்த்தாலும் காவிய கணித வித்யா நிபுணத்துவம், விவஹாரத்தில் அதிக சாதுர்யம், பந்துக்களை சவரக்ஷித்தலும்.

சனியை குரு கூடினாலும், பார்த்தாலும் புத்ர பீடை, பிராம்மண விரோதம், எத்தன காரியம் பங்கம் என்பது.

சனியை சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் விசேஷ லாபம், தன சமுர்த்தி தாரா புத்ராதி சௌக்யம், அனேக வாகனலாபம் உண்டாகும்.

சனி தெசாநாதனுக்கு கேந்திர கேணங்களிலும், 3, 12-மிடங்களிலும், சுபக்கிரகங்களுடன் கூடியுமிருந்தால் சுப சோபன சம்பத்தும், மேலானவர்களை ஆஸ்ரயிப்பது, அதிக பிரீதியும், சபா பாண்டித்திய பூஜிதமும், மேன்மையான வஸ்த்து லாபமும், வேதாந்த அர்த்த கியானமும், சூத்திர பிரபுக்களினால் சௌக்யமும், சர்வ காரிய சித்தியும் உண்டாகு மென்பது.

சனி தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களில், பாபாக்கிரகங்களுடன் கூடி இருந்தால் சரீர பாதை, ஸ்தான சலனம், குரு நாசம், பந்து ஹானி, ராஜகலம், அதிகார நாசம் என்பது.

சனி, 2, 7-மிடங்களில் இருந்தால் அகால மரணம் சம்பவிக்கும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு எருமை தானம் செய்யவும்.

புதன் தேசை சம்பூரணம்

---

# கேது தெசை வருஷம் 7-க்குப் பலன்

பொது.

1. துக்கமும், பயமும், சுற்ற விரோதமும், அதிக கஷ்டமும், க்ஷேத்ர நாசமும், தன விரையமும், புத்திர நாசமும், தார வியோகமும், கிரக நாசமும், தேசாந்திர வாசமும், ராஜ விரோதமும் உண்டாமென்பது.

2. தெசை ஆதிபாகத்தில் சுகமும், மத்திய பாகத்தில் அதிக

பயமும், அந்திய பாகத்தில் ராஜ பீதியும் அல்லது தேக நாசமும் உண்டாகும்.

3. கேது தர்ம கர்மாதிகளுடன் கூடினாலும், லக்னாதிபதி யுடன் கூடினாலும் தனதானிய லாபங்களும், ராஜ்ய பிராப்தியும், லக்ஷிமி கடாக்ஷமுமாயிருப்பது.

4. ராகு, கேதுக்கள் வக்கிர கிரகங்களுடன் கூடினால் அல்லது அஸ்தங்கதர்களானாலும் ஜெயில் வாசம் பண்ணும்படியாக ராகு, கேது தெசை செய்யுமென்பது.

5. சூரிய, சந்திரர்கள், ராகு, கேது கிரஸ்தர்களாக அதாவது கிரகண காலமாக அந்த தெசையில் மரணமும், மரண சமான ஆயுத பாதையும், சர்ப்ப பீதியும், அக்னி பயமுமாம்.

6. கேது பரம உச்ச ராசியிலிருந்து தெசை நடந்தால் நல்ல கீர்த்தி, யுத்தத்தில் ஜெயம், சுவர்ன வஸ்திராபரண லாபம், பசு, குதிரை, யானை முதலிய லாபமுமுண்டாகும்.

7. கேது உச்ச ராசியிலிருந்தால் கீர்த்தி, ஜெயமும், ராஜ சன்மானமும், புராண கதா கேள்வியும், வித்யாதிகமும், மனோ விலாசமும், மேலான அந்தஸ்தும் உண்டாகும்.

8. கேது நீச ராசியிலிருந்து தெசை நடந்தால் ஆசார நாசமும், அப கீர்த்தி, ஸ்தான நாசம், மனோ விசாரம், தாரா, புத்திர பீடை, விதவைகளால் கலமும் உண்டாகும்.

9. கேது அதி நீச ராசியிலிருந்து தெசை நடந்தால் தாரா, புத்திர நாசமும், தன நாசமும், க்ஷேத்ர நாசமும், மனோ விகாரமுமாம்.

10. கேது உச்ச கிரகங்களுடன் கூடி தெசை நடந்தால் அதிக சுகமும், அதிக கௌரவமும், ராஜ பூஜ்யதையும் உண்டு. கொஞ்சம் பொருள் நஷ்டமாகும்.

11. கேது நீச கிரகங்களுடன் கூடியிருந்தால் அதிக கஷ்டமும், தாரா புத்திரர் நாசம், பொருள் நாசம், திருடரால் பயம், ஆயுதத்தினால் துன்பப் படுதல், அக்னி பயம் உண்டாகும்.

12. கேது அதிமித்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் தன லாபமும், தார விருத்தி, இஷ்ட ஜனாதிகம், புத்திரோற்பத்தி, கிராமாதிபத்யம், ராஜஸன்மானம் உண்டாகும்.

13. கேது மித்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் சுகம், யுத்த ஜெயமும், வெள்ளை குடை, கொடி முதலாகிய பிருதுகளுண்டாகும்,

14. கேது சம கிரக ராசியிலிருந்து தெசை நடந்தால் உபாய லாபமும், அற்ப கிராமாதி பத்யம், கொஞ்சம் தானிய லாபமும், கொஞ்சம் தரும தானமும், கொஞ்சம் மித்திர விருத்தியும், கொஞ்சம் சத்ரு விருத்தியும் உண்டாகும்.

15. கேது ஆட்சியிலிருந்து தெசை நடந்தால் ராஜாக்கள் சினேக முண்டாகும், புத்திர விருத்தி, தனலாபம், பூஷண லாபம், வஸ்திர லாபம், அனேக யாகாதி, அவுபாஸன மந்திர சித்தியும், பந்து ஜனானுகூலமும் உண்டாகும்.

16. கேது சத்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் மனோவிசாரம், தார, புத்திராதி, பூஷணாதி விரயம், ராஜ பயம், சத்துரு விருத்தி, கீர்த்தி நாசம், சுயஜனங்களினால் அபவாதம், பயமும் உண்டாகும்.

17. கேது அதிசத்துரு ராசி யிலிருந்து தெசை நடந்தால் விசேஷபயம், ஸ்தான நாசம், சரீர ஜாட்டியம், மனோதுக்கமுமாம்.

18. கேது சுப கிரகங்களுடன் கூடி தெசை நடந்தால் கீர்த்தி லாபம், ஜெயமும், வஸ்திரலாபம், பூஷணலாபம், க்ஷேத்திர லாபம், தனலாபமும், பசு வாகன விருத்தி, தாரா புத்திரர்கள் சௌக்கியம், ரத்தின லாபமும் உண்டாகும்.

19. கேது பாபக்கிரகங்களுடன் கூடி தெசை நடந்தால் ராஜ்ய நாசம், இஷ்ட ஜன விரோதம், நாற்கால் ஜீவ நாசமும் உண்டாகும்.

20. கேது சுப கிரக பார்வை பெற்று தெசை நடந்தால் ராஜாக்கள் இஷ்டமாவார்கள், புத்திர விருத்தி, பந்து ஜன விருத்தி, தானியாதிகம், தன லாபம், அதிகமான ஆபரண லாபம், விசேஷ புண்ய தீர்த்த யாத்திரை பலன் கிடைக்கு மென்பது.

21. கேது பாப கிரக பார்வை பெற்று தெசை நடந்தால் பிதாவுக்கும், பிதுரு வர்க்கத்தாருக்கும் துக்கம் நேருமாம், ஜுரத்தினால் பீடிக்கப்படுதல், அதிஸார பேதி காண்பது, ரோக பயம். மேக வியாதி, பிரயாணத்திலே திருடர் பயம் நேரும்.

## மேஷாதி 12 ராசிகளில் கேது நிற்கும் பலன்

22. கேது மேஷ ராசியிலிருக்கப் பலன்:—கேது மேஷ ராசியிலிருந்து தெசை நடந்தால் குதிரை முதலான வாகன நாசம், க்ஷேத்திர நாசம், ஸ்தான நாசம், ராஜ கலகம், ஸமான ஜன கஷ்டமும் உண்டாகும்.

23. கேது ரிஷப ராசியிலிருக்கப் பலன்:—கேது ரிஷப ராசியிலிருந்து தெசை நடந்தால் நல்ல அபிவிருத்தியும், உயர்ந்த ரத்தின லாபமும், வஸ்திராபரண பிராப்தி, ராஜாக்களால் தன பிராப்தி, யுத்

தத்தில் சத்துரு ஜெயம், புண்ய தீர்த்த ஸ்நானமும், பண்டிதர்களால் பூஜிக்கப்படுதல், யக்ய கர்மாதிகள் சித்தியுமுண்டாகும்.

24. கேது மிதுன ராசியிலிருக்கப் பலன் :—கேது மிதுன ராசியிலிருந்து தெசை நடந்தால் பசு, மாடு, கன்று, காலி, வாகனுதி முதலான லாபங்களும், அசுவ, கெஜவாகன லாபமும், கிராமாதி பத்யமும், புராதிபத்யமும், மேதாவியான சக்தியும், கீர்த்தி லாபமும், தீர்த்த யாத்திரை பலனுமுண்டாகும்.

25. கேது கடக ராசியிலிருக்கப் பலன் :—கேது கடக ராசியிலிருந்து தெசை நடந்தால் ஸ்தான நாசம், பசு நாசம், கெங்காஸ்நானமும், மந்திர சித்தியும், முத்து, பவளம், ரத்தினுதி லாபமும் உண்டாகும்.

26. கேது சிம்ம ராசியிலிருக்கப் பலன் :—கேது சிம்ம ராசியிலிருந்து தெசை நடந்தால் ஒரு முக்கிய பட்டணத்திற்கு தலைவனுக இருப்பவர் சினேகமும், நல்ல ஆடை, ஆபரணுதி லாபமும், வேதாந்த தத்வ ஞானுதிகாரியாவதும், நடன ஸ்த்ரீ சபையும், சங்கீத பிரஸங்கம் செய்கிற சபை வாஸமாகவே இருப்பது.

27. கேது கன்னி ராசியிலிருக்கப் பலன் :—கேது கன்னி ராசியிலிருந்து தெசை நடந்தால் க்ஷேத்திர நாசம், தன நாசம், தாரா, புத்திர நாசம், ராஜ குரோதம், அக்னி பயம், ஆயுத பீடை, அனேகம் பேருக்கு ஒத்தாசை செய்கிறதற்கு ஆசைப்படல், தான தர்மாதி ஈனத்வமும் உண்டாகும்.

28. கேது துலா ராசியிலிருக்கப் பலன் :—கேது துலா ராசியிலிருந்து தெசை நடந்தால் தன லாபமும், தாரா, புத்திர ஸௌக்யம், மித்திர சௌக்யம், பந்து ஜன் விகிதமும் உண்டாகும்.

29. கேது விருச்சிக ராசியிலிருக்கப் பலன் :—கேது விருச்சிக ராசியிலிருந்து தெசை நடந்தால் சத்துருக்களால் பங்கம் நேரும், மானஹானி, சத்துரு விருத்தி, தன நாசமும், க்ஷேத்திர நாசமும், பசு, வாகன நாசமும் வரும்.

30. கேது தனுசு ராசியிலிருக்கப் பலன் :—கேது தனுசு ராசியிலிருந்து தெசை நடந்தால் ராஜ சினேக முண்டாகும், அனேக க்ஷேத்திரங் களுண்டாகும், சதா வேதமோதல், வாக்யங்களுக்கு அர்த்தம் செய்கிறது, ரத்தின பிராப்தி, பொன், பூஷணுதிகம், தாரா, புத்திராதிகள் சௌக்யமென்பது.

31. கேது மகர ராசியிலிருக்கப் பலன் :—கேது மகர ராசியில் இருந்து தெசை நடந்தால் கஷ்டமும், தார பாதையும், அதிகார நாச

மும், ருண விருத்தி, அமங்கலை ஸ்த்ரீகள் விவாதம், சஸ்திர பாதை, புத்ர நாசம் உண்டாகும்.

32. கேது கும்ப ராசியிலிருக்கப் பலன் :—கேது கும்ப ராசியி லிருந்து தெசை நடந்தால் அதிக பயமும், சமான பந்து நாசம், விஷ பீதி, ஆயுத பீடை உண்டாகும்.

33. கேது மீன ராசியிலிருக்கப் பலன் :—கேது மீன ராசியில் இருந்து தெசை நடந்தால் வித்தியா விருத்தியும், கீர்த்தி சன்மான மும், உயர்ந்த வஸ்திராபரண லாபமும், தானிய லாபமும், குதிரை, யானை முதலிய வாகனங்களுமுண்டாகும்.

## கேது லக்னாதி 12 பாவங்களில் நிற்கும் பலன்

34. கேது 1-ல் நிற்கப் பலன் :—கேது லக்கினத்தில் இருந்து தெசை நடந்தால் சரீர பாதை, சரீர காந்தி ஈனப்படுவது, புழுகு பாதை, ரண பாதை, மனோ சிந்தை, கஷ்டம், மானபங்கம் உண்டா கும்.

35. கேது 2-ல் நிற்கப் பலன் :—கேது 2-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தன விரையம், பந்து விரோதம், கஷ்டமும், நேத் திர பாதை, குடும்ப பாதை, ஸ்தான பேதமும், குறைவான சாப்பாடு என்பது.

36. கேது 3-ல் நிற்கப் பலன் :—கேது 3-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் சத்துரு நாசம், நல்ல சங்கீத வித்யா பாண்டித்யம், அதிக தீரத்வமும், நல்ல வஸ்த்துக்கள் கிடைப்பதும், ஆபரண லாப மும், நல்ல வஸ்திர லாபம், நல்ல ரத்தினங்கள் கிடைக்குமென்பது.

37. கேது 4-ல் நிற்கப் பலன் :—கேது 4-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் மாதாரிஷ்டம், பந்து பீடை, பந்து விரோதமும், க்ஷேத்திர நாசம், வீட்டில் திருடர் பயமும், அக்கினி பயமுமாம்.

38. கேது 5-ல் நிற்கப் பலன் :—கேது 5-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் கஷ்டமும், தார நாசம், பிதுர் நாசம், சகோதர நாசம், புத்திர பீடை, புத்தி விலசம், அகால போஜனம், குலாசார ஈனம் என்பது.

39. கேது 6-ல் நிற்கப் பலன் :—கேது 6-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தாரா, புத்திர சௌக்யமும், பந்துக்களில் கல்யா ணம், பிராமண பூஜை, சத்துரு ஹானியும், தன பிராப்தியும், ராஜ சன்மானமும், கீர்த்தி லாபமும் வரும்.

40. கேது 7-ல் நிற்கப் பலன் :—கேது 7-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் சம்பத்தும், ஸ்தான மாறுதல், தாரா, புத்திர நாசம், பந்து விரோதமும், மனோ விசனமு முண்டாம்.

41. கேது 8-ல் நிற்கப் பலன் :—கேது 8-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் கிராணி ரோகத்தினுல் பயம், இருமல் ரோகம் பிடிக்கிறது, சமான ஜன நாசம், புத்தி பிரமையும், அதிக பயமுமாம்.

42. கேது 9-ல் நிற்கப் பலன் :—கேது 9-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் பிதா மரணம், குருவுக்கு அரிஷ்டம், சினேக பிராமணருக்கு விபத்தும், துக்கமும், சுப கர்ம நாசமும் உண்டாகும்.

43. கேது 10-ல் நிற்கப் பலன் :—கேது 10-மிடத்தி லிருந்து தெசை நடந்தால் துக்கமும், மான ஹானியும், மனோ சாட்டியமும், அபகீர்த்தியும், பயமும் உண்டாகும்.

44. கேது 11-ல் நிற்கப் பலன் :—கேது 11-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் ஸௌக்யமும், உத்தியோக பிராப்தியும், ராஜ சன்மானமும், யக்ய யாக பலசித்தியும், தானுதிக புண்ய பல பிராப்தியுமாகும்.

45. கேது 12-ல் நிற்கப் பலன் :—கேது 12-மிடத்திலிருந்து தெசை நடந்தால் அதிக கஷ்டமும், சரீர பாதையும், மானபங்கமும், அதிகமான விரையமும், வெளிதேச பிரயாணம், அன்னிய தேச பிரயாணம், அன்னிய தேச வாஸமும் உண்டாகும்.

46. கேது கேந்திர ஸ்தானத்திலிருந்து தெசை நடந்தால் ராஜ பூஜ்யதையும், உயர்ந்த வஸ்த்துக்கள் லாபமும், ஆடையாபரண பிராப்தி, ரத்தின லாபமும், இஷ்ட சித்தி, தாரா, புத்திர சௌக்யமும் உண்டாகும்.

47. கேது திரிகோண ராசியிலிருந்து தெசை நடந்தால் அதிக சுபமும், புத்திர விருத்தி, கீர்த்தி லாபம், புண்ய தீர்த்த ஸ்நான பலனுமுண்டாகும்.

48. கேது துர்ஸ்தானங்களிலிருந்து தெசை நடந்தால் மனோ விசாரமும், அபிமான பங்கமும், க்ஷேத்திர நாசமும், சத்ரு விருத்தியும், தன நாசமும், சர்வ காரியமும் நாசமாம் என்பது.

## கேது ஆரோகணத்தில் நிற்கும் பலன்

49. கேது ஆரோகண ராசிகளிலிருந்து தெசை நடந்தால் அதிக சௌக்யமும், விசித்திரமான ரத்னங்கள் கிடைப்பது, குதிரை, வாகனுதிகள் பிராப்தியாம்.

## கேது அவரோகணத்தில் நிற்கும் பலன்

50. கேது அவரோகண ராசிகளிலிருந்து தெசை நடந்தால் அதிக கஷ்டமும், பயமும், மாதுரு வியோகமும், சகோதரி நாசமும், புத்தி பிரமையும், பந்து நாசமும் உண்டாகு மென்பது.

## கேது தெசையில் கேது புக்தி மீ 4 நாள் 27-க்குப் பலன்

கேது லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 6, 11-ம் இடங்களிலும், பலாதிகளுக இருந்தாலும், உச்ச ராசியிலிருந்தாலும், சுப நவாமிசையிலிருந்தாலும், கோபுராங்கிசையி லிருந்தால் அதிக கீர்த்தி லாபமும், ராஜ்யாதிகாரத்வமும், சத்திர, சாமராதி வைபவமும், சோரரால் திரவிய லாபம், தீர்த்த யாத்ரை பலசித்தியும், தாரா, புத்திர சௌக்யமும், மித்துரு விருத்தி, தன லாபம், யுத்த ஜெயம், வீட்டில் கலியாண சுபங்கள் நடத்தல், தேவதா பூஜை, குரு பக்தி, தானதர்ம பரோபகாரமும், கடன் கொடுத்து திரவியம் சம்பாதிப்பதும், அமங்கலை ஸ்த்ரீயை சேருவதுமாகும். இந்த கேது 9, 10-மிடத்ததிபதிகளுடன் கூடினலும், சுபர் பார்வையை பெற்றிருந்தாலும், புண்ய தீர்த்த யாத்ரா ஸ்நானமும், தேவாலய தரிசனமும் கிடைக்கும் என்பது.

கேது லக்கினத்திற்கு 8, 12-மிடங்களில் நீசரோடேயாவது, பாபிகளுடனேயாவது கூடி இருந்தால் குரூரர் வீட்டிலேயாவதிருந்தால் தாயாதி கலகமும், விதவைகள் கலகம், தார பீடையும், புத்திராரிஷ்டம், தேசாந்திரங்களில் கமனம், சமான ஜன நாசம், அதிக சினேகிதருக்கு கஷ்ட நஷ்டம், நாற்கால் ஜீவ நாசமும் உண்டாகும்.

கேதுவைச் சூரியன் கூடினலும், பார்த்தாலும் அதிகார பங்கமும், ராஜாக்களால் வருத்தம், காரிய நாசம், சிரோ பாதை சந்தேகமில்லாமலுண்டாகும்.

கேதுவைச் சந்திரன் கூடினலும், பார்த்தாலும் மாதுர் வமிச நாசம், மனே துக்கம், மானபங்கம், குதிரை வாகன நாசம் என்பது.

கேதுவைச் செவ்வாய் கூடினலும், பார்த்தாலும் விஷ பீதியும், ஆயுத பீடை, அக்னி பயம், உத்தியோக நாசம், துக்கமும், சகோதரிகள் வமிச நாசம் என்பது.

கேதுவைப் புதன் கூடினலும், பார்த்தாலும் பந்து விரோதமும், அகால போஜனம், பந்து, மித்திர விரோதமுண்டாகும்.

கேதுவைக் குரு கூடினலும், பார்த்தாலும் குரு, புத்திராதிகளுக்கு பீடை, தேக பாதை, புத்தி பிரமை, ஸ்த்ரீ மூலத்தினல் தன நாசம் என்பது.

கேதுவைச் சுக்கிரன் கூடினலும், பார்த்தாலும் தார பீடை, வாகன நாசம், ஸ்த்ரீ மூலத்தினல் தன சேதமாம்.

கேதுவைச் சனி கூடினலும், பார்த்தாலும் ஆள் அடிமைகள் நாசம், மதிகேடு, ஜெயில் வாஸம், கட்டுப்படுகிறதும், ராஜ கோப

ழும் உண்டாகும்.

கேது லக்கினத்திற்கு 2, 7-மிடங்களி லிருந்தால் அகால மரணம் வரும். இந்த தோஷ நிவர்த்திற்கு மிருத்யுஞ்ஜய ஜெபம் செய்து, உமாமஹேஸ்வர தானம் செய்த பிறகு ஆயுர் விருத்தி உண்டாகும்.

## கேது தெசையில் சுக்கிர புக்தி ஸ்ரீ 14-க்குப் பலன்

சுக்கிரன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், உச்ச ராசியிலும், தெசாநாதனுடன் கூடி யிருந்தாலும், தனியாக இருந்தாலும் தாரா, புத்திர விருத்தி, வாகனுதி விருத்தி, கல்யாணுதி சுபமும், இஷ்ட பிரபு மூலத்தினுல் சுகம், வேசி ஸ்த்ரீயை கூடுதலும், ஜப கர்ம சித்தியும், நாற்கால் ஜீவன்கள் விருத்தியும், யுத்தத்தில் சத்துரு ஜெயமும், சரீராரோக்யமும், அதிக சுகமும், பந்து ஜனேபகாரம், ரத்தின பூஷண லாபமும், பாக்யாதிபதியுடன் கூடியிருந்தால் ஐஸ்வரியமு முண்டாகும்.

சுக்கிரன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், நீசாமிசையிலும், பாப கிரகங்களுடன் கூடினுலும், அஸ்தங்கதனுக இருந்தாலும் ராஜ துவேஷம், தனதானிய நஷ்டம், பசு, வாகன நஷ்டம், உயர்ந்த ஸ்தானத்திலிருந்து விழுவது, விஷபீதி, மனே விகாரம், அன்னிய தேச வாஸமும், எத்தன காரிய பங்கமும் உண்டாகும்.

சுக்கிரனைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும் ராஜானுக்கிரகங்கள் கிடைப்பது, சர்வ காரிய பங்கமும், ராஜ காரிய நாசமும் உண்டாகும்.

சுக்கிரனைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் ரத்தின பூஷண லாபமும், விசித்திர வஸ்த்ராபரண சேர்க்கையும், வாகனுதி விருத்தியு முண்டாகும்.

சுக்கிரனைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் தாயாதிகளுடன் கலகமும், திருடர் பயம், ரோக பீடை, அபகீர்த்தி பயமும், உண்டாகும்.

சுக்கிரனைப் புதன் கூடினுலும், பார்த்தாலும் வித்யா லாபம், தன லாபம், பந்து ஜன உபகாரம், வர்த்தகர் மூலத்தினுல் தனம் வருமென்பது.

சுக்கிரனைக் குரு கூடினுலும், பார்த்தாலும் புத்திர விருத்தியும், தேகாரோக்யம், தன லாபம், ஸர்வ காரிய சித்தியும் உண்டாகும்.

சுக்கிரனைச் சனி கூடினுலும், பார்த்தாலும் தாரா, புத்திராதி பீடை, சமான ஜன சோகம், பசு, வாகன நஷ்டம் உண்டாகும்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும் இருந்தால் லக்ஷிமி கயாக்ஷத்தால் ஐசுவரிய பிராப்தியும், மஹா ராஜாக்களால் மரியாதையும், அதிகார விருத்தியும், ரத்ன லாபமும், ஸ்த்ரீ ஸௌக்யமும், புத்திர விருத்தி, வேசி ஸ்த்ரீ சினேகிதமும், சுகமான சயன சௌக்யமும், தாஸ, தாஸீ ஜன விருத்தி, தன லாபமும் உண்டாகும்.

சுக்கிரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாபிகளுடன் கூடியும் அல்லது நீசாமிசையிலிருந்தாலும் ஸ்த்ரீ மூலமாக கலகமும், தன நாசமும், மனோ துக்கமும், பந்து விரோதமும், இதர தேச வாசமும், ஸமான ஜன பீடையுமுண்டாகும்.

சுக்கிரன் லக்கினத்திற்கு 2, 7-மிடங்களி லிருந்தால் அகால மரணம் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு துர்க்கை தானம் செய்யவும்.

## கேது தெசையில் சூரிய புக்தி மீ 4 நாள் 6-க்குப் பலன்.

சூரியன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், உச்ச ராசியிலிருந்தாலும், சுப கிரகங்களுடன் கூடினாலும், பார்வையைப் பெற்றாலும் ராஜானுக்கிரகமும், அதிகார விருத்தியும், புண்ய தீர்த்த சேவையும், தேவ பிராமண பூஜையும், யதிதிகளுடைய சேர்க்கையும், தாரா, புத்திர ஸௌக்யமும், கீர்த்தி விருத்தி, பிரயத்தன மில்லாமலே காரியசித்தி யாவதும், தன் வாரத்தில் ராஜ பேட்டி காண்பதுமாகும்.

சூரியன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், சத்துரு ராசியிலிருந்தாலும், மானபங்கம், மனஸ்தாபமும், அதிகார பங்கமும், அன்னிய கிராம வாசமும், சத்துரு விருத்தியும், சிரோ பாதையும், நேத்திர வியாதியும், பந்து பகை, காது நோய் இவைகளுண்டாகும்.

சூரியனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் அகால போஜனம், வஸ்த்திர ஈனம், வியாபாரத்தில் கடன் அதிகமாகும்.

சூரியனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் ஆயுத பீடை, யுத்தத்தில் பயம், சகோதரர்களிடத்தில் கலகம், ராஜ பீடை, சோர பயம், அக்னி பயம் உண்டாகும்.

சூரியனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் சிரசில் ஜடையை தரித்துக்கொண்டு இருக்கிற யோகீஸ்வரர்களுடைய சகவாஸாதி அனுக்கிரகமும், தீர்த்த யாத்திரா பிரஸங்கமும், தத்துவ ஞானங்கள் பிரஸங்கிப்பதுமாம்.

சூரியனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் தார, புத்திரர்கள் சௌக்யமும், சரீர ஸௌக்யம், தன லாபம், சதா தர்ம காரியங்களி லேயே முயற்சிப்பது.

சூரியனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் கதம்ப, கஸ்தூரி வாஸனாதிகளை அணிதலும், தாம்பூல சுக சந்தோஷமும், நல்ல மன சும், வாகன மேறுதல், கலியாணமும், சுப விருத்தியுமுண்டாகும்.

சூரியனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் நீச ஜனங்களுடனே கலகமும், அதிக வியாதியினால் பயமும், பசு நாசம், தாஸ, தாஸீ ஜன நாசம், சொந்த பிரபுவினால் விசேஷ பயமும் உண்டாகும்.

சூரியன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் மிடங்களிலும் இருந்தால் அபூர்வமான தீர்த்தயாத்திரைகள் கிடைப் பது, சிவனையும், விஷ்னுவையும் தெரிசித்தல், ராஜ மூலங்களினால் தன வரவும், கடன் கொடுத்து வாங்கும் திரவியாதிகமும், சுகமும், சத்திர சாமர வைபவங்களும், சத்துரு ஹானியும், ஜயமும், சுப சமாச்சார பத்திரிகை வருவதும், குதிரை முதலான வாகன பிராப்தி, பந்து கலியாணமும், அன்னதானாதிகமும், சத்காரியங்களில் சதா கியாபக மாக இருப்பது என்பதாம்.

சூரியன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும் சமான ஜன சோகம், திடீ ரென்று இடம் மாறுதல், தனக்கு இஷ்டர்களாலேயே வருத்தம் நேருவதும், சர்வ மனுஷாளாலும் கலகம், சர்வ காரியமும் நாசமா மென்பது.

சூரியன் லக்கினத்திற்கு 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மர ணம் நேரும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சிவ சகஸ்ர நாமம் பாராயணம் செய்து சந்தன பில்லை நிறமான ரிஷப தானம் செய்வ தோடு சாந்தி, ஓமாதி கர்மமும் செய்யவேண்டியது.

## கேது தெசையில் சந்திர புக்தி மீ 7-க்குப் பலன்.

சந்திரன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், ஆட்சி ராசி யிலும், உச்ச ராசியிலும், லாப ஸ்தானத்திலிருந்தாலும், சுப கிரகத் துடன் கூடியிருந்தாலும், பூர்ண சந்திரனாக இருந்தாலும் ஸௌபாக்ய ஸௌக்யங்களும், சகல ஜயமும், தன லாபமும், விசேஷ சுகம், ராஜ சன்மானம், அதிக கீர்த்தியும், தீர்த்த ஸ்நான பலப்பிராப்தி, தேவாராதனையும், ஏரி, குளம், கிணர், தோப்பு வகையரா வைப்பது, இவைகள் நிர்மாணமும், எத்தன காரிய சித்தியும், தேகாரோக்ய மும் உண்டாகும்.

சந்திரன் 3, 6, 8, 12-மிடங்களி லிருந்தாலும், நீச ராசியிலும், நீசாமிசையி லிருந்தாலும், க்ஷீண சந்திரனுனாலும், சத்துரு ராசியி லிருந்தாலும் மாதுருகர்மம், சமானஜன நாசம், சிநேகிதருக்கு துக்கம், பூமிகள், நாற்கால் ஜீவன்கள் நஷ்டம், தானிய நாசம், ஸ்த்ரீ விவாத மும், கலகமும், ராஜ பாதையும், எத்தன காரிய பங்கமும், சிரோ ரோகமும் உண்டாகும்.

சந்திரனைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும் துக்கமும், கலக மும், ஸ்தான நாசமும், உத்தியோக சலனமும் உண்டாகும்.

சந்திரனைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் வாகன விருத்தியும், பசு விருத்தி, தானிய விருத்தி, சோதர விருத்தியும் உண் டாகும்.

சந்திரனைப் புதன் கூடினுலும், பார்த்தாலும் பந்து ஜன விருத்தி யும், அதிக சுகமும், வேதாந்த விசாரணையும், ராஜ மூலத்தில் சுகமும் உண்டாகும்.

சந்திரனைக் குரு கூடினுலும், பார்த்தாலும் புத்திர விருத்தியும், ராஜ்யாபிஷேகமும், தன லாபமும், ராஜ பிரீதி, எத்தன காரிய சித்தி என்பது.

சந்திரனைச் சுக்கிரன் கூடினுலும், பார்த்தாலும் வஸ்திராபரண லாபமும், வாகன விருத்தியும், ஸ்த்ரீ ஸௌக்யமும் உண்டாகும்.

சந்திரனைச் சனி கூடினுலும், பார்த்தாலும் அடிமைகள் நாச மாம், புத்திர மரணம், பசு, வாகன நஷ்டமும், தானிய நாசம், நீச ரிடத்தில் சேவகம் பண்ணுவது.

சந்திரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடி யிருந்தால் தன பிராப்தி, ஆடை, ஆபரணுதிகள் கிடைப்பது, வீட்டில் கலியாண சுபங்கள் நடத்துவது, புத்திரோற்சவமாகிறது, பல்லக்கு, வாகனம் ஏறுகிறது, ராஜ்பாதிகாரம், ராஜ்ய லாபமும் பெறுவது, அதிக சுகமும், வித்யா விநோதாதிக கோஷ்டி சமூகத்துடன் கூடியிருப்பது, நாஞு மூலத்தில் திரவியம் சேர்ப்பது என்பது.

சந்திரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாபிக ளுடன் கூடியுமிருந்தால் கீர்த்தியும், அதிக பயமும், ரோக பாதை, வெளிதேச வாஸம், பந்து கலகம், எத்தன காரிய பங்கமும், அகாலபோஜனமும் உண்டாகும்.

சந்திரன் 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மாணமாம். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு துர்க்கை ஜெபம் 1000 ஆயிரம் செய்து வெள்ளி குதிரையை தானம் செய்ய ஆயுராரோக்ய முண்டாகும்.

## கேது தெசையில் செவ்வாய் புக்தி மீ 4 நாள் 27-க்குப்பலன்

செவ்வாய் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களி லிருந்தாலும், பாபி தெசை, பாபி புக்தியானதால் தன தானிய நாசம், பிரஜைகளால் கோபிப்பது, ராஜாக்களுக்கு யுத்தத்தில் சத்துரு விருத்தி, மண்டலாதிபதியால் மிருத்யு பயமும், ஜெயிக்காமல் எதிரி ராஜாவால் அடித்து விட்டு விட்ட சேனையும், பந்து பகையும், கலகமும், சத்துரு பீடையும், க்ஷய ரோக பீடிதமும், மனோ பிராந்தி, ஸ்தான பேதம், பிராண நாசம் வியாதி பீடை, நிச்சயமான பயமேற்படும்.

செவ்வாய் சுபாமிசத்திலிருந்தாலும், சுப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், உச்ச ராசியிலிருந்தாலும், ஆட்சி ராசியிலிருந்தால் ஆதியில் கொஞ்ச சுகமும், மத்தியபாகத்தில் அதிக தன லாப ஸௌக்யமும், கடைசி பாகத்தில் துக்கமும், சத்கர்ம நாசமுமாமென்பது.

செவ்வாய் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தால் சுரமடித்தல், அக்கினி பாதை, சத்துரு பீடை, ரோக சோகம், மனோ பயம், பிரயாணத்தில் திருடர் பயம், அதிஸார பேதி, திடீரென்று கலகம் விளைவது, அசுபம் நேருவது, தார நாசமும் உண்டாகும், சுப கிரகங்களுடன் கூடியிருந்தால் ஆதி பாகத்தில் ஸௌக்யமும், மத்யாந்த பாகத்தில் துக்கமும் உண்டாகும்.

செவ்வாயைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ஜுரத்தாலும், அம்மையாலும் பயமாம், ரணபாதை, ஆரண்யங்களில் சஞ்சாரம் செய்கிறது, பக்குவமில்லாத போஜனம் கிடைப்பது.

செவ்வாயைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மாதாவமிசத்தாருக்கு நாசம், நேத்திர பாதை, மனஸ்தாபமும், அதிக வியாதியும் சம்பவிக்குமாம்.

செவ்வாயைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் பந்து விருத்தியும், சிலவித கலகத்தினால் மனோ துக்கமும், தூர தேச வர்த்தக லாபமென்பது, அவதூறுண்டாம்.

செவ்வாயைக் குரு கூடினாலும், பார்த்தாலும் ரோக பயமும், ஞாபக சக்தியில்லாமை, அதிக தனச் செலவு, ஆயுதங்களினால் பீடை.

செவ்வாயைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் வாகன விருத்தி, விவாக ஸௌக்யம், வஸ்திராபரணங்களுண்டாகும்.

செவ்வாயைச் சனி கூடினாலும், பார்த்தாலும் தனதானிய நாசமும், பரஸ்தல வாஸமும், சமான ஜனரிஷ்டம்.

செவ்வாய் தெசாநாதனுக்கு கேந்திரங்களி லிருந்தாலும், அஷ்டம விரைய ஸ்தானங்களிருந்தாலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், கிரக நாசம், கிராம நாசம், சண்டி ஸ்த்ரீயுடன் கூடுவது, செய்கிற வேலைகளில் பலன் நஷ்டம், கிருஷி நாசம், தன நாசம், திருடர் பயம், அக்கினி பாதை, சத்துரு பீடை, இஷ்ட ஜன நாசம், கலகம், விவகாரத்தோற்பு, விஷ ஜெந்துக்களினால் பயம், சகல காரியங்கள் நாசமென்பது.

செவ்வாய் தெசாநாதனுக்கு 3, 6, 11-மிடங்களிலும், 5, 9-ம் இடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடி யிருந்தாலும் அனேக வித மூலங்களினால் தன லாபம், கடன் கொடுப்பதில் வட்டி தனம் சேருவது, ராஜ சன்மானமும், சகல காரியங்களும் சித்தியாமென்பது.

செவ்வாய் 2, 7-மிடங்களிலிருந்தால் சரீர தாபமும், சுர பீடிதம், தார நாசம், அதிக துக்கம், அபமிருத்யுவும் சம்பவிக்கும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சுப்பிரமணியருடைய ஜெபம் செய்து, எண்ணெயுடன் பாத்திர தானம் செய்ய ஆரோக்ய முண்டாகும்.

## கேது தெசையில் இராகு புக்தி மீ 12 நாள் 18-க்குப் பலன்.

இராகு புக்தியில் பிரம்மராக்ஷஸன் பீடை, பேய், பூதம் பிடித்து ஆவேசம் ஆடுகிறது, சுர பயம், விதவைகளால் கலகம், ருண பீடை, தரித்திராவஸ்தை, அனேக ஜனங்களுடனே துவேஷம், ராஜ கலகம், நீசரிடத்தில் அடிமை செய்கிறது, மானபங்கம், தன் மனைவி வியாதியினால் துன்பப்படுகிறது, க்ஷேத்ர ஹானி, பூமிநாசம், தானிய நாசம், சூத்திர பிரபு மூலத்தினால் பயம், தேசாந்திரந்திரிவது, குலத்தொழில், குலாசார ஹீனம், இந்த பலன்களெல்லாம் இராகு லக்கினத்திற்கு 12-மிடத்திலும், கேந்திர ஸ்தானத்திலிருந்தாலும், பாபர்களுடன் கூடியிருந்தாலும் நடக்கு மென்பது.

இராகு லக்கினத்திற்கு 3, 6, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலிருந்தாலும் காடு, மலைகளுக்கு விசாரணை செய்கிற அதிகாரியாயும், ராஜாக்கள் இஷ்டமும், தாரா, புத்திராதி ஸௌக்யமும், பசு, வாகன, தானியாதிக விருத்தியும், கிருஹ நிர்மாணமும், தேவாலயங்கள் கட்டுவித்தல், தீர்த்தயாத்ராதி புண்ய பலமும், மேற்கு திசையில் பிரயாணம் செய்ய, அவ்விடத்தில் ராஜ தெரிசனமும், எத்தன காரிய சித்தியும், அனேக மூலங்களினால் தன லாபமும் வரும்.

இராகுவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் கலகமும், ராஜ கோபமும், அதிகார பங்கமும், தலைநோயுமுண்டாகும்.

இராகுவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மனோ துக்க

மும், சிந்தையும், சதா கலகமும், மாதாவமிசத்தாருக்கு நாசமும் வருமென்பது.

இராகுவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் சரீரத்தில் ஆயுதத்தினாலாவது, நெருப்பு சம்மந்தமான பாணங்கள் வகையராக்களினாலாவது பாதைப்படல், சகோதர நாசம், கிராணி, கழிச்சல் உண்டாகும்.

இராகுவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் வியவகாரத்தினால் பொருள் விரையம், பழைய பந்து மரணம், பாப கர்மமே நடக்குமென்பது.

இராகுவைக் குரு கூடினாலும், பார்த்தாலும் ஆசாரியருக்கு நாசம், புத்திர நாசம், சரீர பாதை, தன நாசமாம்.

இராகுவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் அஸௌக்யம், அசுக சயனமாம். வஸ்திரமில்லாமை, பூஷண நாசம், கெற்பம் உண்டான ஸ்திரீக்கு பிரஸவ காலத்தில் தோஷம் உண்டாவது.

இராகுவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் நீச ஜனங்களிடத்தில் அடிமைப்படல், அதிக பயம், சேவகாரிட மூலமாக ஸ்தான நாசம், சமான ஜன நாசமென்பது.

இராகு லக்கினத்திற்கு 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணமேற்படும். இந்த தோஷ நிவர்த்தியாவதற்கு மஹா கூஷ்மாண்ட தானம் செய்தால் ஆயுராரோக்ய முண்டாகும்.

## கேது தெசையில் குரு புக்தி மீ 11 நாள் 6-க்குப் பலன்

குரு 9-மிடத்தானேடேயாவது, லக்னாதிபதியோடேயாவது, கூடியிருந்தால் தனதானியாதிக விருத்தியும், நாற்கால்ஜீவன்கள் லாபமும், கலியாணம் நடக்கிறது, புத்திரோற்பத்தி யுண்டாவது.

குரு லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்சத்திலுமிருந்தால் தீர்த்த யாத்திரை பந்து பீஜித்தியம், வீட்டில் கல்யாணம் நடத்துவது, புத்திரர் ஜனிப்பு, தனதானிய லாபம், மகாராஜா பேட்டி கிடைப்பதுடன், புராதிபதியாவதும், அல்லது கிராமாதிபதியாவதும், தன் வாரத்தில் ராஜ ஸன்மானமும், அனேக ஸௌக்யமுமாகும்.

குரு லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும், பாப கிரகங்களின் சேர்க்கையும், சத்துரு வீட்டிலிருந்தாலும் ஸ்தான நாசம், ராஜ பயம், யாத்திரையில் காரியக் கேடு, பந்து கலகம், சரீர பாதையும், பெண்டு, பிள்ளைகளுடன் கலகித்துக் கொண்டு அந்த

மூலத்தில் தன விரையமும், பிராம்மணருடனே கலகம், நீச காரியம் செய்கிறதுமாகும்.

குருவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் புத்திராளுடனே கலகம், தன நாசம், மானபங்கம், உத்தியோக சலனமுமுண்டாகும்.

குருவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் அதிகார மேற்படுவது, வாகனங்களும், ஆடையாபரணாதிக ளுண்டாகுதல், பந்து சன்மானமுமாம்.

குருவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் சரீர தாபமும், அனேக மூலங்களில் கஷ்டமும், மனோ வியாகூலமும் உண்டாகும்.

குருவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் வித்தியாப்யாசத்தில் அதிக அக்கரை வைப்பதும், கடன் மூலங்களில் தன வரவு, நல்ல ஜீவனமும், சுகமும் உண்டாகும்.

குருவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் வேசி ஸ்த்ரீ நடனங்களை பார்ப்பது, நடத்தி வைப்பது, கலியாண சுகாதிகம், கிரந்தங்களுக்கு தாத்பரியார்த்தங்கள் சொல்லுவது.

குருவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் அடிமைகள் நாசமாம், சமான ஜன நாசம், தானிய நாசமும் உண்டாகும்.

குரு தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடியுமிருந்தால் அதிக தன லாபமும், அதிக சுபசோபனாதிகள் நடத்துவதும், சிவ தீக்ஷை வகிப்பது, அதனால் பல சித்தியை அடைவதும், பாரியா, புத்திரர்களுக்கு சௌக்யமும், எத்தன காரிய சித்தியும், கிருஷி லாபமும், க்ஷேத்திர விருத்தி, கோ, தன சமிர்த்தியும், ஆசாரியரிட தெரிசனமும், தேவதா தெரிசனமும் கிடைக்கும்.

குரு தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாபிகளுடன் கூடியும் இருந்தால் பொருள் நாசம், மனோ துக்கம், அப கீர்த்தியும், தார, புத்திராதிகள் மரணம் அல்லது விட்டுப் பிரிகிறதும், அதிக துக்கமும், வியாதி பயமும், ஆசாரியருக்கு துவேஷமும், ஸ்தான நாசமும், பிதுருவமிச நாசமும் உண்டாகும்.

குரு லக்கினத்திற்கு 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணமாம். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு தில தானம் செய்ய வேணும்.

## கேது தெசையில் சனி புக்தி ம்ீ 13 நாள் 9-க்குப் பலன்.

சனி லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலும், பாப கிரகங்களுடன் கூடியுமிருந்தால் வாகன நாசம், பந்து கலகம், சகோதர நாசம், சமான ஜன நாசம், இஷ்ட பந்து நாசம், நீசரிடத்தில் அடிமைப்படல், அதிக கஷ்டம், நீச காரியமே செய்கிறது, க்ஷேத்திர நாசம், தானிய நாசம், பசு, பாக்ய நாசம், கடன்படல், ரோக பயம், எத்தன காரிய நாசம், பாப தெசையில், பாப புக்தியில் அனேக விதங்களினால் பொருள் விரையம் நேரும், ஸ்தான பிரஷ்டமும், மனஸ்தாபமும், அனேகவித வியாதியும், சம்பவிக்கும், மனோ பயமாம்.

சனி லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலிருந்தாலும், நீச ராசியிலிருந்தாலும், சுப கிரகங்களுடன் கூடியிருந்தால் நூதன வீடு கிடைத்தல், தானிய விருத்தியும், ராஜ ஸன்மானமும், கீர்த்தியும், யானை, குதிரை முதலான வாகன லாபமும், தாரா, புத்திரர்கள் சௌக்யமும், வீட்டில் கலியாண சுப சோபனகாமும் நடத்தல், புக்தி அந்திய பாகத்தில் கொஞ்சம் கஷ்டமும், அதிக தனச் செலவும் நேருமென்பது.

சனியைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் பிதா மரணம், பந்து நாசம், உத்தியோக நாசம், பொருள் நஷ்டம், அதிக பயமுமாம்.

சனியைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் தாய் வழி நாசம், சிரோபாதை, மனோ துக்கமும், கலகமுமாம்.

சனியைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் சகோதர நாசம், யுத்தத்தில் தோற்பு, அக்னி பாதை, மனோ விசனமாம்.

சனியைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் பந்துக்கள் மரணம், ஸ்தான நாசமும், இஷ்ட பந்துவானவாள் விரோதப்படுகிறது.

சனியைக் குரு கூடினாலும், பார்த்தாலும், புத்திர நாசம், ஆசாரியரிடத்தில் துவேஷித்தல், திரவிய நாசம், அனேக வித காரியங்களும் நாசமென்பது.

சனியைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் ஸ்த்ரீ துவேஷமும், பந்துக்களில் நிவர்த்தியாகிறது, இதர ஸ்த்ரீகளினிடத்தில் கியாபகம், பொருள் நஷ்டமும் உண்டாகும்.

சனி தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடியுமிருந்தால் பசு லாபம், தன் பத்தி

ணிக்கு அதிக ஸௌக்யம், பந்து விருத்தி, தன தானிய விசேஷம், இஷ்டமான பிரபு மூலத்தினுல் சுகம், யுத்தத்தில் சத்துரு நாசம், எத்தன காரிய சித்தி, சர்வ ஜனங்களுக்கும் ஆரோக்ய மென்பது.

சனி தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களில், பாப கிரகங்களுடன் கூடி யிருந்தால் வியாபார மூலத்தில் பொருள் நஷ்டம், விளை பொருள், தானியங்கள் நஷ்டம், இஷ்டர்கள் விரோதப்படுவது, இருப்பிடம் விட்டு பெயர்ந்து போவது.

சனி லக்கினத்திற்கு 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணம் நேரும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு யமனைப் போல் பிரதிமை செய்து தானம் பண்ணினுல் சாந்தியாகும்.

## கேது தெசையில் புத புக்தி மீ 11 நாள் 7-க்குப் பலன்

புதன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலும், சுப கிரகங்களுடன் கூடியிருந்தாலும், கோபுராமிசத்திலும், மிருத்வமிசத்திலு மிருந்தாலும் ராஜ்ய லாபமும், விசேஷ சுகமும், ராஜாக்களால் வாகனம் கிடைப்பதும், வஸ்திராபரண பிராப்தியும், நாற்கால் ஜீவன் லாபமும், புத்ர லாபமும், புதன் 9-மிடத்தானுடன் கூடினுல் யானை, குதிரை முதலிய வாகனங்களும், சத்கதா கேள்வி, தான தர்மம் நடத்துவது, அதிக சுகமாம். புதன் 4 மிடத்தானுடன் கூடினுல் வீடு லாபமும், பூமி விருத்தி, இஷ்டர்களாலும், புத்திரர்களாலும் கௌரவம், ராஜ சன்மானம், யுத்தத்தில் சத்துரு ஜெயமும் உண்டாகும்.

புதன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலு மிருந்தால் பந்து விரோதம், சினேகருடன் பகைக்கிறது, விவகாரத்தில் தன நாசம், பசு, வாகன நஷ்டம், தானிய நாசம், ராஜ கோபத்தினுல் பொருள்கள் நஷ்டம், ஸ்தரீ கெர்ப்பத்திற்கு பின்னம், ஸ்தான நாசம், சர்வகாரிய நஷ்டமா மென்பது.

புதனைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும் நிச்சயமாக உத்தி யோகம் கிடைக்கும், புத்திர, மித்திரர்கள் ஸௌக்யமாம், தனதானியாதிகமாம் என்பது.

புதனைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் மாதுரு விருத்தியும், பந்து விருத்தியும், வஸ்திராபரண பிராப்தி, இஷ்ட ஜனங்களால் சௌக்யமு முண்டாகும்.

புதனைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் யுத்தத்தில் சத்ரு பயம், திருடராலும், விஷத்தினுலும் பாதை, சிந்தைக்கு சோகமும் உண்டாகும்.

புதனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் புத்திர லாபமும், தன லாபம், சரீர ஸௌக்யம், மித்திரர்களுக்கு விருத்திகரம், பந்து விருத்தியுமுண்டாகும்.

புதனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் வாகன பிராப்தி, பூஷணாதி லாபம், விவாக மங்களகரமும் நடத்தல், வீடு லாபமும், பூமி க்ஷேத்திரங்கள் விருத்தியாவது என்பதாம்.

புதனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் பந்து நாசம், தனநாசம், அடிமைகளுடன் கலகம், பசு நஷ்டம், தானிய நாசம் என்பது.

புதன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும் சுபருடன் கூடியிருந்தால் வித்யா லாபம், தன விரையம், பந்து மித்திர விருத்தியும், க்ஷேத்திர லாபமும், விஷ்ணு பூஜையில் பக்தி யுண்டாகிறது, எத்தன காரிய சித்தியா மென்பது.

புதன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களில் பாப கிரகத்துடன் கூடியிருந்தால் மித்திர விரோதம், அனேக விதமாக பொருள் நஷ்டம், பசுவாகன நாசம், அகஸ்மாத்தான கலகமும், ருதுவான ஸ்த்ரீயுடன் கூடும் சகவாஸமாம்.

புதன் லக்கினத்திற்கு 2, 7-மிடங்களி லிருந்தால் அகால மரணம் நேரும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு மான்குட்டி தானம் செய்ய சாந்தியாகும்.

கேது தேசை சம்பூரணம்

---

# சுக்கிர தெசை வருஷ 20-க்குப் பலன்

பொது.

1. சுக்கிரன் ஜெனன காலத்தில் ஸ்தான பலாதிகனாக யிருந்தால் ராஜாக்களால் வெகுமானம் கிடைப்பது, ஆபரண பிராப்தியும், சதா வித்யாப்யாசம், சாதாரணபேருடன் மற்றொரு கவுரவ பேர் வாய்ப்பது, சுக்கிரன் திருக்பலாதிகனா யிருந்தால் அதிக யசஸ்ஸும், தாரம், புத்திரர், தனம், அணிபணி பாத்திராதிகள் இவைகள் லாபமாக கிடைப்பது, சுக்கிரன் காலபலாதிகனாயிருந்தால் சுகமும், அதிக தனமும், கீர்த்தியும், தன்னாமத்தை அங்கிதம் செய்யும்படியான பிருதுடன் இருப்பது.

2. சுக்கிரன் நைஸர்க்கிக பலத்துடனிருந்து தெசை நடந்தால் அதிக சுகமும், விவஸாய விருத்தி, பசு விருத்தி, பூலாபமும், தன லாபமும், சகோதர விருத்தி, மாதா சுகமும் உண்டாகும்.

3. சுக்கிரன் வக்கிரமுமாக இருந்து தெசை நடந்தால் ராஜாக்களால் வெகுமானம் கிடைப்பது, பூஜிக்கப்படுதலும், மிருதங்கபேரீ வாத்யங்களுடன் வாகனங்கள் கிடைப்பது, அழகான ஆடையாபரண பிராப்தியும், அதிக சுகமுமாகும்.

4. சுக்கிரன் திக்பலாதிகனுக யிருந்து தெசை நடந்தால் யக்யாதி சத்கர்மம் சித்தியும், வித்தியாதிகமும், சயன ஸௌக்யமும், வஸ்திராபரண ஸௌக்யம், ராஜ்யாபிஷேகமும் நடக்கும், கலகமும், விரோதமும் உண்டாகும்.

5. சுக்கிரன் குரூர சட்டியாமிசத்திலிருந்து தெசை நடந்தால் சத்துரு பயம், திருடராலும், அக்கினியாலும், ராஜாக்களாலும், பயமும், உத்பாதமும், கிருஷி, பூமி, மாடு இவைகள் நாசமுமாமென்பது.

6. சுக்கிரன் சுப சஷ்டியாம்சத்திலிருந்து தெசை நடந்தால் அதிக சுகமும், கிணர்கள் எடுத்து நந்தவனம் வைப்பதும், குளம் வெட்டுவது, தேவாலய நிர்மாணமும் நடக்கு மென்பது.

7. சுக்கிரன் வைசேடிகாமிசத்திலிருந்து தெசை நடந்தால் அதிக சுகமும், வாகன பிராப்தி, ராஜ ஸன்மானம், சகோதர, சகோதரிகளாலும், ஸ்த்ரீகளாலும் தனம் கிடைக்கும்.

8. சுக்கிரன் குரூர திரேக்காணங்களிலிருந்து தெசை நடந்தால் சத்துரு பயம், ஜெயில் வாஸம், அதிக கஷ்டம், விலங்கு மாட்டி கொள்ளுதல், கட்டுப்படல், திருடரால் பயமுண்டாகும்.

9. சுக்கிரன் பரமேச்ச ராசியிலிருந்து தெசை நடந்தால் க்ஷேத்திர லாபம், தன லாபம், தன் பேரால் அங்கிதம் செய்கிறது, கீர்த்தி ஸ்த்ரீகளுடனே கேளீ விலாஸமாக யிருப்பது.

10. சுக்கிரன் உச்ச ராசியிலிருந்து தெசை நடந்தால் ராஜ்யாதிகாரம் செய்கிறதும் அல்லது ராஜாக்களிட சினேகம் கிடைப்பதும், யானே, குதிரை, பசு, மாடுகள் இவைகளுடன் நிறைந்த செல்வவந்தனுக யிருப்பதும், சுகந்தபரிமள நன்மலர் பரிமளாலங்கிரதனுகி சுக போகியாயிருப்பது.

11. சுக்கிரன் பரம நீச ராசியிலிருந்து தெசை நடந்தால் உத்யோக நாசம், ரோக பீடை, கர்ம நாசமும், தார நாசம், சரீர கஷ்டம், தன நாசம், புத்திராதிகளுக்கு கஷ்டம் வருமென்பது.

12. சுக்கிரன் நீச ராசியிலிருந்து தெசை நடந்தால் தன ஹானியும், வஸ்த்திர நாசம், பத்தினியுடன் சண்டையிடல், கலகம், தன விரையமும், சம கோத்திரர்களுக்கு நாச மென்பது.

13. சுக்கிரன் உச்சமாயிருக்கிற கிரகத்துடன் கூடி தெசை நடந்தால் ராஜ்ய பிராப்தியும், அதிக தனமும், தேவஸ்தானத்திற்கு

அதிபதியாவது, பொன், வெள்ளி ரத்தினங்கள் ஆடையாபரணாதி களணிவது, வாகனங்களும், நித்ய கலியாண மகோற்சவமாகவே வாத்யங்கள் முழங்கிக் கொண்டிருப்பது.

14. சுக்கிரன் நீச கிரகத்துடன் கூடி தெசை நடந்தால் அதிக பயமும், இதரர்களால் அபவாதம் நேரிடுகிறது, அதிகமாக பாப வேலையே செய்கிறதுமாகும்.

15. சுக்கிரன் உச்சாமிசையிலிருக்கிற கிரகத்துடன் கூடி, நீச ராசியிலிருந்தால் வியவசாயத்தில் நஷ்டம், வியாபாரத்தினால் பொருள் விரையம், தன தானிய நாசம் என்பது.

16. சுக்கிரன் நீசாமிசையிலிருக்கிற கிரகத்துடன் கூடி உச்சராசியிலிருந்தால் சுகமும், ஸௌபாக்யாதிகமும், தாரா, புத்திரர்கள் விருத்தியாவார்கள் என்பது.

17. சுக்கிரன் மூலதிரிகோண ராசியிலிருந்து தெசை நடந்தால் வித்தியாதிக வைபவமும், பொன், வெள்ளி, ரத்தினங்கள் லாபமும், விசித்திர வஸ்த்திர லாபமும், உயர்ந்த பூஷண லாபமும், தாரா, புத்திராதிகள் ஸௌக்யமும், சகல வேலைகளாலும், தனலாபமு முண்டாகும்.

18. சுக்கிரன் ஆட்சி வீட்டிலிருந்து தெசை நடந்தால் பாரியா, புத்திரர் ஸௌக்யமும், பூமியாதி பத்யமும், கிராமாதிகள் விருத்தியும், நூதன வீடு லாபமும், பந்து பூஜித்யமும், பல்லக்கு ஏறுவதுமுண்டாகும்.

19. சுக்கிரன் அதிமித்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் வாகனாதி ஸௌக்யங்களும், ரத்தின லாபமும், வஸ்திர லாபமும், வித்தியா விநோதம், பூமிகள் அதிகரிக்கிறதும், தனதானியாகமுமாம்.

20. சுக்கிரன் மித்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் வேசி ஸ்த்ரீயை கூடுவதும், கேளீ ஸௌக்யமும், மனோ விலாஸமும், ராஜ சிநேகிதமும், கிராமாதிபத்தியமாவது அல்லது பூமிக்கு அதிபதியாவதாமென்பது.

21. சுக்கிரன் சம கிரக ராசியிலிருந்து தெசை நடந்தால் உபாய சுகமும், சுவல்ப கிராமாதி பத்யமும், கொஞ்சம் தானியமும் உண்டாகும்.

22. சுக்கிரன் சத்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால் பாரியா, புத்திரர்களுக்கு பீடை, தன நாசம், மனோ விசாரம், சுற்ற விரோதம், க்ஷேத்திர நாசம், பொருள் நஷ்டம், மனோ விகல்பமுமாம்.

23. சுக்கிரன் அதி சத்துரு ராசியிலிருந்து தெசை நடந்தால்

புத்திர நாசம், தன நாசம், சத்துரு நாசம், சம்சாரத்திற்கு சரீர பீடிதம், கட்டி ரோக சம்பவம், கிராணிபேதியுமுண்டாகும்.

24. சுக்கிரன் சுபகிரகத்துடன் கூடி தெசை நடந்தால் சௌபாக்யம், இஷ்டாள், புத்திராள், தனதானியங்கள், ராஜ பூஜிதை, யானை, குதிரை, முத்துக்கள், பவளங்கள், ரத்தினங்கள் பல்லக்குகள் இவைகள் லாபமாகும்.

25. சுக்கிரன் பாப கிரகத்துடன் கூடி தெசை நடந்தால் ஸ்தான நாசம், பந்துக்கள் பகை, ஆசார யீனம், கலகம், கிருஷி, பூமிகள், புத்திராள், தாரமிவைகளெல்லாம் நஷ்டம் சம்பவிக்கு மென்பது.

26. சுக்கிரன் சுப பார்வை பெற்று தெசை நடந்தால் தன லாபமும், ராஜ பூஜிதையும், ஜஹுதி பத்தியமும், நல்ல சரீர காந்தியும், தாரா, புத்திர ஸௌக்யமும், இஷ்ட ஜன ஸௌக்யமும் உண்டாகும்.

27. சுக்கிரன் பாப பார்வை பெற்று தெசை நடந்தால் மானபங்கம், பொருள் நாசம், அதிக துக்கமும், பெண்டு விரோதம் செய்கிறது, ஸ்தான நாசம், இதர தேச வாசம், குலாசார யீனமும் உண்டாகும்.

28. சூரியனுடனே கூடின சுக்கிர தெசை நடந்தால் ஜனன வீடு வாஸம், ஜன விரோதம், தார நாசமும், சகோதர நாசமும், கலகமுமாம்.

29. சுக்கிரன் திரிகோண ராசிகளிலிருந்து தெசை நடந்தால் வாகனதி, வஸ்திர, பூஷண பிராப்தியும், அதிக ஸௌக்கியமும், தன் பேரினுல் அங்கிதங்கள், பத்தியங்கள், அனேகரால் புகழ்தல், அதிக கீர்த்தி வாய்த்தல், வேசி ஸ்த்ரீகளுடன் கேளீ விலாசமாயிருக்கிறது.

30. சுக்கிரன் கேந்திர ஸ்தானத்திலிருந்து தெசை நடந்தால் பெண்ஜாதி, பிள்ளைகள் ஸௌக்யமாம், ரத்தின லாபமும், நூதன வஸ்திராலங்காரமும், ராஜாவினுல் சுகமும், பல்லக்கு, வாகனங்கள் ஏறுவதும், அதிக தானிய விருத்தியும், பசுவிருத்தியும், ஆளடிமைகள் அதிகப்படுதலாம்.

31. சுக்கிரன் துர்ஸ்தானங்களிலிருந்து தெசை நடந்தால் பாரியை, புத்திரர்களுக்கு பீடை, அதிக கலகமும், தன விரையமும், மனோ விசாரமும், சொந்த ஜனங்களால் உபத்திரவம், பசு, வாகனதிகள் நஷ்டமாம்.

## மேஷாதி 12 ராசிகளில் சுக்கிரன் நிற்கும் தெசா பலன்

32. சுக்கிரன் மேஷ ராசியிலிருக்கப் பலன் :—சுக்கிரன் மேஷ ராசியிலிருந்து தெசை நடந்தால் சுதந்திர அதிகாரமும், ராஜ சினேகித

மும், விசித்திரமான மாடி வீட்டில் வசிப்பதும், நல்ல வஸ்திராபரண பிராப்தியும், பொன்னினுல் நகை நாணயங்கள் அதிகமாகும்.

33. சுக்கிரன் ரிஷப ராசியிலிருக்கப் பலன் :—சுக்கிரன் ரிஷப ராசியிலிருந்து தெசை நடந்தால் பசுமாடுகள், குதிரைகள், யானைகள், வேசி ஸ்த்ரீ வைபவாலங்கார சங்கீதக் கேள்வியும், சுகந்த பரிமளா லங்கார பட்டுபட்டாவளிகளான ஆடையாபரண பிராப்திகளுடன் சுகமாக வாழ்வது.

34. சுக்கிரன் மிதுன ராசியிலிருக்கப்பலன் :—சுக்கிரன் மிதுன ராசியிலிருந்து தெசை நடந்தால் தாரா, புத்திராதிகள் சௌக்கியம், பந்து பூஜிதை, சுய கிராம வாஸம், தண்டிகை ஏறுவது, பூலாபமும், தன லாபமும், பொன்னுபரண பிராப்தியு முண்டாகும்.

35. சுக்கிரன் கடக ராசியிலிருக்கப் பலன் :—சுக்கிரன் கடக ராசியிலிருந்து தெசை நடந்தால் ஸ்தான நாசம், வெளிதேச வாஸம், எண்ணின காரியங்கள் பங்கம், ஸ்த்ரீ மூலங்களினுல் கலகம், தன விரையமுமாகும்.

36. சுக்கிரன் சிம்ம ராசியிலிருக்கப் பலன் :—சுக்கிரன் சிம்ம ராசியிலிருந்து தெசை நடந்தால் ராஜாங்க கோபம் வரும், அதிக கலக மும், தன விரையமும், சௌரியம் பேசுதல், பெண்டு விரோதப்படு கிறது, மனையவிட்டு காடு, மலைகளில் சஞ்சரிக்கிறது, க்ஷேத்திர நாசம், அடிமைகள் நாசமென்பது.

37. சுக்கிரன் கன்னி ராசியிலிருக்கப் பலன் :—சுக்கிரன் கன் னியா ராசியிலிருந்து தெசை நடந்தால் ஸ்த்ரீ நாசம், அதிகார பங்கம் வரும், மனசுக்கு விசாரமாதல், இதரர்களால் கலகம் விளைவது, நேத் திர பங்கமும், தன விரையமும், பசு நாசமும், தானிய நாசமும் உண் டாகும்.

38. சுக்கிரன் துலா ராசியிலிருக்கப் பலன் :—சுக்கிரன் துலா ராசியிலிருந்து தெசை நடந்தால் தன லாபமும், ராஜ சினேகிதமும், தாரா, புத்திராதிகள் ஸௌக்கியமும், தன் தேசத்துக்கு அதிகாரியா கிறதும், இஷ்டப்படி எல்லாம் சித்திப்பது, மனோ விலாசமாம்.

39. சுக்கிரன் விருச்சிக ராசியிலிருக்கப் பலன் :—சுக்கிரன் விருச் சிக ராசியிலிருந்து தெசை நடந்தால் அதிக கஷ்டமும், தாயாதி ஜன விருத்தியும், சத்துரு விருத்தியும், ஸ்த்ரீ துவேஷமும், தன நாசமும் உண்டாகும்.

40. சுக்கிரன் தனுசு ராசியிலிருக்கப் பலன் :—சுக்கிரன் தனுசு ராசியிலிருந்து தெசை நடந்தால் கீர்த்தியும், தேவதா பூஜையும், யாகாதி சத்கர்ம பிராப்தியும், புராண கீதாதி விநோதமுமாம்.

41. சுக்கிரன் மகர ராசியிலிருக்கப் பலன் :—சுக்கிரன் மகர ராசியிலிருந்து தெசை நடந்தால் வாகன லாபமும், மனோ உல்லாசமும், இதர கிராம வாஸமும், ஸ்த்ரீ சுகமும், நல்ல பாண்டித்திய குணமுடைமையுமா மென்பது, பிரிய வசனனும்.

42. சுக்கிரன் கும்ப ராசியிலிருக்கப் பலன் :—சுக்கிரன் கும்ப ராசியிலிருந்து தெசை நடந்தால் சுகமும், சதா வேதமோதுதல், தத்வ ஞானுதிகாரியாகிறதும், க்ஷேத்திர விருத்தியும், தார ஸௌக்யமும், ராஜாக்கள் அபிமானமும், நவரத்தினமும், பொன்னுபரணமும், நூதன வஸ்திராலங்கார பிரீதிகரமாக இருப்பதாம்.

43. சுக்கிரன் மீன ராசியிலிருக்கப் பலன் :—சுக்கிரன் மீன ராசியிலிருந்து தெசை நடந்தால் ராஜ்யாதிகாரம் வருவதும், ரத்தின லாபமும், வாகனுதிகள் சமுர்த்தியும், தார ஸௌக்யமும், க்ஷேத்திர விருத்தியும், தன விருத்தியும், பசு, வாகன சமுர்த்தி, தானியாதிக விருத்தி என்பது.

## சுக்கிரன் லக்னுதி 12 பாவங்களில் நிற்கும் தெசா பலன்

44. சுக்கிரன் 1–ல் நிற்கப் பலன் :—சுக்கிரன் லக்கினத்தில் இருந்து தெசை நடந்தால் சரீராரோக்யமும், கீர்த்தி விருத்தியும், தன் வீட்டில் கலியாணுதி சுபசந்தோஷ விருத்தியும், உயர்ந்த ஆடையாபரண லாபங்களுமுண்டாகு மென்பது.

45. சுக்கிரன் 2–ல் நிற்கப் பலன் :—சுக்கிரன் 2-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தனுதிகாரியாவதும், உயர்ந்த வஸ்த்து லாபங்கள், வித்யாதிக விநோத வார்த்தையும், சுற்றத்தாருடன் கூடியிருப்பதும், குடும்ப சவரக்ஷணையும், வாக்குதப்பாத வசனியாயும், மனோ உச்சாகமுமா யிருப்பதாம்.

46. சுக்கிரன் 3–ல் நிற்கப் பலன் :—சுக்கிரன் 3-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் பராக்கிரமசாலியா யிருப்பதும், வஸ்த்ராபரண பிராப்தியும், சங்கீத வித்யாப்பாசமும் உண்டாகும்.

47. சுக்கிரன் 4–ல் நிற்கப் பலன் :—சுக்கிரன் 4-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் பந்துக்களுக்கு உபகாரியாம், மேன்மையான வாகனங்களுண்டாவதும், தாரா, புத்திராதிகள் ஸௌக்கியமும், நூதன வீடு கட்டுவது, அல்லது வாங்குவது, பூமிகள் விசேஷிப்பதும், சயன சௌக்யமும், மேன்மையான வஸ்த்துக்கள் லாபமுமாம்.

48. சுக்கிரன் 5–ல் நிற்கப் பலன் :—சுக்கிரன் 5-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தன லாபமும், ராஜாக்களிட சிநேகித

மும், பொன்னும், ரத்தினங்களும், பாக்கியங்களும் விசேஷிப்பதும், புத்திர விருத்தியும், உத்தியோக லாபமும், பூமிக்கு அதிபதியாவது மாம்.

49. சுக்கிரன் 6–ல் நிற்கப் பலன் :—சுக்கிரன் 6-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் சத்துரு பீடையும், தாரா, புத்திராளுக்கு அரிஷ்டம், தன விரயம், அதிக கலகமும், கஷ்டமும், இஷ்ட பந்து விளுசமும், வாகனுதிகள் நஷ்டமும், மானபங்கமுமாம்.

50. சுக்கிரன் 7–ல் நிற்கப் பலன் :—சுக்கிரன் 7-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தார ஸௌக்யம், மேன்மையான ஆபரண லாபம், வாகன விருத்தியும், விசித்திரமான வஸ்திராலங்கார பிராப்தி, சுப விருத்தியுண்டாகும்.

51. சுக்கிரன் 8–ல் நிற்கப் பலன் :—சுக்கிரன் 8-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் சரீர பாதை, பந்து பீடை, க்ஷேத்திர நாசமும், தன விரயமும், பசு நாசம், இதர கிரக வாஸமும், இதருடைய சாப்பாட்டிற்கு எதிர்பார்ப்பது, சாப்பிடுவதாம்.

52. சுக்கிரன் 9–ல் நிற்கப் பலன் :—சுக்கிரன் 9-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் சத்கீர்த்தியும், ஸன்மானமும், வித்யா பிராப்தியும், விசேஷ சௌக்யமும், நல்ல கியானமும், குளம், கிணர், தடாகம் இவைகளை நிர்மாணம் செய்கிறதும், அனேக விதங்களினுல் தன வரவும், யுத்தத்தில் சத்துரு நாசமும், விஜயமும், ராஜ்யாதிகாரமும் உண்டாகும்.

53. சுக்கிரன் 10–ல் நிற்கப் பலன் :—சுக்கிரன் 10-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் சத்கீர்த்தியும், ஜனங்களால் புகழப்படுதல், வாகனுதி லாபமும், பூஷண லாபம், ராஜாங்க விசுவாசமும், அதிகார விருத்தியும் உண்டாகும்.

54. சுக்கிரன் 11–ல் நிற்கப் பலன் :—சுக்கிரன் 11-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் இஷ்டப்படிக்கு சித்திப்பது, ஞான சித்தியும், ஸந்தோஷமும், ராஜ்யாதிகாரமும், நாட்டிய பெண்களுட ஸங்கீத வைபவத் தோடிருப்பதும், தாரா, புத்திரர்கள் விருத்தியும், அனேக விதமான தானிய விசேஷ உற்பத்தியும், நல்ல ரத்தினங்களிழைத்த ஆபரண வஸ்திரலாபமும் உண்டாகும்.

55. சுக்கிரன் 12–ல் நிற்கப் பலன் :—சுக்கிரன் 12-மிடத்தில் இருந்து தெசை நடந்தால் தார பீடையும், தன விரயமும், கலகமும், பந்துக்கள் விளுசமும், இஷ்ட ஜன சொந்த சுற்றமும், விரோதிப்பார்கள் என்பது.

### சுக்கிரன் ஆரோகணத்தில் நிற்கும் பலன்

56. சுக்கிரன் ஆரோகண ராசிகளிலிருந்து தெசை நடந்தால்

சொந்த அதிகாரமும், அனேக ஸௌக்யமும், உத்தியோக லாபமும், ரத்தின லாபமும், சமான ஜன பந்து பிரியமும் உண்டாகும்.

### சுக்கிரன் அவரோகணத்தில் நிற்கும் பலன்

57. சுக்கிரன் அவரோகண ராசிகளிலிருந்து தெசை நடந்தால் கஷ்ட பலமும், சமான ஜன துவேஷமும், நாற்கால் ஜீவன்கள் நாசமாம்.

## சுக்கிர தெசையில் சுக்கிர புத்தி ஸ்ரீ 40-க்குப் பலன்

சுக்கிரன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், உச்ச ராசியிலிருந்தாலும், வாகன லாபங்களும், புராதிபத்தியமும், அல்லது கிராமாதிபத்தியமும், மேன்மையான ஆடையாபரண லாபமும், இஷ்ட சித்தியும், சுகாதிகமும், வீட்டில் கல்யாண வைபவங்களுடன் சந்தோஷமாக இருப்பதும், இஷ்ட பந்துக்களிலும் சுகமும், அபூர்வ வஸ்துக்கள் கிடைப்பதும், புதிய வீடு கட்டுவதும், வாங்குவதும், தன் இஷ்ட பிரபுவால் சுகமும், யுத்தத்தில் சத்துரு நாசமும், பாரியா, புத்ராதி ஸௌக்யமும், கலியாண ஸௌக்யமும், கலியாண ஸௌக்யமும், புத்திர லாபமும் உண்டாகும்.

சுக்கிரன் பரமோச்ச ராசியிலிருந்து தெசை நடந்தாலும், ஆட்சி ராசியிலும், கேந்திர ஸ்தானங்களிலிருந்தாலும், ராஜ்யாபிஷேக பிராப்தி, வாகன பூஷணங்கள் கிடைப்பது, யானை, குதிரை, பசு, வாகனங்களிவைகள் விசேஷிப்பதும், நித்தியம் இஷ்டான்ன போஜனமும், அகண்டமான லக்ஷிமீகடாக்ஷ சாம்பிராஜ்யமும், ராஜ ஸன்மானமும், சதா மிருதங்காதி வாத்ய கோஷ முழக்கமும், ராஜ பிரீதிகரமுமாம்.

சுக்கிரன் 6, 8, 12-ம் இராசிகளிலும், நீச ராசியிலும், சத்துரு ராசியிலும் இருந்தால் இஷ்ட பந்துக்கள் துக்கமும், தாரவர்க்க பீடையும், வாகன நஷ்டமும், தனதானிய நஷ்டமும், பசு நாசமும், ஸ்தான நாசமும், மானஹானியு முண்டாகும்.

சுக்கிரன் லக்கினத்திலிருந்தாலும், 4, 9-மிடங்களிலிருந்தாலும், அதிக சுகமும், தேசாதிபத்தியமும் அல்லது கிராமாதிபத்தியமும், யானை, குதிரை முதலான வாகன ஐசுவரியாதிகளுடன் சேனாதிபதியாயிருப்பது.

சுக்கிரனைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் ராஜ குரோதமும், தன நாசமும், சதா திரிச்சலும், சிரோரோகமும், பிதுருவர்க்க நாசமுமாம்.

சுக்கிரனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் சுகந்த பரிமளாலங்கிருதமும், சுக போஜனமும், சயன சௌக்யமும், வாகன லாபு

மும், நடன ஸ்த்ரீயுடனும், பிரசங்க சங்கீத கேளீ விலாசமாயிருப்பது என்பது.

சுக்கிரனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் சகோதரருடனே கலகமும், எத்தன காரிய பங்கமும், தன் எஜமானனிடத்து பகையும் வரும்.

சுக்கிரனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் வேத சாஸ்திரங்கள் கற்பது, வித்யாதிகம் உண்டாவதும், வர்த்தகர்களிட மூலமாக தனலாபமுமுண்டாகும்.

சுக்கிரனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் புத்திர விருத்தியும், தேகாரோக்யமும், தனலாபமும், தேவபிராமண பூஜையும் செய்வது.

சுக்கிரனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் சூத்திர ஸ்த்ரீ மூலத்தினால் கலகமும், பசு, வாகன நஷ்டமும், க்ஷேத்திர நாசமும், இஷ்ட ஜன நாசம் வருமென்பது.

சுக்கிரன் 2, 7-மிடங்களிலிருந்தால் சரீர ஜாட்டியமும், மனோ விசனமும் உண்டாகும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு ருத்திர ஜெபம் செய்து வெள்ளை பசுவாவது, எருமையாவது தானம் செய்து விட்டால் சாந்தியாகும்.

## சுக்கிர தெசையில் சூரிய புக்தி மீ 12-க்குப் பலன்

சூரியன் லக்கினத்திற்கு 3, 11-மிடத்திலிருந்தால் ராஜானு கூலமும், யுத்தத்தில் சத்துரு நாசமும், விசேஷமான ஆடையாபரண லாபமும், தூரதேசத்திலிருந்து சமாசாரங்கள் வருகிறது, மனசுக்கு விஸனமாக யிருப்பதும், ராஜாக்களால் கலகமும், விவகாரத்தில் நஷ்டமுமாமென்பது.

சூரியன் ஆட்சியிலும், உச்சத்திலும், மித்துரு ராசியிலுமிருந்தாலும், சுபருடன் கூடியிருந்தாலும் தன் பிரபு மூலத்தினால் விசேஷ சௌக்யமும், ராஜ்ய லாபமும், லக்ஷிமி கடாக்ஷத்தால் தன சம்பத்துண்டாவதும், நஷ்ட ராஜ்யம் திரும்பி வருவதும், வீட்டில் கலியாண சுபசோபனாதிகள் நடத்துவதும், கிராம லாபம், பூமி லாபமும், தன பிராப்தியு முண்டாகும்.

சூரியன் கேந்திர திரிகோணங்களி லிருந்தால் சுவல்ப பாக்யமும், பிதா துக்கமும், தாயாதி ஜன நாசமும், ஆதியில் சத்துரு பயமும், துக்கமும், மத்தியபாகத்தில் சௌக்யமும், அந்தியபாகத்தில் கௌரவமும், அதிக கீர்த்தியும், தன் பிரபு மூலங்களினால் சுக சௌக்யமும் உண்டாகும்.

சூரியன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலுமிருந்தால் கலகத்தினால் தன நாசமும், ராஜ கோபமும், ஆளடிமை,

பசு நாசம், க்ஷேத்திர நாசம், திடீரென்று கலகமும், தாயாதி ஜனங்களுடனே கலகமும், அதிகார பங்கமும், சரீர பீடை, தாரா, புத்திர மரணமும் வரும்.

சூரியனைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மாதாவமிசம் விருத்தி, தனதானிய லாபமும், வஸ்திர பிராப்தி, இஷ்ட சித்தியும், சுகமும் உண்டாகும்.

சூரியனைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் தானிய நாசமும், க்ஷேத்திர நாசமும், இதர ஸ்த்ரீகளால் கலகமும் உண்டாகும்.

சூரியனைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் வித்யா லாபமும், தன பிராப்தியும், பந்து ஜன உபகாரமும், வீட்டில் கலியாண சுபங்கள் நடத்துவதும்.

சூரியனைக் குரு கூடினாலும், பார்த்தாலும் புத்திர பிராப்தியும், நினைத்தபடிக்கெல்லாம் தன லாபமும், சர்வ காரிய ஜயமுமாகும்.

சூரியனைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் வாகன நாசமும், க்ஷேத்திர நாசமும், வஸ்த்திராபரண நாசமும், தன் பத்தினிக்கு வியாதியும் சம்பவிக்கும்.

சூரியனைச் சனி கூடினாலும், பார்த்தாலும் அடிமை ஜன பீடையும், சமான ஜன சோகமும், பிதுர்வர்க்க நாசமும் உண்டாகும்.

சூரியன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலுமிருந்தாலும், சுப கிரகங்களுடன் கூடினாலும் அதிகார விருத்தியும், மேன்மையான வஸ்த்துக்கள் கிடைப்பது, தாரா, புத்திராதிகள் சௌக்யமும், கிருஷி லாபமும், தானிய விருத்தியும், பசு விருத்தியும், தன லாபமும், சகல காரிய சித்தியும், ஆளடிமைகள் விசேஷமுமாகு மென்பது.

சூரியன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களில் பாப கிரகங்களுடன் கூடியிருந்தால் தார வியோகமும், அதிக கலகமும், பிராண ஹானியும், இஷ்டமான வர்க்க மனுஷாள் பகை, சமான ஜன நாசமும், ராஜ பீதி, சத்துரு பாதையு முண்டாகும்.

சூரியன் 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணம் நேரும். இந்த தோஷ நிவர்த்திக்கு சூரிய பிரார்த்தனை செய்து சாயாதானம் செய்தால் சாந்தியாகும்.

## சுக்கிர தெசையில் சந்திர புக்தி மீ 20-க்குப் பலன்.

சந்திரன் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களில் இருந்தாலும், 3, 11-மிடங்களில் இருந்தாலும், உச்சராசியில் இருந்தாலும், பூர்ண சந்திரனாக யிருந்தாலும், சுப கிரகங்களுடன் கூடினாலும் வாகன

லாபம், பந்து பிரியமும், அதிகார பிராப்தி, சத்திர, சாமர வைபவ சந்தோஷமும், ராஜாவால் இஷ்ட சித்தியுமுண்டாகும். விசேஷ சுகம், இஷ்ட பிரபுவினுல் சௌக்யம், ரத்தினுபரண லாபமும், பால் போஜனம் பண்ணுவது, மேன்மையான வஸ்திராபரண லாபமும், யுத்த ஜெயம், சத்துரு நாசம், தாரா, புத்திராதி சுகமாக யிருப்பது, வீட்டில் விவாஹாதி மங்களகாங்கள் நடத்துவது.

சந்திரன் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடத்திலும், நீச ராசியிலும், பாப கிரகங்களுடன் கூடியும், க்ஷீண சந்திரனுகவும் இருந்தால் மாதுரு வமிசத்தாருக்கு நாசமும், ஸ்த்ரீகளுடனே கலகமும், இஷ்டர்கள் விரோதமும், அன்னத் துவேஷமும், அதிகார பங்கமும், க்ஷேத்திர நாசமும், பசு, வாகன நஷ்டமும், சமான ஜன விரோதமும், அதிக பயமும் உண்டாகும்.

சந்திரனைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும் ராஜ சினேகிதமும், சுகமும், மலை, காடுகளுக்கு அதிகாரியாவதும், நேத்திர ரோகமுமுண்டாகும்.

சந்திரனைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் சத்துரு பயமும், திருடரால் துன்பமும், யுத்தத்தில் ஆயுத காயம் படுவதும், பங்காளி கலகமும் உண்டாகும்.

சந்திரனைப் புதன் கூடினுலும், பார்த்தாலும் வித்யா லாபமும், பந்து கலியாணங்களும், எண்ணின காரியங்களெல்லாம் சித்தி பெறுவதும்.

சந்திரனைக் குரு கூடினுலும், பார்த்தாலும் புத்திர லாபமும், தன லாபமும், பிராமண பிரபுவினுல் சௌக்கியமும், தானிய விருத்யுமாம்.

சந்திரனைச் சுக்கிரன் கூடினுலும், பார்த்தாலும் விவாக பிராப்தி, வாகனுதிகள் கிடைப்பது, தாரா, புத்திர வர்க்கம் ஸௌக்கியமாம்.

சந்திரனைச் சனி கூடினுலும், பார்த்தாலும் அடிமைகள் நாசமும், புத்திர ஹானி, க்ஷேத்திர ஹானி, தானிய நாசம், சூத்திர நாசமும் உண்டாகும்.

சந்திரன் தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், சுப கிரகங்களுடன் கூடியுமிருந்தால் தானிய விருத்தியும், தன வருத்தும், விவாஹ மங்கள்கரங்கள் நடத்துதலும், ஸ்த்ரீ ஸௌக்கியமும், இஷ்ட பிரபுவினுல் ஸௌக்யமும், ராஜ்ய பிராப்தியும், அதிக சுகமும், யுத்தத்தில் சத்துரு நாசமும், தன் வாரத்தில் ராஜ சன்மானமும் உண்டாகும்.

சந்திரன் தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாப கிரகங்களுடன் கூடியுமிருந்தால் தன நாசமும், மனஸ்தாபமும், பந்துக்களேயும், இஷ்டர்களேயும் விட்டுப்பிரிவது, அப கீர்த்தியும், இதா ஸ்திரீயிஞல் கலகமும், அகால போஜனமும், சர்வ ஜனங்களால் போராட்டமும் உண்டாகும்.

சந்திரன் லக்கினத்திற்கு 2, 7-மிடங்களிலிருந்தால் அபமிருத்யு தோஷம் நேரும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு துர்க்கை ஜெபமும், ஆடு தானமும் செய்தால் தோஷ நிவர்த்தியாகும்.

## சுக்கிர தெசையில் செவ்வாய் புக்தி மீ 14-குப் பலன்

செவ்வாய் லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், உச்ச ராசியிலும், மித்துரு ராசியிலும் பலாதிகஞக இருந்தால், லக்ஞதிபதியுடனும், பாக்யாதிபதியுடனும் கூடியிருந்தால் லக்ஷிமி கடாக்ஷமும், விசேஷ பாக்யாதிகமும், நஷ்டமான ராஜ்யம் திரும்பி வருவதும், ராஜ ஸன்மானமும், முத்து, பவளம், ரத்தினம் இவைகள் லாபமும், சிவப்பு ஆடைகள் லாபமும், விசேஷ பூமிகள் சேறுவதும், புத்திர விருத்தியும், யக்ய தான கர்மபல சித்தியும், தளிகை செய்கிற மடைப்பள்ளிக்கு அதிகாரியாயிருப்பதும், பசு, மாடுகள் விர்த்தியும், தானிய லாபமும், தன் பத்தினி ஸௌக்யமும், கடன் கொடுத்த பொருள்களிஞல் லாபமும், ரொக்க லாவாதேவியும், பங்காளிகளும், சத்ருக்களும் நாசமென்பது.

செவ்வாய் லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலுமிருந்தால் ஸ்தான நாசம், வீடுவிட்டு போகிறது, தன விரையமும், தானிய நஷ்டமும், தாயாதி கலகமும், ருண பாதையும், விஷ பீடை, அக்கினியாலும், ஆயுதத்திஞலும் பீதி, ஸ்திரீ மூலங்களிஞல் தன நாசம், அனேக ஜனங்களுடனே கலகமும், எத்தின காரியங்கள் பங்கமுமா மென்பது.

செவ்வாயைச் சூரியன் கூடிஞலும், பார்த்தாலும் அம்மை போடுவதும், சுரத்திஞல் பீடை யுண்டாவதும், அதிசார பேதியும், புத்தி விகாரமும், மஞே பயமுமாம்.

செவ்வாயைச் சந்திரன் கூடிஞலும், பார்த்தாலும் பாலுடன் கூடிய உண்டியும், குதிரை வாகனங்கள் கிடைப்பதும், எத்தனகாரியார்த்த சித்தியுமாம்.

செவ்வாயைப் புதன் கூடிஞலும், பார்த்தாலும் பந்து பகையும், வியாபாரத்தில் நஷ்டமும், அம்மான்மார்களுக்கு தோஷமுமா மென்பது.

செவ்வாயைக் குரு கூடினாலும், பார்த்தாலும் சரீர ஸௌக்கியமும், தன வருத்தும், அதிகார விருத்தியும், எப்போதுங்காணாத பொருளைக் காண்பதுமாம்.

செவ்வாயைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் வீட்டில் கலியாண சுபங்கள் நடத்துதலும், வாகனங்களுண்டாவதும் அதிகார விருத்தியுமாம்.

செவ்வாயைச் சனி கூடினாலும், பார்த்தாலும் அடிமையாள்களுடன் சண்டையாம், வாத ரோகத்தினால் வருந்துவது, அனேகருடன் கலகமுமா மென்பது.

செவ்வாய் தெசாநாதனுக்கு கேந்திரகோணங்களிலும், 3, 11-ம் இடங்களிலும், 6-வது வீட்டிலும், சுப கிரகங்களுடன் கூடியிருந்தாலும் விவாக பிராப்தியும், புத்திர லாபமும், பாக்ய விருத்தியும், சௌபாக்ய ஸௌக்யமும், பசு, வாகன விருத்தியும், தானியாதிக விருத்தியும், யுத்தத்தில் ஜெயமும், வீட்டில் தோப்புகள், தோட்டங்கள் வைப்பதும், விசித்திரமான விசேஷ ஆடையாபரண பிராப்தியும், சர்வ காரியங்கள் சித்தியுமாகும்.

செவ்வாய் தெசாநாதனுக்கு 8, 12-மிடங்களிலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தாலும் அண்ணன், தம்பிகளுடன் கலகம், சத்ரு விருத்தியும், ஆயுதங்களினால் ரணபாதை, சுர ஸம்பவம், ஸ்தான நாசம், ராஜ பயமுமாம்.

செவ்வாய் 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணம் வரும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு சுப்பிரமண்யரை பூஜித்து ரிஷப தானம் பண்ணினால் சாந்தியாகும்.

## சுக்கிர தெசையில் இராகு புக்தி மீ 36-க்குப் பலன்

இராகு லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 11-மிடத்திலும், பலாதிகமான கிரகங்களுடனும், யோக காரக கிரகத்துடனும், உச்ச ராசியிலும், லக்கினத்திற்கு உபசெயஸ்த்தானங்களிலும் இருந்தால் அதிக சுகமும், சத்துரு நாசமும், மனோச்சாகமும், ராஜாங்க பிரீதியும், குடும்பத்தில் சுபமும் நடக்கும். புக்தி ஆதியில் 6 மாதத்திற்கு வாத சுரமடிக்கும். அஜீர்னமும், காரிய பங்கமும். வீணாகத் திரிவதும், மனோ விசனமும், பிறகு ராஜ யோகமும், தனதானிய சமிர்த்தியும், சுக்லபக்ஷ சந்திரனைப்போல் தினேதினத்திற்கு அபிவிருத்தியும், எத்தன காரிய சித்தியும், அர்த்த லாபமும், மறுபடி சுய தேச கமனமும் உண்டாகும்.

இராகு பாப கிரகங்களுடன் கூடினாலும், பாபிகளால் பார்வை பெற்றாலும், 8, 12-மிடங்களி லிருந்தாலும், குடும்பத்தில் அசுப

வேலையே நடக்கும், மாதா பிதாக்களுக்கு கர்மாதிகாரம் வரும், சகலஜன விரோதமும், ராஜ மூலங்களினால் பொருள் நஷ்டமுமாம்.

இராகுவைச் சூரியன் கூடினாலும், பார்த்தாலும் சிரோ வியாதியும், சித்தப் பிரமையும், ராஜாங்க மூலத்தில் தன நாசமுமாம்.

இராகுவைச் சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் மாதாவழி நாசம், அகால போஜனம், தன் மனைவியுடனே விரோதப்படுதலாம்.

இராகுவைச் செவ்வாய் கூடினாலும், பார்த்தாலும் சகோதர நாசமும், க்ஷேத்திர நாசமும், வழக்கில் தோல்வியும், யுத்தத்தில் பயமும், தலை நோக்காடும், புத்தி விகாரமும் உண்டாகும்.

இராகுவைப் புதன் கூடினாலும், பார்த்தாலும் பந்துக்களால் பயம், சுய ஜாதிகளால் கலகம் விளைந்து அதனால் தன விரையமாமென்பது.

இராகுவைக் குரு கூடினாலும், பார்த்தாலும் தாரா, புத்திர நாசம், சமான ஜன நாசம், மானபங்கமும், புத்திக் கெதலுமாம்.

இராகுவைச் சுக்கிரன் கூடினாலும், பார்த்தாலும் குதிரை ஏரி சவாரி செய்யும் வழியில் கீழே விழுதல், வஸ்திர பங்கம், பந்து, மித்திரர்கள் விரோதமாம்.

இராகுவைச் சனி கூடினாலும், பார்த்தாலும் வாதரோகி, சமான ஜன சோகமும், தார, புத்திராதிகள் பகையாய் விடுவார்கள்.

இராகு தெசாநாதனுக்கு கேந்திரகோணங்களிலும், 6, 11-ம் இடங்களிலும் இருந்தால் தான் பிரயத்தனம் செய்யாமலே சுலபத்தில் சகல காரியங்களும் நடந்துவிடும், சகல சத்துருவும் நாசமடைவார்கள், கிருஷி லாபமும், தானிய விருத்தியும், புத்திர லாபமும், ஒரு பிரபுவால் அதிக ஸௌக்யமும், தான் முன்னிருந்த இடத்திற்கு வந்து சேருவது, அனேக வஸ்த்துக்கள் சம்பாதிப்பது, பந்து தரிசனமும், எத்தன காரிய சித்தியம், ஆரோக்யமும், ராஜ பூஜிதமும் உண்டாகும்.

இராகு தெசாநாதனுக்கு 8, 12-மிடங்களில் பாப கிரகங்களுடன் கூடியிருந்தால் மானபங்கமும், இஷ்டர்கள் விரோதமும், அசுபங்கள் நடத்துதல், தாய், தகப்பன் நாசமாம்.

இராகு 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரண முண்டாகும். இந்த தோஷம் பரிகாரமாவதற்கு துர்க்கா தேவியை பூஜை செய்து, பூசனிக்காய் தானம் செய்தால் சந்தேகமில்லாமல் சாந்தியாகும்.

## சுக்கிர தெசையில் குரு புக்தி மீ 32-க்குப் பலன்

குரு லக்கினத்திற்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களிலும், உச்ச ராசியிலிருந்தாலும் வஸ்திராபரண மணிதலும், புத்திரன் ஜனிப்பதும், கலியாண சுபங்கள் நடத்துவதும், சகலகாரிய சித்தியும், வட தெசையில் பிரயாணமும், அவ்விடத்தில் ராஜபேட்டி காண்பதும், சன்மானம் பெறுவதும், சத்துரு ஜயம் இவைகள் தன் வாரத்தில் நடக்கும்.

குரு லக்கினத்திற்கு 6, 8, 12-மிடங்களிலும், நீச ராசியிலும் இருந்தால் காரிய நாசமும், பிராமண மூலத்தினுல் பயமும், ராஜ குரோதமும், ஸ்தான நாசமும், கலகமும், ஆயாசமும், ஆசாரியரிடத்தில் கஷ்டமும், யுத்தத்தில் ஆயுத பீடை, அகஸ்மாத்தான கலகமும், க்ஷேத்திர தானியாதிகள் நாசமும், தாரா, புத்திராதிகளுக்கு அரிஷ்டமும், புத்தி பிரமமும் உண்டாகும்.

குருவைச் சூரியன் கூடினுலும், பார்த்தாலும் ராஜாக்களால் சுகமும், கிராமாதிபத்தியமும், தீர்த்த யாத்திரை புண்ணிய பலன்களும் கிடைக்கும்.

குருவைச் சந்திரன் கூடினுலும், பார்த்தாலும் வாகன விருத்தியும், ஆடை, ஆபரண பிராப்தியும், வஸ்திர லாபமும், ஸ்த்ரீ மூலத்தினுல் தன வரவும் உண்டாகும். சகல காரிய ஜயமும், சதா சந்தோஷமுமாம்.

குருவைச் செவ்வாய் கூடினுலும், பார்த்தாலும் ஆசாரியருக்கு கேடு வரும். புத்திர மரணம், சகல ஜன கலகம் நேரும், எந்த வேலையும் நடவாது.

குருவைப் புதன் கூடினுலும், பார்த்தாலும் சத்கால க்ஷேபம் கேட்கிறதும், செய்கிறதும், தேவ பிராமண பூஜையும், குரு விசுவாசமுமாம்.

குருவைச் சுக்கிரன் கூடினுலும், பார்த்தாலும் தண்டிகை வாகனங்கள் கிடைக்கும், விவாஹாதி சுபங்கள் நடத்துவதும், தன் பெண் ஜாதிக்கு கெற்ப முண்டாகுவதும்.

குருவைச் சனி கூடினுலும், பார்த்தாலும் நீச ஸ்த்ரீயினுல் கலகம் விளையும், பிராண பாதையும் உண்டாகும்.

குரு தெசாநாதனுக்கு கேந்திர கோணங்களிலும், 3, 11-மிடங்களில் சுப கிரகத்துடன் கூடி யிருந்தால் தன லாபம், யுத்தத்தில் சத்துரு நாசம், ருண மில்லாமை, ரொக்க லாவாதேவி, வியாபாரத்தினுல் அதிக தனம் வருவது, பிரபுவினுல் அதிக ஸௌக்யமும், சிவ பூஜா விசேஷமும், கிருஷி விஸ்தாரமும், தானிய லாபமும், அனேகவித தன லாபமும், வித்தியா விசேஷமும் உண்டாகும்.

குரு தெசாநாதனுக்கு 6, 8, 12-மிடங்களிலும், பாப கிரகங்களுடன் கூடியிருந்தால் ஆசாரியருடன் துவேஷிப்பதும், காரியக் கெடுதி, சமான ஜனுதி நாசம், தேசாந்திர சஞ்சாரத்தில் பயமும், எத்தன காரிய பங்கமுமாம்.

குரு 2, 7-மிடங்களிலிருந்தால் அகால மரணம் நேரும். இந்த தோஷம் நிவர்த்தியாவதற்கு ருத்திர ஜெபம் செய்து, பொன்னல் நிரைத்த பூசனிக்காய் தானம் செய்தால் ஆரோக்ய முண்டாகும்.

## சுக்கிர தெசையில் சனி புக்தி மீ 38-க்குப் பலன்.

